

# ஆண்டறிக்கை
## 2012

**இலங்கை துறைமுக அதிகாரசபை**



# எமது கண்ணோட்டம்

ஆசிய பிராந்தியத்தில் கடல்சார் சேவையின் முதல்தர நிலையம் என பெற்றிருக்கும் நிலைப்பாட்டை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல்.

# எமது குறிக்கோள்

உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வசதிகளையும், தரமுயர்ந்த சேவைகளையும் வழங்குவதன் மூலம் எமது இலாபகரமான அனுகூலங்களையும் வாடிக்கையாளர் தரப்பினர்களையும் அதிகரித்துக் கொள்ளுதல்.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| எமது இலக்குகளும் நிறுவனத்தினூடான நோக்கங்களும் | 3 |
| இயக்க முக்கிய விடயங்கள் | 5 |
| நிதிசார் முக்கிய விடயங்கள் | 8 |
| எங்கள் அமைச்சர்கள் | 9 |
| தலைவரின் மீளாய்வு | 10 |
| பணிப்பாளர் சபை | 12 |
| முகாமைக் குழுவும் கணக்காய்வுக் குழுவும் | 19 |
| வர்த்தக அபிவிருத்தி | 21 |
| நிர்வாக தொழிற்பாடு | 22 |
| இயக்க மீளாய்வு | 25 |
| நிதி மீளாய்வு | 77 |
| ஒன்றிணைந்த சமூகப் பொறுப்புக்கள் | 81 |
| மனித மூலதனம் | 82 |
| இடர்பாட்டு முகாமைத்துவம் | 84 |
| ஒன்றிணைந்த நிர்வாக அறிக்கை | 87 |
| துறைமுக புள்ளி விபரங்கள் | 92 |
| முக்கிய நிகழ்வுகள் | 97 |
| நிதி அறிக்கைகள் | 103 |
| பணிப்பாளர் சபையின் அறிக்கை | 104 |
| நிதி அறிக்கை வெளியிடல் தொடர்பான பணிப்பாளர் சபையின் அறிக்கை | 107 |
| கணக்காய்வுக் குழு அறிக்கை | 108 |
| சட்டபூர்வ இணக்கப்பாட்டு அறிக்கை | 109 |
| இயக்க முக்கிய விடயங்கள் | 110 |
| நிதி நிலைமை தொடர்பான அறிக்கை | 111 |
| விபரமான வருமான அறிக்கை | 112 |
| திணிவு மாற்றம் மீதான அறிக்கை | 113 |
| காசுப் பாய்ச்சல் அறிக்கை | 114 |
| நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் | 115 |
| வரைபட மீளாய்வு | 156 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 159 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் | 174 |
| அமைப்பு விதி தொடர்பான தகவல்கள் | 190 |

**இலக்குகள்**

- இலங்கை கடல்சார் கேந்திர தளமாக மாற்றப்படுதல்.
- கொள்கலன் கையாள்தல் மற்றும் தெற்காசிய வலயத்தின் சேவை வழங்கலுக்கான சர்வதேச பாரிய நிலையிலான கேந்திரத் துறைமுகமாக கொழும்புத் துறைமுகத்தின் அமைவிடம் உறுதிப்படுத்தப்படுதல்.
- வணிகத் துறைமுக சேவைகள் வழங்கப்படுவதுடன் மிகவும் விரும்பப்படும் பயணிகள் கப்பல் போக்குவரத்து நிலையமாக காலித் துறைமுகம் திட்டமிடப்படுதல்.
- கடல்சார் தொழிற் துறைக்கான பூரண சேவைகள் வழங்கப்படும் அதேவேளை, சர்வதேச சுதந்திர வலய/ துறைமுகம் மற்றும் சேவைகள் வழங்கும் கேந்திர நிலையமாக ஹம்பாந்தோட்டை மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகமானது விரிவாக்கம் செய்யப்பட்டு அபிவிருத்தி செய்தல்.
- ஓய்வு நேரங்களைக் களிப்பதற்கான உயர் நிலையிலான வசதிகள் மற்றும் கைத்தொழில்கள் விருத்திசெய்யப்படுவதற்கான விரிவான வசதிகளுடன் திருகோணமலைத் துறைமுகம் பசுமை துறைமுகமாக மேம்படுத்தப்படுதல்.
- வலய அபிவிருத்தியின் நுழைவாயில்களாக ஒலுவில், பருத்தித்துறை மற்றும் காங்கேசன்துறை ஆகிய பிராந்திய துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யப்படுதல்.

**நிறுவனத்தினூடான நோக்கங்கள்**

- இலங்கையின் வர்த்தக துறைமுகங்களில் உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய உபகரணங்களினாலான இயக்க வசதிகளை அபிவிருத்தி செய்தலும், இடைவிடாது முன்னெடுத்துச் செல்லப்படுதலும்.
- உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனுடன் துறைமுக சேவைகளை முன்னெடுத்துச் செல்லுதல்.
- ஆகுசெலவு பயனளிக்கக் கூடிய வினைத்திறனுடன் மற்றும் நம்பிக்கை மிகு சேவைகள் வழங்குவதன் மூலம் போட்டித்தன்மையூடாக ஏற்றுமதி மற்றும் இறக்குமதியாளர்களுக்கு மிகவும் சிறந்த நற்பயன்களை பெற்றுக்கொடுத்தல்.
- கப்பல்கள், கப்பல் சரக்கு துறைமுக பாவனையாளர்கள் மற்றும் துறைமுக உட்கட்டமைப்பு வசதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.
- துறைமுக வர்த்தக நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அனைவருக்கும் உற்சாகமூட்டும் சிறந்த சூழலை உருவாக்குதல்.
- அரசாங்கத்தின் நடைமுறை மற்றும் மூலதன செலவினங்களுக்கு பொது திறைசேரியின் ஒன்றிணைந்த நிதியத்துக்கான பங்களிப்பு வழங்குதல்.
- கப்பல்களை தாமதப்படுத்தாது மாற்றியேற்றல் மற்றும் தரையிறக்கல் நடவடிக்கைகளை விரைவில் மேற்கொண்டு, உயர் வினைத்திறன் பேணல்.

- அதிகளவிலான தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் பொருட்டு கடல்சார் நடவடிக்கைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய துணைச் சேவைகளை அதிகரித்தல்.

- துறைமுக பாவனையாளர்களுக்கு உயர் சேவைகளை வழங்கி வர்த்தக துறைமுகங்களில் இலாபகரமான இயக்கச் செயற்பாட்டு முறையை முன்னெடுத்துச் செல்லுதல் இதனூடாக நம்பிக்கைமிகு வினைத்திறனுடன் கூடிய இயக்குனர் என்ற நற்பெயரை பாதுகாத்துக் கொள்தல்.

- மொத்த விற்பனை மற்றும் சுங்கப் பிணை நடவடிக்கைகள் உட்பட மீள் கப்பல் ஏற்றும் சந்தர்ப்பங்களை மேலும் அதிகரித்துக் கொள்ளும் பொருட்டு கொள்கலன் கையாளுதல் தொடர்பிலான போட்டித்தன்மையுடன் கூடிய உயர் சேவைகளை வழங்குதல்.

- இலங்கையின் பிரதேச அபிவிருத்திப் பங்களிப்பின் உந்து சக்தியாக தேவைப்படும் துறைமுக வசதிகளை கடலை அண்மித்த பிரதேசங்களில் ஏற்படுத்துவதன் ஊடாக இலங்கையின் பிராந்திய அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

- மனித வலு தேவைகளை மதிப்பிடுதல் மற்றும் ஆளணி மீளாய்வு உட்பட இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிர்வாக மற்றும் அமைப்பு ரீதியான விடயங்களை உயர் நிலைக்கு கொண்டு வருதல், சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளில் பணிபுரியும் ஊழியர்கள் தேசிய பொருளாதாரத்திற்கு பெற்றுக் கொடுக்கும் பங்களிப்பை கவனத்திற் கொண்டு சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாட்டு வேலைகளில் ஈடுபடுவதற்கு ஊழியர்களை ஊக்குவித்தல் இதனால் எழும் பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களின் தேவைப்பாடுகள் பூர்த்திசெய்யப்படுவதற்கு மஹபொல பயிற்சி நிலையம் மேலதிக பயிற்சிகளையும், மீள் பயிற்சியளித்தலையும் மேற்கொள்ளல்.

- நீரில் மேற்கொள்ளப்படும் சேவைகள், எண்ணெய் பாய்ச்சும் நடவடிக்கைகள், நன்னீர் வழங்குதல் மற்றும் கொள்கலன் புதுப்பித்தல் போன்ற துறைமுக செயற்பாடுகளுடன் தொடர்புடைய பணிகளை வழங்குவதன் ஊடாக பன்முகப்படுத்துதல்.

- வினைத்திறன் மிகு வரி, மிகவும் சிறந்த நிறுவக முதலீட்டு முகாமைத்துவம் மற்றும் உறுதியான மூலோபாய ஆகுசெலவு கட்டுப்பாடு போன்றவற்றுடனான முகாமைத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட நிதி சீர்திருத்த செயற்பாட்டினை நடைமுறைப்படுத்துதல்.

## வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை (சகல துறைமுகங்களினதும்)

| விபரம் | 2011 | 2012 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொழும்பு துறைமுகம் | 4,124 | 3,870 | -6.2 |
| திருகோணமலை துறைமுகம் | 126 | 161 | 27.8 |
| காலி துறைமுகம் | 73 | 69 | -5.5 |
| காங்கேசன்துறை,மயிலிட்டி, பருத்தித்துறை, காரைநகர் | 26 | 44 | 69.2 |
| மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம் | 9 | 34 | 277.8 |
| **மொத்தம்** | **4,358** | **4,178** | **-4.1** |

## கப்பற் சரக்கு கையாளல் (சகல துறைமுகங்களினதும்)

| விபரம் | 2011 | 2012 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கையாளப்பட்ட மொத்த கப்பற் சரக்குகள் (மெ.தொ.மி) | 65.1 | 65.0 | -0.2 |

## கொள்கலன் கையாளல் (இருபது சம அலகுகள்) கொழும்பு துறைமுகம்

| விபரம் | 2011 | 2012 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| **இலங்கை துறைமுக அதிகாரசபை (SLPA)** | | | |
| இறக்குமதி | 323,712 | 324,509 | 0.2 |
| ஏற்றுமதி | 323,770 | 340,782 | 5.3 |
| மாற்றியேற்றல் | 1,583,195 | 1,584,985 | 0.1 |
| மீள் அடுக்குதல் | 68,769 | 66,573 | -3.2 |
| **மொத்தம்** | **2,299,446** | **2,316,849** | **0.8** |
| **சவுத் ஏஷியா கேட்வே டெர்மினல்ஸ் (SAGT)** | | | |
| இறக்குமதி | 200,078 | 183,537 | -8.3 |
| ஏற்றுமதி | 199,326 | 171,427 | -14.0 |
| மாற்றியேற்றல் | 1,540,633 | 1,479,782 | -3.9 |
| மீள் அடுக்குதல் | 23,404 | 35,525 | 51.8 |
| **மொத்தம்** | **1,963,441** | **1,870,271** | **-4.7** |
| **கொழும்பு துறைமுகம்** | | | |
| இறக்குமதி | 523,790 | 508,046 | -3.0 |
| ஏற்றுமதி | 523,096 | 512,209 | -2.1 |
| மாற்றியேற்றல் | 3,123,828 | 3,064,767 | -1.9 |
| மீள் அடுக்குதல் | 92,173 | 102,098 | 10.8 |
| **மொத்தம்** | **4,262,887** | **4,187,120** | **-1.8** |

**கொழும்புத் துறைமுகத்தில் இறக்கப்பட்ட கப்பற் சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)**

| விபரம் | 2011 | 2012 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொள்கலனிலிடப்பட்டவை | 15,317 | 15,460 | 0.9 |
| பிரித்த மொத்தம் | 692 | 608 | -12.1 |
| உலர் மொத்தம் | 2,618 | 2,709 | 3.5 |
| திரவ மொத்தம் | 4,499 | 4,835 | 7.5 |
| **மொத்தம்** | **23,126** | **23,612** | **2.1** |

**கொழும்புத் துறைமுகத்தில் ஏற்றப்பட்ட கப்பற் சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)**

| விபரம் | 2011 | 2012 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொள்கலனிலிடப்பட்டவை | 12,795 | 13,242 | 3.5 |
| பிரித்த மொத்தம் | 30 | 10 | -66.7 |
| உலர் மொத்தம் | 2 | 0 | -100.0 |
| திரவ மொத்தம் | 66 | 3 | -95.5 |
| **மொத்தம்** | **12,893** | **13,255** | **2.8** |

**கொழும்புத் துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த கப்பற் சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)**

| விபரம் | 2011 | 2012 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொள்கலனிலிடப்பட்டவை | 28,112 | 28,702 | 2.1 |
| பிரித்த மொத்தம் | 722 | 618 | -14.4 |
| உலர் மொத்தம் | 2,620 | 2,709 | 3.4 |
| திரவ மொத்தம் | 4,565 | 4,838 | 6.0 |
| **மொத்தம்** | **36,019** | **36,867** | **2.4** |

**திருகோணமலை துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த கப்பற் சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)**

| விபரம் | 2011 | 2012 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| **இறக்கப்பட்டது** | 2,337 | 2,646 | 13.2 |
| **ஏற்றப்பட்டது** | 237 | 213 | -10.1 |
| **மொத்தம்** | **2,574** | **2,859** | **11.1** |

**காலி துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த கப்பற் சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)**

| விபரம் | 2011 | 2012 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| இறக்கப்பட்டது | 464 | 422 | -9.1 |
| ஏற்றப்பட்டது | 0 | 0 | - |
| **மொத்தம்** | **464** | **422** | **-9.1** |

**காங்கேசன்துறை, மயிலிட்டி , பருத்தித்துறை மற்றும் காரைநகர் துறைமுகங்களில் கையாளப்பட்ட மொத்த கப்பற் சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)**

| விபரம் | 2011 | 2012 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| இறக்கப்பட்டது | 28 | 60 | 114.3 |
| ஏற்றப்பட்டது | 0 | 0 | - |
| மொத்தம் | **28** | **60** | **114.3** |

**மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த கப்பற் சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)**

| விபரம் | 2011 | 2012 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| இறக்கப்பட்டது | 05 | 17 | 240.0 |
| ஏற்றப்பட்டது | 10 | 3 | -70.0 |
| மொத்தம் | **15** | **20** | **33.3** |

**மொத்த ஊழியர் தொகை**

| விபரம் | 2011 | 2012 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொழும்புத் துறைமுகம் | 10,083 | 9,373 | -7.0 |
| திருகோணமலைத் துறைமுகம் | 466 | 436 | -6.4 |
| காலி துறைமுகம் | 433 | 391 | -9.7 |
| மொத்தம் | **10,982** | **10,200** | **-7.1** |

சகல துறைமுகங்களும் (ரூபா மில்லியன்)

| விபரம் | 2012 | 2011 மீள் - குறி.பட்ட | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| **வருமானம் மற்றும் செலவினம்** | | | |
| மொத்த வருமானம் | 38,097.8 | 31,085.8 | 22.6 |
| மொத்த செலவினம் | (26,009.4) | (23,472.4) | (10.8) |
| **இயக்க வருமானம்** | **12,088.4** | **7,613.3** | **58.8** |
| வெளிநாட்டுக் கடன் மீதான வட்டி | (1,709.7) | (1,371.8) | (24.6) |
| அந்நிய செலாவணி இலாபம் / (நட்டம்) | (4,566.9) | (3,390.1) | (34.7) |
| சுய விருப்பின் பேரில் ஓய்வு பெறும் திட்டத்தின் செலவினம் | (600.4) | (2,594.6) | 76.9 |
| **இலாபம் - வரிக்குமுன், அந்நிய செலாவணி இலாபம்/ (நட்டத்தின்) பின் மற்றும் சுய விருப்பின் பேரில் ஓய்வு பெறுதல்** | **5,211.4** | **256.9** | **(1,928.8)** |
| **வரிகள்** | | | |
| வருமான வரி | - | - | - |
| கருதும் பங்கிலாப வரி | (1,124.7) | (175.6) | (540.5) |
| வேறுபடும் வரி | - | - | - |
| பங்கிலாப வரி | (0.6) | (0.1) | (500.0) |
| சமூக பொறுப்புக்கள் மீதான வரி | - | (24.1) | 100.0 |
| **தேறிய இலாபம் / (நட்டம்) வரிகளுக்கான ஏற்பாடுகளுக்குப் பின்** | **4,086.1** | **57.1** | **7,056.0** |
| **ஐந்தொகை** | | | |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | 214,072.5 | 205,678.4 | 4.1 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 35,218.3 | 17,075.8 | 106.2 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 15,644.2 | 14,475.4 | (8.1) |
| ஒப்புரவு மற்றும் ஏனைய மூலதனம் | 7,591.4 | 7,591.4 | (0.0) |
| ஒதுக்கீடுகள் | 70,060.9 | 67,515.1 | (3.8) |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | 155,994.3 | 133,172.3 | (17.1) |
| **விகிதாசாரம்** | | | |
| வருமானத்திற்கான இயக்க இலாபம் | 31.7 | 24.5 | |
| வருடாந்த வருமான வளர்ச்சி | 22.6 | 9.9 | |
| மூலதன முதலீடுகளின் வருமானம் | 6.7 | 0.3 | |

**அதிமேதகு மஹிந்த ராஜபக்ஷ அவர்கள்**
**இலங்கை ஜனாதிபதி**
**மற்றும்**
**துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்**

**கௌரவ ரோஹித்த அபேகுணவர்தன**
**துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்**
**பிரதி அமைச்சர்**

**கௌரவ நிர்மல கொத்தலாவல**
**துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்**
**பிரதி அமைச்சர்**

குழுவாக தொடர்ந்து சிறந்த முறையில் கருமமாற்றப்படுதல் உயர் செயலாற்றுகைக்கும் நிலையான உற்பத்தித் திறன் மேம்படுத்தப்படுவதற்கும் ஆகுசெலவு குறைக்கப்படுவதற்கும் காரணமாகுமென 2012 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபை உறுதிப்படுத்தியுள்ளதுடன் செயலாற்றுகை உயர்த்தப்படுவது போன்று பாரிய வெற்றியடைதலுக்கும் துணை புரிந்துள்ளது. இதன்போது வர்த்தக வெற்றி தொடர்பில் குழுவாக வழங்கப்பட்ட ஒத்துழைப்பினை நான் பெரிதும் வரவேற்கின்றேன். துறைமுக நடவடிக்கைகள் மேம்படுத்தப்படுகையில் செயலாற்றுகை விருத்தி மற்றும் செயற்றிறன் அபிவிருத்தி செய்தல் போன்று எமது வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகள் மேலோங்கிச் செல்லும் வகையில் உற்பத்தித்திறன் மேம்படுத்துதல் உறுதி செய்யக் கூடியதாகவும் இருந்தது. இலங்கை துறைமுக அதிகாரசபையின் வர்த்தக வெற்றியீட்டலில் நெகிழ்வு மற்றும் நெகிழ்வற்ற தன்மை பிரதான இரண்டு சக்திகளாக மாறுபடும் நிலையினுள் பயன்படுத்துவது எனது திடமான நம்பிக்கையாகும். சிறந்த நல்லாட்சி,நெகிழ்வுத் தன்மை, துறைமுகத் திட்டங்கள் தொடர்பில் துரித வளர்ச்சி பற்றியதான பொறுப்பு போன்று நிலவும் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல் சொத்துக்களின் வளர்ச்சி போன்ற விடயங்களுக்கேற்ப பொருள் வளம் மற்றும் எண் அடிப்படையிலான செயலாற்றுகை தொடர்பில் பிரபல்யப்படுத்தல் இங்கு முக்கியமானது.

## செயலாற்றுகை

கையாளல் மற்றும் நிதிசார் ஸ்திரத்தன்மை மேம்படுத்தலின் போது உலக பொருளாதாரத்தில் தளர்வு நிலைமையின் தாக்கத்தினுள் கூட சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட ஐந்து வருட அபிவிருத்தித் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதென்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தர விரும்புகின்றேன். கொழும்புத் துறைமுகம் நோக்கி பிரதான மற்றும் ஊட்டக் கப்பல் சேவைகள் கவரப்படுதல் தொடர்பில் ஆண்டினுள் மீளாய்வு செய்யபட்டதோடு எமது சேவையின் வெற்றிகரமான மற்றும் உன்னத நிலை எமது வாடிக்கையாளர்களின் அங்கீகாரத்திற்கும் கௌரவத்திற்கும் பாத்திரமாகியுள்ளது. மேலும் 2012 ஆண்டினுள் ஏற்படுத்தப்பட்ட முனைய சேவை ஒப்பந்தங்களின் ஊடாக எமது கையாளல் ஆற்றல் போன்று மேம்படுத்தப்பட்ட செயற்றிறனும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கையாளல் திறன் வளர்ச்சி பெறுதலின் கொள்கலன் களஞ்சியப்படுத்தும் கொள்ளளவு போன்று சிறந்த முறையில் பராமரித்தல் மற்றும் கப்பற் சரக்கு கொள்கலன் கையாளல் தொடர்பில் பயனான பெறுபேறுகளின் நிமித்தம் ஸ்தாபிக்கப்பட்ட புதிய தொகுதிகள் பாரியளவில் விருத்தி செய்யப்பட்டுள்ளன. இவ்வாறான பல்வேறு உபாயங்கள் ஊடாக எம்மால் உற்பத்தித்திறன் விருத்தி செய்யப்பட்டுள்ளதோடு கையாளல் ஆற்றல்களினது வளர்ச்சியின் பயனாக கொள்கலன் அளவிலும் பாரிய அதிகரிப்பு காணப்படுகின்றது.

2012 ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையின் கொள்கலன் முனையங்களின் பரிமாணங்களுடன் ஒப்பிடப்படுகையில் 0.8% வளர்ச்சி தென்படுகின்றது. 2012 ஆண்டில் கையாளப்பட்ட மீள் ஏற்றுமதி அளவு 1,584,985 இருபது சம அலகுகள் அலகுகளாக இருந்ததோடு 2011 ஆண்டின் 1,583,195 இருபது சம அலகுகள் அலகுகளுடன் ஒப்பிடப்படுகையில் 0.1% வளர்ச்சி காணப்படுகின்றது. உள்நாட்டு கொள்கலன் 665,291 இருபது சம அலகுகள் கையாளலின் 2.8% வளர்ச்சி காணப்படுகின்றது. சென்ற வருடத்தில் 647,482 இருபது சம அலகுகள் அலகுகள் மாத்திரமே கையாளப்பட்டுள்ளன. கையாளல் நடவடிக்கைகளின் விருத்தி கருத்திலெடுக்கப்படுகையில் இலங்கை துறைமுக அதிகாரசபையில் 2,316,849 இருபது சம அலகுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இதுவானது இலங்கை துறைமுக அதிகார சபையினால் கையாளப்பட்ட ஆகக் கூடிய கொள்கலன் அளவாகும். இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஒட்டுமொத்தமாக 55.3% கொள்கலன அளவு கையாளலின் பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளதோடு 2011 ஆண்டின் இது 53.9% ஆக இருந்தது.

## நிதி

சகல கையாளல் பிரிவுகளினதும் முன்னேற்றத்துடன் 2012 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பாராட்டத்தக்க நிதிசார் முன்னேற்றம் தென்படுகின்றது. 2011 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகார சபையின் வருமானம் ரூபா 31.08 பில்லியன் ஆக இருந்ததோடு 2012 வருடத்தில் ஈட்டப்பட்ட ரூபா 38.1 பில்லியன் தொகையுடன் ஒப்பிடப்படுகையில் 22.6% அதிகரிப்பு காணப்படுகின்றது. கடுமையான ஆகுசெலவினக் கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தலோடு இலங்கை துறைமுக அதிகாரசபையின் இயக்க இலாபம் அதிகரிக்கப்படுதலின் பங்களிப்பு செய்யப்படக்கூடியதாக இருந்தது. பயன்மிகுந்த நிதிசார் இலாபமீட்டலின் மூலம் சில உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கும் கடல்சார் துறையில் போட்டிமிகுந்த நிலை ஏற்படுத்தும் நோக்கிலான அபிவிருத்தித் திட்டங்களின் வசதிகளின் முன்னேற்றத்திற்கானதும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## அபிவிருத்தித் திட்டங்கள்

கொழும்பு துறைமுகத்தின் கொள்ளளவு விரிவுபடுத்தும் நோக்கில் நீண்டகால மற்றும் இடைக்கால துறைமுக அபிவிருத்தி மூலோபாயங்களாக கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டம் ஆண்டினுள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. கிழக்கு மற்றும் தென் முனையங்களின் நிர்மாணப் பணிகள் துரிதமாக நிறைவு செய்யும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டு தெற்கு துறைமுக கையாளல் நடவடிக்கைகள் முறையே 2013 மற்றும் 2014 ஆண்டுகளில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

2012 ஆண்டு பூராகவும் மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுக திட்டத்தின் இரண்டாம் கட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டதோடு துறைமுகம்சார் பல தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு அவற்றின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுவதற்கான அத்தியாவசிய வசதிகள் வழங்கல் மேற்கொள்ளப்படுகின்றது. மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் வாகனங்களை ஏற்றிவரும் பாரிய எண்ணிக்கையிலான கப்பல்களினால் கையாளல் அதிகரிக்கப்பெற்றுள்ளது.

எண்ணெய்த் தாங்கித் தொகுதி அடங்கலாக கப்பல் எண்ணெய் வழங்குவதற்கான சகல வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தை வந்தடையும் சகல கப்பல்களுக்குமான எண்ணெய் வழங்குதல் 2013 ஆண்டினுள் நடைமுறைப்படுத்தப்படக் கூடியதாக இருக்கும். ஒலுவில் துறைமுகத்தின் நிர்மாணப் பணிகள் முடிவடைந்துள்ளன. திருகோணமலை மற்றும் காலி துறைமுகங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தற்போது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## மனிதவள அபிவிருத்தி

எந்தவொரு அமைப்பிலும் சகல இயக்க நடவடிக்கைகளும் தொடர்புபடும் முக்கிய பகுதியாக மனிதவளம் விளங்குகின்றது. இது இலங்கை துறைமுக அதிகாரசபையினதும் வெற்றி தங்கியுள்ள முக்கிய தூணாகும் வர்த்தக ரீதியான வெற்றிகள் உறுதி செய்வதற்கான எமது நோக்கங்களை அடைந்துகொள்ளும் வகையில் துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களினது செயலாற்றுகை நிலை மற்றும் சேவை நிலைமை மேம்படுத்துவதற்காகவும் தேர்ச்சிகள் மற்றும் புத்தூக்கம் விருத்தி செய்யப்படுவதற்காகவும் பல்வேறு உபாயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. 2012 ஆண்டினுள் கொழும்புத் துறைமுகத்தில் எதிர்பார்க்கப்பட்ட வெற்றிகரமான பெறுபேறுகளை அடையும் பொருட்டு தேர்ச்சிகள் மற்றும் உளப்பாங்கு மேம்படுத்தப்பட்டு பயனான முறையிலான குழு வேலைகள், பாவனையாளர்களை நோக்காகக் கொண்ட நட்புரீதியான உளப்பாங்கு மற்றும் பொறுப்பளிக்கப்பட்ட பணிகளின் வெற்றிகரமான செயலாற்றுகை விருத்தி செய்தலின் மனிதவள துறையில் முனைப்பான அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## முடிவு

துறைமுக அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நிலவும் வசதிகள் செயற்படுத்தப்படுதலில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் வழங்கப்பெற்ற மகத்தான அறிவுறுத்தல் இன்றி இந்த அனைத்து உன்னத வெற்றிகள் நிஜமானதாக ஆக மாட்டாது. அவர் வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டல் தொடர்பில் எனது உளப்பூர்வமான நன்றியினை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். மேலும் 2012 ஆண்டினை வெற்றி கொள்வதற்கு தாராள ஒத்தாசை வழங்கிய கௌரவ பிரதியமைச்சருக்கும், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளருக்கும், ஆளணிகளுக்கும், பணியாளர்களுக்கும், எமது நிறைவேற்று அலுவலர்களுக்கும், தொழிற்சங்கங்களுக்கும் எமது பெறுமதியான பாவனையாளர்கள் மற்றும் துறைமுக சம்பந்தப்பட்ட ஏனைய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மகா பப்லோ பிகாஸோ கூறுவது போன்று" சகல வெற்றிகளுக்கும் செயல் எனும் அடிப்படையில் அம்சம் காரணமாகும்." என்பதை நாம் 2012 ஆண்டில் நிரூபித்துள்ளதோடு சர்வதேச சமுத்திர கப்பல் வலையமைப்பினுள் முக்கிய அடையாளமாக எமது துறைமுகம் ஆக்கப்படும் பொருட்டு நாம் அனைவரும் ஒன்றாக செயற்பட வேண்டுமென்பதை குறிப்பிட விரும்புகின்றேன்.



**கலாநிதி பிரியத் பி விக்ரம**
**தலைவர்**

## கலாநிதி பிரியத் பீ விக்ரம
## தலைவர்

**பீஎச்டி(ஐ.இ) ,பட்டப் பின்படிப்பு (டிப்ளோமா), பொறியியலாளர் பீ.எஸ்.சீ. (சிறப்பு), பட்டயம் பெற்ற பொறியியலாளர், இலங்கை பொறியியலாளர்கள் நிறுவன அங்கத்தவர்**

இயற்கையில் அமைந்த சாமர்த்திய முன்னோடியாக கலாநிதி பிரியத் பீ விக்ரம அவர்கள் 2008 ஆண்டிலிருந்து இலங்கை துறைமுக அதிகாரசபையின் தலைவராக்க் கடமையாற்றி வருவதோடு இவரின் மாற்றமேற்படுத்தும் கொள்கை மற்றும் சிறப்பு வர்த்தகம் பற்றியதான சிந்தனைக்கமைய இலங்கையை கடலக கேந்திரத்தளமாக மாற்றும் பணியில் ஈடுபட்டுள்ளார். இவரின் இந்த ஆற்றல் மேலும் வலுப்படுத்தும் வகையில் ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச அமெரிக்க பல்கலைக்கழகத்தினால் இயக்க முகாமைத்துவம் தொடர்பிலான கலாநிதிப் பட்டம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

சுக்கானியால் கப்பலொன்று வழிநடத்தும் முறையிலும் இலங்கை துறைமுக அதிகாரசபையினை புதியதொரு பாதையில் நகர்த்திய முன்னோடியாகவும் என்ஜின் ஒன்றினால் கப்பலொன்று சக்தியூட்டப்படும் முறையில் இலங்கை துறைமுக நோக்கு முன்னெடுத்துச் செல்லும் தலைவரொருவராகவும் கப்பலொன்றின் முன் தள்ளி சாதனம் கப்பலை முன்னோக்கிச் செலுத்துவது போல் கப்பலொன்று வெற்றிகரமான நீண்ட பயணத்தை நிறைவு செய்வது போன்று கலாநிதி விக்ரம அவர்களினால் இலங்கை கப்பற்றுறை வரலாற்றில் புரட்சிகர மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மொறட்டுவ பல்கலைக்கழத்தில் இயந்திரவியல் தொடர்பில் சிறப்புப் பட்டம் பெற்ற கலாநிதி விக்ரம அவர்களின் பொறியியல் கோட்பாடுகள் போன்று கடலக நடவடிக்கைகள் தொடர்பில் இவரின் தூரநோக்கு ஒன்று கலக்கும் விசேட ஆற்றலை இவர் கொண்டுள்ளார். தனது ஆற்றல்களை சிறந்த முறையில் பயன்படுத்தி இலங்கையில் கடலக வரலாற்றில் மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுக அபிவிருத்தி திட்டம் மற்றும் கொழும்பு துறைமுக விரிவாக்கல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதனூடாக புதிய வர்த்தக சந்தர்ப்பங்கள் உருவாக்கப்படுதலின ஊடாக தெற்காசியாவில் போட்டிமிகுந்த சூழல் ஏற்படுத்தப்பட முடிந்துள்ளது.

தனது தூரநோக்கிலான முகாமைத்துவம் மேற்கொண்டு 100% துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான 2002 ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட ஜயகொள்கலன் தனியார் முனையத்தினதும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பிரதான துணை சேவை வழங்குநரான வ/ப துறைமுக முகாமைத்துவ ஆலோசனைச் சேவைகள் தனியார் கம்பெனியினதும் தலைவராக இவர் கடமையாற்றுகின்றார்.

இவர் நகர அபிவிருத்தி அதிகாரசபை, வ/ப வோட்டர் ஏஜ் கம்பெனி, வ/ப கொழும்பு சர்வதேச கொள்கலன் முனைய கம்பெனி போன்ற நிறுவனங்களில் பணிப்பாளராக பல்வேறு வர்த்தகத் துறைகளின் பிரகாசமான வர்த்தகராக அடையாளங் காணப்பட்டுள்ளார்.

சர்வதேச துறைமுகங்கள் மற்றும் துறைமுகத் தளங்கள் அமைப்பின் துறைமுக திட்டமிடல் அபிவிருத்திக் குழுவின் செயலாளராக்க் இவரின் திறன்கள் சர்வதேச அரங்கில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

பொருளாதார சாதனை அடையப்பெறுதல் தொடர்பில் ஆற்றப்பட்ட பங்களிப்புக்காக ஹொங்ஹொங் அன்ட் சங்ஹாய் கம்பெனியினால் (HSBC) வழங்கப்பட்ட 2010 ஆம் ஆண்டின் இலங்கையின் சிறப்பு இளம் நபருக்கான விருது வழங்கும் கலாநிதி விக்ரம அவர்கள் போற்றப்பட்டார். அதேபோன்று தேசிய அபிவிருத்தி நிலையின் தலைமைத்துவம் தொடர்பில் சர்வதேச சிங்க சங்கத்தினால் வழங்கப்படும் 2011 ஆம் ஆண்டின் சிறந்த பிரஜைகளுக்கான விருது மற்றும் மத்திய கிழக்கு மற்றும் இந்திய சிறந்த நபருக்கான கடல்சார் வணிகம் தொடர்பான விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

## திரு. இந்திக கருணாஜீவ
## உப தலைவர்

**சொலிசிட்டர் (ஐ.இ) சட்ட முதுமாணி (வேர்விக்)**
**சட்டத்தரணி**

திரு. கருணாஜீவ, 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் உப தலைவராக நியமிக்கப்பட்டார். அதேபோன்று இவர் இலங்கையின் அதிமேதகு ஜனாதிபதியினது சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும் கடமையாற்றுகின்றார்.

திரு கருணாஜீவ, கொழும்பு 07, றோயல் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியினைப் பயின்றார். சட்டக் கல்லூரியில் தனது கல்வியினைப் பூர்த்தி செய்து 2000 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றின் சட்டத்தரணியாக இவர் தனது பணியினைத் தொடர்ந்தார்.

திரு. கருணாஜீவ சர்வதேச சட்டம் தொடர்பான முதுமாணிப் பட்டப் படிப்பினை ஐக்கிய இராச்சியத்தின் வேர்விக் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு 2003 ஆம் ஆண்டில் அதில் சிறப்புப் பட்டதாரியானார். இவர் விசேடமாக குற்றவியல் மற்றும் ஆக்கவுரிமைச் சொத்துக்கள் சட்டம் தொடர்பிலான வழக்குகளின் போது இலங்கை நீதிமன்றங்களில் சட்டத்தரணியாகக் கடமையாற்றியுள்ளார்.

இவர் இங்கிலாந்து மற்றும் வேல்ஸின் சொலிசிட்டருமாவார்.

2006 யூலை மாதத்திலிருந்து 2010 மே மாதம் வரை ஐக்கிய இராச்சியத்தின் இலங்கைக்கான தூதுவராலயத்தின் அமைச்சர் ஆலோசகராகவும் இவர் நியமிக்கப்பட்டார்.

## கெப்டன் நிஹால் கெப்பெட்டிபொல
### முகாமைப் பணிப்பாளர்

**கடலக அதிபர், வர்த்தக நிர்வாக முதுமாணிப் பட்டம் (எம்பீ ஏ)**
**ஐக்கிய இராச்சியத்தின் கப்பல் துறைசார் நிறுவன அங்கத்தவர் (எம். என். ஐ)**
**சேவைகள் வழங்கல் மற்றும் போக்குவரத்து பற்றியதான பட்டய நிறுவன அங்கத்தவர் (எம் சீ ஐ எல் ரீ)**

1975 ஆம் ஆண்டில் தனது க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் கெப்டன் நிஹால் கெப்பிட்டிபொல கடெட் அலுவலராக இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தில் இணைந்து கொள்கலன் பொதுவான மற்றும் மொத்தச் சரக்குக் கப்பல்கள், எண்ணெய் மற்றும் வாயு தாங்கிகள் உட்பட பல்வேறு வகையான கப்பல்களில் பணியாற்றியுள்ளார்.

1985 ஆம் ஆண்டில் இவர் கடலக விஞ்ஞானம் மற்றும் கப்பலோட்டம் தொடர்பிலான தனது முதுமாணிப் பட்டத்தினை அவுஸ்திரேலியாவின் மெல்போன் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்டார். ஐக்கிய இராஜ்ஜியத்தின் செப்ஸ்டோவ் ஷிப்பிங் (Chepstow & Shipping) மொன்டிகாலொ, வீ சிப்ஸ் ஜேர்மனியின் அரென்கீல், கொரியாவின் பேன் ஓசன் போன்ற பல்வேறு கப்பல் சேவைகளிலும் சிலோன் ஷிப்பிங் கோபரேசன் இல் கெப்டனாகவும் பல வருடங்கள் கப்பல் போக்குவரத்தில் ஈடுபட்டதன் பின்னர் 1990 ஆம் ஆண்டில் இவர் மாலுமியாக இலங்கை துறைமுக அதிகாரசபையில் இணைந்து கொண்டார்.

கொழும்பு, திருகோணமலை மற்றும் காலி ஆகிய சகல துறைமுகங்களில் மாலுமியாக கடமையாற்றியதன் பின்னர் 1999 ஆம் ஆண்டில் சகல துறைமுகங்களினதும் ஹாபர் மாஸ்டராக இவர் பதவி உயர்வு பெற்றார்.

சிரேஷ்ட முகாமைத்துவத்தின் பல வேண்டுகோள்களின் மீது பல்வேறு கால கட்டங்களில் தனது ஹாபர் மாஸ்டர் பதவிக்கு மேலதிகமாக கடலக துறையுடன் தொடர்புபட்ட பாதுகாப்பு மற்றும் சேவை வழங்கல் செயற்பாட்டினுள் குறிப்பிடத்தக்க பணிகளையும் ஆற்றினார்.

பின்னர் 2005 ஆம் ஆண்டில் இவர் பணிப்பாளர் (துறைமுக இயக்கம்) பதவிக்கு உயர்த்தப்பட்டதன் பின்னர் 2006 ஆம் ஆண்டில் மேலதிக முகாமைப் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். தற்போது இவர் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைப் பணிப்பாளராக கடமையாற்றுகின்றார்.

கெப்டன் கெப்பெட்டிபொல, வ/ப ஜய கொள்கலன் முனையத்தினதும், வ/ப கொழும்பு சர்வதேச கொள்கலன் முனைய கம்பெனியினதும் (CICT) சவுத் ஏசியா கேட்வே ரெமினல்ஸ் (SAGT) , பணிப்பாளராக இருப்பதோடு ஐக்கிய இராஜ்ஜியத்தின் கடல் மைல் நிறுவனத்தின் (இலங்கைக் கிளை) முன்னாள் தலைவருமாவார். மேலும் சேவைகள் வழங்கல் மற்றும் பட்டய போக்குவரத்து நிறுவனத்தின் அங்கத்தவரொருவருமாவார்.

கெப்டன் கெப்பிட்டிபொல துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் டெக் அலுவலர்களின் பரிசோதகராகவும் கடமையாற்றுகின்றார்.

## டாக்டர் சஞ்ஞய சேதர செனரத்
## நிறைவேற்றுப் பணிப்பாளர்

டாக்டர் சஞ்ஞய சேதர செனரத் மாத்தறை ராஹுல வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியினைப் பயின்றார். பாடசாலை பருவத்தினுள் சனாதிபதி சாரணராகவும், பாடசாலை நிற வெற்றியாளராகவும், தேசிய நிற வெற்றியாளராகவும் பாடசாலையின் பிரதான மாணவத் தலைவராகவும் பெற்ற பயிற்சியானது இவரின் வயது வந்த வாழ்க்கைக்கு மிகவும் துணை புரிந்தது. அதன் பின்னணியில் மாத்தறை ராஹுல வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் தலைவராக இவர் நியமிக்கப்படுவதற்கு அவகாசம் கிடைத்தது.

உயர்தரப் பரீட்சையின் பின்னர் சட்டக் கல்லூரியில் இணைந்தார். சட்டக் கல்லூரியில் பயின்று கொண்டிருக்கையில் ரஷ்யாவின் மொஸ்கவ் நகர பீபல்ஸ் பிரென்ஷிப் பல்கலைக்கழகத்தினால் புலமைப் பரிசில் கிடைக்கப்பெற்ற இவர் அங்கு வைத்தியப் பட்டத்தினையும் ரஷ்ய மொழி கற்பித்தல் தொடர்பான பட்டத்தினையும் பெற்றுக்கொண்டார்.

வைத்தியப் பட்டம் பெற்றுக் கொண்டதன் பின்னர் இவர் மாத்தறை பெரிய ஆஸ்பத்திரியில் வைத்திய அலுவலராகக் கடமையாற்றினார்.

அதன் பின்னர் ரஷ்யாவின் மொஸ்கவ் நகர வர்த்தக முகாமைத்துவ கல்வி நிலையத்தில் வர்த்தக முகாமைத்துவம் மற்றும் நிதி நிர்வாகம் பற்றியதிலான பட்டப் பின் படிப்பு டிப்ளோமாவையும் பெற்றுக் கொண்டார்.

**ஏனைய சாதனைகள்**

ரஷ்யாவின் மொஸ்கவ் நகர பீபல்ஸ் பிரென்ஷிப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச மாணவர் சங்க செயலாளராக நியமிக்கப்படுதல் மற்றும் மிகவும் பிரபல்யமான மாணவராக இருத்தல் (வெளிநாட்டு மாணவர் பிரிவு - 1995)

வர்த்தக முகாமைத்துவம் பற்றியதில் பரந்த சர்வதேச விளக்காற்றல் கொண்ட இவர் இலங்கையில் பல வெளிநாட்டு செலாவணி முதலீட்டு வர்த்தகங்களை நிறுவியுள்ளார்.

பல் கூட்டு வர்த்தகங்களை வெற்றிகரமாக நடாத்தி வருவதுடன் பிரதானமாக இலங்கையின் தென் பிரதேசத்தில் பல சமூக நலன்புரி திட்டங்களையும் மேற்கொண்டுள்ளார்.

இவர் 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர்களில் ஒருவராகவும் பின்னர் அதிகாரசபையின் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் காலித் துறைமுக கண்காணிப்பு பணிப்பாளராகவும், கொழும்பு துறைமுக ஒன்றிணைந்த காணி கூட்டு அபிவிருத்தித் திட்டத்தின் தலைவராகவும் பணியாற்றி வருகின்றார்.

இலங்கையின் பூகோளரீதியாக இருக்கும் அனுகூலமிகு அமைவினைப் பயன்படுத்தி இலங்கை துறைமுக அதிகாரசபையின் முன்னேற்றத்திற்காக உலகம் பூராகவுமுள்ள வர்த்தக சந்தர்ப்பங்களை இலங்கை நோக்கி வரவழைப்பதற்கான ஆய்வு ரீதியான பணிகளிலும் ஈடுபட்டுள்ளார்.

## திரு. அனுர ஜயவிக்ரம
## பணிப்பாளர்

**விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர்**

1982 ஆம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற இவர், 1984 ஆம் ஆண்டில் இலங்கை நிருவாக சேவையில் இணைந்தார். 2012ஆம் ஆண்டில் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக நியமிக்கப்படுவதற்கு முன் இவர் வர்த்தக வாணிபத்துறை அமைச்சு , கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு, விவசாய அமைச்சு மற்றும் கல்வி போன்ற அமைச்சுகளில் பல நிர்வாக பதவிகளையும் வகித்துள்ளார்.

இவர் தென் அவுஸ்திரேலியாவின் பிலின்டர்ஸ் பல்கலைக்கழகத்தில் கொள்கைகள் மற்றும் நிர்வாகம் தொடர்பிலான முதுமாணிப் பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

நிர்வாகத்தில் தலைசிறந்த தேர்ச்சிகளோடு இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அலுவலராகப் பணி புரிந்து சிறந்த அனுபவம் பெற்றுள்ள இவர் தற்போது விளையாட்டு அமைச்சின் செயலாளராகவும் கடமையாற்றி வருகின்றார்.

திரு. அனுர ஜயவிக்ரம, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் தேசிய நீரியல் வள ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் ஆகியவற்றின் பணிப்பாளர் சபைகளினது அங்கத்தவரொருவராகவும் கடமையாற்றியுள்ளார்.

## திரு. எஸ். ஆர். ஆட்டிகல
## பணிப்பாளர்

**பொது திறைசேரியின் பிரதிச் செயலாளர்**

திரு. ஆட்டிகல கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணிதப் பிரிவில் விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றுள்ளதோடு ஐக்கிய இராச்சியத்தின் வேர்விக் (Warwick) பல்கலைக்கழகத்தின் பொருளியல் விஞ்ஞானம் தொடர்பான கலைப் பட்டதாரியுமாவார்.

மத்திய வங்கியின் சிரேஷ்ட பொருளியல் நிபுணராக பல வருடங்கள் சேவையாற்றிய இவர் தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் மற்றும் பதில் தலைவராகவும் ஷெல் காஸ் லங்கா கம்பெனியின் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர் தற்போது திறைசேரியின் பிரதிச் செயலாளராகக் கடமையாற்றுகின்றார்.

இவர் இலங்கை வங்கியின் பணிப்பாளர் பதவியிலும் இலங்கை காப்புறுதி மற்றும் நாணய ஆணைக்குழுவினதும் இலங்கை காப்புறுதிச் சபையினதும் அங்கத்தவராகவும் பேராதனை பல்கலைக்கழகத்தின் பட்டப் பின் படிப்பு நிலையத்தின் முகாமைத்துவ சபையிலும் பணியாற்றுகின்றார். அத்தோடு இவர் இலங்கை முதலீட்டுச் சபையினது கண்காணிப்பாளருமாவார்.

## கலாநிதி (திருமதி) தமித டி சொய்ஸா
## பணிப்பாளர்

**செயலாளர்**
**மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு**

கலாநிதி (திருமதி) தமித டி சொய்ஸா, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் பற்றியதான புள்ளி விபரவியல் (சிறப்பு) கலைப் பட்டதாரியாவார். அதே போன்று அவுஸ்திரேலியாவிலுள்ள கன்பெரா பல்கலைக்கழகத்தில் விவசாய அபிவிருத்திப் பொருளியல் தொடர்பிலான விஞ்ஞான முதுமாணிப் பட்டத்தினையும் அமெரிக்காவின் ஒஹியோ கொலம்பஸின் ஒஹியோ மாநில பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியல் தொடர்பான முதுமாணிப் பட்டத்தினையும் விவசாயப் பொருளியலில் கலாநிதிப் பட்டத்தினையும் இவர் பெற்றுள்ளார்.

2010 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆந் திகதியிலிருந்து இவர் மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக நியமனம் பெற்றதோடு 2010 நவம்பர் 25 ஆந் திகதி மீண்டும் அப்பதவியில் நியமிக்கப்பட்டார். அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றும் அதே சமயம் தற்போது இலங்கை துறைமுக அதிகாரசபை, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, தேசிய நீரியல் வள அபிவிருத்தி நிறுவனம் (NARA) போன்ற சபைகளிலும் அங்கம் வகிக்கின்றார். இவர் ஜனாதிபதியின் செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ள பெற்றோலிய வள அபிவிருத்திக் குழுவின் அங்கத்தவருமாவார். அத்தோடு உரம் தொடர்பான அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைகளுக்கான குழுவின் தலைவராகவும் இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை திட்டமிடல் சேவையைச் சேர்ந்த இவர் பல்கலைக்கழக படிப்பின் பின்னர் நிதி திட்டமிடல் அமைச்சின் தேசிய திட்டமிடல் திணைக்களத்தில் தமது ஆரம்ப தொழில்சார் பணியினை ஆரம்பித்து. திட்டமிடல் அலுவலர், உதவிப் பணிப்பாளர் , பிரதிப் பணிப்பாளர் மற்றும் மேலதிகப் பணிப்பாளர் போன்ற பல பதவிகளிலும் கடமையாற்றியுள்ளார். 1999 ஆம் ஆண்டில் அத்திணைக்களத்தின் பணிப்பாளராக உயர்வு பெற்றார். இவர் 2005 ஆம் ஆண்டில் அவ்வமைச்சின் பொது வரிக் கொள்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக பதவி உயர்வு பெற்றார். இவரின் தற்போதைய பதவிக்கு முன்னர் நிதி திட்டமிடல் அமைச்சின் நிதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் பணியாற்றியுள்ளார்.

மேலும் நிதி திட்டமிடல் அமைச்சில் சேவையிலீடுபட்டிருக்கையில் பெருந்தோட்ட பொறுப்பு நிதியத்தின் தலைவராகவும், நனோ தொழில்நுட்பம் பற்றியதான இலங்கை SLIN Tec நிறுவனத்தினதும் நனோ நடைமுறை தொழில்நுட்பம் சம்பந்தமான வ/ப தனியார் கம்பெனியினது (NANCO) பணிப்பாளர் சபையின் அங்கத்தவராகப் பணியாற்றியுள்ளார். தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை, நெல் சந்தைப்படுத்தல் சபை, உயர் நிர்மாணப் பயிற்சி நிறுவனம் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றின் பணிப்பாளர் சபைகளின் அங்கத்தவராகவிருந்த இவர், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, லங்கா புத்ர அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் பணிப்பாளர் சபைகளின் அங்கத்தவராகவும் இருந்தார். மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக கடமையேற்றுக் கொண்டதன் பின்னர் டி எப் *சீ சீ* வங்கியின் பணிப்பாளர் சபையிலிருந்து விலகியுள்ளார்.

திருமதி (கலாநிதி தமித் டி சொயிஸா மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக 2012 ஏப்ரல் மாதம் 18 - 20 வரையில் அவுஸ்திரேலியாவின் பிறீமென்டலில் நடைபெற்ற 1994 ஆண்டு யூன் 13 ஆந் திகதி இலங்கை அங்கத்துவம் பெற்ற இந்திய சமுத்திர டூனா ஆணைக்குழுவின் 16 ஆவது கூட்டத் தொடரின் பிரதிநிதிக் குழுவினரை வழி நடத்தினார்.

இக்கூட்டத் தொடரின் போது ஐரோப்பிய ஒன்றியத்தின் றோபெட்டோ கெஸரி அவர்கள் உடன்பாட்டு தலைவராக மீண்டும் நியமிக்கப்பட்டதோடு கலாநிதி தமிதா டி சொயிஸா அதன் உப தலைவர் பதவிக்கு பிரேரிக்கப்பட்டு ஏகமனதாக அப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். மேற்குறிப்பிடப்பட்ட இடத்தில்

2012 ஏப்ரல் 22 - 26 வரை நடைபெற்ற இந்திய சமுத்திரத்தின் டுனா ஆணைக்குழுவின் 16 அவது கூட்டத் தொடரின் அவரினால் பிரதிநிதிகள் வழிநடத்தப்பட்டனர்.

அவுஸ்திரேலியா,பெலீஸ்(சமூகமளிக்கப்படவில்லை) ஐரோப்பிய ஒன்றியம் (அங்கத்துவ அமைப்பு), பிரான்ஸ், சினி இராஜ்ஜியம், இந்தியா, இந்தோனிசியா, ஈரான் (இஸ்லாமிய குடியரசு), ஜப்பான கென்யா, மடகஸ்கார், மலேசியா, மாலைதீவு,மொரீஸஸ், மொஎம்பிக், ஓமான், பாகிஸ்தான் பிலிப்பைன்ஸ் கொரிய குடியரசு சிஷேல், தாய்லாந்து, ஐக்கிய இராஜ்ஜியம், செனகால் (சமூகமளிக்கப்படவில்லை) தென் ஆபிரிக்கா (சமூகமளிக்கப்படவில்லை), மற்றும் வனுவுட்டு ஆகிய நாடுகள் உள்ளடங்கிய இந்திய சமுத்திரத்தின் டுனா ஆணைக்குழுவின் சகல 24 அங்கத்துவ நாடுகளினால் இவரின் தெரிவு தொடர்பில் கூடிய கரிசனை காட்டப்பட்டது.

2012 செப்டெம்பர் 20 - 22 வரை வியட்நாமின் டனான் இல் நடாத்தப்பட்ட உணவு மற்றும் விவசாய அபிவிருத்தி நிறுவனத்தின் வலய மீன்பிடி நிறுவனமான ஆசிய பசுபிக் மீன்பிடி ஆணைக்குழுவின் 32 ஆவது கூட்டத்தின் எதிர்வரும் இரண்டு வருட காலத்தின் உப தலைவராக திருமதி சொயிஸா நியமிக்கப்பட்டுள்ளார். இதன் தலைவராக இந்தியா தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஆசிய பசுபிக் மீன்பிடி ஆணைக்குழுவின் 21 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட மீன் பிடி மற்றும் நீதியல் வளங்கள் தொடர்புபட்ட அரசுகளுக்கிடையிலான ஆலோசனை நிறுவனமாகும். இது ஆசிய பசுபிக் வலய மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் மேம்படுத்தலில் விளக்கம் மற்றும் அறிவுறுத்தல் தொடர்பில் ஒத்துழைப்போடு கடமையாற்றும் நிறுவனமொன்றாகும்.

ஆணைக்குழுவினதும் ஆசிய பசுபிக் மீன்பிடி ஆணைக்குழுவின் செயலகத்தின் 15 அங்கத்துவ நாடுகளின் 29 பெர் கொண்ட தூதவராலாய பிரதிநிதிகள் ஆணைக்குழுவின் கூட்டத்திற்காக வருகை தந்திருந்தனர். அத்தோடு ஏனைய பிராநதிய மீன்பிடி குழுவின் 21 அவதானிப்பாளர்களும் சமூகமளித்திருந்தனர்.

## திரு. ஜகத் பீ. விஜேவீர
## பணிப்பாளர்

**சுங்க பணிப்பாளர் நாயகம்**

திரு.ஜகத் பீ. விஜேவீர 2012 ஆண்டில் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். தற்போது இவர் சுங்க பணிப்பாளர் நாயகமாகக் கடமையாற்றுவதோடு இதற்கு முன்னர் ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயமகாகவும் கடமையாற்றியுள்ளார்.

களனிய பல்கலைக்கழக நுண்கலை சிறப்புப் பட்டதாரியான இவர், கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளியல் மற்றும் சர்வதேச உறவுகள் தொடர்பிலான இரு பட்டங்களையும் பெற்றுள்ளார்.

இவர் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளராக 2006 இருந்து 2010 ஆண்டு வரை சேவையில் ஈடுபட்டுள்ளதோடு 1987 ஆண்டிலிருந்து இலங்கை நிர்வாக சேவையில் கடமையாற்றி வருகின்றார்.

## திரு . ஏஷன டி சில்வா
## பணிப்பாளர்

கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி பயின்ற இவர் சான்றிதழ் பெற்ற தொழில்சார் முகாமையாளர்கள் நிறுவனத்தின் (MCPM) அங்கத்தவரொருவராவார். அதேபோன்று ஐக்கிய இராச்சியத்தின் சான்றிதழ்பெற்ற தொழில் வல்லுனர்களின் சங்கத்தின் (AUKAPCUT) ஒன்றிணைந்த அங்கத்தவருமாவார். இவர் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் பல சிரேஷ்ட பதவிகளையும் வகிக்கின்றார். தற்போது இவர் வ/ப எஸ்னா ஹோல்டிங்ஸ் (தனியார்) நிறுவனம், வ/ப ஸர்மன்ஸ் லொஜிஸ்டிக்ஸ் (தனியார்) கம்பெனி மற்றும் வ/ப ஸர்மன்ஸ் றான்ஸ்போட் (தனியார்) கம்பெனி போன்றவற்றின் தலைவராவார்.. அத்துடன வ/ப எஸ்னா (தனியார்) கம்பெனியின் பிரதித் தலைவர் / முகாமைத்துவப் பணிப்பாளரான இவர், வ/ப எஸ்னா டெக்னொலொஜிஸ் (தனியார் கம்பெனியின் தலைவரும் ஆவார். வ/ப எஸ்னா விலாஸ் தனியார் கம்பெனி, வ/ப எஸ்னா

பவர் (தனியார்) கம்பெனி, வ/ப எஸ்னா வர்த்தகங்கள் (தனியார்) கம்பெனி, வ/ப பான் ஏசியன் பாங்கின் கோபரேஸன் பீ எல் சீ (பீஏபீசீ) தனியார் கம்பெனி போன்றவற்றின் பணிப்பாளருமாவார். இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் வ/ப மவுன்ட்படன் லான்ட் (தனியார்) கம்பெனிகளின் பணிப்பாளர் சபைகளில் அங்கத்தவரான இவர், வ/ப மெக் மராயின் (தனியார்) கம்பெனி, லங்கா சிபின் அன்ட் லொஜிஸ்டிக்ஸ், சிமாடெக் ஏஜன்சி லங்கா நிறுவனம், வ/ப ஸர்மன்ஸ் சன்ஸ் (தனியார்) கம்பெனி, வ/ப ஸர்மன்ஸ் டி சில்வா (தனியார்) கம்பெனி மற்றும் வ/ப டிமென்ஸன் எக்ஸ் (தனியார்) போன்ற கம்பெனிகளின் பணிப்பாளருமாவார்.

இவர் இலங்கைக்கான கஸகஸ்தான் குடியரசின் தூதுவராலய அலுவலராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

## திரு. கபில லியனகமகே
## பணிப்பாளர் சபை செயலாளர்

**சட்ட ஆலோசகர் - இலங்கை துறைமுக அதிகாரசபை**

**முகாமைக் குழு**

கலாநிதி பிரியத் பீ விக்ரம
**தலைவர்**

திரு. இந்திக கருணாஜீவ
**உப தலைவர்**

கெப்டன் நிஹால் கெப்பெட்டிபொல
**முகாமைப் பணிப்பாளர்**

டாக்டர் சஞ்ஞய சேதர செனரத்
**நிறைவேற்றுப் பணிப்பாளர்**

திரு. நோமன் வீரரத்ன
**மேலதிக முகாமைப் பணிப்பாளர்**

திருமதி. ஷிராணி வன்னியாராச்சி
**பணிப்பாளர் (நிதி)**

திருஜே.கே.பீ. குருகுலசூரிய
**பணிப்பாளர் (தென் துறைமுக அபிவிருத்தி)**

திரு .ஏ.டி.ரீ. குணசேகர
**பணிப்பாளர் (தொழில்நுட்பம்)**

திரு.டீ. டப்ளியூ. அத்தபத்து
**பணிப்பாளர் (சேவை வழங்கல்)**

மேஜர் ஜெனரல் எஸ்.ஜீ. கருணாரத்ன
**பணிப்பாளர் (பாதுகாப்பு)**

திரு.எம்.பீ.எஸ்.எஸ்.பீரிஸ்
**பிரதான பொறியியலாளர்**

திரு. கே. ஏ. அன்சார்
**பிரதான பயிற்சி முகாமையாளர்**

திருமதி டி. ஜீ. ஐ. சீ .லொகுஹேவகே
**பிரதான பொறியியலாளர் (ஒப்பந்தம் மற்றும் வடிவமைப்பு)**

கெப்டன் ஆர். ஏ. ஜயவிக்ரம
**ஹாபர் மாஸ்டர்**

திரு. எல். பிரேமசிறி டி. சில்வா
**பிரதான உள்ளக கணக்காய்வாளர்**

டாக்டர் (திருமதி) டி. ராஜகாந்தன்
**பிரதான மருத்துவ அலுவலர்**

திரு. எச். டி. எச். சமரசிங்க
**பிரதான பொறியியலாளர்**

திரு. எல். எச். ஆர். சேபால
**பிரதான மனிதவள முகாமையாளர்**

திரு. பீ. டப்ளியூ. வடுகே
**பிரதான பொறியியலாளர் (இயந்திர வேலைகள்)**

திரு. டீ. யூ. டப்ளியூ. டி. சொய்ஸா
**பிரதான முகாமையாளர் (கொள்கலன் கையாளல்)**

திரு. பீ. ஏ. ஏ. ஹேவாகீகன
**பிரதான பொறியியலாளர் (தென் துறைமுக அபிவிருத்தி)**

திரு. ஈ. ஏ. ரீ. எதிரிசூரிய
**பிரதான பொறியியலாளர் (இயந்திர பொறி)**

திரு. ஏ. ஏ. எஸ். ஆர். அபேசிறிவர்தன
**பிரதான பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)**

திரு. டப்ளியூ. என். அல்சன்
**பிரதான முகாமையாளர் (நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள்)**

திரு. டி. ஏ. ஜே. ஐ. பேரேரா
**பிரதான முகாமையாளர் (மரபு ரீதியான கப்பற் சரக்குகள்)**

திரு. உபுல் ஜயதிஸ்ஸ
**பிரதான முகாமையாளர் (சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி)**

திரு. பீ. ரணதுங்க
**பிரதான முகாமையாளர் (சேவை வழங்கல்)**

திரு. ஆர். எம். ஏ. எஸ். ரத்னாயக்க
**பிரதான முகாமையாளர் (நிர்வாகம்)**

திரு. டப்ளியூ. எம். டீ. பி. விஜேகோன்
**பிரதான பொறியியலாளர் (மின்சாரம்)**

திரு. பீ. ஆர் சிறிவன்ஸ
**பிரதான சட்ட அலுவலர்**

திரு. எச். ஏ. என். எஸ். பெர்னாந்து
**பதில் பிரதான முகாமையாளர்**
**(வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்)**

திரு. எச். எம். யூ. பி. கலகொட
**பதில் பிரதான முகாமையாளர்**
**(தகவல் முறைமை)**

திரு விஜித அபேசுந்தர
**பதில் பிரதான பொறியியலாளர் (கடலகம்)**

திரு.பி.எம்.எஸ் சோமரத்ன
**பதில் பிரதான பொறியியலாளர் (சிவில்)**

**கணக்காய்வுக் குழு**

திரு. எஸ். ஆர். ஆட்டிகல
**தலைவர்**

திரு. ஜகத் பீ. விஜேவீர
**அங்கத்தவர்**

திருமதி. ஷிராணி வன்னியாராச்சி
**அங்கத்தவர்**

திரு. ஏ. டி. ரீ. குணசேகர
**அங்கத்தவர்**

திரு. எல். பிரேமசிறி டி சில்வா
**செயலாளர்**

2012 ஆம் ஆண்டின் நடவடிக்கைகள் மற்றும் அடைப்பெறுதல்கள் பின்வருமாறு

2012 ஆம் ஆண்டில் பின்வரும் புதிய பிரதான கப்பல் சேவைகளும் ஊட்டச் சேவைகளும் கவரப்பட்டன.

**ஆறு பிரதான கப்பல் சேவைகள்**

- HDS - தூர கிழக்கு சேவை (E/B)
- G- 6 Loop 6 பங்காளிகள் APL/MOL/Hyundai/OOCL/MNYK/Hapag Lloyd
- AEF (ஆசிய கிழக்கு ஆபிரிக்கா) E/B பங்காளிகள் - Evergreen, SCI & XCL
- SGE (தென் இந்தியா வளைகுடா கடுகதி) W/B பங்காளிகள் - Evergreen
- Cheetah - MSC
- AEF - W/B - ஆசிய தூர ஆபிரிக்க சேவை - பங்காளிகள் - Evergreen / SCI & XCL

**உலகில் இரண்டாவது பெரிய கப்பல் சேவையான MSC உடனான கப்பல் மற்றும் முனைய சேவை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.**

**இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்பட்ட முனையங்களில் பதிவாகியுள்ள பெறுபேறுகள் பின்வருமாறு**

- உள்நாட்டு கொள்கலன் கையாளல் கொள்ளளவு 2.8%. த்தினால் அதிகரித்துள்ளது.
- மாற்றியேற்றல் கொள்கலன் கையாளல் அளவு மாற்றமின்றி இருந்தது.
- இலங்கை துறைமுக அதிகாரசபையினால் முகாமைத்துவம் செய்யப்பட்ட முனையங்களின் கொள்ளளவு 0.8%. த்தினால் அதிகரித்துள்ளது.
- இலங்கை துறைமுக அதிகாரசபையின் சந்தைப் பங்கு 55.3% வரை (2011 - 53.9%). அதிகரித்துள்ளது.
- வரலாற்றில் ஆகக் கூடிய மொத்தக் கொள்கலன்கள் 2,316,849 இருபது சம அலகுகள் 2012 ஆம் ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் கையாளப்பட்டுள்ளது

**கொழும்பு துறைமுகத்தில் பதிவாகியுள்ள பெறுபேறுகள் பின்வருமாறு**

- உள்நாட்டு கொள்கலன் கையாளல் 2.5%. த்தினால் குறைவடைந்துள்ளது.
- மாற்றியேற்றல் கொள்கலன் கையாளல் 1.9%. த்தினால் குறைவடைந்துள்ளது.
- கொழும்பு துறைமுகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி 1.8%. த்தினால் குறைவடைந்துள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபை, 1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் ஏற்பாடுகளின் மீது 1979.08.01 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்டு, பின்னர் 1984 இன் இல. 07 மற்றும் 35 ஆம் சட்டங்களின் ஊடாக திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் 6 (1) பிரிவில் அதன் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றன.

- கப்பல் சுமை நடவடிக்கைகள், கப்பல்களில் ஏற்றல் இறக்கல் மற்றும் மீள் ஏற்றல் பணிகள், தரையிறக்கல், குதங்களிடுதல், வாப்பு நடவடிக்கைகள், கலங்களுக்குத் தேவையான நீர், எரிபொருள் மற்றும் மின்சாரம் வழங்கல்,பெற்றோலியம்,பெற்றோலிய எண்ணெய் உற்பத்திகள், உராய்வு நீக்கிகள், கலங்களுக்கும் கலங்களில் இருந்து வத்தைகளுக்கும், களஞ்சியங்களுக்கும் இடையில் போக்குவரத்து செய்தல், கலங்களின் வழிகாட்டிப் பணிகள், நங்கூரமிடப்படுதல், நீர் மூழ்குதல் மற்றும் நீருக்கடியிலான கப்பல் பழுதுபார்த்தல் தொடர்பில் திறன்மிகு தொடர்ச்சியான சேவை மற்றும் அதற்கான துணை சேவைகளை வழங்கல்.
- திறன்மிகு நிலையான ஒத்துப்பார்த்தல் மற்றும் பாதுகாப்பு சேவை வழங்கல்.
- துறைமுக எல்லைகளினுள்ளும் துறைமுகங்களினது உட்புகு வழிகளிலும் கப்பலோட்டம் ஒழுங்குபடுத்தல் மற்றும் நிர்வாகம்.
- துறைமுக நிறுவுதல்களைப் பராமரித்தல் மற்றும் அவைகளின் பாவனை குறிப்பிட்ட துறைமுகங்களினுள் மேம்படுத்தலும் முறைப்படுத்தலும்
- ஏதாவது விசேட துறைமுகங்களினுள் சுங்க திணைக்களப் பணிகள் தவிர்ந்த ஏனைய சகல நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலும் முறைப்படுத்தலும்.
- விசேட துறைமுகங்களினுள்ளும் அதன் வெளியேயும் கப்பலோட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கலங்களுக்கு வழிகாட்டலும் பாதுகாப்புக்குத் தேவையான வெளிச்சங்கள் மற்றும் வேறு தேவைப்பாடுகள் இலங்கை கடற்கரையில் மற்றும் அதற்கப்பால் நிறுவுதலும் பராமரித்தலும்.
- துறைமுக அதிகாரசபை சட்டத்தின் மீது ஒப்படைக்கப்படும் வேறேதாவது அலுவல்களை நிறைவேற்றுதல்.
- சொத்துக்கள் மீள் முதலீடு செய்யப்படுவதற்கும், புதிய முதலீடுகள் ஏற்படுத்தப்படுவதற்கும் போதுமான பொது சேமிப்பு நிதியமொன்றை ஏற்படுத்தி பராமரித்து செல்லப்படுவதற்காகவும் அதிகாரசபையின் வருமானத்திற்கு கொடுக்கப்படுவதற்கான தகுந்த கட்டணம் செலுத்தப்படுவதற்கும் போதுமான வருமானத்துக்கு குறையாத வருமானம் அதிகாரசபைக்கு கிடைக்கும் வண்ணம் அதிகாரசபையின் பணிகளை நடாத்திச் செல்லல், மேற்கூறப்பட்டுள்ளவாறு அதிகாரசபையினால் வழங்கப்படும் சேவை தொடர்பிலான, கட்டணங்கள் சம்பந்தப்பட்ட சட்டத்திற்கேற்றவாறு அறவிட்டுக்கொள்ளுதல்,
- சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக விசேட துறைமுகங்கள் மற்றும் ஒவ்வொரு துறைமுகமும் நிதி அடிப்படையில் தன்நிறைவான திட்டமொன்றை முகாமைத்துவம் செய்தல்.

இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் 5 (1) பிரிவின் பிரகாரம் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்படும் 9 பணிப்பாளர்கள் துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபையில் உள்ளடங்கப்பட்டிருப்பர்.

தலைவர், பிரதான நிறைவேற்றுனராக இருப்பதுடன் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முழு நிர்வாகத்திற்கும் பொறுப்பாக இருப்பார்.

**2012 இல் சிரேஷ்ட முகாமைத்துவத்திலான மாற்றங்கள்**

**பீ. ஆர். சிறிவன்ஸ பிரதான சட்ட அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.**

**விஜித அபேசுந்தர பதில் பிரதான பொறியியலாளராக (கடலகம்) நியமிக்கப்பட்டுள்ளார்.**

**பீ.எம்.எஸ் சோமரத்ன பதில் பிரதான பொறியியலாளராக (சிவில்) நியமிக்கப்பட்டுள்ளார்.**

**இலங்கை கப்பல் முகவர்களின் சங்கம்**

கப்பல் முகவர்களினது சங்கத்தினால் (CASA) துறைமுகம் சம்பந்தப்பட்ட விடயங்கள் மற்றும் தமது உறுப்பினர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சிக்கல்கள் தொடர்பில் கலந்துரையாடப்படும் பொருட்டு இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவக் குழுவுடன் பல கூட்டங்கள் நடாத்தப்பட்டன. துறைமுக பாவனையாளர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வதற்கும், புரிந்துணர்வு, சுமூக உறவு பேணப்படுவதற்கும், அதன் ஊடாக வினைத்திறன் மேம்படுத்தப்படுவதற்கும் அக்கலந்துரையாடல்கள் வழி வகுத்துள்ளன.

**ஒழுக்காற்று விதிமுறைகளுக்கெதிரான மேன்முறையீட்டுக் குழுக்கள்**

தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு எதிராக ஊழியர்களினால் தலைவர்/ பணிப்பாளர் சபையிடம் 70 மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இலங்கை துறைமுக அதிகாரசபையின் சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கமைவாக ஏற்படுத்தப்பட்ட 05 மேன்முறையீட்டுச் சபைகளின் கவனத்திற்கு அவை கொண்டு வரப்பட்டன.

இம்மேன்முறையீடுகளில் 05 அங்கீகரிக்கப்பட்டதோடு 54 மேன்முறையீடுகள் நிராகரிக்கப்பட்டன. 11 மேன்முறையீடுகளின் பணிகள் முடிவு செய்யப்பட வேண்டியுள்ளன.

**வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் புலமைப் பரிசில் சந்தர்ப்பங்கள்**

மீளாய்வுக்குட்படும் வருடத்தினுள் அதிகாரசபையின் சிரேஷ்ட மற்றும் நடுத்தர முகாமைத்துவப் பதவிகள் வகிக்கும் 46 அலுவலர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டு பயிற்சிப் பாடநெறிகள் பின்பற்றப்படுவதற்கும், இலங்கைக்கு வெளியேயுள்ள சர்வதேச அமைப்புகளினால் நடாத்தப்பட்ட சம்மேளனங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் தொடர்பில் கலந்து கொள்ளப்படுவதற்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன.

இதற்குப் புறம்பாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் 18 ஊழியர்கள் விளையாட்டுப் போட்டிகளில் இலங்கையைப் பிரதிநிதிப்படுத்துவதற்காக வெளிநாடு சென்றனர்.

**தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள்**

முகாமைத்துவம்,ஊழியரகள் போன்று துறைமுகத்துடன் தொடர்புபடும் தரப்பினர்களுடன் சிறந்த தொடர்பாடல் மேற்கொள்ளபடுவதற்காக தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கை துறைமுக அதிகார சபையின் ஒட்டுமொத்த தோற்றப்பாடு உயர்த்தப்படுவதற்கான புதிய முறை செயற்படுத்தல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கண்காட்சிகளில் கலந்து கொள்வதோடு இலத்திரனியல் மற்றும் பதிப்பு போன்ற ஊடகங்கள் மூலமும் பொதுசன உறவுகள் பகுதியினால் இப்பணி தொடர்பில் பாரிய ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை துறைமுக அதிகார சபையினால் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதியிடம் ஒப்படைக்கப்படும் பல்வேறு பணிகளில் இலங்கை துறைமுக அதிகார சபையின் தோற்றப்பாட்டின் வளர்ச்சிக்கு வெளி நாட்டு மற்றும் உள்நாட்டு சர்வதேச நிறுவனங்களோடு முனைப்பாக செயற்படுதல் இப்பகுதியின் பணியாகும். துறைமுக திட்டங்களின் மூலம் எதிர்காலத்தில் செயற்படுத்தப்படவுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் உள்நாட்டிலும் சர்வதேசரீதியாகவும் விரிவான பிரச்சாரம் செய்யப்படுவதற்கான சகல நடவடிக்கைளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உலக கப்பலோட்டத் துறையின் சர்வதேச அரங்கினுள் நிறுவனத்தின் தோற்றப்பாடு உயர்த்தப்படும் பொருட்டு சர்வதேச நட்புரிதீயான துறைமுக ங்களின் அமைப்பு (INAP) மற்றும் சர்வதேச துறைமுகங்கள் மற்றும் துறைமுக அமைப்பு (IAPH), கடல்சார் வர்த்தகம் மற்றும் போக்குவரத்து சார்ந்த சந்தர்ப்பங்கள் சர்வதேச கண்காட்சிகள், மாநாடுகள் போன்றவை மிக அண்மையில் இப்பகுதியின் ஒத்துழைப்போடு ஒழுங்கு செய்யப்பட்ட விசேட சந்தர்ப்பங்களாகும். இந்த வருடத்தின் தனது முதலாவது நிகழ்ச்சியான டுபாய் கடல்சார் சர்வதேச நிகழ்வில் இலங்கை துறைமுக அதிகார சபையானது கடல்சார் வர்த்தக டுபாய் சர்வதேச கண்காட்சி மற்றும் மாநாட்டில் கலந்து கொண்டதன் மூலம் இலங்கை துறைமுக அதிகார சபையின் சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல், பொதுசன உறவுகள் பகுதிகளின் ஒத்துழைப்பு வெற்றிகரமாக வெளிப்படுத்தப்பட்டது.

முகாமைத்துவம் மற்றும் ஊழியர்களுக்கிடையில் சிறந்த தொடர்பாடல் நிலைகள் வளர்க்கப்படும் பிரதான நோக்கில் இலங்கை துறைமுக அதிகார சபையின் ஊழியர்களுக்கு மத்தியில் "தீர்த்த" மாதாந்த பத்திரிகை இலவசமாக வினியோகித்தல் தொடர்பாடல், பொதுசன உறவுகள் பகுதியினால் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. விளையாட்டு, நுண்கலை விடயங்கள், தத்துவம் போன்ற சமூக ஆர்வம் கொண்ட பல துறைகளில் துறைமுக ஊழியர்களின் விசேட திறன்கள் வெளிபடுத்தப்பட இது உதவுவதோடு செயற்திறன் மேம்படுத்தப்படுவதற்கான இலங்கை துறைமுக அதிகார சபையின் காலத்திற்கேற்ப செயற்பாடுகள், சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் தொடர்பில் துறைமுக ஊழியர்கள் அறிந்து கொள்வதற்கான வழிகள் திறக்கப்பட்டுள்ளன.

நிறுவனத்தின் பாவனைக்கான பதிப்பு மற்றும் இலத்திரனியல் ஆகிய இரண்டிலான பாதுகாக்கப்பட்ட ஆவணக் கூடம் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதியால் பராமரித்துச் செல்லப்படுகின்றது. இலங்கை துறைமுக அதிகார சபை தொடர்புபடும் உள்நாட்டுப் பத்திரிகைகளிலும் அநேக சஞ்சிகைகளிலும் சிங்களம் ,தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்ட சகல விடயங்களும் கணனிமயப்படுத்தப்பட்டு மூலப்பிரதிகளாக இப்பகுதியில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளதோடு இலங்கை துறைமுக அதிகார சபையின் பல்வேறு சம்பவ வீடியோ நிகழ்ச்சிகளுக்கு தேவைப்படும் இலங்கை துறைமுக அதிகார சபை தொடர்பிலான கடந்த மற்றும் நிகழ்கால அனைத்து வீடியோ நிகழ்ச்சிகள் எதிர்கால பாவனைக்காக நவீன இலத்திரனியல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ள படக்கூடமொன்றில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.இலங்கை துறைமுக அதிகார சபை சார்பில் தயாரிக்கப்பட்ட சகல வீடியோ நிகழ்ச்சிகளின் மென் மற்றும் வன் பொருட்கள் (கணனி மயப்படுத்தப்பட்ட) கொண்ட நூலகமொன்றும் இப்பிரிவில் உள்ளது.

அனுராதபுரம், ஓயாமடுவ "தேசத்திற்கு மகுடம்" மற்றும் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற டெக்னோ 2012, களுத்துறையில் நடைபெற்ற "திஸ்ஸமேலா" போன்ற கண்காட்சிகளில் கொழும்பு துறைமுகமானது தெற்காசியாவின் பிரதான நிலையிலான கேந்திரமாகவும் இலங்கையை கடல்சார் மத்திய நிலையமாக மேம்படுத்தப்படுவதற்கும் பாடசாலை மாணவர்களுக்கும்,பொதுமக்களுக்கும் துறைமுகத்தில் இருக்கும் வசதிகள் ,சேவைகள், நடைபெற்று வரும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் அறிவுறுத்தப்பட இலங்கை துறைமுக அதிகார சபைக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. பிரச்சார படிவங்கள்,கையேட்டுப் பிரதிகள் அச்சிடும் பணிகளும் இப்பகுதியால் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை துறைமுக அதிகார சபையின் பல்வேறு உற்சவ நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்படுதலின் ஊடாக இப்பகுதியினால் முக்கிய பணி ஆற்றப்பட்டுள்ளது. பல்வேறு சந்தர்ப்பங்களுக்கான பத்திரிகை மேலதிக வெளியிடுகளும் இப்பகுதியால் ஒழுங்கு செய்யப்பட்டு வெளியிடப்பட்டன.

இலங்கை துறைமுக அதிகார சபையின் தோற்றப்பாடு மற்றும் வினைத் திறன் மேம்படுத்துவதற்கும் நிறுவனத்தின் செயலாற்றுகை தேசிய பொருளாதாரத்திற்கு மிகவும் வலுசேர்க்கப்படுவதனையும் வெளிகாட்டப்படுவதற்காக பல்வேறு ஊடக கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டும் வீடியோ மற்றும் பதிப்புத் தகவல் வெளியிடப்பட்டும் இலங்கை துறைமுக அதிகார சபை சம்பந்தப்பட்ட வெளி ஊடக நிறுவனங்களுக்கு தகவல்கள் வழங்கியும் இலங்கை துறைமுக அதிகார சபையின் ஊடக வெளியிடலின் உத்தியோகபூர்வ அதிகாரம் கொண்ட பிரிவாக தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி செயற்படுகின்றது.

# இயக்க மீளாய்வு

## இயக்கம்

கப்பலிலிருந்து கரை வரையிலான 06 பாரந்தூக்கிகள், 30 இறப்பர் சில்லுகள் பொருத்தப்பட்ட கன்ட்றி பாரந்தூக்கிகள் மற்றும் 50 முனைய டிரக்டர்கள் சேர்க்கப்பட்டு 2012 ஆம் ஆண்டின் முதல் காலாண்டினுள் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் முற்றாக கையாளல் நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டன. புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களுக்காக இயக்குபவர்களின் தேர்ச்சி மற்றும் திறன்கள் பயனான முறையில் கையாளப்படும் பொருட்டு இலங்கை துறைமுக அதிகாரசபையின் பிரதான பயிற்சி நிறுவனமான மஹபொல பயிற்சி நிலையத்தின் ஒத்துழைப்போடு உபகரணப் பயிற்சிப் பாடநெறியொன்று நடாத்தப்பட்டது. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட முனையங்கள் கொள்கலன் வைக்கப்படும் 2500 க்கு மேற்பட்ட பிரதேசத்தில் ஒரு பகுதி உள்நாட்டு கொள்கலன்கள் மற்றும் எஸ்.ஏ.ஜீ.ரீ நிறுவனத்தின் கொள்கலன்கள் அடுக்கிவைக்கப்படுவதற்கு அனுப்பப்பட்டது.

ஜய கொள்கலன் முனையத்தின் இயக்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது 27 வருடங்கள் கடந்துள்ளபடியினால் கொள்கலன் முனையத்தின் மேல் தளம் சமனான முனையமாக இருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு முனையப் பகுதியில் சிவில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வதற்கு இறப்பர் சில்லுகள் பொருத்தப்பட்ட கன்ட்றி பாரந்தூக்கிகளின் பாதைகள் மற்றும் கொள்கலன் அடுக்கும் கொங்கிறீட் பகுதிகள் உயர்த்தும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டன. கப்பல் நடவடிக்கைகள் தடையின்றி பேணப்படுவதற்காகவும் முனைய கையாளல் உபகரணங்கள் செயற்படாதிருக்கும் காலம் குறைக்கப்படுவதற்கும் இயக்கம் மற்றும் சம்பந்தப்பட்ட பொறியியல் பகுதிகளோடு சிறந்த தொடர்போடும் ஒத்துழைப்போடும் பணியாற்ற உதவியதோடு. கப்பலோட்ட நடவடிக்கைகளில் ஏற்படும் வீணான தாமதங்கள் குறைக்கப்படுவதற்காக கப்பலோட்டப் பகுதியுடன் சிறந்த தொடர்பாடல் பேணப்படுவதற்கான நடவடிக்கைகளும் பேணப்பட்டன.

இயக்கப் பகுதியினால் அதன் முனையங்களில் போன்று மஹபொல பயிற்சி நிலையத்திலும் மிகவும் சிறப்பாக பணிபுரியும் பயிற்சிகள், உளப்பாங்குகள் பற்றியும் பொருட்களினதும் தனிநபர்களினதும் பாதுகாப்பு தொடர்பிலான அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. ஓய்வறைகளிலும் முனையப் பகுதிகளினது சுத்தம் பேணப்படும் வகையில் மேலதிக ஆளணிக் குழுவொன்றை வெளியிலிருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் ஊடாக ஊழியர்களின் நலன்புரி பற்றியதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. சிறந்த உணவுவேளை வழங்குதல் தொடர்பில் மத்திய சமையலறையின் செயற்பாடுகள் கண்காணிக்கப்படுவதற்காக தலைவரினால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டது.

ஜய மற்றும் ஐக்கிய கொள்கலன் முனையங்களில் செயலாற்றுகை தொடர்பில் கருத்துப் பெறுவதற்காக கப்பல் முகவர்களோடு பொதுவான கூட்டங்கள் நடாத்தப்பட்டு தேவைப்படும் மேம்படுத்தல்களுக்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

பிரதான கொள்கலன் கையாளல் பாரந்தூக்கிகள் மணித்தியாலமொன்றிற்கு பொதுவான 25 கையாளல் அளவு இலக்கினை அடைவதற்கு ஜய கொள்கலன் முனையத்தினுள் கையாளப்படும் கப்பல்களின் வினைத்திறன் விருத்தி செய்ய உதவுவதற்கான மேற்கூறப்பட்டுள்ள சகல திட்டங்களும் முனையங்களில் 2012 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டன. சென்ற ஆண்டினுள் வரலாற்றில் ஆகக் கூடிய வருடாந்த கொள்கலன் கையாளல் அளவு இலங்கை துறைமுக அதிகாரசபையினால் பதிவு செய்யப்படக் கூடியதாக இருந்தது. கையாளப்பட்ட மொத்த கொள்ளளவு 2,316,849 இருபது சம அலகுகளை எட்டக் கூடியதாக இருந்தது. இதுவானது சென்ற ஆண்டின் கொள்ளளவின் 0.8% வளர்ச்சி தென்படுகின்றது. உள்நாட்டு மற்றும் மீள் ஏற்றமதி கொள்கலன் அளவு ஒரே மட்டத்தில் பேணப்பட்டதன் ஊடாக இலங்கை துறைமுக அதிகாரசபை 2.8% வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

## சேவை வழங்கல்

துறைமுகத்திற்கு கொண்டு வரப்படும் பூரண கொள்கலன் ஏற்றல்கள் (FCL), குறை கொள்கலன் ஏற்றுதல்கள் (LCL), தொகை பிரிப்பு ,பொதிகளிலிடப்பட்டவை மற்றும் மோட்டார் வாகனங்கள்

கொண்ட அனைத்து கப்பற் சரக்குகளை ஒப்படைப்பதும் வாடிக்கையாளர்களுக்குரிய ஏனைய கப்பற்சரக்குகள் பற்றியதிலான சேவைகள் வழங்குவதும் சேவை வழங்கல் பகுதியின் முக்கிய பணிகளாகும்.

24 மணித்தியாலங்கள் பூராகவும் சேவைகள் வழங்கப்படுதலின் மூலம் பாவனையாளர் சேவை நிலையத்தினால் 2012 ஆம் ஆண்டினுள் 284,014 இருபது சம அலகுகளைக் கொண்ட பூரண கொள்கலன் ஏற்றுதல்கள் நேரடியாக வினியோகிக்கப்பட்டுள்ளன. பாவனையாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகள் அதிகரிக்கப்படுவதற்கும் ஆவணமாக்கலில் செலவிடப்படும் காலம் குறைக்கப்படுவதற்கும் ஆண்டினுள் நேவீஸ் (NAVIS) கப்பற் சரக்கு மொடியூல் அறிமுகப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

உள்நாட்டு, மீள் ஏற்றுமதி, பல்நாட்டு கப்பற் சரக்குகளின் (MCC) ஒன்று திரட்டல் கப்பற் சரக்குகளுக்கு துறைமுகத்தினுள்ள குதங்களில் இடமளிக்கப்படுவதற்காக குறை கொள்கலன் ஏற்றுதல்களின் (LCL) (8,157 இருபது சம அலகுகளின்) பெரும் பகுதி அடுக்கப்படுவதற்கு பேலியகொடை கொள்கலன் நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. குறை கொள்கலன் ஏற்றுதல்கள் அடுக்கப்பட்டதன் ஊடாக ரூபா 180.9 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. அதேபோன்று பல்நாட்டு கப்பற்சரக்கு ஒன்று திரட்டப்பட்டதனால் ரூபா 135.9 மில்லியன் வருமானமும் இதற்கு மேலதிகமாக வெற்று கொள்கலன் களஞ்சியப்படுத்தப்பட்டதன் வாடகையாக ரூபா 2.6 மில்லியன் வருமானமும் கிடைக்கப் பெற்றுள்ளது.

ஆண்டினுள் சரக்குகள் அகற்றும் நிறுவனங்களுக்கு 78 புதிய அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டும் 843 அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டதனாலும் மொத்தமாக 925 அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் ரூபா 13.5 மில்லியன் வருமானம் பெறப்பட்டுள்ளது. “ஏ” மற்றும் “பீ” வகையின் வாப்பு இலிகிதர்களுக்கான ஆள் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டும் புதுப்பிக்கப்பட்டதனாலும் ரூபா 6.8 மில்லியன் வருமானம் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. ஆண்டினுள் வழங்கப்பட்ட மற்றும் புதுப்பிக்கப்பட்ட “ஏ” மற்றும் “பீ” வகையிலான அனுமதிப் பத்திரங்களின் தொகை முறையே 2,123 ,302 ஆகும்.

கொள்கலன் அடுக்கி வைக்கப்படும் நிலையத்தின் V ஆம் இலக்க (CFS -V ) குதம் புதுப்பிக்கப்பட்டதன் மூலம் உடன்பாட்டுக் குத்தகை மற்றும் துறைமுக கப்பற் சரக்கு வர்த்தகத்திற்கான குத வசதிகள் அதிகரிக்கப் பெற்று உடன்பாட்டுக் குத்தகை மற்றும் துறைமுக கப்பற் சரக்கு வர்த்தகத்திற்கான கிராக்கி ஏற்பட்டதனால் ரூபா 43.5 மில்லியன் மொத்த வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது. இதுவானது 2011 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட ரூபா 335.6 மில்லியனுடன் ஒப்பிடப்படுகையில் 2012 ஆம் ஆண்டில் சேவை வழங்கல் பகுதியினால் வழங்கப்பட்ட சேவைகளின் ஊடாக ரூபா 383.5 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

கைவிடப்பட்ட கப்பற் சரக்குகள் அகற்றப்படுவதற்கான பகிரங்க விலைகோரல் மற்றும் ஏல விற்பனையினால் மொத்தமாக ரூபா 188.7 மில்லியன் வருமானம் கிடைக்கப்பெற்றதோடு வ/ப இலங்கை துறைமுக முகாமைத்துவ மற்றும் ஆலோசனைச் சேவைக் கம்பெனியினால் கழிவு இரும்புகள், பயன்படுத்தப்பட்ட எண்ணெய் மற்றும் பழைய டயர்கள் விற்கப்பட்டதனால் ரூபா 11.4 மில்லியன் மேலதிக வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது. இதற்குப் புறம்பாக இலங்கை துறைமுக அதிகாரசபையினால் அகற்றப்பட்ட மேலதிக பொருட்கள் பகிரங்க விலைகோரலின் மூலம் விற்கப்பட்டதனால் ரூபா 1.8 மில்லியன் வருமானம் ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளது. மேலும் சில நபர்களிடம் ஒப்படைக்கப்பட்டு அகற்றிச் செல்லப்படாத பொருட்கள் அரசாங்க உடைமையாக்கப்பட்டதனால் ரூபா 945,000/= வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது.

2012 ஆம் ஆண்டினுள் கப்பல் சரக்குகள் பெற்றுக் கொள்பவர்களினால் துறைமுக மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிடம் 61 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இதில் 28 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டு 18 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. மீதி விண்ணப்பங்கள் தொடர்பில் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் தீர்மானம் எடுக்கப்பட வேண்டியுள்ளது.

சேவை வழங்கல் பகுதியினால் ஆற்றப்படும் சேவையின் தரம் விருத்தி செய்யப்படும் நோக்கில் அதிகாரசபையினால் 2012 ஆம் ஆண்டினுள் வாடிக்கையாளர்களுக்கு திறனானதும் பயன்மிகுந்ததுமான சேவை உறுதிப்படுத்தும் பொருட்டு நேவீஸ் (NAVIS) கப்பல் சரக்குகள் வினியோகிக்கும் மொடியூல் தொகுதி அறிமுகப்படுத்தப்படும் பணி மேற்கொள்ளப்பட்டது எப்சீஎல் கொள்கலன்களினது வினியோகம் மற்றும் எல்சீஎல் கொள்கலன்கள் போன்று மீள் அடுக்கப்படுவதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

## நிதி

திறன்மிகுந்த மற்றும் பயனான முறையில் வருமானம் ஒனறுசேர்த்தல், அந்த வருமானம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு பெறப்பட்ட சேவைகளுக்கான செலுத்துதல்கள் அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி பகிந்தளிப்பு மற்றும் மேலதிக வருமானம் முதலீடு செய்யப்பட்டு நிதி முகமைத்துவ செயற்பாடுகள் தடையின்றி செல்லப்படுதலின் மூலம் துறைமுக அதிகாரசபையின் ஏனைய பிரிவுகளின் சிறந்த செயலாற்றுகை நிலை உறுதிப்படுத்திக்கொள்ள உதவுதல் நிதிப் பிரிவின் பொறுப்பாகும்.

தகுந்த வரவு செலவு கட்டுப்பாடு செயற்பாட்டின் ஊடாக செலவினம் மேற்பார்வை செய்தல் அனைத்து நடவடிக்கைகளினதும் ஏனைனய சேவைகளினதும் வரவு செலவு ஒன்றுசேர்த்தல் பயனான முறையில் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுத்தலும் மேலும் இப்பிரிவினால் நடைபெறுகின்றது. சரியானதும் பூரணமானதும் காலத்திற்கேற்பவாறு நிதிசார் தகவல்கள் வழங்குவதற்காக ஒற்றையான நிதிசார் கணக்கீட்டு விதிமுறை தயாரிக்கப்படுவதற்காக தொழில்நுட்பம் பயன்படுத்துதல் மற்றும் பேணிச் செல்லல் இப்பிரிவின் மேலும் முக்கியமானதொரு பணியாகும். இதற்கு புறம்பாக அனைத்து துறைமுக நடவடிக்கைகள் மற்றும் சேவைகளுக்காக அறவிடப்பட வேண்டிய நிதிகள் ஒன்றுசேர்த்தல்,செலவினம் மேற்பார்வை செய்தல், சம்பந்தப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பில் நிதிப்பிரிவு சதா பொறுப்புக்கூறல் வேண்டும்.

**நிதிப் பிரிவின் பணிகள் பின்வரும் பிரிவுகளினால் மேற்கொள்ளப்படுகின்றன**

**அரச வருமானம்,தரையிறக்குதலின் துறைமுக தீர்வை வரி, கப்பலோட்டப் பிரிவு**

அனைத்து கொள்கலன்களிலான கப்பற்சரக்குகள், கொள்கலனிடப்படாத கப்பற்சரக்குகள், கப்பலோட்டச் சேவைகள், பல்நாட்டு கப்பற் சரக்குகள் ஒன்று திரட்டும் செயற்பாடு மற்றும் ஏனைய பல்வேறு சேவைகளுக்கான ஆவணப்படுத்தல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**வருமானம், தரையிறக்கல் மற்றும் வினியோகப் பிரிவு**

இறக்குமதியாளர்களுக்கு கப்பற்சரக்கு வினியோகித்தல், ஏற்றுமதிக்கான கப்பற் சரக்குகளை பொறுப்பேற்றல், உள்நாட்டு சரக்கு உரிமையாளர்களின் சரக்குகள் வினியோகம் தொடர்பிலான நிதி ஒன்று சேர்த்தல் மற்றும் இன்வொயிஸ் பட்டியலிடல் இதன் பணிகளாகும். கனல் முனையம், புறக்கோட்டை, பேலியகொட முதலீட்டுச் சபையின் பிரதான அலுவலகம், கட்டுநாயக்க மற்றும் பியகம போன்ற இடங்களில் அமைந்துள்ள தகவல் நிலையங்கள் போன்றவற்றிலிருந்து இப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**வருமானம், கடன் கட்டுப்பாட்டு பிரிவு**

கப்பல் முகவர்களினது கொடுக்கல் வாங்கல்களின் அறிக்கைகளை பேணுதல், கடனாளிகளின் பேரேட்டுக் குறிப்புகள் மேற்பார்வை செய்தல், சிக்கல்களை தீர்த்துக் கொள்ளும் முறை ஒருங்கிணைத்தல் போன்றவை இதன் பிரதான பணியாகும்.

**செலவிம், கப்பலோட்ட மற்றும் ஏனைய பகுதிகளின் பிரிவுகள்**

இந்த இரண்டு பிரிவுகளினாலும் அனைத்து ஊழியர்களினது சம்பளங்கள் மற்றும் வேதனங்கள தயார் செய்யப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக ஒப்பந்தக்காரர்கள், சேவை வழங்குநர்களிடமிருந்து இலங்கை துறைமுக அதிகாரசபை பெற்றுக் கொண்ட பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான நிதி கொடுப்பனவு மேற்கொள்ளல் இப்பிரிவினால் நடைபெறுகின்றது.

**நிதி மற்றும் முகாமைத்துவ கணக்கீட்டுப் பிரிவு**

துறைமுக அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களின் அறிக்கைகள் பேணுதல் மற்றும் அந்த அறிக்கைகளின் பயன்பாட்டில் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு இதுவானது பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் கணக்காய்வாளர் நாயகம், திரைசேரி, துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு அனுப்பி வைப்பது நிதிசார் கணக்கீட்டுப் பிரிவின் முக்கிய பொறுப்பாகும். பயனான நிர்வாக முறையாக வரவு செலவு ஆவணம் உண்மையான செலவினத்தோடு ஒப்பிடப்பட்டு மேற்பார்வை போன்று அவ்வப்போது வருடாந்த வரவு செலவு செய்யப்படுவதற்கும் முன்வைக்கப்படுவதற்கு தேவையான முகாமைத்துவ கணக்குகளிலுள்ள சகல வரி செலுத்துதல்கள், தயார்படுத்துதல்கள் மற்றும் வழங்குதல்கள் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவம் போன்ற ஏனைய நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்றன. இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிலையான சொத்துக்களின் பட்டியல் பேணல் இப்பிரிவினால் செய்யப்படும் மேலுமொரு முக்கிய பணியாகும்.

**நிதி மற்றும் முதலீட்டுப் பிரிவி**

இப்பிரிவினால் உச்ச வருமானம் பெறப்படுவதற்காக மேலதிகமாவுள்ள நிதிகள் முதலீடு செய்யப்படுகின்றன.

## கப்பலோட்டம்

**வழிகாட்டிச் சேவை**

மீளாய்வாண்டினுள் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்த சகல வகையிலான கப்பல்களுக்கும் (24 மணித்தியாலங்கள் பூராகவும் கிழமையில் 07 நாட்களிலும்.) தொடர்ச்சியான வழிகாட்டிச் சேவைகள் வழங்கப்பட்டன.

| கப்பல்களின் வகை | கப்பல்களின் எண்ணிக்கை | வருகை தந்த நோக்கம் | கப்பல்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| கொள்கலன் | 3,093 | எண்ணெய் பெறுதல் | 51 |
| மரபு முறையான | 52 | பழுதுபார்த்தல் | 35 |
| உலர் மொத்தம் | 195 | பயணிகள் | 34 |
| எண்ணெய் தாங்கி | 258 | ஏனைய சேவைகள் | 14 |
| றோல் ஒன் ஒப் றோல் | 67 | | |
| ஏனைய சரக்கு | 71 | | |
| **மொத்தம்** | | | **3,870** |

**பிரதான இழுவைக் கல அதிபர் பிரிவு**

பிரதான இழுவைக் கல அதிபர் பிரிவினால் மீளாய்வாண்டினுள் நங்கூரமிடுதல் மற்றும் கப்பலோட்டத்துக்கான தொடர்ச்சியானதும் திறனானதுமான இழுவைக் கல சேவைகள்

வழங்கப்பட்டதன் ஊடாக சிறப்பான பணியாற்றப்பட்டது. அப்பணிகளுக்குப் பதிலாக பின்வரும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

- இழுவைக் கலங்களின் தட்டுக்கள் (DECK) புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் வேலைகள் நிறைவேற்றுதல்.
- கப்பல்கள் கட்டி வைக்கப் பயன்படுத்தப்பட்டு அகற்றப்பட்ட பாரிய கயிறுகளினால் இழுவைக் கலங்களுக்கான கயிறுகளும் விரிப்புகளும் செய்தல், இழுவைக் கலங்களுக்கும் வேறு பிரிவுகளுக்கும் கென்வஸிலான திரைகள் தயாரிக்கும் நடவடிக்கைகள்.

கப்பல்களின் நகர்வுகளுக்காக போதுமானளவு இழுவைக் கலங்கள் நாளாந்தம் ஈடுபடுத்தப்பட்டதோடு அவசர சந்தர்ப்பங்களுக்காக ஒரு இழுவைக் கலம் எதிர்பார்ப்பு சேவையில் வைக்கப்பட்டது.

**இழுவைக் கலங்களின் உதவியுடான கப்பல்களின் மொத்த நகர்வுகள்**

நங்கூரமிடும் இழுவைக் கலங்களினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த நகர்வுகள் 14,288 ஆகும். விபரங்கள் பின்வருமாறு

| கலங்களின் பெயர் | மொத்தம் |
|---|---|
| எம்ரீ ராஜா | 2,045 |
| எம்ரீ நந்தமித்ர | 1,358 |
| எம்ரீ சுரணிமல | 3,012 |
| எம்ரீ கோடைம்பர | 3,244 |
| எம்ரீ விஜயபாகு | 2,333 |
| எம்ரீ பரண - II | 2,283 |
| எம் ரீ வேலுசுமன | 13 |

மீளாய்வாண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் தனது இழுவைக் கலங்களை பிரதான பழுதுபார்த்தல்களுக்கு அனுப்பும் பொருட்டு 60 தொன் எடையுடைய தடித்த கட்டு முகப்பு கொண்ட புத்தம் புதிய இரண்டு இழுவைக் கலங்கள் ஆறு மாத காலப் பகுதிக்கு வாடகைக்கமர்த்தப்பட்டன.

**வேறு துறைமுகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இழுவைக் கலங்கள்**

**திருகோணமலை**

- எம்ரீ மஹசென்
- எம்ரீ நீலமஹ
- எம்ரீ வசப
- எம்ரீ நந்திமித்ர (20BP)

**காலி**

- எம்ரீ தேரபுத்தாபய

**காங்கேசன்துறை**

- எம்ரீ கன்ஞதேவ
- எம்ரீ தீர

**மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம்**

- எம்ரீ வேலுசுமன

**கடற் பயணங்கள்**

- எம்ரீ வேலுசுமன (கொழும்பிலிருந்து மாகம்புர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்திற்கு)

**பயிற்சி நடவடிக்கைகள்**

மஹபொல பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட உயர் தீயணைத்தல், உயர் ஆங்கிலம், ஆரம்ப தீயணைப்பு, ஆரம்ப முதலுதவி பயிற்சி, தனிநபர் பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்பு, தனிநபர் உயிர் காப்பு நுட்பங்கள், மைக்றோசோப்ட் ஒபீஸ் ஆகிய பயிற்கிகளைப் பின்பற்றி தமது அறிவு வளர்த்துக் கொள்ளப்படுவதற்காக அலுவலர்களும் சகல பணியாளர்களும் ஊக்குவிக்கப்பட்டனர்.

**ஈட்டப்பெற்ற வருமானம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2011 | உண்மையான | - | ரூபா | 319.735 | மில்லியன் |
| 2012 | திருத்தப்பட்ட | - | ரூபா | 349.401 | மில்லியன் |
| 2013 | திட்டமிடப்பட்ட | - | ரூபா | 370.006 | மில்லியன் |

**பிரதான பொறியியல் அலுவலர் பிரிவு**

**ஆளணியினர்**

2012 ஆம் ஆண்டினுள் சகல வகையிலான இழுவைக் கலங்கள், வெளிச்சவீட்டுக் கலங்கள், வழிகாட்டி மற்றும் நங்கூரக் கலங்களின் இயக்கம், பழுதுபார்த்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு போதுமான ஆளணியினர் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர். இப்பிரிவின் ஆளணியினரால் மேற்கொள்ளப்படும் சகல பொதுவான பராமரித்தல் பணிகளுக்கு மேலதிகமாக நாளாந்த ஓட்ட நகர்வுகளுக்கான இழுவைக் கலங்களின் வழிகாட்டல் மற்றும் இயக்க சேவைகளும் வழங்கப்பட்டன.

முகாமைத்துவத்தின் பரிந்துரைக்கமைய கருவிகள் கொண்ட வேலைத்தளத்தோடு பிரதான பொறியியல் அலுவலர் பிரிவினால் அன்றாட பராமரிப்புகளும் கல ஓட்டத்துக்கான வழிகாட்டி மற்றும் இயக்கம் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

**துறைமுக தீயணைப்பு படைப் பிரிவு (PFB)**

துறைமுக தீயணைப்பு படைப் பிரிவு 2012 ஆம் ஆண்டினுள் தீ மற்றும் வேறு அவசர சந்தர்ப்பங்களில் ஏற்படும் ஆபத்து நிலைமைகளைக் கட்டுப்படுத்தி அவசர நிலைமைகளைக் கவனிப்பதற்கு மேலதிகமாக, உள்ளக தீ காப்பு தரம் பேணப்படுவதிலும் அமுல்படுத்துவதிலும் ஈடுபட்டது. இலங்கை துறைமுக தீயணைப்பு படைப் பிரிவானது எண்ணெய்களினால் கடல் மாசடைதல், ஆபத்தான கப்பற் சரக்குகளின் சிதறல் போன்ற அவசர நிலைமைகளில் பொறுப்பாக செயற்படும் குழுவாகும்.

**துறைமுக தீயணைப்புப் பிரிவு பின்வரும் சந்தர்ப்பங்களில் தனது உரிய ஒத்துழைப்பினை வழங்கியுள்ளது.**

| | |
|---|---|
| தீயணைப்பு அழைப்புக்கள் | 05 |
| அவசர அழைப்புக்கள் | 15 |

| | |
|---|---|
| எண்ணெய் தாங்கிக் கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை | 118 |
| வாயு தாங்கிக் கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை | 21 |
| கப்பல்களில் வெப்ப வேலைகளுக்கான காத்திருத்தல் சேவை | 1,071 |
| ஆபத்தான கப்பற் சரக்குகள் கையாளல்களுக்கான காத்திருத்தல் சேவை | 19 |
| பாலங்கள்/ குதங்கள் போன்றவை கழுவுவதற்கான நீர் வினியோகம் | 61 |
| தண்ணீரை வெளியேற்றுதல் | 18 |
| எண்ணெயினால் மாசடைவு கட்டுப்பாட்டுப் பணிகள் | 03 |
| எண்ணெய் தாங்கிகளுக்கான பரீட்சிப்பு விஜயம் | 728 |

**தீ காப்பு நடவடிக்கைகள்**

காலி, திருகோணமலை மற்றும் மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம் அடங்கலாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் சகல கட்டிடங்கள் / பாரம் தூக்கிகள் / மிதவைக் கலங்களின் தீ காப்பு பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**பயிற்சி நடவடிக்கைகள்**

| | |
|---|---|
| ஆளணி பயிற்சிப் பட்டறைகள் | 16 |
| வெளிநபர்கள் பரீட்சயமாக்கப்படும் விஜயங்கள் | 04 |
| கொக்\ன் பயிற்சிப் பாடநெறி | 04 |
| டெக் தரப்படுத்தல் பயிலுநர்களுக்கான தீயணைப்புப் பயிற்சி | 02 |
| லாபாஜ் சீமெந்து கம்பனியினருக்கான தீயணைப்புப் பயிற்சி | 01 |
| தீயணைப்புப் படையின் ஆளணியினருக்கான மீள் தீயணைப்புப் பயிற்சி | 08 |
| பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான தீயணைப்புப் பயிற்சி | 01 |
| மா.ரு.ம. ரா துறைமுகத்திற்காக ஆடசேர்ப்புச் செய்யப்பட்ட தீயணைப்பாளருக்கான பயிற்சி | 01 |
| மா.ரு.ம. .ரா துறைமுக ஊழியர்களுக்காள அலுவலக பயிற்சி | 13 |
| முகாமைத்துவ பயிற்சி பாடநெறி | 02 |

இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம், கொழும்பு கப்பல் கட்டும் தளம் மற்றும் கொழும்பு வலு நிலையம் ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து தீயணைப்பு ஒத்திகைகள் நடாத்தப்பட்டன.

**வருமானம்**

2012 ஆம் ஆண்டில் துறைமுக தீயணைப்புப் படையினால் ஈட்டப்பட்ட வருமானம்.

| விபரம் | அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| எண்ணெய் தாங்கிக் கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை | 188,057 | |
| வாயு தாங்கிக் கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை | 26,060 | |
| ஆபத்தான கப்பற்சரக்குகளுக்கான காத்திருத்தல் சேவை | 33,240 | 90,000 |
| பரீட்சிப்பு விஜயங்களுக்கான கட்டணங்கள் | 18,060 | |
| எண்ணெய்களினால் மாசடைவு கட்டுப்பாடு நடவடிக்கைகளின் கட்டணங்கள் | 8,600 | 982,500 |
| **மொத்த வருமானம்** | **274,017** | **1,072,500** |

**துறைமுக காப்பு பிரிவு**

சகல துறைமுகங்களிலும் மேற்கொள்ளப்படும் ஆபத்தான கப்பற்சரக்குகள் கையாளப்படுகையிலான பாதுகாப்பு அணுகு முறைகள் சகல நேரங்களிலும் அவதானித்து உரிய முறையில் பேணுவது இப்பிரிவின் பணியாகும்.

துறைமுக தீயணைப்புப் படையின் உதவியோடு சில இரசாயன சிதறல்கள் மற்றும் தீ விபத்துக்கள் கட்டுப்படுத்தப்பட்டன. ஆபத்தான சரக்குக் குதங்கள் மற்றும் கொள்கலன் அடங்கலாக குதங்களின் பரீட்சிப்புகள் பருவ காலங்களில் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

வெப்ப வேலைகளுக்கான அனுமதி வழங்கப்படுவதற்கு முன் சம்பந்தப்பட்ட தளங்களில் பரீட்சிப்புகள் நடாத்தப்பட்டு அனுமதி வழங்கப்படாத வெப்ப வேலைகள் தடுத்து நிறுத்தப்பட்டன. கடல் மாசடைதல் தொடர்பிலான பரீட்சிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன. தனிநபர் மற்றும் கடல்சார் விபத்துகள் தொடர்பில் ஆராயப்பட்டு பகுப்பாய்வுகளும் செய்யப்பட்டன.

- 2012 ஆண்டில் கொழும்புத் துறைமுகத்தினால் 421,748.377 மெட்ரிக் தொன் ஆபத்தான கப்பற் சரக்குகள் கையாளப்பட்டன.
- ஆபத்தான கப்பற் சரக்கு 31,085 கொள்கலன்களின் மாற்றியேற்றல்கள் மேற்கொள்ளப்பட்டன.
- இயக்கப் பகுதியின் ஊழியர்களுக்கு துறைமுகத்தினுள் ஆபத்தான கப்பல் சரக்குகள் கையாளல், களஞ்சியப்படுத்தல்,போக்குவரத்து செய்தல் ஆகியவற்றுடன் தொடர்புபட்ட பாதுகாப்பு முறைகளிலான விரிவுரைகள் நடாத்தப்பட்டன.
- எளிதில் வெடிக்கக்கூடிய (GPIE) மெட்ரிக் தொன் 32,372 பொருட்களும், வெடிக்கக் கூடிய (GPIAE/IIE) மெட்ரிக் தொன் 9,428.709 பொருட்களும் கையாளப்பட்டன.
- ஜய கொள்கலன் முனைய ஊழியர்கள் மற்றும் கப்பலோட்டப் பகுதியின் நங்கூரமிடல் குழுவினரினதும் தனிப்பட்ட பாதுகாப்பு தொடர்பில் உதவி துறைமுக காப்பு பரீட்சகர்களின் உதவியோடு தலைக் கவசம் (PPE) அணிவது விசேடமாக அவதானிக்கப்பட்டது.

கொழும்புத் துறைமுகத்திற்கு 13 எண்ணெய் தாங்கிக் கப்பல்கள் வருகை தந்ததோடு இறக்கப்பட்ட கப்பற் சரக்குகள் பின்வருமாறு

| சரக்கு வகை | அளவு மெ.தொ |
|---|---|
| திரவ பெற்றோலிய வாயு | 187,667,736 |
| வாயு எண்ணெய்/ ஜெட்A1/ கெஸொலைன்/ கெரொசின் | 2,536,911,227 |
| மசகு எண்ணெய் | 933,054,525 |
| எரிபொருள் | 840,944,422 |
| பேஸ் ஒயில் | 21,438,191 |

**கரையோர வெளிச்ச வீட்டு சேவைப் பிரிவு**

சர்வதேச கப்பல் பாதைகளுக்கு வசதிகள் வழங்கும் தென் மற்றும் மேற்கு கரையோர வெளிச்ச வீடுகளினது பராமரித்தல்கள் மற்றும் பழுதுபார்த்தல்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

**கால்வாய்களில் அமைந்துள்ள வெளிச்ச மிதப்பிகள்**

வெளிச்ச மிதப்பிகளின் வழமையான பரீட்சிப்புகள் மற்றும் பராமரிப்புகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன. தோண்டுவதற்கான வசதிகள் வழங்கப்படுவதற்கும் கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டத்திற்கு அருகாமையில் எண்ணெய் குழாய்கள் மீள் பதிக்கப்படுவதற்கும். பிரதான தென்மேற்கின் பிரவேசமானது அடிக்கடி மாற்ற வேண்டியேற்பட்டது. கடல்சார் துறையின் CASA, SLAVO , LASO மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் நீரியல் ஆய்வுப் பகுதியினால் கிடைக்கப்பெறும் சுற்று நிருபங்களுக்கேற்ப கடலகவியலாளர்கள் தகுந்தவாறு எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

**வருமானம் - 2011/ 2012 வெளிச்சவீட்டுக் கட்டணம்**

**ரூபா மில்லியன்**

| | 2010 | 2011 மதிப்பிடப்பட்ட | 2012 திட்டமிடப்பட்ட |
|---|---|---|---|
| ஒன்று சேர்ந்த மொத்தம் | 534.93 | 511.761 | 544.877 |

**துறைமுக கலப் பிரிவு**

கொழும்புத் துறைமுகத்துக்கு வருகை தரும் கப்பல்களுக்கான வழிகாட்டி மற்றும் நங்கூரக் கலங்கள் வழங்கல், கப்பல்களைக் கட்டி வைக்கும் பணியில் குழுக்களை ஈடுபடுத்துதல் துறைமுக கலப் பிரிவின் முக்கிய பணியாகும். மேலும் பல்வேறு வேலைக் குழுக்களை தீவு மற்றும் தென் மேற்கு அலைதாங்கிகளுக்கு போக்குவரத்து செய்தல், துறைமுக நீர்ப் பகுதி சுத்தமாக வைத்திருத்தல், ஜிராப் மிதவை பாரமுயர்த்திகளினால் அதிக பாரம் தூக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. வழிகாட்டி மற்றும் நங்கூரக் கலங்களின் வழமையான பராமரித்தல்களும் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டன.

**நீரியல் அளவைப் பிரிவு**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் தேவைக்கேற்பவாறு சகல துறைமுகங்களிலும் அளவையாளர்கள் நிலம் மற்றும் நீரில் அளவை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

- உட்புகு கால்வாயின் ஆழம் அளவீடு செய்தல்
- தென் துறைமுக காணி அளவிடுதல் மற்றும் ஆழம் அளவீடு செய்தல்
- பிரதான நுழைவாயின் ஆழம் அளவீடு செய்தல்
- உள்ள துறைமுகத் தடாகம் மற்றும் துறைமேடைகளின் ஆழம் அளவீடு செய்தல்
- உட்புகு கால்வாயின் மிதப்பி அமைவிடங்களினது ஆய்வு செய்தல்
- கொழும்பு துறைமுக படத்தின் மீளாய்வுப் பணிகள்
- கட்டுப்பாட்டு முனையின் ஆய்வு செய்தல் (தொடர்ச்சியாக)
- புளுமென்டல் ஆய்வு செய்தல் (எண்ணெக் களஞ்சியத் திட்டம்)
- துறைமுக உள்ளக பாதை விரிவாக்கல் திட்டத்தின் ஆய்வு மற்றும் மட்ட நோக்குதல்
- துறைமுக அணுகு பாதை விரிவாக்கலின் மத்திய கோடு அடையாளமிடுதல் மற்றும் மட்ட நோக்குதல்
- ஐக்கிய கொள்கலன் முனைய மீளமைப்பின் நீரியல் மற்றும் காணி அளவீடு செய்தல்
- குத்தகை உடன்பாட்டின் ஆய்வுப் பணிகள்
- பண்டாரநாயக்க துறைமேடை புகையிரத குறுக்குப் பாதை மின் நிறுவலின் மட்டநோக்குதல் மற்றும் அடையாளமிடுதல்.

**காலி துறைமுகம்**

- உத்தேச புதிய பாதையின் குறுக்குப் பகுதி மற்றும் அடையாளமிடுதல்

- ரூமஸ்ஸல துறைமுக காணி கைப்பற்றலின் அளவீடு நடவடிக்கைகள்
- உல்லாச படகுத் திட்டம் தொடர்பிலான குத்தகை தயார் செய்தலின் ஆய்வுகள்
- காலித் திட்டம் மேம்படுத்தும் ஆய்வுகள்

**திருகோணமலை துறைமுகம்**

- கைப்பற்றப்பட்ட காணிகளின் நில அளவைகள்
- அஸ்ரப் துறைமேடை முழுப் பகுதியினதும் மட்டநோக்குப் பணிகள்
- குத்தகை திட்டம் தயார் செய்தலிலான ஆய்வுகள்

**ஒலுவில் துறைமுகம்**

- திட்டப் பகுதியின் காணி அளவீடுகள் மற்றும் கட்டுப்பாட்டு முனைகளினது பரீட்சிப்புகள்
- நில அளவை ஆலோசகருடனான ஹய்றோலிக் ஆய்வுகள்

**காங்கேசன்துறை துறைமுகம்**

- யாழ்ப்பாண பிராந்திய நில அளவைகள் அலுவலகத்தில் பழைய நில அளவைப் படத்துடனான பரீட்சிப்புகள்
- துறைமுக காணிப் பகுதியின் விசாரணை வேலைகள்

**மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம்**

- நில அளவைத் திணைக்களத்தின் மேற்பார்வையிடல் கட்டம் 1 இன் கீழ் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு தனியார் அவசர வேலைகள் குடியிருப்பாளர்களின் காணிகளுக்கான பட்டியல் தயாரிக்கப்படும்.
- கட்டம் 11 இன் காணி கைப்பற்றல் மற்றும் மீள் குடியமர்த்தப்படும் நடைமுறை தொடர்பில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உறுப்பினராக கலந்து கொள்ளல்.
- நீர்த் தடாகம், பிரவேச கால்வாய் மீதான நீரியல் அளவீடுகள் மற்றும் மிதப்பிகளின் அமைவிடங்களை அடையாளமிடுதல் (சனவரி,பெப்ரவரி, மார்ச்,மற்றும் நவம்பர்)
- நீரியல் வள முகவராண்மை NARA அலுவலரோடு கப்பலோட்ட அட்டவணை சீராக்கும் ஆய்வுகள்
- CHC உபகரண நிறுவுதலின் சமுத்திர ரீதியான தரவுகள் பெறுதல்
- முதலீட்டாளர்களின் காணிகளுக்கான குத்தகை திட்டம் தயாரிக்கப்படும் ஆய்வுகள்
- பாதை வலையமைப்பு நெடுகே துப்புரவாக்குவதற்கான அடையாளமிடுதல்
- நிர்வாக கட்டிடத் தொகுதிக்கு அண்மித்த புதிய கட்டிடத்தின் அளவை மற்றும் அதற்கான பணிகள்
- எண்ணெய்த் தாங்கித் தொகுதி அண்மித்த முழுப் பிரதேசத்தினதும் அளவை மற்றும் மட்டநோக்கும் பணிகள்
- புதிய துறைமுக அதிகாரசபையின் கல் உடைக்கும் இயந்திரத தளத்தினது மட்டநோக்குப் பணிகள்
- முதலாம் கட்டத்தின் பிரதேசம், நிர்வாகக் கட்டிடத் தொகுதி மற்றும் அலைதாங்கி பகுதியின் கட்டுப்பாட்டு வலையமைப்பு மீள் ஸ்தாபித்தல்
- திட்ட பொறியியலாளர்களினால் வழங்கப்பட்ட ஏனைய தொடர்புபட்ட ஆய்வு வேலைகள்

**கடல் மைல் பிரிவு**

கப்பல்களுக்கு பொருள் வழங்குவோர், லாஞ்ச் இயக்குபவர்கள், கடலக அளவையாளர்கள், சிறிய மற்றும் பாரிய பழுதுபார்த்தல் வேலைத்தளங்கள், எண்ணெய் மற்றும் எண்ணெய் தோய்ந்த நீர், குப்பைகள் அகற்றுவதற்கான வசதி மேற்கொள்பவர்களின் வருடாந்த பதிவும், அனுமதிப்பத்திரங்கள் வழங்கலும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

2012 ஆம் ஆண்டு ஈட்டப்பெற்ற வருமானம்

| அனுமதிப்பத்திரத்தின் பெயர் | வழங்கப்பட்ட தொகை | வருமானம் ரூபா |
|---|---|---|
| கப்பல்களை பழுதுபார்க்கும் அனுமதிப்பத்திரம் | 124 | 3,508,140.19 |
| டொக்யார்ட் அனுமதிப்பத்திரம் | 73 | 1,150,846.69 |
| அளவை அனுமதிப்பத்திரம் | 36 | 673,667.75 |
| கப்பல்களுக்கான பொருள்கள் வழங்குவோரின் அனுமதிப்பத்திரம் | 76 | 2,482,536.59 |
| படகு அனுமதிப்பத்திரம் | 47 | 1,189,697.30 |
| எஸ்.ஏ.ஜீ.ரீ மற்றும் ஏனைய அனுமதிப்பத்திரம் | 21 | 375,990.21 |
| **மொத்தம்** | | **9,380,878.73** |

## திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி

திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பகுதியினால் கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டம், அடங்கலாக பல திட்டங்களின் பணிகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

### 1. கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டம்

சர்வதேச கப்பல் துறையில் அதிகரித்து வரும் சேவைகளின் கேள்வித் தேவைப்பாடுகள் வழங்கப்படுவதற்கு கொழும்புத் துறைமுகம் விரிவாக்கப்படுதல் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினால் இனங்காணப்பட்டுள்ளது. கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டம் பின்வரும் இரண்டு கட்டங்களை கொண்டதாக இருக்கும்.

#### 1.1 துறைமுக உட்கட்டமைப்பு வசதிகள்

புதிய துறைமுகத் தடாகம் மற்றும் கப்பலோட்ட கால்வாய் தோண்டுதல், மசகு எண்ணெய்க் குழாய் வழி மீள் பதித்தல் உள்ளடங்கலான துறைமுக உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான பணிகள்

| | | |
|---|---|---|
| **திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள செலவினம்** | : | ரூபா 44.8 பில்லியன் |
| **அமைவிடம்** | : | தற்போதைய தென்மேற்கு அலைதாங்கியின் மேற்குத் திசை |
| **துறைமுக பிரதேசம்** | : | 600 ஹெக்டயார் அளவு |
| **பிரதான அலைதாங்கி** | : | 5140 மீட்டர் நீளம் |
| **இரண்டாவது நிலையின் அலைதாங்கி** | : | 1100 மீட்டர் நீளம் |
| **கொள்கலன் முனையங்கள்** | : | 03 ஆகும். நங்கூரத்தளம் 03 இருந்து 04 கொண்ட தலா ஒரு முனையத்தின் நீளம் 1200 மீட்டர் |

| | | |
|---|---|---|
| **கொள்ளளவு** | : | 2.4 ஒரு முனையத்தில் கொள்கலன் இருபது சம அலகுகள் 2.4 மில்லியன் |
| **துறைமுக தடாகத்தின் ஆழம்** | : | 18 மீட்டர் (எதிர்காலத்தில் 20 மீட்டர் வரை ஆழமாக்கப்படும் வசதியுடன்) |
| **பிரவேச கால்வாய்** | : | 560 மீட்டர் அகலம் 20 மீட்டர் ஆழம் |
| **கப்பல் அளவுத் திட்டம்** | : | ஒட்டுமொத்த நீளம் 400 மீட்டர் தண்டு 55 மீட்டர், தரை தட்டாத ஆழம் 16 மீட்டர். |
| **தற்போதைய நிலைமை** | : | சிறிய பணிகள், தவிர்ந்த ஏனைய வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |

## 1.2 அலைதாங்கிகளின் நிர்மாணம் மற்றும் ஏனைய தொடர்புபடும் பணிகள்

### 1.2.1 தென் கொள்கலன் முனையம் (SCT)

உத்தேச கொழும்பு தெற்கு துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் முதலாவது முனையம் நிர்மாணித்து கையாளல் மேற்கொண்டு ஒப்படைக்கும் (BOT) அடிப்படையின் மீது தென் கொள்கலன் முனையம் நிர்மாணிக்கப்படும்.

| | |
|---|---|
| அபிவிருத்தியாளர் | வ/ப கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையங்கள் கம்பெனி (*CICT*) |
| அமுல்படுத்தப்படும் திகதி | 2011.12.01 |
| நி.கை.ஒப்பந்த *(BOT)* காலம் | 35 வருடங்கள் |
| திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள ஆகு செலவு | 500 மில்லியன் அமெரிக்க டொலர் |
| துறைமேடைச் சுவரின் நீளம் | 1200 மீட்டர் |
| நங்கூரத்தளங்களின் எண்ணிக்கை | 3 - 4 |
| நீரின் ஆழம் | 18 மீட்டர் |
| கொள்ளளவு | 2.4 மில்லியன் இருபது சம அலகுகள் |
| நிர்மாணித்து கையாளல் மேற்கொண்டு பின்னர் ஒப்படைக்கும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட திகதி | 2011.08.12 |
| நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்ட திகதி | 2011.12.16 |
| கையாளல் மேற்கொள்ளப்பட எதிர்பார்க்கும் ஆண்டு | 360 மீட்டர் நீளமான துறைமேடை - 2013 யூன் |
| | 600 மீட்டர் நீளமான துறைமேடை - 2013 டிசெம்பர் |
| | முழுத் துறைமேடை- 2014 ஏப்ரல் |

**தற்போதைய நிலைமை**

நிரப்பும் பணிகள், துறைமேடைச் சுவரின் அத்திவாரத்தின் தயார்படுத்துதல்கள், நீர் புகாத கூடத்தின் நிர்மாணம், நீர் புகாத கூடம் செயற்படுத்தப்படுதல் மற்றும் நிர்வாகக் கட்டிட நிர்மாண நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**1.2.2 கிழக்கு கொள்கலன் முனையம் (ECT)**

தென் கொள்கலன் முனையத்திற்குச் சமாந்தரமாக தென் துறைமுக கிழக்கு கொள்கலன் முனையத்தில் 400 மீட்டர் நீளம் கொண்ட பகுதியொன்று நிர்மாணிப்பதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள ஆகுசெலவு 140 மில்லியன் அ.டொலர் ஆகும். 2013 ஆம் ஆண்டில் இது பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. கிழக்கு கொள்கலன் முனையம் பூர்த்தி செய்யப்படுதலின் பின்னர் இருக்கும் கொள்கலன் முனையத்துடன் செயற்படுவதற்கு கூடிய ஆழம் கொண்ட கொள்கலன் முனையம் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமாகவிருக்கும்.

**2. உத்தேச கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம்**

கொழும்புத் துறைமுகத்திற்கு அண்மித்ததான உத்தேச துறைமுக நகரம், ஆடம்பர ஹோட்டல்கள், வீட்டுத் தொகுதிகள், கடைத் தொகுதிகள், தனியார் துறைக்கான நவீன அலுவலக இடவசதிகள், உல்லாசப் படகுகள், மோட்டார் வாகன ஓட்டப் பந்தய பாதைகள் போன்ற களிப்பூட்டும் பொழுதுபோக்கு மற்றும் உல்லாச செயற்பாடுகளைக் கொண்டதாக இருக்கும்.

| | | |
|---|---|---|
| திட்டத்தின் ஆகுசெலவு | - | 900 அ. டொலர் மில்லியன் |
| ஆரம்பிக்கப்பட எதிர்பார்க்கும் திகதி | - | 2013 ஆம் ஆண்டு |

**தற்போதைய நிலைமை**

- சுற்றாடல் தொடர்பான அனுமதி பெறப்பட்டுள்ளது.
- விபரமான திட்ட அறிக்கை முதலீட்டாளர்களினால் முன்வைக்கப்பட்டுள்ளது.
- விபரமான திட்ட அறிக்கை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் (TEC) ஆழ்ந்த பரீட்சிப்புக்குட்படுத்தப்பட்டுள்ளன.

**3. காலி துறைமுக அபிவிருத்தித் திட்டம்**

பல்வித பணிமேடை மற்றும் உல்லாசப் படகுகளுக்கான நங்கூரமிடும் வசதிகள் வழங்கப்படும் பொருட்டு மொத்த காலி குடாப் பகுதி பாதுகாக்கப்படுவதற்கான அலைதாங்கியொன்றின் நிர்மாணம் தொடர்பான திருத்தியமைக்கப்பட்ட பிரேரணையொன்று ஆராயப்பட்டு வருகின்றது.

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்புக்கான முகவராண்மையில் இருக்கும் நிதியில் அலைதாங்கியொன்று நிர்மாணிக்கப்படுவதற்கும் அரச தனியார், கூட்டு) (PPP) அடிப்படையில் கட்டம் 11 இல் பல்வித பணி துறைமேடை அபிவிருத்தி செய்யப்படுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

அலைதாங்கி நிர்மாணிக்கப்படுவதற்காக மதிப்பிடப்பட்டுள்ள ஆகு செலவு 14,495 மில்லியன் ஜப்பான் யென்களாகும்.

**தற்போதைய நிலைமை**

- திட்டத்தின் உள்ளடக்க விடய மற்றும் சம்பந்தப்பட்ட விபரமான வடிவமைத்தல் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- வடிவமைத்தல் பணிகளின் 30% தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
- அமைவிடங்கள் அடையாளங் காணப்பட்டு பாரிய திட்டத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.
- நிர்மாணப் பணிகள் 2013 ஆகஸ்ட் இல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

**4. இலங்கை துறைமுக அதிகாரசபைக்கான உத்தேச பிரதான அலுவலகக் கட்டிடம்**

சகல ஆளணியினக்கும் ஒரே கூரையின் கீழ் வசதிகள் வழங்கப்படும் பொருட்டு பிரதான அலுவலகக் கட்டிடம் நிர்மாணிப்பதற்கு கனல் முனையத்தில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட இடம் துறைமுக வளவினுள் புதிய இடமொன்றுக்கு மாற்றப்பட்டது. தரைப் பகுதியின அளவு 31,000 கன மீட்டர் ஆகும்.

**தற்போதைய நிலைமை:**

- புதிய இடத்தின் மண் பரிசோதனை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 2013 சனவரி மாதத்தில் அதன் பணிகள் நிறைவு செய்யப்படும்.
- நிதி ஏற்பாடு தொடர்பில் இந்திய வெளிநாட்டு வங்கியுடனான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**5. கொழும்புத் துறைமுக உள்ளக பாதை விரிவாக்கல் - மீள் நிலைப்படுத்தும் பணிகள்**

கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டத்தோடு துறைமுக உள்ளக பாதையின் விரிவாக்கல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன அதே ஒப்பந்தக்காரரினால் துறைமுக உள்ளக பாதை விரிவாக்கல் திட்டத்தின் ஒரு பகுதி தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்ட "பாதை விரிவாக்கலின்" இடவசதிகள் பெறுவதற்காக இருந்த சில கட்டிடங்கள் அகற்ற வேண்டியேற்பட்டன.

**தற்போதைய நிலைமை**

மேற்குறிப்பிடப்பட்ட கட்டிடங்களிலிருந்த ஆளணியினர் வேறு இடங்களில் நிலைப்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**6. திருகோணமலை துறைமுக அபிவிருத்தி**

இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய தற்போது முறையாகப் பயன்படுத்தப்படாதுள்ள 3000 ஏக்கர் நிலம் பயன்பாட்டில் எடுக்கப்பட்டு பொருளாதார வளங்களின் வலுவூட்டப்படுதலின் ஊடாக இலங்கையின் தென் கிழக்குப் பகுதியின் தலைநகர மேம்பாட்டு மையமாக திருகோணமலை அபிவிருத்தி செய்யப்படுகின்றது.

வரவு செலவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை : ரூபா 40 மில்லியன் ஆகும்.

**தற்போதைய நிலைமை:**

- கைத்தொழில் வலயத்துக்கான பிரேரணை கோரல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 09 பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன.
- ஆரம்ப மதிப்பிடல்களுக்கு 08 பிரேரணைகள் தகைமையுடையதாக இருந்தன.
- மதிப்பிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

7. **பேலியகொடை உத்தேச களஞ்சியம் மற்றும் முனையத் தொகுதி**

கொழும்பு பாதைகளில் போக்குவரத்து நெரிசல்களைக் குறைப்பதற்கும் துறைமுகத்துடன் தொடர்புபடும் நபர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதற்கும் உத்தேச களஞ்சியத் தொகுதி பெலியகொட பகுதியில் நிறுவப்படும்.

பல்நாட்டு கொள்கலன்கள் ஒன்று திரட்டல் நடவடிக்கைகள் புதிதாக உத்தேசிக்கப்பட்டுள்ள களஞ்சியத் தொகுதிக்கு மாற்றப்படுவதுடன் பூரண கொள்கலன் கையாளலில் ஒரு பகுதி பேலியகொடைக்கு மாற்றப்படும்.

உத்தேச குதம் மற்றும் முனையத் தொகுதிக்கான 28 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட காணி பேலியகொட பகுதியில் அடையாளங் காணப்பட்டுள்ளது. புகையிரதப் பதையொன்றின் ஊடாக இந்த களஞ்சியத் தொகுதி துறைமுகத்துடன் தொடர்புபடுத்தப்படும்.

**தற்போதைய நிலைமை:**

மேற்குறிப்பிடப்பட்ட காணியின் மண் பரிசோதனை 2012 நவம்பர் மாதம் 18 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## தென் துறைமுக அபிவிருத்தி

மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத் திட்டம் மற்றும் கப்பல்களுக்கான எண்ணெய் வழங்கும் எண்ணெய்த் தாங்கித் தொகுதி போன்ற பல திட்டங்களினது பணிகள் தென் துறைமுக அபிவிருத்திப் பகுதியினால் ஆரம்பத்திலிருந்து பொறுப்பேற்கப்பட்டு முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் முதலாம் கட்ட நிர்மாணப் பணிகளின் பெரும் பகுதி பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் ரோ - ரோ கப்பல்கள் உட்பட ஏனைய கையாளல் பணிகள் 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அதன்படி உள்நாட்டு பாவனைக்கான 6,515 வாகனங்கள் மற்றும் மீள் ஏற்றுமதிக்கான 4,388 வாகனங்கள் கையாளப்பட்டுள்ளன.

ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட பிரேரணை கோரல் நடைமுறையோடு 07 முதலீட்டாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு துறைமுகத்தினுள் சீனி, பெற்றோலிய இரசாயனங்கள், உரம் சீமெந்து மற்றும் குத வசதிகளின் வர்த்தகங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. வர்த்தகமொன்றுக்கான இலங்கை துறைமுக அதிகாரசபையுடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு எதிர்பார்ப்பில் உள்ளதோடு ஏனைய ஒப்பந்தங்கள் முடிவுறும் நிலையிலுள்ளன. துறைமுகத்தினுள் முதலீட்டுச் சந்தர்ப்பங்களுக்கான அதிக கேள்வி காரணமாக இவ்வாண்டினுள் பிரேரணை கோரல் இரண்டாம் தடவையாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் 10 முதலீட்டாளர்கள் தமது பிரேரணைகளை சமர்ப்பித்துள்ளதோடு அவை தற்போது மதிப்பிடப்பட்டு வருகின்றன.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் தெற்கு துறைமுக அபிவிருத்திப் பகுதியினால் இவ்வாண்டினுள் முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களுக்குத் தேவைப்படும் காணிகள் தொடர்பில் இதுவரை இருந்த சிக்கலான நிலைமைகள் சீர் செய்தல் அடங்கலாக நிர்மாணப் பணிகளுக்கான கொள்வனவு செய்தல்/ கைப்பற்றுதல் நிறைவு செய்யப்பட்டது அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றின் மூலம் கொள்வனவு செய்வதற்கு மற்றும் கைப்பற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் காணிகள் கொள்வனவு செய்வதற்கும் கைப்பற்றுவதற்குமான செயற்பாடு தொடர்பில் இப்பகுதி மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து வருகின்றது. 600 குடும்பங்களின் மீள் குடியேற்றமும் இதனுள் அடங்கும். இந்த பணியின் ஒரு பகுதியாக 500 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணிகளின் அளவை நடவடிக்கைகள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

கப்பல்களுக்கான எண்ணெய் வழங்கும் வசதி மற்றும் எண்ணெய்த் தாங்கித் தொகுதித் திட்டம் முற்றாக முடிவடைந்துள்ளது. எண்ணெய்த் தாங்கித் தொகுதியின் மேலதிக உட்கட்டமைப்பு வசதிகள் நிர்மாணிக்கப்படுவதற்காக 20 அ.டொலர் மில்லியன் கொண்ட மேலதிக கடன் தொகை அங்கீகரிக்கப்பட்டு நிர்மாணப் பணிகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று முதலாம் கட்ட ஒப்பந்தத்திற்குரிய மேலதிக வேலைகளும் தற்போது நடைபெறுகின்றன.

மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத் திட்டத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகள் 2012 நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 808 அ.டொலர் மில்லியன் மொத்த ஆகுசெலவினைக் கொண்ட இத்திட்டம் 2015 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்யப்பட உள்ளது. முதலாம் கட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் கையாளல் உபகரணங்கள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளோடு 2000 மீட்டர் அளவிலான மேலதிக தூர துறைமேடை அளவு இதன் மூலம் வழங்கப்பெறும்.

மேற்கூறப்பட்டுள்ள பிரதான வேலைகளுக்குப் புறம்பாக ஆரம்ப நிர்மாணங்கள் தவிர்ந்த துறைமுக கையாளல் பராமரிப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திப் பணிகளிலும் தென் துறைமுக அபிவிருத்திப் பகுதி ஈடுபட்டுள்ளது. அரைக்கும் இயந்திரசாலை நிறுவுதல் நில பதிப்புக் கற்களின் உற்பத்தி மற்றும் உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான தளபாடங்கள் வழங்குதல் இதனுள் அடங்கும்.

## சிவில்

துறைமுக நிறுவுதல்கள், கட்டிடங்கள், பாதைகள், வீதிகள் பராமரித்தல், துறைமுக ஆழம் பேணல் மற்றும் துறைமுக நடவடிக்கைகள் தொடர்பில் ஆர்வம் காட்டும் தரப்பினர்களுக்கான ஏனைய பல்வேறு வகையிலான சேவைகள் வழங்கும் சிவில் பொறியியல் பகுதி இலங்கை துறைமுக அதிகாரசபையின் முக்கிய பிரிவில் அடங்கும். துறைமுகங்கள், மற்றும் நாடு பூராகவும் உள்ள வெளிச்ச வீடுகளின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதன் சேவைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

சென்ற வருடங்களுடன் ஒப்பிடப்படுகையில் ஆற்றப்பட்ட பணிகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுவதற்காக அதிகாரசபையின் தேவைப்பாடுகளுக்கு இணைந்தாக பராமரிப்பு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன. முறையான செயற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டு உயர் உற்பத்தித்திறன் மற்றும் சிறந்த நிர்வாகம் தொடர்பில் அவை ஈடுபடுத்தப்படுவதற்கு உளப்பாங்கு மாற்றம் ஏற்படுத்தப்படுவதன் பொருட்டு குழுவொன்றாக ஊழியர்களுக்கிடையிலான நல்லொழுக்கம் பேணப்பட்டுள்ளது. உயர் முன்னுரிமை கொண்ட பராமரிப்பு செயற்பாடுகளுக்கான பொருத்தமான முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதோடு அதன்படி ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் பெறபேறு முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. பராமரித்தல் நடவடிக்கைகளுக்குப் புறம்பாக ஊழியம் மற்றும் உபகரணங்கள் உச்ச வகையில் பயன்படுத்தப்படுவதற்காக நிறுவனத்தின் ஊழியர்களோடு சிறு அளவிலான அபிவிருத்திப் பணிகள் செயலுருவில் கொண்டு வரப்பட்டன. ஜய கொள்கலன் முனைய புனர்நிர்மாண திட்டம் மற்றும் பாதை விரிவாக்கல் திட்டத்தின் நடைபாதை வழி அமைத்தல் போன்றவை இதற்கு உதாரணங்களாகும்.

சென்ற வருடங்களில் துறைமுகத்தின் சுத்தம் எதிர்நோக்க வேண்டிய பிரதான விடயமாக இருந்தது. கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபை மற்றும் கொழும்பு மாநகர சபை போன்ற பொறுப்பு வாய்ந்த அதிகாரம் பெற்ற நிறுவனங்களோடு ஒத்துழைப்புடன் நிரந்தர தீர்வுகள் பெறப்பட்டு அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பகுதியிலிருக்கும் மேலதிக ஊழியர்களை அவர்களினது ஆற்றல்களுக்கேற்ப வேறு பல இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு ஊழியர் பலம் குறைக்கப்படுதலின் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் பராமரிப்பு செயற்பாடுகள் முகாமைத்துவம் செய்யப்பட்டன. பொருட்கள் கிடைக்கப்பெறுதல் மற்றும் அளிக்கப்பட்ட பணிகளுக்கு அவை வினியோகிக்கப்படுவதற்காக சிறந்த கட்டுப்பாடு போன்று பகுதியில் இருக்கும் சகல ஊழியர்களினது நீடிக்கப்பட்ட வேலை நேரங்கள் அதற்கேற்பவாறு அங்கீகரிக்கும் செயற்பாடு தொடர்பில் பகுதியின்

கீழுள்ள அனைத்து பிரிவுகளுக்குமான ஒரே இடத்தில் களஞ்சியப்படுத்தும் வசதிகள் சிவில் பொறியியல் பகுதியில் ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது.

காங்கேசன்துறை துறைமுக புனர்நிர்மாணம் சிவில் பொறியியல் பகுதியினால் மேற்கொள்ளப்பட்ட பிரதானதொரு அபிவிருத்திப் பணியாகும். இந்திய அரசின் அபிவிருத்தி நிதியுதவியில் சிதைவுப் பொருட்கள் முற்றாக அகற்றப்படுதல் நடைபெற்றதோடு காங்கேசன்துறை துறைமுகத்தின் உத்தேச அபிவிருத்திப் பணிகளுக்கான விபரமான திட்ட அறிக்கையும் தயார் செய்யப்பட்டது.

## மின்சாரம் மற்றும் இலத்திரனியல்

இலங்கை துறைமுக அதிகாரசபைக்குட்படும் சகல துறைமுகங்களினது அனைத்து பொறியியல் திட்டங்கள், மின்சார வலு மற்றும் தொடர்பாடல் பொறியியல் துறைகளின் வசதிகள் திட்டமிடுதல், முகாமைத்துவம், நடைமுறைப்படுத்தல், வசதிகள் பேணல் தொடர்பில் மின்சாரம் மற்றும் இலத்திரனியல் பகுதி பொறுப்பாகவுள்ளது.

பிரதான பொறியியலாளரொருவர் மற்றும் இரண்டு பிரதி பிரதான பொறியியலாளர்களின் வழிகாட்டல்களின் மீது சிறந்த தகைமைகளைக் கொண்ட தொழில்சார் மின்சாரவியல்/ தொடர்பாடல் பொறியியலாளர்களினால் நாட் பூராகவும் மின்சார வலு மற்றும் தொடர்பாடல் சம்பந்தப்பட்ட அனைத்து அத்தியாவசிய சேவைகளும் பேணப்பட்டு உலகில் சர்வதேச கடல்சார் மைய நிலைய துறைமுகங்களின் நிலைமைகளுக்கேற்ப அதன் சேவைகளின் 95% அடையப்பெறுதலுக்கான ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**மின்சார வலு பொறியியல் துறையினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

- இலங்கை மின்சார சபையினால் பெறப்படும் மின்சார வினியோகம்: நிறுவப்பட்டுள்ள மொத்த அளவு 18 மெகா வொட் ஆகும்.
- குறை விசை கொண்ட சகல வலு நிறுவுதல்கள் மற்றும் மின்சார உதிரிகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புகள்.
- சேறுவாரி , இழுவைக் கலங்களினதும் அனைத்து மிதக்கும் கலங்களினதும் மின்சார உபகரணங்களின் பராமரித்தல்கள்
- கரையோர நங்கூரத்தள முனைய பாரந்தூக்கிகளினது மின்சார உபகரணங்களின் பராமரித்தல்கள்.
- கப்பல்களின் தொகை பிரிப்பு சரக்குகள் கையாளும் பாரந்தூக்கிகளினது பராமரித்தல்கள்.
- மின்சார மோட்டார்கள் (AC& DC) மற்றும் கொள்கலன் பாரந்தூக்கிகளின் ஏனைய உபகரணங்களினது பழுதுபார்த்தல்கள்.
- 15.5 மெகா வொட் மொத்த கொள்ளளவினைக் கொண்ட எதிர்பார்ப்பு சேவையிலுள்ள மின்சார பிறப்பாக்கிகளின் பராமரிப்புகள்
- 11 கி.வொட் கொண்ட நிலத்திற்குக் கீழான மின்சாரக் கம்பி வலையமைப்பு நிறுவுதல், பராமரித்தல் மற்றும் சிக்கலான நிலைமைகளை நீக்குதல்
- குளிரூட்டல் தொகுதியின் திட்டமிடுதல், நிறுவுதல், பராமரித்தல்

- இறப்பர் சில்லுகள் பொருத்தப்பட்ட புதிய கன்ட்றி பாரந்தூக்கிகளுக்கான இடவசதிகள் வழங்கப்படுவதற்கு ஜய கொள்கலன் முனையத்தின் வெளிச்சக் கம்பங்களின் உயரம் அதிகரித்தல்.

- மின்சார உப விநியோகத்துடன் தொடர்புபட்ட 500 கி வோட் மின் சுற்றுப்படத் தொகுதியின் திட்டமிடல், வடிவமைப்பு மற்றும் அமுலாக்குதல்

- 11 கி வொட் பெறும் மற்றும் வினியோக 03 நிலையங்களின் மேம்படுத்துதல்கள்.

**இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் பொறியியல் துறையினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

- அதியுயர் வானொலி அலைவரிசை கொண்ட (WIFI) வலையமைப்பின் திட்டமிடல் மற்றும் பராமரித்தல்கள் (கடல்சார் அலைவரிசை)

- கொள்கலன் முனையத்தில் 2.4 கெகா வொட் வை பை (2.4 GHZ WiFi) தரவு தொடர்பாடல் வலையமைப்பின் திட்டமிடல் மற்றும் பராமரித்தல்

- கொள்கலன் முனையத்தில் வானொலி அலைவரிசை அடையாளம் காணும் தொகுதி (RFID) பராமரித்தல்.

- ஒளி நார் (optical fibre) வலையமைப்பு மற்றும் தரவு வலையமைப்பு செயற்பாட்டு நிலையத்தின் திட்டமிடல் மற்றும் பராமரித்தல்.

- 2000 தொலைபேசி வழிகளைக் கொண்ட துறைமுக தொலைபேசி PABX தொகுதியின் திட்டமிடல் மற்றும் பராமரித்தல்

- ராடார், எதிரொலி மானி (Echo Sounder) ,செய்மதியூடான தொடர்பாடல் சாதனம், இடம் காணும் திசை காட்டும் முறைமை (DGPS) அடிப்படையிலான அளவீட்டுத் தொகுதி போன்றவை உள்ளடங்கலான கப்பலோட்டத் தொகுதிகளின் பராமரித்தல்.

- CCTV நடமாட்டத் தொகுதிகளின் திட்டமிடல் மற்றும் பராமரித்தல்.

- இருக்கும் ஒளியியல் பைபர் வலையமைப்பு நீடிக்கப்படுதல்.

- அதியுயர் அலைவரிசை (VHF) கொண்ட டுப்லெக்ஸ் (Duplex) கண்காணிப்பு வீடியோவுக்கு இடமளிக்கப்படுவதற்காக குரல் தொடர்பாடல் (Voice Communication) வசதிகள் அதிகரித்தல்.

## ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்படும் நிர்மாணங்களின் வடிவமைப்பு மற்றும் சிவில் பொறியியல் திட்டங்களின் முகாமைத்துவம் ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்புப் பகுதியின் பிரதான பொறுப்பாகும். இலங்கை துறைமுக அதிகாரசபையின் பிரதான வர்த்தகங்களுக்குரிய துறைமுகத்தின் நங்கூரத்தளங்கள், துறைமேடைகள், சிவில் நிர்மாணங்கள், கட்டிடங்கள், பாதைகள் போன்றவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளின் நிர்மாண வடிவமைப்பு இதற்குரியனவாகும். அதேபோன்று சகல பிராந்திய துறைமுகங்களும் அடங்கலாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து பகுதிகளினது பராமரிப்புகளுக்கும் அபிவிருத்திகளுக்காகவும் தேவைப்படும் சகல திட்டங்கள் மற்றும் வரைதல் நடவடிக்கைகள் ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு பகுதியினால் நிறைவேற்றப்பட்டன. திட்டங்களின் நிர்வாகம், மேற்பார்வை, நிர்மாண நடவடிக்கைகள், விலைமனு கோரல், ஒப்பந்தங்கள் போன்ற திட்டங்களினது முகாமைத்துவமும் இதனைச் சார்ந்ததாகும்.

இதற்கு மேலதிகமாக முன்வார்ப்பு முனையத்தைச் சேர்ந்த ஊழியர்களின் பயன்பாட்டின் நேரடி மனித ஊழியம் மீது பல சிறிய நிர்மாணத் திட்டங்கள் இப்பகுதியினால் பொறுப்பேற்கப்பட்டன. அத்தோடு விசேட திட்டமொன்றான ஒலுவில் துறைமுக அபிவிருத்தித் திட்டத்திலும் இப்பகுதி தொடர்புபட்டுள்ளது.

**2012 ஆம் ஆண்டினுள் இப்பகுதியினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான பணிகள் பின்வருமாறு**

**ஒலுவில் துறைமுகத் திட்டம்**

முதலாம் கட்டத்தில் 16 ஹெக்டயார் மொத்த நீர்ப் பகுதியினைக் கொண்டதாக 550 மீட்டர் நீளமான வட அலைதாங்கிச் சுவர், 773 மீட்டர் நீளமான தென் அலைதாங்கி என கருங்கல் உபயோகித்து இரண்டு அலைதாங்கிகள் நிர்மாணித்தல் இத்திட்டத்தினுள்ளடங்கும். மீனவ நடவடிக்கைகளுக்காக 06 ஹெக்டயார் நீர்ப் பிரதேசம் பாவனைக்கெடுத்துக் கொள்ளப்படும். கட்டம் 1 இல் 5000 தொன் நிறையினைக் கொண்ட கப்பல்களுக்கான கையாளல் வசதிகள் வழங்கப்படும் பொருட்டு வணிகத் துறைமுகத்தின் தடாகப் பகுதி -08 மீட்டர் வரை ஆழமாக்கப்படும்.

இத்திட்டத்திற்கான நிதியுதவி வழங்கல் டனிடா நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. திட்டத்தின் மொத்த ஆகுசெலவான யுரோ 46.1 மில்லியனுக்கான ஆகக் குறைந்த வெற்றிகர விலைதாரருக்கு நிர்மாண நடவடிக்கைகள் வழங்கப்பட்டன. எதிர்பாராத காலநிலை தன்மைகள் மற்றும் சில நிர்மாண ரீதியான தொழில்நுட்ப பிரச்சினைகள் காரணமாக திட்டத்தின் மொத்த செலவினம் யுரோ 43.13 மில்லியன் ஆக இருந்ததோடு இத்திட்டம் 2012 டிசெம்பர் மாதத்தில் நிறைவு செய்யப்பட்டது.

தேவைப்படும் சகல ஆலோசனைச் சேவைகள், நிர்மாண மேற்பார்வை, ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு பகுதியினால் மேற்கொள்ளப்படும்.

**ஒலுவில் கரையோர பாதுகாப்பு வேலைகள்**

ஒலுவில் துறைமுகத்தின் கடல்சார் நடவடிக்கைகளின் திட்டமிடலாளரான லங்கா ஹய்ட்ரொலிக் நிறுவனத்தினால் ஒலுவில் துறைமுகத்தின் வட பகுதியில் ஏற்படும் கரை அரிப்புக்காக எடுக்கப்படக் கூடிய தீர்வொன்றினை இனங்காண்பதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது.

டனிடா நிதி பயன்படுத்தப்படும் அங்கீகாரத்துடன் பணிகள் ஒப்படைக்கப்பட்டு 2012 நடுப் பகுதியில் இது பூர்த்தி செய்யப்பபட்டது. ஒவ்வொன்றும் 100 மீட்டர் நீளமும் கடல் மட்டத்திலிருந்து -4.0 மீட்டர் ஆழத்திலும் கரைக்கு அப்பால் 03 அலைதாங்கிகள் நிர்மாணிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதோடு இதனால் 2.5 கி. மீட்டர் முன்னோக்கியதான கரையோரம் பாதுகாக்கப்படும்.

**ஹர்த்தால் பாலம் விரிவாக்குதல்**

இருக்கும் பாலத்தின் தேவையான பழுதுபார்த்தல்கள் உள்ளடங்கலாக ஹர்த்தால் பாலம் விரிவாக்கும் நிர்மாணப் பணிகள் வெற்றிகர ஒப்பந்தக்காரரொருவருக்கு வழங்கப்பட்டு ரூபா 209.7 மில்லியன் மொத்த செலவில் நிறைவு செய்யப்பட்டது.

**ஐக்கிய கொள்கலன் முனைய பழுதுபார்த்தல்கள்**

ரூபா 372 மில்லியன் மொத்த ஆகுசெலவு கொண்ட ஐக்கிய கொள்கலன் முனைய பழுதுபார்த்தல் பணிகள் வெற்றிகர ஒப்பந்தக்காரரொருவருக்கு வழங்கப்பட்டது. ஜப்பான் அரசின் திட்டம் சாராத பங்குதாரர் நிதியிலிருந்து இதற்கு ரூபா 400 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திருகோணமலையில் அமைந்துள்ள இலங்கை துறைமுக அதிகாரசபையின் காணிகள் அளவீடு செய்தல்**

காணிகள் பற்றியதான பட்டியல் தயாரிக்கப்படுவதற்கு இணையாக இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய காணிகளின் அளவீடு நடவடிக்கைகள் ரூபா 18.5 மில்லியன் செலவில் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

**உள்ளக துறைமுக பாதை விரிவாக்கல்**

கொழும்பு துறைமுகத்தின் உள்ளக பாதை மற்றும் துறைமுக அணுகு வழி விரிவாக்கலின் திட்டமிடுதல் மற்றும் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2012 ஆண்டினுள் கி.மீ.1.5 தூரம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

**காலி துறைமுக அபிவிருத்தி**

- உல்லாச படகுகள் பழுதுபார்க்கும் தொழிற்சாலைக் கட்டிடம் ரூபா 21 மில்லியன் மொத்த செலவில் நிறைவு செய்யப்பட்டுள்ளது.
- காலி ரூமஸ்ஸல உல்லாச விடுதியின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் ரூபா 7.94 மில்லியன் மொத்த செலவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
- உத்தேச உல்லாச படகுத்தளத்திற்குத் காணி கைப்பற்றும் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. உத்தேச உல்லாச படகுத்தளத்திற்கான விலைகோரல் படிவம் திட்டமிடல் மற்றும் தயாரிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டன. .
- உல்லாச படகுத்தளத்திற்குத் தேவைப்படும் துணை வசதிகளுக்கு உத்தேச வசதிகள் வழங்கும் கட்டிடம் திட்டமிடப்பட்டு வருகின்றது.

**ஏனைய வேலைகள்**

- இலங்கை துறைமுக அதிகாரசபையின் தீயணைப்புப் படைக்கான உத்தேச கட்டிடம் தொடர்பான திட்ட வரைதல் மற்றும் விலைகோரல் ஆவணங்கள் தயார் செய்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
- துறைமுக உள்ளக பாதை விரிவாக்கல் காரணமாக மீள் நிறுவப்படும் அனைத்து தேவைப்பாடுகளுக்கான அமைப்புகள்/ வசதிகள் திட்டமிடுதல்.
- காலி துறைமுகத்தின் உத்தேச மின்சார உப நிலையம் திட்டமிடல்.
- கொழும்பு கோட்டையிலிருந்து புளூமெண்டல் எண்ணெய்த் தாங்கித் தொகுதி வரையிலான உத்தேச எண்ணெய்க் குழாய் வழி திட்டமிடுதல்.
- தென் கொள்கலன் முனையத்தின் திட்டம் மீளாய்வு செய்தல்.
- இலங்கை துறைமுக அதிகாரசபையின் தேவைப்பாடுக்காக பேலியகொடையில் அமைந்துள்ள முன் வார்ப்பு நிலையத்திலிருந்து முன் வார்ப்பு கூறுகள்/ சீமெந்து அச்சுகள் உற்பத்தி செய்தல் மற்றும் வினியோகித்தல்.
- உத்தேச பன்முகப்படுத்தப்பட்ட மத்திய சமையலறை திட்டம்.

**வளவுகள் மற்றும் பூகோள தகவல் பிரிவு**

கொழும்பு, காலி, திருகோணமலை மற்றும் ஒலுவில் போன்ற இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான சகல அசையாத சொத்துக்கள் / காணிகள் மற்றும் கட்டிடங்கள் வளவுப் பிரிவினால் நிர்வகிக்கப்படுவதோடு சொத்துக்கள் கணனிமயப்படுத்தல் மற்றும் தகவல்கள் வழங்கல் பூகோள பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

தீவினைச் சுற்றியுள்ள 8000 ஏக்கர் அளவிலான நிலப் பகுதி இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமாகவுள்ளது. இதில் 75 இடங்கள் வெளி நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன.

கூடிய வாடகைக் கட்டணம் கொண்ட 21 குத்தகை ஒப்பந்தங்களுக்கு உட்படுவதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபை சார்பில் வளவுப் பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு 2012 ஆண்டினுள் குத்தகை வாடகையாக ரூபா 146.8 மில்லியன் வருமானம் ஈட்டக் கூடியதாகவும் இருந்தது.

இதற்கிடையில் 2012 இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய சுற்றறிக்கைக்கேற்ப இலங்கை துறைமுக அதிகாரசபையின் வெற்றிடமான வீடுகள் ஊழியர்களுக்கு ஒதுக்கிக் கொடுக்கக்கூடியதாக இருந்தன.

## இயந்திரப் பொறி

இலங்கை துறைமுக அதிகாரசபையின் கப்பற் சரக்கு கையாளல் உபகரணக் குழாம் சிறந்த முறையில் பராமரித்துச் செல்லப்படுவதற்கான திட்டம் தயாரித்தலும் கொள்கலன் மற்றும் மரபுரீதியான கப்பற் சரக்குகள் கையாளப்படுவதற்காக இந்த உபகரணங்கள் தொடர்ச்சியான பேணுதலும் இயந்திரப் பொறி பகுதியின் பிரதான பொறுப்பாகும்.

உபகரணங்களிலேற்படும் எதிர்பாராத அல்லது அவசர பழுதுபார்ப்புகள் மேற்கொள்ளப்படுவதற்கான துரிதமாக திட்டமிடப்பட்ட பராமரிப்பு நடவடிக்கைகள் நிறைவேற்றலின் ஊடாக 2012 ஆண்டினுள் பின்வரும் விடயங்கள் உள்ளடங்கலாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் கப்பற் சரக்கு கையாளல் உபகரணத் தொகுதி வெற்றிகரமாக பராமரித்துச் செல்லப்பட்டது.

- கப்பலிலிருந்து கரை அண்மித்த கொள்கலன் பாரம் தூக்கிகள் 23
- இறப்பர் சில்லுகள் பொருத்தப்பட்ட கன்ட்றி பாரம் தூக்கிகள் 77
- பீலிகள் மீது நகரும் கன்ட்றி பாரம் தூக்கிகள் 04
- கொள்கலன் கையாளலிலான உயர்த்தும் ட்றக் வண்டிகள் 19
- போக்லிப்ட் ட்றக் வண்டிகள் (2.5 தொன் - 15 தொன் வரை) 119
- பிறைம்மூவர் வண்டிகள் 185
- டிரேலர்கள் 220
- டிறோபார் டிரக்டர்கள் 04
- நடமாடும் பாரமுயர்த்திகள், வாப்பு மின்சார மிதவை மற்றும் மேலால் நகரும் பாரந்தூக்கிகள், பாரமுயர்த்திகள் 78

- கப்பற் சரக்கு கையாளல்களுக்கு தடையின்றி மின்சாரம் வழங்கும் தேவைக்காக எதிர்பார்ப்பில் வைக்கப்படும் மின் பிறப்பாக்கிகள் 07
- இடம் நகர்த்தும் புகையிரத என்ஜின்கள் 03
- 685 மோட்டார் வண்டிகள் (பேரூந்துகள்,லொறிகள்,வேன், டபிள்கெப் கார்கள் முச்சக்கர வண்டிகள்,மோட்டார் சைக்கிள்கள்)

ஆண்டினுள் 2.3 மில்லியனுக்கு மேற்பட்ட மொத்த கொள்கலன் (இருபது சம அலகுகள்) துறைமுக அதிகாரசபையினால் கையாளப்பட முடிந்ததோடு, திட்டமிடலின் நேரடி பலனான 90% மேற்பட்ட உபகரணப் பராமரிப்பே இதற்கான முக்கிய காரணமாகும்.

இயந்திரசாலை பொறியியல் பகுதியினால் 2012 ஆம் ஆண்டினுள் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டன.

திட்டமிடப்பட்ட பராமரிப்புப் பணிகளின் ஒரு பகுதியாக கரைக்கு அண்மித்த பாரம் தூக்கிகள், பீலிகளில் நகரும் கன்ட்றி பாரம் தூக்கிகள் மற்றும் றான்ஸ்பர் பாரம் தூக்கிகளினது 115 பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கோள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக கட்டமைப்பு ரீதியான 22 பழுதுபார்த்தல்கள், சேதமுற்ற வாகனங்களின் 69 பழுதுபார்ப்புப் பணிகளும் நிறைவேற்றப்பட்டன.

என்ஜின் மற்றும் அமுக்க இயந்திரங்களினது 39 பூரண பழுதுபார்த்தல்கள் உள்ளடங்கலாக பிறைம்மூவர் வண்டிகள், முனைய டிரெக்டர்கள், கொள்கலன் கையாளல் டிரக் வண்டிகளுக்களுக்குரிய திட்டமிடப்பட்ட 65 பராமரிப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. விபத்துக்களினால் முற்றாக சேதமுற்ற 45 பழுதுபார்ப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

போக் லிப்ட் இயந்திரங்கள், நிர்மாண இயந்திர உபகரணங்கள், டிரேலர்கள் உட்பட வழமையாக மேற்கொள்ளப்படும் 1,645 பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு நடவடிக்கைகள் பொறியியல் பகுதியினால் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டன.

இயந்திரப் பொறிப் பகுதியின் பொறுப்புக்கள் இலங்கை துறைமுக அதிகாரசபையின் மோட்டார் வாகன குழாம் (பேரூந்து,லொறி,வேன் டபிள் கப், கார், முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்கள்) மற்றும் இடம் நகர்த்தும் புகையிரத என்ஜின்கள் வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளன. பொதுவாக மேற்கொள்ளப்படும் 3,847 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல்கள் சம்பந்தப்பட்ட காலப்பகுதியினுள் நிறைவேற்றப்பட்டன.

இரு இயக்குநர்களினால் குத்தகை தவணை முறையில் கையாளல் மேற்கொள்ளப்பட்டு பராமரிக்கப்படும் “சமஹில்” எண்ணெய் மொத்தக் களஞ்சியத் தொகுதி இப்பிரிவின் மேற்பார்வையின் கீழ் ஆண்டினுள் சிறப்பான முறையில் செயற்படுத்தப்பட்டது.

## இயந்திர வேலைகள்

இலங்கை துறைமுக அதிகாரசபையின் சகல உருக்குடன் தொடர்புபடும் உற்பத்தியில் இயந்திர வேலைகள் பொறியியல் பகுதி பொறுப்பாகவுள்ளது. சகல நங்கூர கலங்கள், வழிகாட்டிக் கலங்கள், சேறுவாரி கலங்களுக்குரிய சகல உருக்குகளின் பழுதுபார்த்தல் பணிகள், ஜய மற்றும் ஐக்கிய கொள்கலன் முனையங்களுக்குரிய கொள்கலன் கையாளல் பாரந்தூக்கிகள், கொண்டு செல்லும் சிறிய ரேலர்களின் சகல அமைப்புகளின் பழுதுபார்ப்பு நடவடிக்கைகளிலான சேவைகள் வழங்குவதன் மூலம் இப்பகுதி முக்கிய பணி ஆற்றுகின்றது. கப்பற் சரக்குகள் கையாளல் உபகரணங்கள் மற்றும் கடல்சார் கலங்களுக்குத் தேவைப்படும் உதிரிப்பாகங்கள் இயந்திர ரீதியாக உற்பத்தி செய்தலிலும் இப்பகுதி ஈடுபட்டுள்ளது. சங்கிலி மற்றும் கொக்கிகள் பரீட்சித்தல் போன்று அள்ளும் உபகரணங்கள் பராமரித்தல் தொடர்பிலும் இப்பகுதி பொறுப்பாகவுள்ளது. கொழும்பு எண்ணெய் பல்கூட்டுத்

தொகுதியின் அபிவிருத்தி திட்டங்களும் இப்பிரிவிடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. இதன்படி கொழும்பு துறைமுகத்திலிருந்து கொழும்பு எண்ணெய் பல்கூட்டுத் தொகுதி வரை தற்போது பயன்படுத்தப்படும் எண்ணெய்க் குழாய்க்கு பதிலாக புதிய பெற்றோலிய குழாய் வழி பதித்தல் திட்டமொன்று அதிகரித்த தொன் உற்பத்திக்கு கூடிய அமுக்கத்துடன் திசை திருப்புவதற்காக இந்த எண்ணெய் குழாய்த் தொகுதி 12" விட்டம் கொண்ட இரண்டு குழாய்களையும் 10" விட்டம் கொண்ட ஒரு குழாயினையும் கொண்டிருக்கும். இதனால் கொழும்புத் துறைமுகத்தில் கப்பல்களுக்கு எண்ணெய் வழங்கும் திட்டத்தில் கூடிய வருமானம் ஈட்டப்படமுடியும்.

இவ்வாண்டில் ஒட்டுபவர்களின் நலன் கருதி இப்பகுதியினால் ஒட்டுதல் பயிற்சி தொடர்பான பயிற்சிப் பாடநெறியொன்றும் நடாத்தப்பட்டது. இப்பயிற்சி பெற்றவர்களில் 06 பேர் எந்தவகையிலான உற்பத்தி நடவடிக்கைகள் தொடர்பான ஒட்டும் வேலைகளுக்கு தகுதி பெற்றதோடு அதனூடாக இலங்கை துறைமுக அதிகார சபைக்கு எண்ணெய்க் குழாய் ஒட்டுதல் போன்ற குறிப்பிட்ட ஒட்டும் வேலைகள் பொறுப்பேற்க முடிந்துள்ளது.

2012 ஆம் ஆண்டினுள் தேசிய லொத்தர் சபைக்கு சிறிய உருண்டைகளின் பயன்பாட்டில் சீட்டிழுப்பு இயந்திரமொன்று ரூபா 4.2 மில்லியன் செலவில் உற்பத்தி செய்யப்பட்டது. அதனால் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு ஒரு மில்லியன் ரூபா இலாபம் கிடைத்துள்ளதுடன் வெளிநாட்டு செலாவணியும் மீதப்படுத்திக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

மேற்கூறப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக இப்பகுதியினால் பின்வரும் பிரதான பணிகளும் நிறைவேற்றப்பட்டன.

- பல்வேறு நாடுகளுக்கு அனுப்புவதற்காக ஒன்று திரட்டப்படும் கப்பற் சரக்குகளுக்கு பண்டாரநாயக்க துறைமேடையின் 3 ஆம் இலக்க களஞ்சியசாலையின் 08 கதவுகளும் 04 ஆம் களஞ்சியசாலையின் 06 கதவுகளும் பழுதுபார்க்கப்பட்டன.

- ஹம்பாந்தோட்டை மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுக எரிபொருள் களஞ்சியத்துக்கான 02 எண்ணெய்த் தாங்கிகள் மற்றும் 02 வினியோக இயந்திரங்கள் நிறுவப்பட்டதோடு எண்ணெய்க் குழாய்களும் பதிக்கப்பட்டன.

- "சிங்ஹபாஹூ" "ஐராவண" மற்றும் "நீலமஹ" நங்கூர இழுவைக் கலங்களின் தண்டுப் பகுதிகளின் பிரதான பழுதுபார்த்தல்கள் நிறைவு பெற்றதோடு "மெகா" தீயணைப்புக் கலம் மற்றும் ஹன்சகாவா" சேறுவாரிக் கலத்தின் தண்டுப் பகுதிகளின் பழுதுபார்த்தல்கள் இவ்வருடத்தினுள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் ரோ - ரோ வாகன முனையத்திற்கான 650 மீட்டர் நீளமான வேலியொன்று அமைக்கப்பட்டது.

- பகுதிகளில் பயன்படுத்தப்பட்ட 15 உருக்கு அலுமாரிகள் மீள் திருத்தப்பட்டதன் மூலம் இப்பொருட்கள் மூலதன செலவினமின்றி பயன்படுத்தக் கூடியதாக இருந்தன.

- நலன்புரி நடவடிக்கையாக ஊழியர்களுக்கு பசும்பால் வழங்குவதற்காக பகுதிகளின் பிரதேசங்களில் தேசிய கால்நடை வளங்கள் அதிகார சபையின் பாற்சாலைகள் நிறுவப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- தேசிய லொத்தர் சபையின் சிறிய உருண்டைகளைப் பயன்படுத்தும் 03 சீட்டிழுப்பு இயந்திரங்கள் பழுதுபார்க்கப்பட்டன.

- பண்டாரநாயக்க துறைமேடைக்கான 80 உருக்கு கிராதிகள் உற்பத்தி செய்யப்பட்டு கல்வனைஸ் இடப்பட்டது.

- இலங்கை துறைமுக அதிகாரசபையின் தீயணைப்புப் பிரிவில் பயன்படுத்தப்படும் 06 பம்பிகள் முற்றாகப் பழுதுபார்க்கப்பட்டன.

- ஏனைய பகுதிகளுக்கான 253 பிரதான இயந்திர வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

## கடலகம்

இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான சகல மிதவைக் கலங்களினது பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் கடலகப் பொறியியல் பகுதியின் பொறுப்பாகும். கடலகம், பாதுகாப்பு, இயக்கம் போன்ற பகுதிகளிலும் சிவில் பொறியியல் பராமரிப்பு பிரிவிலும் பயன்படுத்தப்படும் வெளியே பொருத்தும் என்ஜின்களினது பராமரிப்புகள் மேற்கொள்வதும் கடலகப் பகுதியின் மற்றுமொரு பொறுப்பாகும். அத்துடன் சிவில் பொறியியல் பராமரிப்பு பிரிவிற்கு தேவைப்படும் மிதவைக் கலங்கள் வழங்கப்படுவதனை உறுதி செய்வது இதன் பணிகளில் அடங்கும்.

தொகை பிரிக்கும் கப்பற் சரக்குகளின் இயக்கப்பாடுகளுக்குத் தேவையான கையாளல் உபகரணங்களை வழங்குவதும் இதன் பொறுப்பாகும். கேஸ் அடுப்புக்கள் ,சோறு சமைக்கும் கொதி கலங்கள், அலுமினியப் பாத்திரங்கள் போன்ற இலங்கை துறைமுக அதிகாரசபையின் சமையலறைக்குரிய உபகரணங்கள் பராமரிப்பதும் கடலகப் பகுதியினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதேபோன்று இலங்கை துறைமுக அதிகாரசபையின் சறுக்கு வழிகளின் இயக்க மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதும் இப்பிரிவின் பணியாகும்.

கடலகப் பொறியியல் பகுதி இரு பிரிவுகளைக் கொண்டதாகும். வருடத்தினுள் இவ் இரண்டு பிரிவுகளினாலும் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகர செயற்பாடுகள் பின்வருமாறு.

**கடலகப் பிரிவு - 1**

**மீள் பொருத்தும் (REFIT) பொறியியல் பிரிவு**

நங்கூர நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படும் சகல நங்கூரக் கலங்கள், "மெகா" தீயணைப்புக் கலம், "சேருவில" பயணிகள் கலம், இலங்கை துறைமுக அதிகாரசபையின் சேறுவாரிக் கலங்கள், வெளியில் பொருத்தப்படும் என்ஜின்களைக் கொண்ட சகல கலங்கள் தொடர்பான பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரித்தல் நடவடிக்கைகளின் ஒன்றிணைப்பு கடலகப் பிரிவு - 1 இன் கீழுள்ள மீள் பொருத்தும் பொறியியல் பிரிவின் முக்கிய பொறுப்பாகும். நங்கூர நடவடிக்கைகளுக்கான கொழும்பில் 05, திருகோணமலையில் 02, காலியில் 01, காங்கேசன்துறையில் 01 மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம் 01 ஆக நங்கூரக் கலங்களின் இயக்க தேவைப்பாடுகள் இப்பிரிவினால் வழங்கப்பட்டன. இச்செயற்பாடுகளினோடு மிதவைக் கலங்களின் லொயிட் ஆவண வகையீடு தேவைப்பாடுகளுக்கான இயந்திர பழுதுபார்த்தல்களும் நிறைவேற்றப்பட்டன.

"ஹன்ஷகாவா" மற்றும் கிறேப்ஹோபர் என்னும "தியகொவுலா" ஆகிய இரு சேறுவாரிக் கலங்கள் இப்பிரிவினால் இயக்க நடவடிக்கைளுக்கான உகந்த நிலையில் பராமரிக்கப்பட்டன. பூவல்லா சேறுவாரிக் கலத்தின் சகல கட்டமைப்பு மற்றும் மை பூசுதல் உட்பட தண்டுப் பகுதியினதும் பழுது பார்த்தல்கள் செய்யப்பட்டன. இலங்கை துறைமுக அதிகாரசபையின் பாதுகாப்பு, கடலகம் மற்றும் சிவில் பொறியியல் பகுதிகளினால் பயன்படுத்தப்படும் வெளியே பொருத்தப்படும் என்ஜின்களைக் கொண்ட கலங்களில் வழமையாக செய்யப்பட வேண்டிய பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.

"சிங்கபாகு" மற்றும் "ஐராவன" இழுவைக் கலங்களினாது உலர் தடாகத் தளம் உள்ளடங்கலான பிரதான பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டன."ஹக்ஸகாவா"

சேறுவாரிக் கலம் அவசர பழுதுபார்ப்பிற்காக உலர் தடாகத்தளத்தில் இடப்பட்டது. அதேபோன்று “பரண” மற்றும் விஜயபாகு” மோட்டார் இழுவைக் கலங்களுக்கான தடாகத் தள ஆய்வுக்குப் பதிலாக நீரின் மீது ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அவற்றின் அனைத்து அத்தியாவசிய பழுதுபார்ப்புகளும் செய்யப்பட்டன.

உலர் தடாகத்திற்கு பதிலாக சறுக்கு வழி பயன்பாட்டிலும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களின் பங்கேற்பிலும் “மெகா” மிதக்கும் தீயணைப்பு கலத்தினது அதிக விசையுடனான துப்புரவு செய்தல் மற்றும் முற்றாக வர்ணம் பூசும் பணிகள் மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.

**துறைமுக கலப் பிரிவு**

வழிகாட்டி கலங்கள், நங்கூரக் கலங்கள் போன்றவை பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் பிரதானமாக துறைமுக கலப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன்படி கப்பலோட்டப் பகுதியின் கையாளல் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தன.

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் அனைத்து வழிகாட்டிப் படகுகள், நங்கூரக் கலங்கள் ,ஏனைய கலங்களினது அன்றாடம் மேற்கொள்ளப்பட வேண்டிய பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டும் “வழிகாட்டி” 10, “வழிகாட்டி” 14, “ருஹூணு 1” நங்கூரக் கலங்களும் துறைமுக கல பொறியியல் பிரிவினால் ஆண்டினுள் மீள் புதுப்பிக்கப்பட்டன.

10,11,12,13,14,15 வழிகாட்டி கலங்கள், 2,3 நங்கூரக் கலங்கள் மற்றும் எகோ 3 கலத்தினதும் வகையீடு ஆய்வு நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.

**கலப் பிரிவு - II**

**கல நிர்மாணம்**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் கடலகக் கலங்களின் மரத்திலான மற்றும் பைபர் கிலாஸ் பகுதிகளிலான பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளல் கல நிர்மாணப் பிரிவின் முக்கிய பொறுப்பாகும். மேலும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் லான்ச் கலங்கள் மற்றும் நீர்மூழ்கிப் படகுகளினது தடுப்புகளின் பழுதுபார்த்தல்கள், மரத்திலான வேலைகள், மரத்திலான அடிச்சட்டங்களினது பழுதுபார்த்தல்களும் பராமரிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன. அதேபோன்று சகல படகுகளின் மரத்திலான அடிச்சட்டங்களையுடைய பகுதிகளும் லான்ச் கலங்களினது பைபர் கிலாஸ் பகுதிகளும் புதுப்பிக்கப்படக் கூடியதாகவிருந்தன. கடலகப் பகுதியில் பயன்படுத்தப்படும் நங்கூரக் கலங்களின் மரத்திலான தடுப்புகளினதும், சகல மரத்தளபாடங்களினதும் பழுதுபார்த்தல்களும் மேற்கொள்ளப்பட்டன.

ஆண்டினுள் சறுக்கு வழியில் 600 தொன் இரண்டு கையாளல் மேற்கொள்ளப்பட்டதோடு இல. 01 மற்றும் 02 சறுக்கு வழியில் 12 கையாளல் செய்யப்பட்டன. 02 வழிகாட்டி கலங்கள், 04 கப்பல் கட்டி வைக்கும் கலங்கள், சிறு அளவிலான, 05 படகுகளின் பழுதுபார்ப்பு மேற்கொள்ளப்பட்டு 03 கலங்களினது பிரதான பழுதுபார்ப்புகளும் ஆண்டினுள் செய்யப்பட்டன.

**கப்பல் சரக்குக் கல பழுதுபார்ப்பு முனையம்**

இயக்கப் பகுதியினால் பயன்படுத்தப்படும் இழுவைக் கலங்கள்,மோட்டார் லான்ச் கலங்கள், தண்ணீர் வத்தைகள்,தட்டு வத்தைகளின் பராமரிப்புகள் மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் தொடர்பில் பொறுப்பாகவிருக்கும் இம்முனையத்தினால் இக்கலங்கள் கடுங்காற்று பயன்படுத்தப்பட்டு (Grit Blasting) துப்புரவு செய்து மை பூசும் வேலைகள் உள்ளடங்கலான பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. இயக்கப் பகுதியின் மேற்குறிப்பிடப்பட்ட கலங்களின் கையாளல் தேவைப்பாடுகள் இம்முனையத்தினால் பூர்த்தி செய்யப்படக் கூடியதாகவிருந்தன.

ஆண்டினுள் இப்பிரிவினால் இயக்கம், கடலகம், பாதுகாப்பு பொறியியல் ஆகிய பகுதிகளுக்கும் காலி, திருகோணமலைத் துறைமுகங்களுக்கும், அதேபோன்று வெளி நிறுவனங்களுக்கும் பல்வேறு அளவிலான 527 கம்பி மற்றும் மனிலா கயிறு சிலிங்கைகள், 220 திரைச் சீலைகள், பல்வேறு அளவிலான 21 கென்வஸ் சீலைகள், 10 மேற் சீலைகள் தயாரித்து வழங்கப்பட்டன.

கைவண்டி, குப்பை வண்டி ,தள்ளு வண்டி போன்ற பல்வேறுபட்ட வண்டிகளினது பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கையிலும் 16 தள்ளு மற்றும், கை வண்டிகள் உற்பத்தி செய்யப்பட்டன. அதேபோன்று பல்வேறு வகையிலான பைப்களின் உற்பத்தியும் பழுது பார்ப்பும் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை துறைமுக அதிகாரசபையின் பல்வேறு பகுதிகளினால் வேண்டப்பட்ட சமையலறை உபகரணங்கள், பல்வேறு உபகரண அலுமினிய உற்பத்திகள் கைக்கருவிகள் பழுது பார்த்தல்களும் செய்யப்பட்டன.

இப்பிரிவினால் கொழும்பு துறைமுகத்தில் 06 சறுக்கு வழிகள் பராமரிக்கப்பட்டு கையாளல் மேற்கொள்ளப்படுகின்றது. ஆண்டினுள் 19 சறுக்கு வழி கையாளல்களும் கலங்ளினது பழுதுபார்ப்புகளும் மேற்கொள்ளப்பட்டன. (இலங்கை துறைமுக அதிகாரசபையின் 13 கலங்கள் மற்றும் தனியார் துறையின் 06 கலங்கள்) தனியார் தரப்புகளுக்கு சறுக்கு வழிகள் இப்பிரிவினால் குத்தகைக்கு வழங்கப்பட்டதன் மூலம் ரூபா 10,355,688.87 வருமானம் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு ஈட்டிக்கொடுத்துள்ளது.

**பேரை முனையம்**

இயக்கப் பகுதியினால் பயன்படுத்தப்படும் உருக்கிலான கப்பற்சரக்கு வத்தைகளினது பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் நடவடிக்கைகளுக்கு இப்பிரிவு பொறுப்பாகவுள்ளது. ஆண்டினுள் கப்பற்சரக்கு மற்றும் நீர் வத்தைகளினது உருக்கிலான பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன கண்டி அமரபுர பிக்கு சபையின் குழு நிலைப்படுத்தும் வைபவத்திற்கான மிதக்கும் மேடையொன்றும் முனைய ஆளணியினால் ஆண்டினுற் வழங்கப்பட்டது. ஆண்டினுள் ஜய கொள்கலன் முனையத்தின் 04 டிரேலர்களின் துருப்படிவு முற்றாக நீக்கப்பட்டு மை பூசப்பட்டன. குழாய் வழி திட்டத்திற்கு தேவைப்படும் உருக்கு உற்பத்திகளின் துருப்படிவு முற்றாக நீக்கப்பட்டு மை பூசப்பட்டன.

கப்பலோட்ட பொறியியல் பகுதியினால் சகல பகுதிகளுக்குமான சேவைகள் வெற்றிகரமாக வழங்கப்பட்டன. ஆளணியினதும் ஊழியர்களினதும் அர்ப்பணிப்பின் ஊடாக இருக்கும் வளங்களின் பயன்பாட்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் மிதக்கும் கலங்களின் சம்பந்தமான சகல கையாளல் தேவைப்பாடுகளும் இப்பகுதியினால் பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தன.

## வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்

**இப்பகுதியின் அடிப்படை ப்பணிகள் பின்வருமாறு வகைப்படுத்தலாம்**.

**பொருட்கள் பெறுகை**

சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் மூலதன அல்லது நுகர்வுப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக ஒரு தடவை அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பின்னர் கொள்வனவு செய்வதற்குத் தேவைப்படும் வசதிகள் வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பகுதியினால் ஒழுங்கு செய்யப்படும்.

**பட்டியல்படுத்தல் முகாமைத்துவம்**

கொள்வனவு செய்யப்படும் கட்டளைக்கேற்ப பொருட்கள் கிடைக்கப்பெற்றதும் வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பகுதியினால் பொருட்கள் பெற்றுக்கொள்ளல் மற்றும் பட்டியல்படுத்தும் கட்டுப்பாடு நடைபெறும்.

**பகுதிசார்ந்த திட்ட முகாமைத்துவம்**

புதிய தன்னியக்க பெறுகை மற்றும் பட்டியல்படுத்தல் முகாமைத்துவத் தொகுதியொன்று வாங்கப்பட்டு திட்டம் முனைப்பாக முன்னெடுத்து செல்லப்படுவதற்கான பூர்வாங்க செயற்படுத்துகை ஆய்வு தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**மீளாய்வாண்டினுள் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள விலைகோரல்களின் எண்ணிக்கை**

| விபரம் | விலைகோரல் சபை கூட்டங்களின் எண்ணிக்கை | விலைகோரல் சபை அங்கீகாரங்களினது எண்ணிக்கை |
|---|---|---|
| அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட விலைகோரல் சபை (அங்கீகார எல்லை - 100 மில்லியன் ரூபாவிற்கு மேல் | இல்லை | இல்லை |
| பணிப்பாளர் சபை (திணைக்கள விலைகோரல் சபை இல - 01) (ரூபா 20 - 100 மில்லியன் வரை) | 12 | 03 |
| மத்திய விலைகோரல் சபை (திணைக்கள விலைகோரல் சபை இல - 02 ) ரூபா 250,000 இருந்து 20 மில்லியன் வரை) | 51 | 1,376 |
| "பி" விலைகோரல் சபை (திணைக்கள விலைகோரல் இல - 03) அங்கீகார எல்லை ரூபா 250,000 க்கு குறைந்தது) | 51 | 3,432 |

**2012 ஆம் ஆண்டின் உள்நாட்டு கொள்வனவுகளின் மொத்த செலவினம்**

| | |
|---|---|
| மூலதனமற்ற பொருட்கள் | ரூபா. 550,718,675/= |
| மூலதன பொருட்கள் | ரூபா. 236,265,628/= |

**2012 ஆண்டின் வெளிநாட்டுக் கொள்வனவுகளின் மொத்த செலவினம் (ஆகுசெலவு மற்றும் கப்பற் கட்டணப் பெறுமதி**

| | |
|---|---|
| மூலதனமற்ற பொருட்கள் | ரூபா 513,343,924/= |
| மூலதன பொருட்கள் | ரூபா 198,434,232/= |

| | |
|---|---|
| திறக்கப்பட்ட கடன் கடிதங்களின் எண்ணிக்கை | 131 |
| திறக்கப்பட்ட மின்னஞ்சல் நிதிப் பரிமாற்றக் கட்டளைகளின் எண்ணிக்கை | 16 |

**2012 ஆம் ஆண்டினுள் வாப்புப் பிரிவினால் அகற்றிச் செல்லப்பட்ட பொருட்கள் பற்றியதான விபரங்கள்**

| | |
|---|---|
| கடல் மார்க்க போக்குவரத்து | 71 |

| | |
|---|---|
| விமான மூல போக்குவரத்து | 78 |
| பொதித் தபால் | 05 |

**2012.12.31 ஆந் திகதியில் இருப்புப் பெறுமதி ரூபா. 1,793,911,686/=**
**பிரதான களஞ்சியங்களும் மொத்த இருப்புக் கட்டுப்பாடும்**

| | |
|---|---|
| 2012 ஆம் ஆண்டினுள் பிரதான களஞ்சியசாலைகளுக்கு கிடைக்கப்பெற்ற பொருட்களின் பெறுமதி (மூலதன மற்றும் மூலதனமற்ற) | ரூபா 2,738,178,299/= |
| பயன்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்படும் பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட பொருட்களின் பெறுமதி (மூலதன மற்றும் மூலதனமற்ற) | ரூபா 3,270,540,720/= |

## தகவல் முறைமை

இலங்கை துறைமுக அதிகாரசபையின் தகவல் தொழில்நுட்பம் பற்றியதான நோக்கங்கள் ஒட்டு மொத்தமாக அதன் வர்த்தக இலக்குகளுடன் தொடர்புபடுகின்றது. தகவல் தொழில்நுட்பத் தொகுதி நடைமுறைப்படுத்தலின் பொறுப்பு தகவல் முறைமைப் பகுதிக்கு வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று வர்த்தக நடவடிக்கைகளில் மிகவும் நவீன தகவல் முறைமை ஈடுபடுத்துவது தொடர்பில் முனைப்பாக செயற்படுகின்றது. தகவல் தொழில்நுட்பம் மற்றும் துறைமுக வர்த்தகங்களுக்கிடையில் மிகவும் நெருக்கமான தொடர்பு உண்டு. துறைமுக வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படுதலில் தகவல் தொழில்நுட்பத்திற்கு பாரிய ஆற்றலுள்ளதோடு அதனூடாக வலயத்தின் ஏனைய போட்டிமிகு துறைமுகங்களைத் தாண்டி இலங்கை துறைமுக அதிகார சபையினை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லலாம். தகவல் தொழில்நுட்பம் ஊடாக மேற்கொள்ளப்படும் திட்டங்கள் கவனத்திலெடுக்கப்படுகையில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் வெற்றிக்கு தகவல் தொழில்நுட்பப் பகுதியினால் பாரிய பணியினை ஆற்ற முடியும்.

2012 ஆண்டில் தகவல் முறைமைப் பகுதியினால் பொறுப்பேற்கப்பட்ட நோக்கங்கள் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் தொகுதிகளின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளன. மேலும் இத்தொகுதிகளின் விருத்திகளும் ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளன.

### கொள்கலன் முனைய முகாமைத்துவ தொகுதி (CTMS) - ஜய மற்றும் கொள்கலன் முனையங்கள்

நேவீஸ் (NAVIS) முனைய முகாமைத்துவத் தொகுதி நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் புதிய / மாற்றமடையும் வர்த்தக தேவைப்பாடுகள் காரணமாக எதிர் நோக்கப்பட்ட பல சிக்கல்கள் இப்புதிய முறை தொடர்புபடுத்தலின் மூலம் வெற்றியடதல் உறுதி செய்யப்பட்டுள்ளது. பாரிய எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்களுக்கு இணையத்தள பிரவேச மொடியூல் வசதிகள் பிரபல்யமாக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் பூர்த்தியடைதலின் பின்னர் முகவர்கள் துறைமுகத்திற்கு வரும் தேவைப்பாடு குறைவடைவதுடன் குறைந்த ஆவண நடவடிக்கைகள் ஊடாக தகவல் பரிமாற்றம் துரிதமாக்கப்பட்டுள்ளது. எக்ஸ்பிறஸ், தரவுத் தளத்திற்குரிய தகவல்கள் சேகரிக்கும் வசதியின் கூடிய பகுதி அதிகரிக்கும் தரவுப் பரிமாணங்களுக்குள் உட்சேர்க்கப்பட வேண்டியுள்ளமை இத்தொகுதிக்குரிய தடையாகும். இந்நிலைமையினை தவிர்ப்பதற்கு பர்ஜின் (Purging) மொடியூல் கொள்வனவு செய்யப்பட்டு ஆண்டினுள் உற்பத்தி தொகுதி தொடர்பில் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டுள்ளது.

### இலத்திரனியல் தரவு பரிமாற்றத் தொகுதி (EDI)

கொள்கலன் முனைய முகாமைத்துவத் தொகுதியூடாக (CTMS) பின்வரும் இலத்திரனியல் தரவு பரிமாற்ற வசதிகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வசதிகள் தற்போது முற்றாக செயற்படுவதோடு கப்பல் கம்பெனிகள்/ முகவர் நிறுவனங்களுக்கான பாவனையில் உள்ளது.

**CODECO**

கொள்கலன் வாசலில் உட்புகுதல்/ வெளியேறல் அறிக்கை

ஐக்கிய நாடுகளின் EDIFACT தகவல் மாதிரிக்கமைய முகவர் நிறுவனங்களுக்கு நாள்தோறும் மு.ப.08.00 மணிக்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படுகின்றது.

**COARRI**

கொள்கலன் தறையிறக்கல்/ ஏற்றுதல் அறிக்கை

ஐக்கிய நாடுகளின் EDIFACT தகவல் மாதிரிக்கமைய முகவர் நிறுவனங்களுக்கு நாள்தோறும் மு.ப.08.15 மணிக்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படுகின்றது.

**BAPLIE**

துறைமுகத் திட்டம்/ அடுக்கும் அமைப்பு - தற்போது பயன்படுத்தப்பட்டுள்ள இடவசதி பற்றியதான தகவல்.

உள்வரும் BAPLIE யுடன் முனையத்திலிருந்து வெளியேறும் அறிக்கை (TDR) கொள்கலன் முனைய முகாமைத்துவத் தொகுதியோடு ஒன்றிணைக்கப்படும். இதில் கொழும்பில் தரையிறக்கப்படும் கொள்கலன்கள் பற்றிய விபரங்கள் அடங்குவதோடு வெளியே செல்லும் BAPLIE பற்றியதில் புறப்பட்டுச் செல்லும் கப்பலில் சரக்குகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் அமைப்பு கப்பலின் முகவர் நிறுவனத்திடம் வழங்கப்படும்.

**இணையத்தள அணுகு மொடியூல்**

கொள்கலன் முனைய முகாமைத்துவத் தொகுதியின் இணையத்தள அணுகு மொடியூல் தற்போது பூரணமாக செயற்படுத்தப்படுகின்றது. வெளியே இருக்கும் கப்பல் சேவைகள்/ முகவர் நிறுவனங்களுக்கு பின்வரும் தகவல்களுக்காக இலங்கை துறைமுக அதிகாரசபையின் தொகுதிக்கு தற்போது பிரவேசிக்க முடியும்.

- கப்பல் உப அட்டவணைகள் பற்றியதான விசாரணை
- கொள்கலன் தரையிறக்கல் ஆவணங்கள்
- கொள்கலன் ஏற்றுதல்
- EDI முறைக்கு ஒன்றுசேர்த்தல்
- இருக்கும் கொள்கலன் அளவின் விசாரணை
- உபகரணங்கள் இருக்கும் இடங்களை அறிந்து கொள்ளல் (கொள்கலன், டிரக் போன்றவை)

**கப்பல் சரக்கு முகாமைத்துவத் தொகுதி**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் வாடிக்கையாளர்களுக்கு திறன்மிகுந்த சேவைகள் வழங்கப்படும் நோக்கில் (CTMS) கப்பற் சரக்கு மொடியூலொன்று 2011 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டது. கப்பற்சரக்கு அகற்றிச் செல்லப்படும் செயற்பாட்டின் போது இந்த முறையினால் அநேக பயனான நிலைமைகள் ஏற்பட்டன. அவற்றினுள் பின்வருவன முக்கியமான விடயங்களாகும். அதாவது வாடிக்கையாளர்களின் சேவை வேண்டுகோள் அவர்களின் அலுவலகங்களினாலேயே ஆரம்பித்தல், இலங்கை துறைமுக அதிகாரசபையின் இன்வோயிஸ் படிவங்களை வழங்குதல், இலங்கை வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் பணம்

செலுத்தும் வசதி அல்லது இணையத்தள நிதிப் பரிமாற்ற வசதி மற்றும் எந்தவொரு வங்கியினதும் வைப்பு/ பற்று மூலம் இணையத்தள பயன்பாட்டில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படக் கூடியதாக இருத்தல்.

இந்த மொடியூல் இரண்டு கட்டங்களில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்றுமதி செயற்பாடு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதோடு இறக்குமதித் தொகுதி இரண்டாவது கட்டத்தில் செயற்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

**EDI ஊடாக இந்த மொடியூலினால் கிடைக்கப்பெறும் வசதிகள் - ஏற்றுமதி**

- ஏற்றுமதியாளரின் அலுவலகத்தினால் இணையத்தளம் ஊடாக சேவை வேண்டுகோள் முன்வைக்கப்படுதல்.
- இலங்கை துறைமுக அதிகாரசபையினால் சிட்டைகள் தயாரிக்கப்படுதல் மற்றும் அவற்றின் சரி பிழை பார்க்கப்படுதலுக்காக இணையத்தளம் மூலம் ஏற்றுமதியாளருக்கு அனுப்புதல் அதில் ஏதாவது பிழை இருப்பின் அதை நிராகரிக்க முடிவதோடு அதன் மூலம் சிக்கல்கள் மற்றும் தாமதங்களை தவிர்த்துக் கொள்ள முடியும்.
- CTMS அவ்வப்போது உடனுக்குடன் முறைப்படுத்துவதன் மூலம் தமது அலுவலகத்தினால் இலத்திரனியல் வங்கி முறையூடாக கொடுப்பனவு உடனடியாக செலுத்தும் வசதி அல்லது நாட்டின் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் பணம் செலுத்தும் வசதி
- இணையத்தள பிரவேசம் மூலம் தமது அலுவலகத்திலிருந்து சரியாக கொள்கலன் அடுக்கி வைக்கும் தகவல் பரிமாற்றம்.
- வாடிக்கையாளர்கள் தத்தமது தகவல்களை இணையத்தளம் ஊடாக வழங்கப்படுதலோடு வாசல்களின் பணிகள் மிகவும் நவீனமாகுதல் மற்றும் துரிதமாக்கப்படுதல்.
- உடனுக்குடனான தகவல் அலுவலகத்தினால் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுதலின் மூலம் ஏற்றுமதி அலுவலகத்தில் வேகமாக பௌதீக ரீதியாக ஆவணங்கள் பரீட்சிக்கப்படும் ஆற்றல்.
- கொள்கலன் தொடர்பாக இணையத்தளம் ஊடாக ஏற்கனவே அறிவுறுத்தல் வழங்கப்படுதலின் மூலம் CTMS உடன் தொடர்புபடுதல்
- சரியான சுங்க வெளியீட்டு இலக்கங்கள் மூலம் சுங்க திணைக்களத்திற்கு உண்மைத்தன்மை கண்டறியப்பட ஒத்தாசை வழங்கல்
- மனித பயன்பாடு குறைக்கப்பட்டு ஆகக் கூடியதாக 45 நிமிடங்களுக்குள் முழு செயற்பாட்டிற்கும் செலவாகும் காலம் குறைக்கப்படுதல்.
- தன்னியக்க பரீட்சித்தல்கள் மூலம் உச்ச பிழையின்மை மற்றும் பிழையான செயற்பாடுகள் அகற்றப்படுதல்.

**ஒரகல் நிதித் தொகுதி**

மிக உயர் மட்டத்திலான செயலாற்றுகை நோக்கமாகக் கொண்டு மிகவும் கீழ் மட்டத்தில் சேவை வழங்கல் வழங்கிய சேர்வர், பொது பேரேடு, கிடைக்கப்பெற வேண்டிய கணக்குகள் மற்றும் நித முகாமைத்துவ மொடியூல் கூடிய வசதிகளைக கொண்ட புதிய சேர்வருக்கு 2011 ஆண்டில் மாற்றப்பட்டது. இது நடைமுறைப்படுத்தலின் பின்னர் கையினால் செய்யப்பட்டு வந்த அநேக நடவடிக்கைகள் தன்னியக்கமான முறையில் நிதிப் பகுதியின் செயற்பாடுகள் எளிதாக்கப்படுதலின்

ஊடாக அதன் பணிகள் திறன்மிக்கதாகவும் பிழையற்றதாகவும் நடைபெற்றன. இலத்திரனியல் வர்த்தகங்களின் பட்டியல்படுத்தப்பட்ட மற்றும் கொள்வனவு முகாமைத்துவ மொடியூல் தொடர்பில் புதிய சேர்வரின் கொள்ளளவுகள் முக்கியமானதாகும். இதுவானது 2012 ஆண்டில் சம்பந்தப்பட்ட இயந்திரத்தினுள் ஒரகல் நிதி தொகுதி உச்ச நிலையில் செயற்படுவதற்கு வழி வகுக்கும்.

**பட்டியலிடப்பட்ட பொருட்களின் கட்டுபாடு மற்றும் பெறுகை முகாமைத்துவத் தொகுதி**

தற்போது இருக்கும் தொகுதியானது பகுதியின் அனைத்து அலுவல்களையும் முன்னெடுத்துச் செல்வதற்கு போதுமானதல்லவெனவும் வழங்கல் மற்றும் பொருள் முகாமைத்துவ பகுதியின் தேவைப்பாடுகள் போதுமான முறையில் நிறைவேற்றுவதற்கு மாற்று வழியொன்று தேவையெனவும் உணரப்பட்டது.

சகல தேவைப்பாடுகளையும் எதிர்கொள்வதற்குத் தேவையான தகுந்த தீர்வாக கூட்டு மின் வர்த்தக பட்டியல்படுத்தப்பட்ட மற்றும் பெறுகை முகாமைத்துவ மொடியூலொன்றின் தேவைப்பாடு கவனத்திலெடுக்கப்பட்டது. இரண்டு மொடியூல்கள் கொள்வனவு செய்யப்பட்டு அவை தற்போது செயற்பாட்டு நிலையிலுள்ளன.

மொடியூலானது தேவைப்படும் முறையில் தயார் செய்யப்படும் செயற்பாடு 2012 ஆண்டின் இறுதிப்பகுதியில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டு ஆண்டு பூராகவும் இதற்கு இணைந்ததாக பாவனையாளர்களுக்கான பயிற்சி வழங்கப்பட்டது. நிதிப் பிரிவின் கணக்குகள் மற்றும் தற்போதுள்ள மென் பொருள் மொடியூலினால் (PSCAPS) வழங்கப்பட்ட வழங்கல் பகுதியின் கணக்குகளுக்கிடையிலிருந்த முரண்பாடு காரணமாக புதிய தொகுதி செயற்படுத்துதல் தற்காலிகமாக நிறுத்த வேண்டியேற்பட்டது. எனவே சரியான தொகை மதிப்பு நிலையினை அறிந்து கொள்வதற்காக பட்டியல்படுத்தப்பட்ட ஆவணங்கள் பௌதீகரீதியாக தற்போது பரீட்சிக்கப்பட்டு வருகின்றன. வகையீட்டு தெரிவின் பின்னர் புதிய தொகுதியினை பயன்படுத்த முடியும்.

**புதிய சம்பளப் படிவத் தொகுதி**

தேவைப்பாடுகளை ஒன்றுசேர்த்தல்,தொகுதிகளின் ஆய்வு, பகுப்பாய்வு மற்றும் விருத்தி போன்ற நிலைமைகள் முடிவடைந்ததன் பின்னர் 2011 இறுதிப் பகுதியில் செயற்படுத்தல் கட்டம் ஆரம்பிக்கப்பட்டதோடு 2012 ஆண்டில் அது முடிவடைந்தது. இத்தொகுதி பிரதானமாக நிதிப் பிரிவின் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்படுவதற்கு பயனபடுத்தப்படுவதுடன் இறுதிக் கட்டங்களில் இது இலங்கை துறைமுக அதிகாரசபையின் சகல பிரிவுகளோடும் ஒன்றிணைக்கப்படும். புதிய சம்பளப்படிவத் தொகுதி மனிதவளத் தொகுதியோடு ஒன்றிணைக்கப்படுவதோடு உரிய தொகுதி முற்றாக செயற்படுத்தப்பட்டதன் பின்னர் விடுமுறை/ மேலதிக நேர பராமரிப்பு மற்றும் அவ்வப்போது விண்ணப்பிக்கும் கடன் செயற்பாடு சுயமாக செய்யக்கூடியதாக இருக்கும். தற்போது இதன் சரி பிழை பார்த்தலுக்காக இம்முறை கொண்ட சம்பளப் படிவத் தொகுதியோடு பரீட்சிக்கப்பட்டு வருகின்றது.

**ஊழியர்களின் சுகாதார வசதிகள் முகாமைத்துவ தொகுதி (EHMS) வைத்திய தொகுதி**

வைத்தியப் பகுதியின் தரவுகள் ஒழுங்குபடுத்தப்படும் பணிகள் விருத்தி செய்யப்படுவதற்கான கணனிமயப்படுத்தும் செயற்பாடு 2012 ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டது. 146 கிகாபைட் (GB) 04 வன் தட்டுக்களுடனான IBM Sever X 3850 $M_2$ கொள்வனவு செய்யப்பட்டு LINUX RED HAT செயற்பாட்டு தொகுதியோடு இணைக்கப்பட்டது.

ஊழியர்களினது சுகாதார வசதிகள் முகாமைத்துவ தொகுதி LINUX செயற்பாட்டுத் தொகுதியின் கீழ் Oracle 10g தரவுத் தளத்துடன் VB.வலையமைப்பு பயன்பாட்டில் விருத்தி செய்யப்பட்டது. இதுவானது வைத்தியப் பகுதியின் அறிக்கைகள் பேணும் பணிகளை நிறைவேற்றுவதற்கு உதவுவதோடு அதனூடாக நோயாளர்களை பதிவு செய்தல், சிகிச்சைகள் மருந்து வினியோகம், நோயாளர்களினது வைத்திய பரிசோதனை அறிக்கைகள், நோயாளர்களை அனுமதித்தல் போன்ற தொடர்புபடும் பணிகளை இலகுபடுத்துகின்றது. தற்போது இத்தொகுதி இணையாக செயற்படுத்தப்படுவதற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

**இருக்கும் தொகுதிகளைப் பராமரித்தல்**

ஈடுபடுத்தும் தொகுதி செயற்பட்டதன் பின்னர் அதன் மென் மற்றும் துணை வன் பொருட்களைப் பராமரித்தல் தகவல் தொகுதிப் பகுதியின் பிரதான பொறுப்பாகும் எந்தவொரு தொகுதியொன்றும் ஸ்தாபிக்கப்படும் முழுமையான முயற்சியில் 60% அளவு தொகுதிகளைப் பராமரித்தல் தொடர்பிலாக இருக்கும் இதுவானது தொகுதிகளின் அபிவிருத்தி சுற்றின் நீண்டகால செயற்படுத்தும் பிரிவாகக் கருதப்படுகின்றது. தொகுதியின் நடவடிக்கைகள் முடிவடைவதோடு பராமரிப்புக் காலமும் முடிவடையும். தொகுதிகள் ஆரம்பிக்கப்படுதலும் பராமரித்துச் செல்லும் தகவல் தொகுதியின் பொறுப்பானதால் தகவல் தொகுதி பகுதியிடம் ஒப்படைக்கப்படும் பராமரிப்பு நடவடிக்கைகளின் அளவும் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும். மென் மற்றும் வன் பொருட்கள் உரிய நேரத்தில் பேணப்படுவது தொடர்பில் தகவல் தொகுதிப் பகுதியினால் மேற்கொள்ளப்படும். சடுதியான செயற்பாடுகள் தகவல் தொகுதி தொடர்ச்சியாகச் செயற்படுவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு ஒத்தாசை வழங்குகின்றது.

மீளாய்வு ஆண்டினுள் தகவல் தொகுதிப் பகுதியினால் பின்வரும் தொகுதிகள் பராமரித்துச் செல்லப்படுவதற்காக பொறுப்பேற்கப்பட்டன.

**FCL/LCL/ தரையிறக்கல் மற்றும் வினியோகத் தொகுதி**

சம்பந்தப்பட்ட தொகுதிகள் IBM ஆரம்ப சட்டம் கொண்ட இயந்திரங்களினால் செயற்படுகின்றன. வாடிக்கையாளர்களுக்கு தடையின்றிய சேவை வழங்குவதற்காக தேவைப்படும் பாதுகாப்பு நடைமுறைகளின் மூலம் சிறந்த முறையில் ஆற்றப்படும் சேவை உறுதிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதலீட்டுச் சபை, கட்டுநாயக்க மற்றும் புறக்கோட்டை ஆவணங்கள் தயாரிக்கும் நிலையங்களிலுள்ள தரையிறக்கல் மற்றும் வினியோகத் தொகுதிகள் தற்போதும் கூட ஆரம்ப சட்டம் கொண்ட இயந்திரங்களினாலேயே இயங்குகின்றன.

**கொள்கலன் கப்பற்சரக்கு நிலையம் / பேலியகொட**

தொகுதியின் ஒத்துழைப்பு மற்றும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. உரிய கரும அறிக்கைகளின் வேண்டுகோள்கள் பூரத்தி செய்யப்பட்டுள்ளன. சேர்வர் பராமரிப்பு மற்றும் தரவுகள் பேணப்படும் செயற்பாடுகள் மேற்பார்வை செய்யப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டன.

**பாதுகாப்பு கட்டுப்பாடு மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்கும் தொகுதி**

பாவனையாளர்களுக்காக தொகுதிகளின் ஒத்துழைப்பு, பயிற்சி மற்றும் உரிய கரும அறிக்கைகள் வழங்கப்பட்டன. சேர்வர் பராமரிப்பு ம்ற்றும் தரவுகள் பேணப்படும் செயற்பாடுகள் மேற்பார்வை செய்யப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டன. கூடிய இயக்கத் தொகுதியுடன் புதிய பீ (P) வகையின் தொகுதியொன்று வரை சேர்வர் இயந்திரங்கள் விருத்தி செய்யப்பட்டதோடு அடிப்படைத் தரவுத் தளத்தின் தன்மையும் Oracle 81 இருந்து 10g வரை வெற்றிகரமாக முறைப்படுத்தப்பட்டது.

## மனிதவள அபிவிருத்தி

தொழில்சார் திறன்/ நிபுணத்துவம் கொண்ட நபர்களை வழங்குவதன் மூலம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஒட்டுமொத்த நோக்கங்களை அடைவதற்காக மனிதவளப் பகுதி பாரிய பங்காற்றுகின்றது.

உரிய காலத்தில் நிறுவனத்தின் நோக்கங்களை அடைவதற்காக சம்பந்தப்பட்ட பதவிகளுக்கு தகுதியானவர்கள் கவரப்பட வழி செய்தல் மனிதவள அபிவிருத்திப் பகுதியின் பொறுப்பாகும். தகுந்த இடங்களில் தகுந்த ஊழியர்கள் இணைக்கப்பட்டதன் பின்னர் மனிதவள கருமங்கள் உச்ச நிலையில் பேணப்படுவதற்கு அவர்களை தக்க வைப்பதும் அவசியமாகும்.

2012 வருட ஆரம்பத்தில் நிறைவேற்று, நிறைவேற்று அல்லாத அலுவலர்கள்,தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் சாராத ஊழியர்கள் அடங்கலாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் மொத்த ஊழியர் தொகை 11,008 ஆக இருந்தது. 2012 இறுதியில் அதன் தொகை 10,200 ஆக இருந்தது. இந்த ஊழியர் தொகையின் 9373 பேர் கொழும்புத் துறைமுகத்திலும் முறையே 391,436 பேர் காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்களிலும் சேவையிலீடுபட்டிருந்தனர்.

**2012 ஆண்டின் உள்ளக பதவியுயர்வுகள் தொடர்பான விபரங்கள்**

அங்கீகார ஆட்சேர்ப்பு நடைமுறை அடிப்படையில் அங்கீகார ஆளணித் தொகையினுள் உள்வாரியாக 395 பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**வெளிவாரியான ஆட்சேர்ப்பு தொடர்பான விபரங்கள்**

2012 ஆண்டினுள் நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையின் மீது 64 ஊழியர்கள் வெளிவாரியாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். வெளிவாரியான ஆட்சேர்ப்பு மற்றும் உள்ளக பதவியுயர்வுகள் வழங்கப்படுவதை விட நிறைவேற்று அல்லாத தரங்களுக்குரிய புதிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் அடங்கிய வழிகாட்டல்களுக்கமைவாக அநேகமான ஊழியர்கள் அவர்களின் செயலாற்றுகை, வருகை தரல் மற்றும் நடத்தை கவனத்தில் கொள்ளப்பட்டு அவர்களின் சம்பளத் திட்டத்தின் அண்மித்த உயர் நிலையில் வைக்கப்பட்டனர்.

**புதிய அங்கீகார ஆளணித் தொகை**

சேவை அவசியப்பாடு மற்றும் பின்வரும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு சகல பிரிவுத் தலைவர்களோடும் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டதன் பின்னர் இலங்கை துறைமுக அதிகாரசபையின் அங்கீகார ஆளணித் தொகை 12,987 இருந்து 9990 வரை குறைக்கப்பட்டது.

- புதிய ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் புதிய சம்பள அமைப்பு
- பல்வித தேர்ச்சி வகையீடு பற்றியதான எண்ணக்கரு
- கணனி பாவனைத் தொகுதிகள்
- நாட்டிற்கு உகந்த புதிய தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்கள் அறிமுகம் செய்தல்
- உத்தேச பிரதான அலுவலக கட்டிடம்
- தற்போதுள்ள செயலாற்றுகை மதிப்பிடல் முறை
- உயர் பயிற்சி வேலைத்திட்டம்
- நடுநிலைப்படுத்தப்பட்ட அணுகுமுறை
- வெளியிலிருந்து வளங்களைப் பெறும் எண்ணக்கரு
- உளப்பாங்கு மாற்றம்

**தகவல் தொகுதிகள் விருத்தி செய்தல்**

மனிதவள முகாமைத்துவ தொகுதியோடு சகல சம்பளப் படிவங்கள் மற்றும் வருகை தரல் ஆவணங்கள் தொடர்பான பிரதான பணிகளில் 90% நிறைவு செய்யப்பட்டுள்ளன.கொழும்பு துறைமுகத்தின் அனைத்து பகுதிகளிலும் அவ்வப்போது விடுமுறை விண்ணப்பிக்கும் தொகுதி

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மனிதவளப் பகுதியின் பணியாளர்களுக்கு அன்றாட கடமைகள் இலகுவில் மேற்கொள்வதற்காக மனிதவள தகவல் தொகுதியில் அநேக செயற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மஹபொல பயிற்சி நிறுவனத்தின் உதவியோடு மனிதவளப் பகுதியின் ஊழியர்களினது கணனி தொடர்பான அறிவு விருத்தி செய்யப்படும் வகையில் அதற்காக தயாரிக்கப்பட்ட தரவு அடிப்படையிலான முகாமைத்துவ நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன ஆவண முகாமைத்துவ தொகுதியொன்று அறிமுகப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**தேசிய தொழில் தகைமை அறிமுகப்படுத்தல் (NVQ)**

நிறைவேற்று அல்லாத தரங்களின் புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையின் தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவின் உதவியோடு தேசிய தொழில் தகைமை தொடர்பான அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. ஊழியர்களுக்கு தமது சான்றிதழ் பெறுவதை இலகுபடுத்தும் பொருட்டு பல்வேறு தரங்களின் மதிப்பீட்டாளர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**சடுதி விபத்துக்களுக்கான நஷ்டஈடு வழங்குதல்**

ஆண்டினுள் சடுதி விபத்துகளுக்குள்ளானோரின் எண்ணிக்கை 90 ஆகும். சடுதி விபத்துக்களினால் மரணமடைந்தவர்கள்/ பாதி அங்கவீன நிலைக்குட்பட்டோர் தொடர்பில் செலுத்தப்பட்ட மொத்த ஊழியர் நஷ்டஈட்டுத் தொகை ரூபா 632,500/= ஆகும்.

**செயல் நடைமுறை மற்றும் நிதி விதிமுறைகள் திருத்தம் செய்தல்**

தற்போதைய தேவைப்பாடுகளுக்கேற்பவாறு இருக்கும் செயல் நடைமுறை கோவை மற்றும் நிதி விதிமுறைகளில் திருத்தம் மேற்கொள்ளப்படுவதற்காக மனிதவளப் பகுதி மற்றும் நிதிப்பகுதியின் அலுவலர்கள் போன்று நிதி அமைச்சின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களினால் பெயரிடப்பட்ட விசேட குழு இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளது.

## பாதுகாப்பு

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்படும் சகல வர்த்தகத் துறைமுகங்களினது பாதுகாப்பு பற்றியதான பொறுப்பு இப்பகுதியிடம் வழங்கப்பட்டுள்ளதோடு அதை நிறைவேற்றும் பொருட்டு 24 மணி நேரம் பூராகவும் தொடர்ச்சியான திறமையான சேவை நடாத்திச் செல்லப்படுவதற்கும். அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள்ள கொழும்புத் துறைமுகத்திற்குரிய சொத்துக்கள் மற்றும் உயிர்கள் காக்கப்படும் வகையில் நவீன அறிவு, புதிய தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் நுட்பங்கள் பயன்பாட்டில் இப்பகுதியானது மேற்குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான சிறந்த செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது.

நாள் பூராகவும் அன்றாட பாதுகாப்புக் கடமைகள் சிறந்த முறையில் பேணப்பட்டு துறைமுகத்தின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக எமது பகுதியினால் ஈட்டப்பட்டுள்ள வருமானம் பின்வருமாறு.

**துறைமுக பாவனையாளர்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டதன் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம்**

| விபரம் | ரூபா |
|---|---|
| ஆட்கள் மற்றும் வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதன் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் | 92,914,186 |

| | |
|---|---|
| துறைமுக அனுமதிப்பத்திரங்கள் தொலைந்ததன் காரணமாக மீள் வழங்கலின் தண்டப்பணமாக அறவிடப்பட்ட வருமானம் | 44,286 |
| எஸ்.ஏ.ஜீ.ரீ நிறுவனம் மற்றும் வ/ப கொழும்பு கப்பல் தடாகக் கம்பெனிக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுதலின் ஊடாக கிடைக்கப்பெற்ற வருமானம் | 4,179,326 |
| வருடாந்த அனுமதிப்பத்திரங்களோடு ஆயுத உறைகள் மற்றும் தோள்பட்டிகள் வழங்கப்பட்டதன் வருமானம் | 544,700 |
| **மொத்தம்** | **97,682,498** |

**அதற்கு மேலதிகமாக ஈட்டப்பட்டுள்ள வருமானம்**

| விபரம் | ரூபா |
|---|---|
| போக்குவரத்து சட்டங்கள் மீறியமை தொடர்பில் அதிகார சபையினால் தொடரப்பட்ட 80 வழக்குகளினால் ஈட்டப்பட்டுள்ள தண்டப்பணம் | 105,500.00 |
| 2012 ஆம் ஆண்டில் சடுதி விபத்துக்களினால் துறைமுக அதிகாரசபைக்கேற்பட்ட நட்டங்களுக்காக அறவிடப்பட்ட பணம் | 1,584,228.00 |

இவ்வாறு மேலதிகமாக சேவை வழங்கலாக அனுமதிப்பத்திர அலுவலகத்தினால் இவ்வருடத்தினுள் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர வகை மற்றும் எண்ணிக்கை பின்வருமாறு.

**துறைமுக ஊழியர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்கும் அலுவலகம்**

2012 ஆண்டினுள் வழங்கப்பட்டுள்ள துறைமுக ஊழியர் புகைப்பட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை

| விடயம் | தொகை |
|---|---|
| புதிய ஆட்சேர்ப்புகள் | 17 |
| திருகோணமலை துறைமுகத்திற்கு புதிய அனுமதிப் பத்திரங்கள் வழங்கல் | 427 |
| தரவுகள் மாற்றம் பெற்றதிலான மீள் வழங்கல் | 949 |
| 2012 இல் அதிகாரசபையின் வாகனக் குழாமிற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | 524 |
| துறைமுக ஊழியர்களின் தனிப்பட்ட வாகனங்களுக்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | 3,837 |
| 2012 அண்டினுள் அச்சடிக்கப்பட்ட நிரந்தர துறைமுக பாவனையாளர்களுக்கான அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | 5,032 |

மேலும் பாரிய பணியாற்றும இப்பகுதியின் பாதுகாப்புப் பயிற்சிப் பிரிவு ஊடாக பாதுகாப்புக் காவலர் பதவியிலிருந்து அத்தியட்சகர் பதவி நிலைகளுக்கும் பயிற்சிகளை வழங்கியும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதன் மூலமும் உயர் தரத்தில் சேவையிலீடுபடுவதற்கு மிகவும் அர்ப்பணிப்புடன் செயல்பட்டுள்ளது. அதற்கமைய வருடாந்தோறும் பின்வரும் பாடநெறிகள் நடாத்தப்பட்டுள்ளன.

**பாதுகாப்புப் பகுதியினால் நடாத்தப்படும் சகல தரங்களுக்குமான பயிற்சிப் பாடநெறிகள்**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் பாதுகாப்புப் பிரிவினதும் தொடர்புபட்ட நிறுவனங்களினதும் கடமைகள் தொடர்பிலான விளக்கம் பெறும் வகையில் 2012.01.04 இருந்து 2012.05.09 ஆந் திகதி வரை 16 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. இதில் நிறைவேற்று அலுவலர்கள் அடங்கலாக 978 பாதுகாப்பு பதவியணியினர் கலந்து கொண்டனர். பட்டியலிடப்பட்ட பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சி 2012.11.21 ஆந் திகதி நடைபெற்றதோடு அதில் 20 நிறைவேற்று அலுவலர்கள் கலந்து கொண்டனர். அதேபோன்று நிலைய கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் 2012.09.28 இருந்து 2012.12.10 ஆந் திகதி வரை நடைபெற்றதோடு அதில் 158 பாதுகாப்பு பதவியணியினர் பங்கேற்றனர்.

**துப்பாக்கிகளினாலான செயன்முறை மற்றும் சுடுதல் பயிற்சிகள் (2012.08.11, 2012.09.01–02 மற்றும் 2012.09.15)**

பாதுகாப்புப் பகுதியின் 45 வயதிற்குக் குறைந்த பாதுகாப்பு தரங்களுக்கான பல்குழல் துப்பாக்கிகளினால் சுடுதல் பயிற்சியும் கடமைத் தேவைப்பாடுகளின் நிமித்தம் தெரிவு செய்யப்பட்ட பாதுகாப்பு தரங்களுக்கான 9mm கைத்துப்பாக்கிகளினாலான சுடுதல் பயிற்சியும் மேற்கொள்ளப்பட்டதோடு கடமை அவசியப்பாடுகளின் மீது சம்பந்தப்பட்ட நிறைவேற்று அலுவலர்களுக்கும் 9mm கைத்துப்பாக்கி மற்றும் பல்குழல் துப்பாக்கியால் சுடுதல் பயிற்சிகளும் வழங்கப்பட்டன. இதன்படி வருடாந்த சுடுதல் பயிற்சிகளின் 9mm கைத்துப்பாக்கியால் சுடுதல் பயிற்சிகளுக்கு பாதுகாப்பு தரத்தின் 95 அலுவலர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர் இதன் போது 9mm துப்பாக்கியின் 561 உண்மையான ரவைகள் பயன்படுத்தப்பட்டன.

மேற்குறிப்பிடப்பட்ட சகல பதவி நிலையின் HK 512 மற்றும் M3 சுப்பர் 90 துப்பாக்கிகளினாலான (காலி/ திருகோணமலை/ ஒலுவில் உட்பட) 486 பாதுகாப்பு பதவியணியினரின்(காலி/ திருகோணமலை/ ஒலுவில் உட்பட) பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு இதற்காக SG வகையின் 4,890 உண்மையான ரவைகள் பயன்படுத்தப்பட்டன. (ஒவ்வொரு வருடமும் பாதுகாப்பு பகுதியில் தெரிவு செய்யப்படும் பாதுகாப்பு பதவியினருக்கான சுடுதல் பயிற்சிகள் நடாத்தப்படுகின்றன.

**துறைமுக பாதுகாப்பு டிப்ளோமா பாடநெறி**

சகல பாதுகாப்பு பதவியணிகளுக்கான கோட்பாடு ரீதியான அறிவு பெற்றுக்கொடுத்தல், துறைமுக பாதுகாப்புப் பணிகள் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குத் தேவையான திறன்கள் விருத்தி செய்தல், தொழில்சார் பூரண ஆற்றல்களைக் கொண்ட பதவிநிலையினரை உருவாக்கத் தேவைப்படும் நன்நோக்கிலான உளப்பாங்கு விருத்தி செய்யும் நோக்குடன் இப்பகுதியினால் மஹபொல பயிற்சி நிலையத்தின் உதவியோடு கொத்தலாவள பாதுகாப்பு அகடமியினால் பாதுகாப்பு டிப்ளோமா பாடநெறி ஆரம்பிக்கப்பட்டது. ஒன்றரை வருட (1 1/2 ) பாடநெறியாக 2012.08.18 ஆந் திகதி இது ஆரம்பிக்கப்பட்டு 2014.02.22 ஆந் திகதி முடிவடையவுள்ளது. கடமைகளுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் பங்கேற்படும் இப்பாடநெறியின் ஒன்றரை வருட (1 1/2) காலப்பகுதியினுள் பிரதி சனிக்கிழமை தோறும் மு.ப.7.00 இருந்து. பி.ப. 15.00 மணி வரை பாதுகாப்பு பதவியணியினர் ஈடுபடுத்தப்படுகின்றனர் அதன் பங்கேற்பு விபரம் பின்வருமாறு

| | |
|---|---|
| முகாமையாளர் (பாதுகாப்பு) | 01 |
| பிரதான அத்தியட்சகர் (பாதுகாப்பு) | 02 |
| அத்தியட்சகர் (பாதுகாப்பு) | 06 |

| | |
|---|---|
| உதவி பாதுகாப்பு அலுவலர் | 05 |
| பாதுகாப்பு சார்ஜன் | 14 |
| பாதுகாப்பு காவலர் | 15 |
| **மொத்தம்** | **43** |

துறைமுக வளவினைப் பயன்படுத்தும் விசேட சாரதிகளான கனரக வாகனங்கள் செலுத்தும் சாரதிகளுக்கான நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுவதனை நாம் ஆரம்பித்துள்ளோம்.

கனரக வாகனச் சாரதிகள் அறிவுறுத்தப்படுவது தொடர்பிலான 21 நிகழ்ச்சித்திட்டங்கள் 2012.07.16 இருந்து 2012.12.31 ஆந் திகதி வரையிலான காலப் பகுதியினுள் நடாத்தப்பட்டதோடு அதில் கலந்து கொண்ட சாரதிகளின் எண்ணிக்கை 3,562 ஆகும். சாரதியொருவரிடமிருந்து தலா ரூபா 650/= சலுகைக் கட்டணம் அறவிடப்பட்டதோடு ரூபா 2,315,300/= வருமானம் மஹபொல பயிற்சி நிறுவனத்தினால் பெறப்பட்டுள்ளது. மிகவும் சிறந்த பெறுபேறுகள் கொண்ட பாடநெறியொன்றென இதை குறிப்பிட முடியும். இதற்குப் புறம்பாக பல்வேறு விடயங்கள் தொடர்பில் பொதுவான விளக்கமளிக்கப்படும் நோக்கில் 2012 ஆம் ஆண்டினுள் மஹபொல பயிற்சி நிறுவனத்தினால் பல்வேறு பாடநெறிகளும் கழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன.

## நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள்

அதிகாரசபையின் ஊழியர்களுக்கு நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் பகுதியினால் வழங்கப்படும் நிதி மற்றும் நிதி சாராத பல நலன்புரி வசதிகள் உள்ளன. ஊழியர்களின் நலன்களுக்காக இவ்வசதிகள் தொடர்ச்சியாக திருத்தம் செய்யப்பட்டு 2012 ஆம் ஆண்டில் உயர் நிலையிலான நலன்புரி வசதிகள் வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட வசதிகள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

**ஆளணியினருக்கான இலவச உணவு வழங்கல்**

துறைமுக அதிகாரசபையில் முறைமாற்று அடிப்படையில் சேவையிலீடுபடும் ஊழியர்களுக்கு பகல்/ இரவு நேரங்களில் உணவு, பானங்கள் போன்று தேநீர் மற்றும் சிற்றுண்டி வகைகளும், அலுவலக முறையின் ஊழியர்களுக்கு பகல் உணவும் இலவசமாக வழங்கப்படுகின்றன. அதேபோன்று 2012 ஆம் ஆண்டில் இதற்காக ரூபா 581.88 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று 2012 ஆம் ஆண்டில அதிகார சபையினால் இலவசமாக வழங்கப்படும் பகல் உணவு பெற்றுக்கொள்ளும் ஊழியர்களுக்காக பகல் உணவு வேளையொன்றுக்கு செலுத்தப்படும் ரூபா 40 இல் இருந்து ரூபா 80 வரை அதிகரிக்கப்பட்டது.

**ஊழியர்களுக்கான சடுதி விபத்துக்கள் மற்றும் காப்புறுதித் திட்டம்**

2011 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்த வைத்திய உதவித்திட்டம் 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆந் திகதியிலிருந்து இடைநிறுத்தப்பட்டது. இதன் பின்னர் முன்னர் இருந்த முறையை விட கூடுதலான அனுகூலங்கள் உள்ளடக்கப்படுவம்வாறான புதிய காப்புறுதித் திட்டம் 2011 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் கீழ் முன்னர் கிடைக்கப்பெற்ற அனுகூலங்களை விடவும் கூடிய வசதிகள் கிடைக்கப்பெறுவதுடன். சடுதி மரணம் தொடர்பில் ரூபா மில்லியன் வரையிலான காப்புறுதி உரித்தாகுவதோடு இயற்கை மரணம் எய்தப்படுகையில் ஒரு இலட்ச ரூபாவிற்கான காப்புறுதி கிடைக்கப்பெறும். இதற்குப் புறம்பாக வெளிவாரியான வைத்திய சிகிச்சைகளுக்காக வருடாந்தம் ரூபா 7,500/= கான நிதி ஈடுசெய்யப்படும். மேலும் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைகள் பெறுவதற்கான செலவுகளுக்காக ரூபா 100,000/= வரையிலான காப்புறுதி உரித்தாகும் ஊழியர்களின் சுயவிருப்பில் தமது குடும்ப உறுப்பினர்களை இக்காப்புறுதி திட்டத்தில் இணைத்துக் கொள்ளக் கூடியதாக இருத்தல் இதன் விசேடமாகும். இதற்காக தனது மனைவி அல்லது கணவர் தொடர்பில் வருடாந்தம் ரூபா 1,500/= மற்றும் பிள்ளையொருவருக்கு வருடாந்தம் ரூபா 720/= வும் செலுத்தப்படுதல் வேண்டும். 2012 ஆம் ஆண்டு

செப்டெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து இக்காப்புறுதி திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**மாலுமிகளுக்கான காப்புறுதித் திட்டம்**

இக்காப்புறுதித் திட்டத்துக்கு மேலதிகமாக அதிகாரசபையின் கப்பலோட்டப் பகுதியில் பணி புரியும் சகல மாலுமிகளுக்குமான காப்புறுதித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதோடு கப்பலோட்டப் பகுதியில் பணி புரியும் சகல மாலுமிகளுக்கும் இக்காப்புறுதியினைப் பெற்று கொள்ள முடியும். இதன் கீழ் மாலுமிகள் ரூபா 3,000,000/= கான காப்புறுதிக்கு உரித்தாகுவதுடன் காப்புறுதி தவணைப் பணத்தின் 50% அதிகாரசபையினால் ஏற்கப்படுவதோடு மீதி மாலுமிகளினால் பொறுப்பேற்கப்படுதல் வேண்டும்.

**வீடமைப்புக் கடன் திட்டம்**

துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களுக்கு வீடொன்றை வாங்குவதற்கு, கட்டுவதற்கு, புதிதாக ஒரு பகுதியைச் சேர்ப்பதற்கு அல்லது வீடொன்றைக் கட்டுவதற்காக காணியொன்றை வாங்குவதற்கு ஆகக் கூடிய தொகையான ரூபா 500,000/= வரையிலான வீடமைப்புக் கடன் திட்டமொன்று அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் அனுசரணையோடு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதற்கு 6% சலுகை அடிப்படையிலான வட்டி விகிதம் அறவிடப்படுவதோடு வருடாந்தம் ரூபா 50,000,000/= இதற்காக ஒதுக்கப்படுகின்றது. இவ்வீடமைப்புக் கடன் திட்டம் தொடர்பில் 2012 ஆம் ஆண்டினுள் அரச ஈட்டு முதலீட்டு வங்கிக்கு ரூபா 16,996,000/= தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

**புலமைப் பரிசில் திட்டம்**

அதிகாரசபையின் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு பல்கலைக்கழக கற்கை மற்றும் க.பொ.த (உ/த) கற்பதற்காக இரு வகையிலான புலமைப் பரிசில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன்படி க.பொ.த (உ/த) கற்பதற்காக 24 மாதங்களுக்கு மாதமொன்றுக்கு தலா ரூபா 750/= புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது. இப்புலமைப்பரிசில் தொடர்பில் மீளாய்விற்குட்படும் 2012 ஆண்டினுள் ரூபா 3,145,550/= தொகை வழங்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகக் கல்வி தொடர்பில் தெரிவு செய்யப்படும் அதிகாரசபையின் ஊழியர்களினது பிள்ளைகளுக்கு வருடமொன்றுக்கு ரூபா 25,000/= கற்கை காலத்திற்கமைய ஆகக் கூடியது 05 வருடங்கள் வரையில் புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது. இப்புலமைப்பரிசில் தொடர்பில் 2012 ஆம் ஆண்டில் ரூபா 8,167,575/= தொகை வழங்கப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டிலிருந்து புலமைப்பரிசில் பெறுவோரின் தொகையில் தீவிர வளர்ச்சி காணப்படுகின்றமை இதன் விசேட அம்சமாக உள்ளது. இதுவானது இவ்வருடத்திலும் தென்பட்டதோடு இவ்வருடத்திலிருந்து புலமைப்பரிசில் பெறுவோரின் நிதியுதவித் தொகை வங்கிக் கணக்குகள் ஊடாக நேரடியாக செலுத்தப்படுவதற்கும் நடவடிக்க எடுக்கப்பட்டது.

**நலன்புரி பஸ் வண்டிகள்**

அதிகாரசபையின் ஊழியர்களுக்கும் அவர்களின் குடும்பத்தவர்களுக்கும் வழிபாட்டுப் தலங்கள் தரிசிப்பதற்கும், சுற்றுலா பயணங்கள் செலவதற்காகவும் சலுகையான அடிப்படையில் பஸ் வண்டிகள் வழங்கப்படுவதோடு ஊழியர்களின் மரணச் சடங்குகளில் கலந்து கொள்வதற்காக குறிப்பிட்ட காலப்பகுதியினுள் இலவசமாக பஸ் வண்டியொன்று வழங்கப்படும். அவ்வாறு பஸ் வண்டியொன்று வழங்கப்பட முடியாத சந்தர்ப்பத்தில் அம்மரணச் சடங்கின் பயணத்துக்கு செலவான தொகை ரூபா 6,500/= தொகைக்குட்பட்டதாக ஈடுசெய்யப்படும். மேலும் அதிகாரசபையின் ஊழியர்களுக்கு தமது சேவை நிலையங்களுக்கு இலகுவாக செல்லக் கூடியவாறு துறைமுக வளவினுள் இலவச போக்குவரத்து சேவை தொடர்ச்சியாக மீளாய்வுக்குட்படும் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டது.

2012 ஆம் ஆண்டில் பஸ் வண்டிகள் நலன்புரி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டதனால் ரூபா 3,095,562/= வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.

2012 ஆம் ஆண்டில் நலன்புரி பஸ் வண்டிப் போக்குவரத்து மற்றும் போக்குவரத்தின் பின் சுற்றுலா தொடர்பிலான மீதிப் பணம் மற்றும் எரிபொருளுக்காக செலவு செய்யப்பட்ட நிதி சுற்றுலா ஒழுங்கு செய்த ஊழியர்களுக்கு தங்களின் மாத சம்பளத்துடன் வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**விசேட விடுமுறை உரிமைகளுக்கான கொடுப்பனவு**

நோய் நிலைமை அல்லது சடுதி விபத்தொன்றின் போது தமக்குரிய சகல விடுமுறைகளும் முடிவுற்ற நிலையில் வைத்தியப் பரிந்துரையின் மீது சேவைக்குத் தகுதி பெறும் வரை ஆகக் கூடியதாக ஆறு (06) மாதங்களுக்கு அனுகூல முறையின் மீது அங்கீகார சம்பளத்துடனான விடுமுறைகள் வழங்கப்படும். 2012 ஆம் ஆண்டில் இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற 122 விண்ணப்பங்கள் கவனத்திலெடுக்கப்பட்டு அதன்படி 4384½ நாள் அங்கீகார சம்பளத்துடனான விடுமுறைகளும் 537 சம்பளமற்ற விடுமுறைகளும் கொடுக்கப்பட அனுமதி வழங்கப்பட்டன.

**நலன்புரி உண்டிச்சாலைகள்**

அதிகாரசபையின் வளவினுள் அதன் ஊழியர்களுக்கும் பல்வேறு விடயங்களுக்காக துறைமுக வளவிற்குள் பிரவேசிக்கும் வாடிக்கையாளர்களுக்கும் தேவைப்படும் வசதிகள் வழங்கப்படுவதற்காக 15 உண்டிச்சாலைகள் சலுகை விலை அடிப்படையில் நடாத்திச் செல்லப்படுகின்றன. வருடாந்தம் விலைமனு கோரல்களின் மூலம் குத்தகையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு இவ் உண்டிச்சாலைகள் வாடகைக்கு வழங்கப்படுகின்றன. 2012 ஆம் ஆண்டில் இதன் மூலம் கிடைக்கப்பெற்ற முழு வருமானம் ரூபா 6,362,183/= ஆகும்.

**ஊழியர்களுக்கான ஞாபகார்த்த சின்னம் வழங்குதல்**

அதிகாரசபையின் சகல ஊழியர்களுக்கும் தமது 30 வருட சேவைக்காலம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் பெறுமதியான சின்னம் வழங்கப்படுவதுடன் 40 வருட சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்யும் ஊழியர்களுக்கு துறைமுக பௌத்த கோபுர வடிவம் கொண்ட அல்லது ஞாபக சின்னங்கள் வழங்கப்படுகின்றன. 2012 ஆம் ஆண்டில் 30 வருடங்கள் நிறைவு செய்த 80 பேருக்கும் 40 வருடங்கள் பூர்த்தி செய்த 07 பேருக்கும் இவ்வாறு ஞாபக சின்னங்கள் வழங்கப்பட்டன.

**கடலக நூதனசாலை**

துறைமுகம் மற்றும் கப்பலோட்டத் துறையின் வரலாற்றுக் காலங்களை சித்தரிக்கும் உருவ மாதிரிகள், விளம்பர பலகைகள் போன்று பழைய துறைமுக வளவினுள் பயன்படுத்தப்பட்ட பொருட்களும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்களுக்கிடையில் மிகவும் பிரபல்யமாகியுள்ள இந்த நூதனசாலை துறைமுகங்கள் மற்றும் கப்பலோட்ட நடவடிக்கைகள் பற்றியதில் அக்கறையுள்ளோருக்கும் பிரயோசனமுள்ள இடமாகும். 2011 ஆம் ஆண்டில் தேசிய நூதனசாலைத் திணைக்களத்தின் உதவியோடு விசேட விளம்பர பதாகைகள் பொருத்தப்பட்டன. கட்டணமின்றிய இதனைப் பார்வையிடுவதற்காக மு.ப.10.00 இருந்து பி.ப.07.00 மணி வரை திறந்து வைக்கப்படும். இந்நிலையத்தில் புத்தகங்கள், பிரசுரங்கள், வரைந்த அட்டைகள் விற்பனை செய்யப்பட்டதன் மூலம் 2012 மீளாய்வாண்டினுள் ரூபா 345,360/= வருமானமாகப் பெறப்பட்டுள்ளது.

**நலன்புரி விளையாட்டரங்க வசதிகள்**

அதிகாரசபையினால் நலன்புரி நிலையங்களுக்கு தலா ஒரு விளையாட்டரங்கம் வீதம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக துறைமுக அதிகாரசபையின் விளையாட்டுக் கழகத்திற்கு வருடமொன்றுக்கு ரூபா 712,000/= தொகைக்குட்பட்டதாக இவ்விளையாட்டு கழகத்தின் விளையாட்டு அபிவிருத்திப் பணிகளுக்காக வழங்கப்படுகின்றன.

**நூலக வசதிகள்**

அதிகாரசபையினது ஊழியர்களின் வாசிக்கும் ஆர்வம் அதிகரிக்கப்படுவதற்காக ஊழியர்களினால் நடாத்திச் செல்லப்படும் ஒவ்வொரு நூலகத்திற்கும் வருடாந்தம் ரூபா 45,000/= வழங்கப்படும். இவ்வாறான 16 நூலகங்கள் துறைமுக வளவினுள் உள்ளன. 2012 ஆம் ஆண்டினுள் 18 நூலகங்களுக்கு புத்தகங்கள் வாங்குவதற்காக ரூபா 300,000/= வழங்கப்பட்டுள்ளது.

**பகல் நேர பராமரிப்பு நிலையம் மற்றும் முன்பள்ளி பாடசாலை**

அதிகாரசபையின் சேவா வனிதா பிரிவினால் அதிகாரசபையின் ஊழியர்களின் பிள்ளைகளுக்காக நடாத்திச் செல்லப்படும் பகல் நேர பராமரிப்பு நிலையம் மற்றும் முன்பள்ளி பாடசாலை இவ்வருடத்தினுள் நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் பகுதியின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. சென்ற வருடங்கள் போன்று பகல் நேர நிலைய பிள்ளைகளுக்கு இலவசமாக பகல் உணவு வழங்கப்படுவதுடன் வேண்டப்படும் சந்தர்ப்பங்களின் போது அவர்களுக்கான வசதிகளும் வழங்கப்பட்டன.

**உபகரணங்கள் வழங்கல்**

ஊழியர்களின் நலன்புரி நிலைமைகள் மேம்படுத்தப்படும் பொருட்டு நலன்புரி நிலையங்களில் ஓய்வு நேரங்களை பயனுள்ள வகையில் கழிப்பதற்காக ஊழியர்களின் வேண்டுகளின் மீது தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் ஏனைய உபகரணங்கள் தொடர்ச்சியாக வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டன.

## சட்டம்

இலங்கை துறைமுக அதிகாரசபையின் சட்ட அலுவலர்கள் கொழும்பு, காலி, திருகோணமலை, மாகம் றுஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகங்களின் சட்ட ஆலோசகர்களாக இருப்பதுடன் பணிப்பாளர் சபை, பணிப்பாளர்கள், பகுதித் தலைவர்கள் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஏனைய பிரிவுகளுக்கும் ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

**ஆலோசனைகள்**

2012 ஆம் ஆண்டினுள் முகாமைத்துவத்திற்கு 218 க்கு மேற்பட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக நகல் அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபையினைத் தரப்பாகக் கொண்ட ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள், பிணைகள், உறுதிகள், குத்தகைகள், போன்றவற்றுடன் தொடர்புபடுதல் சட்டப் பகுதிக்குரிய பணிகளில் அடங்கும்.

**உறுதிகள், உடன்பாடுகள் மற்றும் ஒப்பந்தங்கள்**

வாடகைக்கு வழங்கும் ஒப்பந்தங்கள் 35, குத்தகைக்குப் பெறுதல் 01, ஒப்பந்த / உடன்பாடுகள் 04, சரிப்படுத்தும் ஒப்பந்தம் 01 போன்றவை 2012 ஆம் ஆண்டினுள் சட்டப் பகுதியினால் செயற்படுத்தப்பட்டன. இச் சட்ட ஆவணங்களுக்கு மேலதிகமாக பின்வரும் பிணை நிற்றல், ஒப்பந்த உடன்பாடு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

- கைச்சாத்திடப்பட்ட பிணை/ ஒப்பந்த பிற்சேர்க்கைகள் - 05
- வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளுக்கான சம்பளமற்ற விடுமுறை தொடர்பிலான பிணை/ ஒப்பந்த உடன்பாடுகள் - 03

- இலங்கையினுள்ளும் வெளிநாடுகளிலும் பயிற்சி மற்றும் கல்வி தொடர்பிலான பிணை / ஒப்பந்த உடன்பாடுகள் - 03

- முகாமைத்துவ பயிலுநர்களுக்கான 05 பிணை / ஒப்பந்த உடன்பாடுகள் கைச்சாத்திடல்

- மனிதவள டிப்ளோமா / ஆங்கில டிப்ளோமா பயிலும் ஊழியர்களுக்கான 41 பிணை / ஒப்பந்த உடன்பாடுகள் கைச்சாத்திடப்பட்டன.

இலங்கை துறைமுக அதிகாரசபையினை தரப்பாகக் கொண்ட அனைத்து நீதிமன்ற விடயங்கள் தொடர்பில் சட்டமா அதிபர் மற்றும் வெளி சட்டத்தரணிகளின் உதவியோடு சட்டப் பகுதியின் நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

2011 டிசெம்பர் இறுதி வரையில் மீயுயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், உயர் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், தொழில் நியாய சபைகள், நீதவான் நீதிமன்றம், தொழில் திணைக்களம், மனித உரிமைகள் ஆணைக்குழு, தொழில் நீதிமன்றம், ஆலாட்சி அதிகாரி , ஊழியர் நட்டஈடு ஆணையாளர், தீர்ப்பு மையங்களில் 257 வழக்குகள் தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் விண்ணப்பங்கள் விசாரிக்கப்பட்டு வந்தன.

2012 ஆம் ஆண்டினுள் 55 புதிய வழக்குகள் / முறைப்பாடுகள் / விண்ணப்பங்கள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கெதிராகவும் இலங்கை துறைமுக அதிகார சபையினாலும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. (குறிப்பிடப்பட்ட பந்தியிலுள்ள அனைத்து நீதிமன்றங்கள் மற்றும் நிறுவனங்கள்) இதில் 03 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபையினாலும் மீதி இலங்கை துறைமுக அதிகார சபைக்கு எதிராகவும் தொடரப்பட்டிருந்தன. 2012 ஆம் ஆண்டினுள் மொத்த 312 வழக்குகளில் 36 வழக்குகளின் நடவடிக்கைகள் முடிவடைந்திருந்தன. இதில் 27 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சார்பாகவும் 3 வழக்குகளில் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு எதிராகவும் தீர்ப்பு வழங்கப்பட்டது. 3 வழக்குகள் தீர்க்கப்பட்டு, 3 வழக்குகள் சம்பந்தப்பட்ட தரப்பினர்களினால் வாபஸ் பெறப்பட்டன.

2012 டிசெம்பர் 31 வரையில் 276 வழக்குகள் / முறைப்பாடுகள்/ விண்ணப்பங்கள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் விசாரிக்கப்பட்டு வந்தன.

**மீயுயர் நீதிமன்ற வழக்குகள்**

2011 இறுதியில் 07 வழக்குகள் முடிவுறாதிருந்தன. 2012 ஆண்டினுள் புதிதாக 11 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இதில் 10 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு எதிராகவும் 01 வழக்கு, இலங்கை துறைமுக அதிகாரசபையினாலும் தொடரப்பட்டிருந்தன. 18 வழக்குகளில் 08 வழக்குகள் 2012 இல் முடிவடைந்துள்ளன. 07 வழக்குகள் மேற்கொண்டு செல்லப்படுவதற்கான வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. இதன்படி 7 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு சார்பாகவும் 01 வழக்கு தீர்க்கப்பட்டும் உள்ளன. 2012.12.31 வரையில் 10 வழக்குகளின் நடவடிக்கைகள் முடிவுறாத நிலையில் இருந்தன.

**மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள்**

2011.12.31 வரை 17 வழக்குகள் முடிவுறாதிருந்தன. 2012 ஆம் ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கெதிராக புதிதாக 03 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த 20 வழக்குகளில் 06 முடிவு பெற்றுள்ளதோடு அதில் 02 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சார்பாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளன. முறைப்பாட்டாளரினால் 02 வழக்குகள் வாபஸ் பெறப்பட்டன. 02 வழக்குகளில் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு பாதகமாக தீர்ப்பளிக்கபட்டுள்ளன. 2012.12.31 வரையில் 14 வழக்குகள் தீர்க்கப்படாதிருந்தன.

**உயர் நீதிமன்ற வழக்குகள்**

2011.12..31 வரையில் உயர் நீதிமன்றில் 11 வழக்குகள் விசாரிக்கப்பட்டு வந்தன. 2012 ஆம் ஆண்டில் புதிதாக 03 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் தாக்கல் செய்யப்பட்டன. 14 வழக்குகளில் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சார்பாக 02 வழக்குகளில் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளன. 2012.12.31 வரையில் 12 வழக்குகளின் பணிகள் முடிவுறாத நிலையிலிருந்தன.

**மாவட்ட நீதிமன்ற வழங்குகள்**

2011.12.31 வரை 12 வழக்குகள் முடிவுறாதிருந்தன. 2012 ஆண்டில் இலஙகை துறைமுக அதிகாரசபைக்கெதிராக புதிதாக 01 வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. 2012 இல் 13 வழக்குகளில் 04 வழக்குகளின் பணிகள் முடிவடைந்து 01 வழக்கு தீர்க்கப்பட்டது. இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சார்பாக 02 வழக்குகள் நிராகரிக்கப்பட்டன. 01 வழக்கு சம்பந்தப்பட்ட தரப்பினர்களினால் வாபஸ் பெறப்பட்டது. 2012.12.31 வரை 09 வழக்குகள் மாவட்ட நீதிமன்றத்தில் முடிவுறாதிருந்தன.

**நீதவான் நீதிமன்ற வழக்குகள்**

2011.12.31 ஆந் திகதி வரையில் நீதவான் நீதிமன்றில் 08 வழக்குகள் முடிவுறாதிருந்தன. 2012 ஆம் ஆண்டினுள் அரசாங்க விடுதிகள் (உரிமை கைப்பற்றல்) சட்டத்தின் கீழ் இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய விடுதிகளில் சட்ட விரோதமாக வசிப்பவர்களை அகற்றுதல் மற்றும் அரசாங்க காணிகள் (உரிமை கைப்பற்றல்) சம்பந்தப்பட்ட விண்ணப்பங்கள் அடங்கலான 03 புதிய வழக்குகள் நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன. 2012 ஆம் ஆண்டினுள் 05 வழக்குகள் முடிவு பெற்றன. மேற்குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகளின் பணிகளுக்கு மேலதிகமாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களை தரப்பினர்களாகக் கொண்ட சந்தர்ப்பங்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள நீதவான் நீதிமன்றங்களினால் கிடைக்கப்பெறும் நீதிமன்ற அழைப்பாணைகள் தொடர்பிலும் சட்டப் பகுதியினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. 2012.12.31 வரையில் நீதவான் நீதிமன்றங்களில் 06 வழக்குகளின் பணிகள் முடிவுறாத நிலையிலுள்ளன.

**தொழில் நியாய சபை வழக்குகள்**

2011.12.31 வரையில் தொழில் நியாய சபை நீதிமன்றில் தீர்க்கப்படாதிருந்த வழக்குகளின் எண்ணிக்கை 18 ஆக இருந்தது. 2012 ஆம் ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கெதிராக புதிதாக 18 வழக்குகள் தொடுக்கப்பட்டு 02 வழக்குகளின் பணிகள் முடிவடைந்திருந்தன. இதில் 01 வழக்கு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சார்பாகவும் தீர்ப்பு வழங்கப்பட்டது 01 வழக்கு விண்ணப்பதாரருக்கு சார்பாகவும் தீர்ப்பளிக்கப்பட்டது. 2012.12.31 வரையில் தொழில் நியாய சபைகளில் 34 வழக்குகளின் பணிகள் முற்றுப் பெறாதிருந்தன.

மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்,தொழிலாளர் பிணக்குகள் (தீர்த்தல் தொடர்பிலான வழக்குகள்) பற்றியதில் தொழில் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் ஆலாட்சி அதிகாரியிடமும் ஊழியர் நட்ட ஈடு ஆணையாளரிடமும் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள்.

2011 டிசெம்பர் 31 வரையில் மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட 132 விண்ணப்பங்களினதும்,தொழில் ஆணையாளரிடம்,தீர்வு காணல் 32 மற்றும் ஆலாட்சி அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 17 முறைப்பாடுகளினதும் பணிகள் முடிவுறாதிருந்தன.

2012 ஆண்டினுள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் 05 புதிய விண்ணப்பங்களும் தீர்வு காணல் தொடர்பில் தொழிலாளர் ஆணையாளரிடம் 08 புதிய முறைப்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. தொழில் ஆணையாளரிடம் தொழிலாளர் நஷ்டஈடு தொடர்பிலான 01 முறைப்பாடும் செய்யப்பட்டிந்தது.

2012 அண்டினுள் 06 மனித உரிமைகள் விண்ணப்பங்களினதும் தீர்வு காணல் தொடர்பான 03 விண்ணப்பங்களினதும் பணிகள் முடிவடைந்திருந்தன.

அதன்படி 2012.12.31 இல் ஆலாட்சி அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 131 மனித உரிமைகள் விண்ணப்பங்களினதும் 37 தீர்வு காணல் முறைப்பாடுகளினதும் ஆலாட்சி அதிகாரியிடம் 17 முறைப்பாடுகளினதும் தொழில் ஆணையாளரிடம் தொழிலாளர் நஷ்டஈடு தொடர்பான 01 விண்ணப்பம் தொடர்பான பணிகள் முடிவுறாதிருந்தன.

**தீர்வுகள்**

2011.12.31 வரையில் 02 வணிகப் பிணக்குகள் கைத்தொழில் தீர்வு காணல் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 01 கைத்தொழில் தீர்வு காணலின் பணிகள் முடிவுறாதிருந்தன. 2012 ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கெதிராக புதிய 02 கைத்தொழில் விண்ணப்பங்களின் தீர்வு காணல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி 2012.12.31 இல் 03 கைத்தொழில் மற்றும் 02 வணிகத் தீர்வு காணல் முடிவுறாதிருந்தது.

## மருத்துவம்

ஊழியர்களின் சுகாதார நிலைமைகள் பேணுவதற்காக நோய்களுக்கான சிகிச்சைகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் போன்று உள மற்றும் உடல் ரீதியானதும் சமூக ரீதியான நலன் உறுதிப்படுத்தப்படுவதற்கு உதவி வழங்குவதோடு அதன் ஊடாக ஊழியர் படையின் வினைத்திறன் மேம்படுத்தப்பட பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

2012 ஆண்டினுள் பிரதான வைத்திய அதிகாரி, பிரதி பிரதான வைத்திய அதிகாரி, இரண்டு வைத்தியர்கள், வருகை தரும் இரண்டு வைத்தியர்கள், பல் வைத்தியரொருவர், வைத்தியத் துறை சார்ந்தவர்களினாலும் நிர்வாக பணியாளர்களினாலும் மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன.

**நோயாளர்களுக்கான சிகிச்சை**

குருட்டுத்தன்மை, திடீர் மாரடைப்பு , சிறுநீரக செயலிழப்பு மற்றும் நீண்ட கால புண், காயங்கள் போன்று ஒவ்வாமை தடுப்பு அல்லது குறைப்பதற்காக நீரிழிவு, உயர் குருதி அழுத்தம், இருதய நோய்கள், ஆஸ்துமா மற்றும் உளரீதியான தொற்றா நோய்கள், வாழ்க்கை முறையினால் ஏற்படும் நோய்களுக்கான சிகிச்சைகள் மற்றும் அன்றாடம் சோதிக்கப்படுதலும் மேற்கொள்ளப்படுகின்றன.

**சேவையிலீடுபட்டிருக்கையில் ஏற்படும் சடுதி விபத்துக்கள்**

- சடுதி விபத்துக்கள் மற்றும் ஏற்படும் அவசர சந்தரப்பங்களில் உடனடியான சிகிச்சைகள் வழங்குதல்

- சிறு விபத்துக்கள் தொடர்பில் வைத்திய நிலையத்தில் சிகிச்சையளிக்கப்படுவதோடு பிரதான விபத்துக்களின போது கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படும்.

- சேவையிலீடுபட்டிருக்கையில் ஏற்படும் சடுதி விபத்துக்கள் தொடர்பில் ஆராயப்படுவதுடன் அவைகள் குறைக்கப்படுவதற்காக தகுந்தவாறு பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்துதல் மற்றும் பாதுகாப்பான வழிமுறைகள் அனுசரிப்பது தொடர்பில் ஊழியர்கள் உட்சாக மூட்டப்படுகின்றனர்.

- சேவையிலீடுபட்டிருக்கையில் ஏற்படும் சடுதி விபத்துக்களைக் குறைத்தல் மற்றும் அதனால் உண்டாகும் நஷ்டங்களைத் தவிர்க்கும் வகையில் வைத்தியர்களினால் 24 மணி நேரம் பூராகவும் மதுபானப் பாவனை தொடர்பில் பரீட்சிக்கப்பட்டு வருகின்றது.

**நோயாளர் காவு வண்டிச் சேவை**

நவீன உபகரணங்களுடனான இரண்டு நோயாளர் காவு வண்டிகள் ஊடாக 24 மணிநேரம் பூராகவும் சேவைகள் வழங்கப்படுகின்றன.

**நோய் கட்டுப்பாடு**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் பகுதி ரீதியிலான டெங்கு ஒழிப்புக் குழுவின் உறுப்பினரொருவர் மற்றும் பகுதித் தலைவரின் கண்காணிப்பின் கீழ் ஒவ்வொரு பகுதிக்குரிய டெங்கு ஒழிப்புக் குழுவினால் துறைமுக வளவினுள் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் வாரந்தோறும் பரீட்சிக்கப்பட்டு வருகின்றன. சுகாதார அமைச்சு, துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர்களினது ஆலோசனையின் பேரில் இலங்கை துறைமுக அதிகாரசபையில் டெங்கு நோய் தடுக்கும் குழுவொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பிரதான வைத்திய அலுவலர் மற்றும் மேலதிக முகாமைப் பணிப்பாளரிடம் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் மாதாந்த அறிக்கைகள் அனுப்பி வைக்கப்படுவதோடு அவர்களினால் இந்த அறிக்கைகள் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஊடாக சுகாதார அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றன. இது தொடர்பிலான பிரச்சினைகள் கலந்துரையாடப்படுவதற்கும் சரியான நடைமுறைகள் மேற்கொள்ளப்படுவதற்கும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் டெங்கு நோய் தடுப்புக் குழுவினால் கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன.

**துறைமுக வளவினுள் கட்டாக்காலி நாய்கள் மலடாக்கும் மற்றும் ஊசியேற்றும் வேலைத்திட்டம்**

கட்டாக்காலி நாய்கள் கடிப்பதன் காரணமாக ஏற்படக் கூடிய பாரிய பிரச்சினைகள் தடுப்பதற்கேற்றவாறு நாய்கள் மலடாக்கும் மற்றும் ஊசியேற்றும் வேலைத்திட்டம் இலவசமாக மேற்கொள்ளப்பட்டது.

இந்த வேலைத்திட்டமானது புளூ பவ் டிரஸ்ட் என்னும் இலாப நோக்கற்ற நிறுவனமொன்றின் உதவியாளர்கள் மற்றும் கொழும்பு மாநகர சபையுடன் இணைந்து 2012 நவம்பர் மாதம் 21 இருந்து 23 ஆந் திகதி வரையும் 26 இருந்து 30 ஆந் திகதி வரையும் நடாத்தப்பட்டது.

| | | |
|---|---|---|
| மொத்த ஊசியேற்றல்கள் | - | 208 |
| மொத்த மலடாக்கல்கள் | - | 39 |

**சமையலறை ஊழியர்களுக்கான வைத்திய பரிசோதனைகள்**

உணவு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்களுக்கான வைத்திய பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டது.

**எச் ஐ வீ மற்றும் எயிட்ஸ் நோய் தடுப்பு வேலைத்திட்டங்கள்**

ஊழியர்கள் அறிவூட்டப்படும் பொருட்டு சர்வதேச தொழிலாளர் அமைப்பின் உதவியோடு எச் ஐ வீ நோய் தடுப்பு வேலைத் திட்டங்கள் மஹபொல பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்பட்டன.

**சுகாதாரக் கல்வி வழங்கல்**

சுகாதார அமைச்சின் நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்ததாக தொற்றாத 69 நோய்களிலிருந்து தடுத்தல் தொடர்பிலான இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களுக்கான சுகதார நிகழ்ச்சித் திட்டம் மஹபொல பயிற்சி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**ஏனைய வசதிகள்**

பொதுவான X கதிர் மற்றும் ECG, பல் சம்பந்தப்பட்ட X கதிர் மற்றும் ஆய்வுகூட வசதிகள் போன்றவை வழமை போன்று வழங்கப்பட்டன.

தேவைப்படும் ஊழியர்களுக்கு காச நோய் நலன்புரி விடுமுறைகள் வழங்கப்பட்டன.

**பல் வைத்திய வசதிகள்**

பல் பிடுங்குதல், பற்களின் படிகைகள் நீக்குதல், நிரந்தர நிரப்புதல், பற்குழிகள் அடங்கலான ஏனைய பல் சம்பந்தப்பட்ட சிகிச்சைகள் போன்று வேறு பற்களுக்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டன.

**பகுதி கணனிமயமாக்குதல்**

தகவல் முறைமைப் பகுதியின் ஒத்துழைப்போடு பகுதி கணனிமயப்படுத்தல் நடைபெற்று வருகின்றது.

**எம் - 03 (மனிதர்கள், இயந்திரங்கள் மற்றும் பொருட்கள் பயன்படுத்துதல்)**

தலைவரின் ஆலோசனைக்கேற்ப வைத்திய பகுதியின் வளங்கள் பயன்படுத்துதல் உச்ச நிலையில் வழமை போன்று 70 பேணிச்செல்லப்பட்டது. வைத்திய கொள்வனவு செலவானது ரூபா 600,000 இருந்து ரூபா 450,000 வரை குறைக்கப்பட்டுள்ளது.

பகுதியின் நோக்கு மேற்கொண்டு பேணப்படுவதற்காக சகல வளங்கள் 70 சேவைகள் வசதிகள் தொடர்ச்சியாக உயர் நிலையில் பராமரித்து செல்லப்பட்டன.

## மஹபொல பயிற்சி நிலையம்

**பொது**

துறைமுக ஊழியர்கள், துறைமுக பாவனையாளர்கள் விசேடமாக கடலகத் துறையுடன் தொடர்புபட்டுள்ள ஏனையோருக்கும் பயிற்சிகளுக்கான சந்தர்ப்பங்களை வழங்குதல். பிரதான நோக்காகக் கொண்டுள்ள மஹபொல பயிற்சி நிலையம், இலங்கை துறைமுக அதிகாரசபையின் முக்கிய பிரிவாகும். பகுதி ஊழியர்களினது அறிவு, தேர்ச்சி மற்றும் உளப்பாங்கு விருத்தி செய்யும் நோக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்ட விரிவுரைகள், மாநாடுகள், பயிற்சிப் பட்டறைகள், செயன்முறை நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவற்றில் கவனம் செலுத்தப்பட்டு 2012 வருடாந்த பயிற்றுவித்தல் நாட்காட்டிற்கேற்ப நிகழ்ச்சித் திட்டங்கள் இந்த நிலையத்தினால் நடாத்தப்பட்டன. 2012 ஆண்டினுள் துறைமுக ஊழியர்களுக்கான உற்பத்தித்திறன், குழு உணர்வு மேம்பாடு, தொழில்நுட்ப தேர்ச்சி தரமுயர்த்துதல், வாடிக்கையாளர்களின் சேவை மற்றும் தர மேம்பாடு நோக்காகக் கொண்ட பல பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. ஊழியர்ளின் திறன் மட்டம் உயர்த்தப்படுவதற்கும் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளல் வரை துறைமுக ஊழியர்கள் தமது தேர்ச்சிகளை வளர்த்துக் கொள்வதற்காகவும் துறைமுக இயக்கங்களுக்குரிய தெரிவுசெய்யப்பட்ட சேவைகளில் விசேட அறிவு பெறுவதற்காகவும் மஹபொல பயிற்சி நிறுவனம் அமைப்பு ரீதியான வழிகளை ஏற்படுத்துகின்றது.

2012 ஆம் ஆண்டினுள் மஹபொல பயிற்சி நிலையத்தினால் 583,970 மனித மணித்தியாலங்கள் பயன்படுத்தப்படுதலின் ஊடாக சுமார் 6,857 பேர் (தொழிலில் ஈடுபட்டிருக்காத) பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். இது சென்ற ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் 32% வளர்ச்சியாகும். இதற்குப் புறம்பாக பல்கலைக்கழகங்களில் கல்வி பயில்வோர், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஏனைய சமனான தொழில் கல்வி நிறுவனங்களின் 193 பேருக்கு மஹபொல பயிற்சி நிலையத்தினால் தொழிலில் ஈடுபட்டிருக்கையில் பயிற்சி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

**2012 ஆண்டின் ஒட்டுமொத்த பயிற்சியளிப்பின் செயலாற்றுகை**

| துறைகள் | பயிற்றுவிக்கப்பட்ட தொகை | மொத்த மனித மணித்தியாலங்கள் |
|---|---|---|
| உபகரணங்கள் கையாளுதல் | 2,473 | 25,422 |
| சரக்குகள் கையாளுதல் | 223 | 807 |
| முகாமைத்துவம் | 1,435 | 393,249 |
| தகவல் முறைமை | 371 | 38,958 |
| தொழில்நுட்பம் | 415 | 82,349 |
| தீ காப்பு மற்றும் தொழில்சார் சுகாதாரம் | 1,004 | 13,080 |
| கடலகம் மற்றும் மாலுமி | 936 | 30,105 |
| தே.கை.ப. அதிகாரசபையின் பயிலுனர்கள், தொ.ப.அ மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகள் | 140 | 132,000 |
| பல்கலைக்கழக பட்டப் படிப்பு மேற்கொள்பவர்கள் | 53 | 31,500 |
| **மொத்தம் (சேவையிலீடுபட்டிருக்கையில்)** | **7,050** | **747,470** |
| **மொத்தம் (சேவையிலீடுபட்டிருக்காத)** | **6,857** | **583,970** |

**இலங்கை துறைமுக அதிகாரசபையில் பதவியுயர்வு பெறுதலின் புதிய நடைமுறையின் மீதான தகைமை பெற்றுக் கொள்ளலின் ஏற்பாடுகள்**

புதிய பதவியுர்வுக்கான அதிகாரசபையின் நிபந்தனைகளுக்கமைய இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களுக்குரிய அடிப்படை தகைமையான க.பொ.த (சா/தரம்) இல்லாத காரணத்தினால் பதவியுயர்வுகளுக்கான எதுவித எதிர்பார்ப்புமில்லாது ஒரே இடத்தில் துறைமுக ஊழியர்கள் பெருமளவில் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இந்நிலைமையினை தவிர்ப்பதற்கு தகைமைகள் அல்லாத அமைப்புரீதியான நிகழ்ச்சித் திட்ட வரிசை நிகழ்ச்சித் திட்டங்கள் மஹபொல பயிற்சி நிலையத்தினால் திட்டமிடப்பட்டுள்ளன. 2012 ஆண்டினுள் 67 அபேட்சகர்கள் தொடர்பில் அவ்வாறான இரண்டு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

மேலும் நிறைவேற்று அலுவலர்களின் பயன்பாட்டிற்கான மனிதவள முகாமைத்துவம் பற்றியதான டிப்ளோமா, ஆங்கில உயர் பாடநெறி மற்றும் துறைமுக பாதுகாப்பு பாடநெறி போன்றவை 2012 ஆண்டினுள் நடாத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக கடற்கல சுழியோடுபவர்களினது ஆற்றல்கள் மேம்படுத்தப்படுவதற்கான புதிய நிகழ்ச்சித் திட்டமொன்று விருத்தி செய்யப்பட்டது.

**ஒட்டுமொத்த துறைமுக உற்பத்தித் திறன் மேம்படுத்துதல்**

ஒட்டுமொத்த துறைமுக உற்பத்தித் திறன் மேம்படுத்தப்தடுதற்கான துறைமுக நடவடிக்கைகள் தொடர்பிலான பல்வேறு பயிற்சியளித்தல்களின் திறன் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மஹபொல பயிற்சி நிலையத்தினால் நடாத்தப்பட்டன.

- துறைமுக நிதி சார்ந்த விடயங்கள்
- கணக்காய்வு
- கொள்வனவு செய்தல் மற்றும் நிர்வாகம்
- இலிகிதர் திறன் விருத்தி செய்தல்
- மனிதவள முகாமைத்துவம்
- நன்நோக்கிலான எண்ணப்பாடுகள்
- சுகாதாரம் மற்றும் காப்புப் பிரிவுகள்
- மூலோபாய துறைமுக முகாமைத்தும்
- UNCTAD குழுவின் நவீன துறைமுக முகாமைத்துவம்

2012 ஆண்டினுள் 700 பேருக்கு இவ்வாறான 19 நிகழ்ச்சி திட்டங்கள் நடாத்தப்பட்டன. மேலும் கொள்கலன் முனையங்களிலிருக்கும் நபர்களினதும் அதனுள் அமைந்துள்ள உபகரணங்களின் பாதுகாப்பு மேம்படுத்துதல் தொடர்பில் 2,018 தனியார் லொறி வண்டி சாரதிகளுக்கு பாதுகாப்பு பற்றியதிலான 13 அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. கொள்கலன் ஏற்றி வரும் பிறைம்மூவர் வண்டிகள் திருப்பியனுப்பப்படும் காலம் குறைக்கப்படுதலிலும் முனைய செயற்பாடுகளின் பாதுகாப்பில் கவனம் அதிகரிக்கப்படுவதிலும் இந்நிகழ்ச்சித் திட்டங்கள் பேருதவி புரிந்தன.

**கப்பலோட்டத் துறைக்கான ஒத்துழைப்பு வழங்கல்**

கப்பலோட்டத் துறை தொடர்பான பயிற்சிப் பாடநெறிகள் வழங்கப்படுதலின் மூலம் மஹபொல பயிற்சி நிலையத்தினால் உலக கப்பலோட்டத் துறைக்கு குறிப்பிடத்தக்க ஒத்துழைப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆயிரக் கணக்காய்வுகளும் இலங்கை இளைஞர்களில் தொழில் அல்லாது செல்வாக்கற்றிருக்கும் அநேகமானவர்கள் இந்த வேலைத்திட்டம் ஊடாக சர்வதேச கப்பல் சேவைகளில் தொழில்களை எதிர்பார்த்துள்ளனர். 2012 ஆண்டினுள் 1,079 விண்ணப்பதாரர்களுக்கு அவ்வாறான 69 பாடநெறிகள் நடாத்தப்பட்டன.

**ISO 9001: 2008 சான்றிதழ்**

கப்பலோட்டிகளுக்கான **IMO/STCW** பயிற்சிப் பாடநெறி நடாத்தப்படுவதற்கான சிறந்த முகாமைத்துவத் தொகுதியான ISO 9001-2008 சான்றிதழ் இலங்கையின் பிரதான கல்வி நிறுவனமான மஹபொல பயிற்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. 2012 ஆண்டினுள் மூன்று முகாமைத்துவ மீளாய்வுகளும் நான்கு உள்ளக கணக்காய்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. நுகர்வோர் முறைப்பாடு நடைமுறை கையாளப்படுவது தொடர்பில் அவர்களுக்கு விசேடமான உரிய நடைமுறையொன்றினை மஹபொல பயிற்சி நிலையம் தன்னகத்தே கொண்டுள்ளது.

**நவீன தொழில்நுட்பம் பயன்படுத்துதல்**

மஹபொல பயிற்சி நிறுவனம் அதன் செயற்பாடுகளில் நவீன தொழில்நட்பம் அறிமுகப்படுத்தலின் மூலம் நிறுவனத்தில் நடைபெறும் பயிற்சிப் பாடநெறிகளின் தரத்தினை மேம்படுத்தியுள்ளது.

- புதிதாக நிறுவப்பட்டுள்ள மெகாறொனிக் விஞ்ஞானகூடம் பயன்படுத்துதலில் 47 அபேட்சகர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

- புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட HRIS தொகுதி பயனான முறையில் உபயோகப்படுத்துவதற்காக மனிதவளப் பகுதியின் 33 பேர் பயிற்றுவிக்கப்படுவதற்கு புதிய தரவுகள் அடிப்படையாகக் கொண்ட விருத்தித் தொகுதியான்று பயன்படுத்தப்பட்டது.

- துறைமுகத்தின் கன்ட்றி பாரம் தூக்கி கையாள்பவர்கள் பயிற்றப்படுவதற்காக கொள்கலன் மாதிரி எப்போதும் பயன்படுத்தப்படும்.

**பயன்படுத்தப்படக்கூடிய ஊழியர் படையணி**

எதிர்கால தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதற்கும் புதிதாக அபிவிருத்தி செய்யப்படும் துறைமுகங்கள் தொடர்பில் கடமையாற்றக் கூடிய திறனான ஆளணி குழாமொன்றை பேணிச் செல்லும் செயற்பாட்டில் மஹபொல பயிற்சி நிலையம் ஈடுபட்டுள்ளது. இப்பணிக்காக 2012 ஆண்டினுள் 260 துறைமுக இயந்திரங்கள் கையாள்பவர்களும் 08 நிறைவேற்றுத் தரத்தின் முகாமைத்துவ பயிலுனர்களும் பயிற்றுவிக்கப்பட்டனர். இதற்கு மேலதிகமாக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்\ துறைமுகம் தொடர்பில் பல்வித தேர்த்தி நுட்பவியலாளர்கள் பதவியில் 300 க்கு மேற்பட்ட இளம் நபர்கள் பயிற்றுவிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை மஹபொல பயிற்சி நிலையம் ஆரம்பித்துள்ளது.

**மொழிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பத் திறன் மேம்படுத்துதல்**

உலகளாவிய வர்த்தகங்களின் வாடிக்கையாளர்கள் திருப்திப்படுத்துவது முக்கிய விடயமென்பதால் அது தொடர்பில் இலங்கை துறைமுக அதிகாரசபை பிரதான இரண்டு கற்றல் முறைகள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளது. அதாவது நிறுவன ஊழியர்களினது மொழி ஆற்றலை விருத்தி செய்தல் மற்றும் வாடிக்கையாளர்களின் திருப்தி உயர் நிலைக்கு கொண்டு வரப்படும் பொருட்டு ஊழியர்களினது தகவல் தொழில்நுட்ப அறிவு விருத்தி செய்யப்படுவதன் ஊடாக இவர்களை வலுப்படுத்தலும் ஆகும். மஹபொல பயிற்சி நிலையம் இப்பணி வெற்றியடைதலில் உடந்தையாகவுள்ளதோடு அதற்காக 2012 ஆண்டினுள் பல்வேறு தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டங்களில் 350 ஊழியர்கள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர். மேலும் தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் தொடர்பில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன.

**கைத்தொழில் ஒத்துழைப்பு வழங்கல்**

அரச பல்கலைக்கழகங்கள், கைத்தொழில் கல்லூரிகள் மற்றும் தொழில்சார் பயிற்சி நிறுவன மாணவர்களினது கற்கை பாடநெறிகள் பூர்த்தி செய்து கொள்ளலில் கைத்தொழில் பயிற்சி பெற்றுக்கொடுக்கப்படுவதன் மூலம் ஒத்துழைப்பு வழங்கும் செயலில் இலங்கை துறைமுக அதிகாரசபை ஈடுபட்டுள்ளது. 2012 ஆண்டினுள் பல்வேறு பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பினை மேற்கொண்டுள்ள 53 பேருக்கும் 37 டிப்ளோமாதாரர்களுக்கும் 103 துறைசார்ந்த வல்லுனர்களுக்கும் அவர்களினது பயிற்சிகள் நிறைவு செய்து கொள்ளப்படுவதற்கான சந்தரப்பங்களை இலங்கை துறைமுக அதிகாரசபை வழங்கியுள்ளது.

**ஈட்டுப்பட்டுள்ள வருமானம்**

2012 ஆண்டு காலப்பகுதியினுள் மஹபொல பயிற்சி நிலையத்தின் வெளி நபர்களுக்காக நிதி அறவிடப்படும் பாடநெறிகளினால் இலங்கை துறைமுக அதிகாரசபை ரூபா 18,617,950/= வருமானம் ஈட்டியுள்ளது. ஒட்டு மொத்த கொள்கலன் செயற்றிறன் தொடர்பில் துறைமுக ஊழியர்களுக்கான அறிவூட்டல் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதலின் ஊடாக ரூபா 10,767,549/= இலங்கை துறைமுக அதிகாரசபையின் பல்வேறு பிரிவுகளினால் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. எனவே மஹபொல பயிற்சி நிலையத்தினால் 2012 ஆண்டில் ரூபா 29,385,499/= மொத்த வருமானம் கிடைக்கப்பெற்றது.

இதற்கு மேலதிகமாக கடல்சார் பயிற்சி நிலையத்தினால் (ஒலுவில்) ரூபா 96,134/= வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

2012 ஆண்டினுள் மஹபொல பயிற்சி நிறுவனம், ஒலுவில் கடல்சார் பயிற்சி நிறுவனங்களில் நடாத்தப்பட்ட பாடநெறிகளுக்கான மொத்த செலவீனம் ரூபா 7,115,501/= ஆகும்.

## உள்ளக கணக்காய்வு

உள்ளக கணக்காய்வுப் பகுதியின் செயற்பாடுகள் வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வழிகாட்டப்பட்டு மேற்கொள்ளப்பட்ட இதனை கணக்காய்வு குழு பரிந்துரைத்து பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருமானம் மற்றும் செலவின விடயங்களுக்கமைய உள்ளக பரிசோதனைகள், வழமையான உள்ளக கணக்காய்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

**உள்ளக பரிசோதனைகள்**

**வருகை**

தொழிலாளர் மற்றும் தொழிலாளர் தரத்திலல்லாத ஊழியர்கள் சேவை நிலையத்தில் பிரசன்னமாக இருப்பது தொடர்பில் திடீர் பரிசோதனைகள் அவசர சுற்றிவளைப்புக் குழுவினால் இரவு / பகல் வேலைமுறைகளில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. கடமை நேரத்தில் அனுமதியின்றி சேவை நிலையத்தை விட்டுச் சென்ற ஊழியர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன ஊழியர்கள் சிறந்த முறையில் தமது சேவை நிலையங்களுக்கு வருகை தரல் இதன் பயனாக நடைபெற்ற செயலாகும் .

**நிதி**

காசு மற்றும் கட்டு நிதி தொடர்பில் அடிக்கடி அவசர பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு குறைபாடுகள் அறிவிக்கப்பட்டன.

**வருமான கணக்காய்வு**

கணக்காய்வு வேலைத்திட்டத்திற்கமைய ஆண்டிற்கான வருமான ஒன்றுசேர்த்தல்கள் தொடர்பில் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. விசேட ஒப்படை அலுவல்களின் மூலம் துறைமுக கட்டணங்கள் குறைவாக அறவிடப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

கடன்பட்டோர் கணக்குகள், பிணக்கிற்குரிய சிட்டைகள் மற்றும் காலாவதியான காசோலைகள் பரிசோதிக்கப்பட்டு அவைகளின் வித்தியாசங்கள் அறிவிக்கப்பட்டன. கட்டுநாயக்க, பியகம தரையிறக்கல் மற்றும் கையளித்தல் பிரிவுகளிலும் பரிசோதனைகள் இடைவிடாது மேற்கொள்ளப்பட்டன.

**செலவினக் கணக்காய்வு**

மூலதன மற்றும் மீண்டு வரும் செலவினங்களும் களஞ்சிய வவுச்சர்கள் தொடர்பிலும் ஆய்வு பரீட்சிப்புக்கள் செய்யப்பட்டன. வாகன ஓட்டக் குறிப்புப் படிவங்களும் வாகன அங்கீகாரம் வழங்கப்பட்டஅனுமதிப்பத்திரங்களும் பரீட்சிக்கப்பட்டு குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன. சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் தொடர்பான தயாரித்தல்கள் தொடர்ச்சியாக கவனிக்கப்பட்டு கண்டறியப்பட்ட வித்தியாசங்கள் அறிக்கை செய்யப்பட்டன.

**களஞ்சியங்கள் பற்றியதான பௌதீக ரீதியான உறுதிப்பாடுகள் பரீட்சித்தல்**

கொழும்புத் துறைமுகத்தின் களஞ்சியங்கள் பற்றியதிலான பௌதீகரீதியான உறுதிப்பாடுகளின் பரீட்சித்தல்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு காலி,திருகோணமலை போன்ற துறைமுகங்களினது வருடாந்த இருப்பு பரீட்சித்தல்களின் போதும் ஒத்தாசை வழங்கப்பட்டது.

பிரதான களஞ்சியங்களின் தொடர்ச்சியான உறுதிப்பாடுகள் பரீட்சிக்கப்படுகையில் களஞ்சியங்களில் இருக்கும் அடிக்கடி தேவைப்படாத பொருட்கள் அடையாளங் காணப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக வழங்கல் பகுதியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

**பரிசோதனைகள்**

தலைவர் / முகாமைப் பணிப்பாளரின் வேண்டுகோளிற்கிணங்க ஆண்டினுள் விசேட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

**இறுதிக் கணக்குகள்**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் இறுதிக் கணக்குகளுக்கான நிதிக் கூற்றுக்கள், இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரிக்கப்படுகின்றதென்பதனை உறுதிப்படுத்துதல் இப்பகுதியின் இன்னுமோர் பொறுப்பாகும்.

**முன் கணக்காய்வு**

வைப்புக்களை மீளசெலுத்துதல் மற்றும் துறைமுக கட்டணங்களை கைவிடுதல் தொடர்பில் மீளாய்வாண்டினுள் முன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

**காலி மற்றும் திருகோணமலைத் துறைமுகங்கள்**

**காலி** மற்றும் திருகோணமலை துறைமுகங்களுக்கான வருமான மற்றும் செலவினம் ஆகிய இரு பிரிவுகளினது கணக்குகளின் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

## திருகோணமலைத் துறைமுகம்

**கப்பலோட்டம் (கலங்கள்)**

04 இழுவைக் கலங்கள், 04 நங்கூரக் கலங்களும் ஒரு டனக் கலமும் துறைமுகத்திற்குச் சொந்தமாக உள்ளன. இவற்றில் 05 கலங்கள் இயக்க நடவடிக்கைளில் ஈடுபடாது ரீ ரீ ஏ மற்றும் மட்கோவ் துறைமேடைகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. சேருவில 11 பயணிகள் கலமும் பிரதான பராமரிப்புக்காக ரீ. ரீ. எ துறைமேடையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**பாதுகாப்பு பிரிவு**

**(தீ அணைக்கும் நிகழ்ச்சித் திட்டம்)**

முன்னர் போன்று தீ அணைக்கும் வேலைத்திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தும் விரிவுரைகள் கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த அலுவலர்களினால் நடாத்தப்பட்டன.

**பொறியியல் பகுதியினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள்**

**சிவில்**

- ரீ.ரீ.ஏ இல் சுங்கக் கட்டிடத் தொகுதியின் நிர்மாணிப்பு மேற்கொள்ளப்பட்டது.
- இலங்கை கடற்படையின் அலுவலகம் புதுப்பிக்கப்பட்டதோடு CB 2 (பிரதி ஹாபர் மாஸ்டர் உத்தியோகபூர்வ இல்லம்) புதுப்பிக்கப்பட்டு வருகிறது. இது 2013 ஆண்டில் நிறைவு செய்யப்படும்.

- அஸ்ரப் துறைமேடை, றய்பல் கிறீன் உத்தியோகபூர்வ இல்லம், தானியகம் G10 உத்தியோகபூர்வ விடுதி, உவர்மலையின் CB 1 (Vip), விடுதி, ஜப்பான் விடுதி மற்றும் படகுத் தளத்தின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- அளிக்கப்பட்ட அளவுகளின் அறிக்கைக்கேற்ப இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய காணிகளின் வரையறைகள் அடையாளமிடும் பணிகள் வழங்கப்பட்ட அளவுத்திட்டங்களுக்கேற்ப செய்யப்பட்டன.

**இயந்திர பொறியியல்**

- ரோஸா பஸ், பிக்அப் வண்டி (GC - 9429) லேலன்ட், 35 வொட் கொண்ட மின் பிறப்பாக்கி போன்றவற்றின் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. UD நிசான் பேரூந்தின் என்ஜின் பழுதுபார்த்தல் பணிகள் கொழும்பு டீசல் வேலைகள் தொழிற்சாலையில் செய்யப்பட்டு அதன் பின்னர் பழுதுபார்த்தல் பணிகள் திருகோணமலை இயந்திர பொறியியல் பிரிவில் மேற்கொள்ளப்பட்டன.
- நீர் வத்தை 11, நங்கூரக் கலங்கள், வழிகாட்டி கலம் III, மிதப்பிகள் போன்றவற்றின் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டு கொழும்பு கடலகக் குழுவினால் என்ஜின் புதுப்பிக்கப்பட்டதன் பின்னர் வழிகாட்டி கலம் V இன் வர்ணம் பூசும் வேலைகள் செய்யப்பட்டன.
- அஸ்ரப் துறைமேடையில் இறப்பர் டயர்களினால் செய்யப்பட்ட மோதல் தடுப்புகள் மீள் பொருத்தப்பட்டன. மட்கோவில் டீசல் முனையத்தின் எண்ணெய்த் தாங்கிகள் மற்றும் குழாய் வழிகள் பழுதுபார்க்கப்பட்டன. ரீ.ரீ.ஏ இலங்கை கடற்படையின் அலுவலகத்தினதும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சுங்கக் கட்டிடத்தினதும் மின்சாரக் கம்பி இணைத்தல் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன.

## காலித் துறைமுகம்

| வகை | கப்பல்களின் எண்ணிக்கை | இறக்குதல் மெ.தொன் | ஏற்றுதல் மெ.தொன் |
|---|---|---|---|
| கிளின்கர் | 35 | 322,114 | |
| சிமெந்து மொத்தம் | 10 | 82,487 | |
| சிமெந்து பொதி | 01 | 2,010 | |
| ஜிப்சம் | 02 | 14,400 | |
| பொதுவான கப்பற் சரக்குகள் | 02 | 652 | |
| மீள் ஏற்றுமதி கப்பற் சரக்குகள் | 03 | 02 | 08 |
| **மொத்தம்** | **53** | **421,665** | **08** |

| | |
|---|---|
| கையாளப்பட்ட மொத்த தொன் அளவு | 421,673 |
| மொத்த கப்பற் சரக்குகள் கப்பல்கள் | 53 |
| பயணிகள், கப்பலோட்டம்,எண்ணெய் பெறுதல்,பழுது பார்ப்புகள் போன்றவை | 85 |
| 2012 ஆண்டில் நங்கூரமிடப்பட்ட மொத்த கப்பல்களின் எண்ணிக்கை | 138 |
| நங்கூரமிடல்கள் | 71 |
| துறைமுக எல்லைக்கு வெளியே கப்பல்கள் | 9,634 |
| உல்லாச படகுகள் | 143 |

# நிதி மீளாய்வு

**வருமானம் (சகல து றைமுகங்களினதும்)**

(துறைமுக விடயங்கள் வெவ்வேறாக)

(ரூபா.மில்)

| விபரம் | 2012 | 2011 மீள் குறி. பட். | விபரம் | 2012 | 2011 மீள் குறி. பட். |
|---|---|---|---|---|---|
| துறைமுக செயற்பாடுகளிலிருந்து வருமானம் | 32,354 | 27,525 | கப்பலோட்டம் | 4,860 | 4,095 |
| ஏனைய வருமானம் | 5,744 | 3,561 | கப்பல் சுமை | 19,433 | 16,625 |
| | | | வாப்பு கையாளல் | 3,634 | 3,273 |
| | | | துறைமுக வசதிகள் | 3,682 | 2,761 |
| | | | ஏனைய சேவைகள் இயக்கம் | 746 | 770 |
| **மொத்த வருமானம்** | **38,098** | **31,086** | உப மொத்த | **32,354** | **27,525** |

**இயக்க மற்றும் ஏனைய செலவினங்கள் (சகல துறைமுகங்களினதும்)**

| விபரம் | 2012 செலவினம் | 2011 செலவினம் | (அதிகரித்தல்)/ குறைதல் | % |
|---|---|---|---|---|
| அளவு தள்ளுபடிகளுக்கு செலுத்துதல் | 1,466 | 1,123 | (343) | (31) |
| சொத்துக்களை பராமரித்தல் | 1,274 | 1,367 | 93 | 7 |
| எரிபொருள், மின்சாரம், தண்ணீர் | 2,103 | 2,028 | (76) | (4) |
| வெளிநாட்டு கடன் மீதான வட்டி | 1,710 | 1,372 | (338) | (25) |
| மேலதிக நேரம் | 3,260 | 3,177 | (83) | (3) |
| தீர்மானம் | 5,196 | 4,345 | (851) | (20) |
| சம்பளங்கள் வேதனங்கள் மற்றும் படிகள் | 10,521 | 9,616 | (905) | (9) |
| ஏனையவை | 2,189 | 1,816 | (373) | (21) |
| **மொத்த செலவினம்** | **27,719** | **24,844** | **(2,875)** | **(12)** |
| வெளிநாட்டு நாணய இலாபம் / நட்டம் | 4,567 | 3,390 | (1,177) | (35) |
| சு.வி.மீது ஓய்வு பெறும் திட்டத்தின் மீதான செலவுகள் | 600 | 2,595 | 1,994 | 77 |
| **அந்நிய செலாவணி நட்டம் உட்பட மொத்தச் செலவினம்** | **32,886** | **30,829** | **(2,057)** | **(7)** |

## *துறைமுகங்களுக்கேற்ப செயலாற்றுகை*

### கொழும்பு துறைமுகம்

2012 ஆண்டில் கொழும்பு துறைமுகத்தினால் ரூபா 5,499 மில்லியன் கையாளல் இலாபம் வரி அறவிடப்படுவதற்கு முன் ஈட்டப்பட்டுள்ளது. 2011 ஆண்டின் வருமானமான ரூபா 30,360 மில்லியனுடன் 2012 ஆண்டின் வருமானம் ஒப்பிடப்படுகையில் ரூபா 37,077 மில்லியனாக இருந்ததோடு அதுவானது ரூபா 6,717 மில்லியன் அதிகரிப்பாகும். வரி அறவிடப்படுவதற்கு முன் மொத்த செலவினம் (சுயவிருப்பில் ஓய்வு பெறுதல் அடங்கலாக) ரூபா 29,302 மில்லியனாக இருந்ததோடு 2011 ஆண்டின் (மீள் குறிப்பிடப்பட்ட) செலவினம் ரூபா 31,578 மில்லியன் ஆகும். இது 8% அதிகரிப்பாகும்.




### காலி துறைமுகம்

2012 ஆண்டில் காலி துறைமுகத்தின் வரிகளுக்கு முன்னரான நட்டம் ரூபா 48 மில்லியனாக அறிக்கை செய்யப்பட்டிருந்தது. 2011 ஆண்டின் மொத்த வருமானமான ரூபா 441 மில்லியனுடன் ஒப்பிடப்படுகையில் 2012 ஆண்டின் மொத்த வருமானம் ரூபா 597 மில்லியனாகும். இதுவானது (மீள் குறிப்பிடப்படும்) ரூபா 156 மில்லியன் அதிகரிப்பாகும். வரிகளுக்கு முன்னரான செலவினம் (சுயவிருப்பில் ஓய்வு பெறுதல் உள்ளடங்கலாக) ரூபா 645 மில்லியன் ஆகும். 2011 ஆண்டில் (மீள் குறிப்பிடப்படும்) செலவினம் ரூபா 699 மில்லியனாக இருந்தது. இது 8% வீழ்ச்சியாகும்.



## திருகோணமலை துறைமுகம்

2012 ஆண்டில் ரூபா 240 மில்லியன் வரி அறவிடப்படுவதற்கு முன்னரான நட்டம் திருகோணமலை துறைமுகத்தில் பதிவாகி இருந்தது. 2011 ஆண்டில் கிடைக்கப்பெற்ற ரூபா 285 மில்லியனுடன் ஒப்பிடப்படுகையில் 2012 ஆண்டில் ரூபா 423 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டதோடு அதுவானது ரூபா 138 மில்லியன் அதிகரிப்பாகும். வரி அறவிடப்படுவதற்கு முன்னரான செலவினம் (சுயவிருப்பில் ஓய்வு பெறுதல் அடங்கலாக) ரூபா 663 மில்லியனாக இருந்ததோடு 2011 ஆண்டின் செலவினம் ரூபா 828 மில்லியன் ஆகும். இது 20% வீழ்ச்சியாகும்.



மீளாய்விற்குட்படும் ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஒன்றிணைந்த சமூகப் பொறுப்புக்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

- க.பொ.த (சா/த) மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சைகளில் மிகவும் சிறந்த முறையில் சித்தி பெற்ற துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

- துறைமுக ஊழியர்களின் சிறார்களின் நலன்புரி தொடர்பிலான பூரண வசதி கொண்ட சிறுவர் பராமரிப்பு நிலையம் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

- நிலவும் துறைமுக வசதிகள் மற்றும் செயற்பாடுகள் போன்று இலங்கை துறைமுக அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் சிறந்த முறையில் அறிந்துகொள்ளும் பொருட்டு "தேசத்துக்கு மகுடம்" தேசிய கண்காட்சி" உட்பட பல கண்காட்சிகளில் இலங்கை துறைமுக அதிகாரசபை பங்கேற்றது.

- சகல வசதிகளையும் கொண்ட துறைமுக தீயணைப்புப் படை அதன் பணிகளில் கொழும்பு நகர சபைக்கும் கொழும்பு மற்றும் அண்டிய பகுதிகளிலும் ஏனைய அவசர சந்தர்ப்பங்களிலும் தனது ஒத்துழைப்பை நல்கியது.

- முல்லேரியாவிலுள்ள மனநோயாளர் வைத்தியசலையின் இலக்கம் 09 நோயாளர் விடுதி, இலங்கை துறைமுக அதிகார சபையினால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மனநோயாளர்களின் தேவைப்பாடுகள் பெற்றுக் கொடுக்கப்படுதலுக்கு மேலதிகமாக மாதத்திற்கு ஒரு முறை அங்கு விஜயம் செய்து அவர்களின் நலன் விசாரிக்கப்பட்டு அன்னதானமும் வழங்கப்படுகின்றது.

நிறுவனமொன்றினது ஊழியர்கள் அதன் உயிர்நாடியாகும் ஒவ்வொரு ஊழியரும் தமது சேவைக்காலத்தினுள் அனுபவம், வெளிப்படையான தன்மை, பயிற்சி ஆகியவற்றின் ஊடாக சில தேர்ச்சிகளைப் பெற்றுக் கொள்வதோடு இறுதியில் அதன் மூலம் நிறுவனத்திற்கு கிடைக்கக்கூடிய நன்மைகள் அதிகரிக்கும். மனித மூலதனம் என்பது ஊழியர்கள் குறிப்பிட்ட சேவைக்காலப் பகுதியினுள் விருத்தி செய்து கொள்ளும் அறிவு, நிபுணத்துவம் மற்றும் நிறுவனத்தின் உற்பத்தித் திறன் மேலும் அதிகரித்துக்கொள்ளல் ஆகும். நிறுவனமொன்றின் உற்பத்தித் திறன் அதிகரிப்படுவதற்கும் சிறந்த பெறுபேறு பெறப்படுவதற்கும் மனித் மூலதனம் முக்கிய பங்கு வகிப்பதனால் எந்தவொரு நிறுவனமும் தனது புதிய ஊழியர்கள் பயிற்றுவிக்கப்படுவதற்காக நிதி மற்றும் வளங்களில் முதலீடு செய்கின்றது.

ஊழியர்களினது தேர்ச்சி, அறிவு மற்றும் உளப்பாங்கு விருத்தி செய்யப்படுதலில் மனித வளப் பகுதி, மஹபொல பயிற்சி நிறுவகம், நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் பகுதிகள் ரேடியாக தொடர்புபடுகின்றன.

நிறைவேற்று/ நிறைவேற்று அல்லாத அலுவலர்கள், தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பம் சாராத பிரிவினர் அடங்கலாக 2012 ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 10,200 ஆகும். இவர்களில் 42 பேர் பட்டப் பின்படிப்பு பட்டதாரிகளாவர். அத்தோடு 36 பேர் பட்டப் பின்படிப்பு டிப்ளோமாதாரிகளாவர். 436 பேர் பட்டதாரிகளாகவும் இருப்பதோடு 325 பேர் டிப்ளோமாதாரிகள் ஆவர்.

ஊழியர்களினது மனித முலதனம் நன்கு புரியப்பட்டு மஹபொல பயிற்சி நிறுவகம் மற்றும் ஏனைய வெளி அமைப்புக்களினது ஒத்துழைப்போடு மனிதவளப் பகுதியினால் உயர் நிலையிலான பயிற்றுவித்தல்கள் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் அறிவு மைய நிலையமான மஹபொல பயிற்சி நிறுவனத்தினால் இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களினது மனித மூலதனம் மேம்படுத்தலிலான விரிவுரைகள், மாநாடுகள், பயிற்சிப் பட்டறைகள், மற்றும் செயல்முறை பயிற்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

கொள்கை விதிகள், சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் போன்ற நடவடிக்கைகளுக்குத் தேவையான பூர்வாங்க் பின்னணித் தகவல்கள் வழங்கப்படும் பொருட்டு புத்தூக்கம் மற்றும் தக்கவாறு ஒழுங்குபடுத்தலிலான வேலைத்திட்டங்கள் ஊழியர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன,. செயலாற்றுகை மதிப்பிடப்படுதல் என்பது ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள காரணிகள் மற்றும் நிறுவனத்தின் நோக்கங்கள் தொடர்பில் ஒவ்வொரு ஊழியர்களினது செயலாற்றுகை மற்றும் உற்பத்தித்திறன் மதிப்பிடப்படும் முறையானதும் காலத்திற்குக் காலம் நடைமுறைப்படுத்தப்படும் செயற்படாகும். தற்போது கடமையாற்றும் ஊழியர்களினது குறைபாடுகள் மற்றும் ஆற்றல்கள் அடையாளம் காணும் செயலாற்றுகை மதிப்பீட்டு பெறுபேறுகள் மிகவும் முக்கிய காரணியாகும். கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டவாறு 2012 ஆண்டிலும் இருமுறை செயலாற்றுகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. இலங்கை துறைமுக அதிகாரசபையின் நோக்கங்களை அடையும் வகையில் குறைபாடுகள் குறைக்கபடுவதற்கும் ஆற்றல்கள் விருத்திசெய்யப்படுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளல் முக்கியமானதாகும்.

நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத தரங்களுக்காக புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையானது ஊழியர்களின் அறிவு மற்றும் தொழில் விருத்தி தேர்ச்சிகள் மேம்படுத்தப்படுவதற்கு உதவக் கூடியதாக இருக்கும். இருக்கும் தொழில்சார் கொடுப்பனவு முறையானது ஊழியர்கள் உயர் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் ஏற்படுத்திக் கொள்ளலுக்கான தூண்டுதலை உண்டாக்கும். மேலும் நிறைவேற்று அலுவலர்களினது தொழில்களுடன் சம்பந்தப்படின் அவர்களினது அங்கத்துவம் தொடர்பில் செலுத்தப்படும் கட்டணங்களை மீள ஈடுசெய்து கொள்ளலாம். நடாத்தப்படும் பயிற்சிப் பட்டறைகள் பகிர்ந்து கொள்ளப்படுவதற்கும் பயன்மிகுந்த முறையில் நிறுவனத்தின் நோக்கங்களை அடைவதற்கும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு துணை புரியும்.

ஊழியர்களுக்கு தமது அறிவு, தேர்ச்சி மற்றும் உளப்பாங்கு மேம்படுத்தப்படுதல் இலகுவாக்கப்படும் பொருட்டு பகுதிகளினால் நடாத்திச் செல்லப்படும் நூலகங்களுக்கான புத்தகங்கள் கொள்வனவு தொடர்பில் நிதி வழங்கப்பட்டுள்ளது. 2012 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் 18 நூலகங்களுக்காக ரூபா 300,000 வழங்கப்பட்டது.

மனிதவள முகாமைத்துவ தொகுதியானது ஊழியர்களுக்கு அன்றாட நடவடிக்கைகள் இலகுவாக மேற்கொள்வதற்கு உதவுகின்றது. ஊழியர்களின் கணனி அறிவு மேம்படுத்தப்படும் வகையில் மஹபொல பயிற்சி நிறுவகத்தின் உதவியோடு தரவு அடிப்படையிலான முகாமைத்துவ வேலைத்திட்டம் 2012 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சி மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக தமது அறிவு,தேர்ச்சி, உளப்பாங்கு விருத்தி செய்யப்படும் பொருட்டு ஊழியர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வெளி நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இறுதியாக இந்த அனைத்து நடவடிக்கைகளும் நிறுவனத்தின் உற்பத்தித் திறன் விருத்தி செய்யப்படுதலில் துணை புரியும்.

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் பயன்படுத்தப்படும் நிதிசார் ஆவணங்களின் மூலம் பின்வரும் இடர்நேர் நிலைகள் வெளிப்படுத்தப்பட்டன.

1. கடன் இடர்பாடு
2. ஒப்புரவு இடர்பாடு
3. சந்தை இடர்பாடு (நிதி மற்றும் வட்டி விகித இடர்நேர்)

அதிகாரசபையின் நிதிசார் ஆவணங்கள், வர்த்தகப் பொருட்களின் முதலீடுகள் (ஆவண மற்றும் ஆவணப்படுத்தப்படாத), கடன்முறிகளின் மீதான முதலீடுகள், காலத்திற்கேற்ப வைப்புக்கள், நிதிசார் சந்தைகளிலான முதலீடுகள் மற்றும் நிதிகளைக் கொண்டிருக்கும். காலத்திற்கேற்ப வைப்புக்கள், நிதிசார் சந்தைகளிலான முதலீடுகளின் பிரதான நோக்கம் இயக்கங்களுக்கான ஒப்புரவினை அதிகரித்தலும் பேணிச் செலவதும் ஆகும். வர்த்தகப் பொருட்கள் மற்றும் கடன்முறி காப்புறுதிகளிலான முதலீடுகள் மூலோபாய முதலீடுகளாக இருப்பதோடு வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப்பெறுதல்கள் போன்ற வேறு நிதிசார் ஆவணங்களும் அதன் வியாபார நடவடிக்கைகளின் போது நேரடியாக எழும் வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவையும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் வசமுள்ளன.மேலும் துறைமுக விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்காக இலங்கை அரசாங்கத்திடமிருந்தும் நிதி நிறுவனங்களிடமிருந்தும் பெறப்பட்டுள்ள கடன்களுக்கான வட்டி செலுத்துதல் இலங்கை துறைமுக அதிகாரசபையினைச் சார்ந்ததாகும்.

## 1. கடன் இடர்பாடு

இலங்கைப் படைகள், ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் முதலீட்டுக் காப்புறுதிகள் உள்ளடங்கலாக வாடிக்கையாளர்களுக்கு உடன்பாடுகள் மீதான பிணைப்புகள் நிறைவேற்றப்பட முடியாமையின் மீது அதிகாரசபைக்கு ஏற்படும் நிதிசார் நஷ்டம் நிதி இடர்பாடாகும்.

### வியாபார கிடைக்கப்பெறுதல்கள்

இலங்கை துறைமுக அதிகாரசபையானது கப்பல் முகவர்கள் மற்றும் அரச நிறுவனங்களோடு பிரதானமாக வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. சென்ற கால அனுபவமும் கப்பல் முகவர்களினது நிதி சார்ந்த சான்றுறுதி போன்ற ஏனைய நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு கப்பல் முகவர்களின் கடன் நிலை தொடர்பில் முகாமைத்துவம் மதிப்பிடுகின்றது. இதற்குப் புறம்பாக முகாமைத்துவ குழுவிலும் பணிப்பாளர் சபை கூட்டத்திலும் இருக்கும் அடிப்படையின் மீது செலுத்துவதற்குள்ள நிலுவைகள் மேற்பார்வை செய்யப்படுகின்றன.

விசேடமில்லாத வாடிக்கையாளர்களுக்கான ஒட்டுமொத்த பாதிப்பேற்படுத்துதல்களுக்கான (நிதிசார் கூற்றுக்களின் 2.11 விபரத்தைப் பார்க்கவும்.) நஷ்டங்கள், விசேட வாடிக்கையாளர்களுக்கு வெவ்வேறாக மதிப்பிடப்படுதலில் அவர்களுக்கு தனியாக ஏற்படும் பாதிப்புகளுக்கான நஷ்டங்கள் இந்த ஏற்பாடுகளின் அடிப்படைக் காரணிகளாகும். ஒட்டுமொத்த பாதிப்புகளினால் ஏற்படும் நஷ்டங்கள் செலுத்துதல் முறையின் வரலாற்று தரவுகளைக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றன. ஏற்படுத்தப்பட்ட பாதிப்பேற்படுத்தும் கொள்கைக்கேற்ப பாதிப்பேற்படுத்தும் நஷ்டங்கள் அளவீடு செய்யும் பொருட்டு இலங்கைப் படைகள், ஏனைய அரச நிறுவனங்கள் வழக்கு நடவடிக்கைகளுக்கு உட்பட்ட கப்பல் முகவர்கள் மற்றும் விசேட கப்பல் முகவர்கள் தனிப்பட்ட வகையில் கலந்தாலோசித்தனர். ஏனையோர் ஒட்டுமொத்தமாக கலந்தாலோசித்தனர். வியாபார கிடைக்கப்பெற வேண்டியவை மற்றும் பாதிப்பேற்படுத்தும் நஷ்டங்களுக்கான ஏற்பாடுகளின் விபரங்களுக்கு தயவு செய்து நிதிசார் கூற்றுக்களின் 12 குறிப்பைப் பார்க்கவும்.

### ஏனைய நிதிசார் சொத்துக்கள்

காலத்திற்கேற்ற வைப்பு நிதி, காசு,காசு சம மதிப்புக்கள் மற்றும் கடன் முறிகளின் மூலதன முதலீடுகளினால் அதிகாரசபையின் ஏனைய நிதிசார் சொத்துக்களிலிருந்து எழும் கடன் இடர்பாட்டினுள் அடங்கும். இந்த நிதிசார் ஆவணங்களில் முன்கொண்டு வரும் நிதிக்குச் சமனான உச்ச வெளிப்பாட்டுடன் தரப்பினர்களினது உடன்பாடுகளின் புறக்கணித்தலின் மீது எழும் கடன்

இடர்நேர் நிலைமையினை அதிகாரசபை வெளிப்படுத்துகின்றது. அரச நிதி நிறுவனங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுடன் பிரதானமாக அதில் நிதி ஈடுபடுத்தலின் மூலம் இந்த நிதிசார் ஆவணங்கள் தொடர்பில் அதிகாரசபை அதன் கடன் இடர்நேர் நிலைமையினை முகாமைத்துவம் செய்கின்றது.

## 2. ஒப்புரவு இடர்பாடு

அதிகாரசபைக்குரிய நிதிசார் பொறுப்புக்களை நிறைவேற்றும் ஆற்றல் இல்லாமல் போகுதல் ஒப்புரவு இடர்பாடு எனப்படும் பொதுவான மற்றும் எதிர்பாராத சந்தர்ப்பங்களில் பொறுப்பேற்க முடியாத நஷ்டம் எதிர்நோக்காமல் அல்லது அதிகாரசபையின் புகழ் நாமத்திற்கு பாதிப்பேற்படுத்தாத முறையில் கவனம் எடுக்க முடியுமான சகல சந்தர்ப்பங்களிலும் உரிய நேரத்தில் நிதி செலுத்தப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் செலுத்தப்படுவதற்கு போதுமானளவு நிதி வைத்திருத்தல் அதிகாரசபையின் ஒப்புரவு முகாமைத்துவம் செய்யும் முறையாகும்.

வருடந்தோறும் இயக்க காசுப் பாய்ச்சல் மற்றும்( மீண்டு வரும்/ வரவு செலவு) மூலதன வரவு செலவுகளின் முன்மொழிவுகள் தயார் செய்யப்படுகின்றன. இயக்க தேவைப்பாடுகளுக்குப் போதுமான நிதி அதிகாரசபையில் உள்ளதென்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு மீண்டு வரும் வரவு செலவு மற்றும் மூலதனம் ஆகிய இரண்டும் ஒப்புரவு தேவைப்பாடுகளும் நிதிப் பகுதியினால் கண்காணிக்கப்படுகின்றது. அறிக்கைகள் தயாரிக்கப்படும் காலப்பகுதியின் இறுதியில் ரூபா 8,449,746,162 (2011 : ரூபா 8,358,716,838) விற்கு அதிகாரசபையினால் காலத்திற்கேற்ற வைப்புக்கள், குறுகிய கால அரசாங்க பிணைமுறிகள் மற்றும் ஏனைய ஒப்புரவு சொத்துக்கள் பேணப்பட்டு வந்தன.

உடன்பாடுகளின்படி முதிர்வடையும் திகதியில் அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் இறுதி நாளின் கால எல்லை அடிப்படையாகக் கொண்ட அதிகாரசபையின் நிதிசார் பொறுப்புக்களினது முதிர்ந்த பகுப்பாய்வுகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன. கழிவு கிடைக்கப்பெறாத உடன்பாட்டின் மீதான காசுப் பாய்ச்சல்கள் அட்டவணையின் பெறுமானங்களில் தெரிவிக்கப்படுகின்றன.

| நிதிசார் பொறுப்புக்கள் | 2012 டிசெம்பர் 31 | | | 2011 டிசெம்பர் 31 | | |
|---|---|---|---|---|---|---|
| | வருடத்திற்குக் குறைந்த | வருடத்திற்குக் கூடிய | மொத்தம் | வருடத்திற்குக் குறைந்த | வருடத்திற்குக் குறைந்த | மொத்தம் |
| கடன் பெறுதலகள் - அரசாங்கம் | 6,477,929,305 | 134,887,281,927 | 141,365,211,232 | 4,932,194,888 | 111,904,320,057 | 116,836,514,945 |
| கடன் பெறுதல்கள் - நிதி நிறுவனங்கள் | 1,610,566,021 | 3,825,094,300 | 5,435,660,321 | 1,436,281,824 | 4,847,451,155 | 6,283,732,978 |
| வர்த்தக மற்றும் ஏனைய கடன் உரிமையாளர்கள் | 1,161,128,806 | - | 1,161,128,806 | 733,071,211 | - | 733,071,211 |
| **மொத்தம்** | **9,249,624,132** | **138,712,376,227** | **147,962,000,359** | **7,101,547,923** | **116,751,771,212** | **123,853,319,134** |

## 3. சந்தை இடர்பாடு

அதிகாரசபையின் வருமானத்திற்கு அல்லது நிதிசார் ஆவணங்களில் கொண்டு வரப்பட்ட தடுத்து வைக்கப்பட்டுள்ள பெறுமானத்திற்கு தாக்கமேற்படுத்தும் வெளிநாட்டு பரிமாற்ற விகிதங்கள் மற்றும் வட்டி விகிதங்கள் போன்ற சந்தை விலைகள் மாற்றமடையும் நிலை சந்தை இடர்பாடாகும்.

### 3.1 நிதி இடர்பாடு

அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியினுள் இலங்கை மத்திய வங்கியானது அ.டொலருக்கு சார்பாக இலங்கை ரூபாவினை மிதக்க இடமளித்தலின் பின்னர் இலங்கை ரூபாவிற்கு சார்பாக அ.டொலரின் பெறுமதியின் ஏற்றத்தாழ்வினால் அதிகாரசபைக்கு நிதி இடர்நேர் நிலைக்கு முகம்கொடுக்க வேண்டியேற்படும்.கம்பெனியின் அநேக கொடுக்கல் வாங்கல்கள் அதில் பயன்படுத்தப்படும் நிதி அலகான இலங்கை ரூபாவினால் நடைபெறுகின்றன. ஆனால் துறைமுக விரிவாக்கல் திட்டங்கள் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் சில வங்கிகளினது நிலுவைகள்,கப்பல் முகவர்களிடமிருந்து பெறவேண்டியவை (வ/ப APL இலங்கை தனியார் நிறுவனம்) போன்ற வட்டியுடனான கடன் பெறுதல் வெளிநாட்டு நாணய (யப்பான் யென் மற்றும் அமெரிக்க டொலர்) பயன்பாட்டில் நடைபெறுகிறது.

அமெரிக்க டொலர் மிதப்பதன் பயனாக 2012 ஆண்டின் அறிக்கை செய்யப்படும் காலப் பகுதியில் அமெரிக்க டொலருக்கு சார்பாக இலங்கை ரூபா தேய்வடைந்ததனால் கையாளல்களுக்கான தாக்கம் ரூபா.4,566,871,693/= ஆக இருந்ததோடு இதுவானது வ/ப APL இலங்கை தனியார் கம்பெனிக்கு வழங்கப்பட்ட சேவைகள், இன்வோயிஸ் இடுதல் மற்றும் பெறப்பட்ட கடன் மீழ்செலுத்தப்படுதலில் ஈட்டப்பட்டது. ஆனால் ஒரேயோரு நிதி அலகு ஊடாக நடாத்திச் செல்லப்பட்ட நிதி வைப்புக்கள் மூலம் மீள் செலுத்துதலின் பெறப்பட்ட கடன் மீள் செலுத்துதல் மற்றும் நிதியோட்டத்தின் தாக்கம் குறைக்கப்படுவதற்காக அதிகார சபையினால் ஒரேயோரு நிதி அலகு பயன்படுத்தப்படுகின்றது.

வட்டியுடனான கடன் மற்றும் வெளிநாட்டு நாணய மூலம் காட்டப்பட்டுள்ள கடன் பெறுதல் பற்றியதான தகவல்களுக்கு தயவு செய்து நிதி கூற்றின் பக்க இல.21 மற்றும் 22 ப் பார்க்கவும்.

### 3.2 வட்டி இடர்நேர்

அரச முறிகள், வங்கி வைப்புக்கள் நிலையானதும் தொடர் வட்டியுடனான கடன் பெறுதல் தொடர்புபடும் சந்தை வட்டி விகிதத்தின் வித்தியாசங்கள் அதிகார சபையின் வட்டி இடர்நேருக்கு உட்படும். ரூபா 8,971,662,529/= (2011. ரூபா 10,304,532,478/=)ஆகும். அதிகார சபையின் வட்டியுடனான கடன் மற்றும் பெறுதல்களின் வட்டிகளினது வீகிதங்களுக்கேற்ப கணக்கிடப்படுவதுடன் ஏனைய நிதியான ரூபா137,829,209,024/= (2011. ரூபா 112,815,714,945/=) இன் வட்டி நிலையான வீகிதத்திற்கேற்ப கணக்கிடப்படும்.

அரச வங்கிகள் மற்றும் அரசுடனான வைப்புக்கள் அடங்கலான நிதி மற்றும் வங்கி மீதிகள் அதிகாரசபைக்கு உண்டு. அதிகாரசபையினால் முனைப்பாக வட்டி விகித நகர்வுகள் மேற்பார்வை செய்யப்படுதலின் ஊடாக வட்டி வீழ்ச்சி இடர்பாடு கண்காணிக்கப்படுகின்றது.

வர்த்தகத்துடன் தொடர்புடைய சகல தரப்பினர்களினதும் நலனுக்காக வளங்களை வெற்றிகரமாகப் பயன்படுத்தி சம்பந்தப்பட்ட நிறுவனத்தை உரிய வழிகாட்டல்களோடு நிர்வகித்து நடாத்திச் செல்லப்படுவதற்காக அந்நிறுவனத்தினால் ஏற்படுத்தப்படும் ஒட்டுமொத்த செயற்பாடு இதுவாகும். நல்லாட்சி பேணப்படுதல் தொடர்பிலான முக்கிய பொறுப்பு அதிகாரசபையின் தலைவர் மற்றும் அதன் பணிப்பாளர் சபையைச் சார்ந்ததாகும். நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களை அடையும் பொருட்டு அதன் செயற்பாடுகள், நிர்வாக மற்றும் உரிய முறையில் செயற்படுகின்றமை. தொடர்பில் அவர்களால் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் இதற்கு தொழில்சார் அலுவலர்கள் அவர்களுக்குரிய செயற்பாட்டுத் துறைகளில் பங்களிப்பு வழங்குவதன் மூலம் வசதிகள் செய்தல் வேண்டும். இப்பணியினுள் உள்ளக கணக்காய்வாளர்களுக்கு நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பில் பரீட்சிப்பதற்கும் அங்கீகார நடைமுறைகளிலிருந்து வழுகிச் செல்லும் சந்தர்ப்பங்கள் இருப்பின் அது தொடர்பில் அறிக்கை செய்யப்படுதலின் ஊடாக முக்கிய பணியாற்றப்படுவதற்கான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. ஏதாவது வழுகல் நிலையிருப்பின் விசேடமாக கையாளல் மற்றும் நிதிசார் நடவடிக்கைகள் தொடர்பில் எதிர்பார்க்கப்படும் செயற்பாடு எட்டப்படுவதற்காக அவை எவ்வாறு திருத்தப்பட வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டு அதன் ஊடாக நல்லாட்சிக்கான பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

நிதிசார் மற்றும் கையாளல் செயற்பாடுகளினால் வெளிவரும் உயர் நிலை மற்றும் தொடர்ச்சியான தன்மையானது பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்படும் நம்பகத்தன்மை அடிப்படையின் ஒட்டுமொத்த கடமைச் செயற்பாடானது, முகாமைத்துவம் பணிப்பாளர் சபையுடன் தொடர்பு கொள்ளும் தகவல்களின் உயர் நிலை, வெளிப்படையான நிறுவனமொன்றினை நடாத்திச் செல்வதற்கு அவர்களின் அர்ப்பணிப்பு இன்றியமையாததாகும். அது தொடர்பில் உயர் நிலையிலான ஒன்றிணைந்த நிர்வாகம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதற்கு அதிகாரசபை உறுதிபூண்டுள்ளது.

அதிகாரசபையின் நிர்வாகம் தொடர்பில் பணிப்பாளர் சபை பொறுப்பு வகிக்கின்றது. சிறந்த நடைமுறைகள் செயற்படுத்தப்படுகின்றமை உறுதிப்படுத்துவதற்கான சட்டதிட்டங்கள், விதிகள், அமைப்பு முறைகள் மற்றும் செயற்பாடுகள் மேம்படுத்தப்படுதலில் குறிப்பிடத்தக்க கவனம் அதிகாரசபையினால் தொடர்ச்சியாக செலுத்தப்படுகின்றது. அதிகாரசபையினால் அதன் நிர்வாகப் பணிகள் தொடர்பான அமைப்பு முறைகள் தொடர்ச்சியான திருத்தங்களுக்கு உட்படுத்தப்படுகின்றன.

நிதி ஆண்டினுள் அதிகாரசபையினால் அனுசரித்து செல்லப்பட்டுள்ள சிறந்த ஒன்றிணைந்த நிர்வாக அடிப்படைகள் பின்வரும் தலையங்கங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- பணிப்பாளர் சபை மற்றும் சபையின் உப குழுக்கள்
- உள்ளக கட்டுப்பாடு
- உள்ளக கணக்காய்வு
- ஒழுக்காற்று விதிமுறைகள்
- பொது திறைசேரி, துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுடனான தொடர்பு
- சாசனம் மற்றும் நீதித் தேவைப்பாடுகளுக்கு இணங்கி செயற்படுதல்
- நல்லாட்சிக்கான அரச தொழில் முயற்சிகளுக்கான வழிகாட்டல்கள்

நிதி அமைச்சின் அரச தொழில் முயற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் நல்லாட்சிக்கான அரச தொழில் முயற்சி வழிகாட்டலில் இனம் காணப்பட்ட சில சரத்துகளிலிருந்து ஒதுங்குவதற்கு துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சர் ஆகியோரினால் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளுக்கு அனுமதி வழங்குவது தொடர்பிலான அமைச்சரவையின் தீர்மானத்திற்குப் பின்னர் உரிய கைத்தொழில் உயர் போட்டித்தன்மை மற்றும் சாத்தியவளத்துடனான அரச துறை நிறுவனமொன்றாக மாறுவதற்கு தேவைப்படும் போதியளவு நெகிழ்வுத்தன்மையும், சுதந்திரமும் உறுதிப்படுத்தும் பொருட்டு நிர்வாகம் தொடர்பான யாப்பொன்று இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நகல்படுத்தப்பட்டுள்ளது.

## பணிப்பாளர் சபையும் சபையின் உப குழுக்களும்

பணிப்பாளர் சபை தலைவர், உப தலைவர் மற்றும் 07 பணிப்பாளர்களைக் கொண்டிருக்கும். பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் உயர் தொழில் மற்றும் தனிப்பட்ட வகையில் நீதி நெறியுடையவர்களாகவும் அதிகாரசபை ஈடுபட்டிருக்கும் கைத்தொழிலின் அனுபவம் உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

பணிப்பாளர் சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்தல் கீழ் கண்டவாறு அமையும்.

- துறைமுக அபிவிருத்தி அல்லது துறைமுக இயக்கம் அல்லது சட்டம் அல்லது நிதி விடயங்கள் அல்லது கப்பல்துறை அல்லது வர்த்தகம் அல்லது பொறியியல் நடவடிக்கைகள் அல்லது, நிர்வாகம், தொழிலாளர் தொடர்பு சம்பந்தமான அனுபவம் மற்றும் ஆற்றலுடையோர் என அமைச்சரினால் கருதப்படுவோரில் தலைவர் உட்பட பணிப்பாளர்கள் 04 பேர் அமைச்சரினால் நியமிக்கப்படுவர்

- சரத்தின் 13:1 பிரிவின் கீழ் முகாமைப் பணிப்பாளர் அமைச்சரினால் நியமிக்கப்படுவார்.

- நிதி விடயங்கள் தொடர்பிலான அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படும் பொதுத் திறைசேரியின் பிரதிநிதியொருவர்.

- சுங்கப் பணிப்பாளர் நாயகம் மற்றும் மீன்பிடி தொடர்பான விடயங்களில் அமைச்சுக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதியொருவர்.

தலைவர் தவிர்ந்த உப சரத்து (1) (அ) அல்லது (1) (இ) யின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர்களிரொருவர் துறைமுக அதிகாரசபையின் உப தலைவராக அமைச்சரினால் நியமிக்கப்பட முடியும்.

தலைவருக்கும், உப தலைவருக்கும், முகாமைப் பணிப்பாளருக்கும் வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் தெளிவாக வெவ்வேறாக விளக்கப்பட்டுள்ளன. நிறைவேற்று தரத்திலல்லாத சகல பணிப்பாளர்களும் ஆழ்ந்த அறிவு மற்றும் முறையான அனுபவங்களின் மீது அதிகாரசபைக்கு சேவைகளை வழங்குவர். இவ்வறிக்கையின் காலப்பகுதியில் பதவி வகித்த அதிகாரசபையின் பணிப்பாளர்களின் பெயர்கள் மற்றும் விபரங்கள் 12-18 பக்கங்களில் காட்டப்பட்டுள்ளன.

## பணிப்பாளர் சபையின் பிரதான கடமைகளும் பொறுப்புக்களும் பின்வருமாறு

- மூலோபாயமான நோக்கம், கொள்கைகள், குறிக்கொள்கள் போன்றவற்றினை ஸ்தாபிப்பதன் மூலம் கட்டளைகளை வகுத்தல்.

- நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றும் செயற்பாட்டினை மேற்பார்வை செய்தல்.

- போதுமானளவு உள்ளக கட்டுப்பாடு மற்றும் உயர் தரத்திலான நெறியினைப் பேண உத்தரவாதமளித்தல்.

- நோக்கத்தினை அமைத்துக் கொள்வதற்கான வழிகாட்டல், விதிமுறைகளை தயாரித்தல் மற்றும் அதன் செயற்பாட்டிற்கு உத்தரவாதமளித்தல்.

- சகல பிரதான வர்த்தக நடவடிக்கைகளின் இடர்பாடு நிலைமைகளை அறிந்துகொள்ளுதல் மற்றும் தகுந்த போதுமான கட்டுப்பாடு பேணல் இடர்பாடு நிலைமைகள் தொடர்பில் காலத்திற்கேற்றவாறு அதன் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக முறையாக மேற்பார்வை செய்து அது சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றதென்பதற்கான உத்தரவாதமளித்தல்.

பணிப்பாளர் சபை தொடர்ச்சியாக கூட்டம் நடாத்துவதோடு குறிப்பிட்ட வருடத்தில் பணிப்பாளர் சபையானது 14 முறை கூடியது. பணிப்பாளர் சபையின் செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதற்குத் தேவையான விபரங்கள் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. பணிப்பாளர் சபையின் செயலாளர் தலைவருடன் கலந்தாலோசித்து நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படுவதோடு ஒவ்வொரு பணிப்பாளர் சபையின் கூட்டத்திற்கு முன்னர் எல்லா பணிப்பாளர்களுக்கும் விபரமான அறிக்கை அனுப்பி வைக்கப்படும். பணிப்பாளர் சபையில் கலந்து ஆலோசிப்பதற்குள்ள ஏனைய விடயங்களில் இயக்கம், நிதிச் செயற்பாடு, சுட்டெண்கள் மீளாய்வு செய்தலுடன் பிரதான மூலதன செலவினத் திட்டம் மற்றும் பிரேரணைகள் அதன் வரையறையினுள்ளான அங்கீகார அனுமதியினையும் கொண்டுள்ளது.

முன்வைக்கப்பட்ட எல்லா பரிந்துரைகள் சம்பந்தமாக, பணிப்பாளர் சபையின் இறுதி அனுமதி கிடைக்கப்பெறுதலுக்குட்பட்டதாக சில பொறுப்புக்கள் தொடர்பில் செயற்படுவதற்கு கணக்காய்வுக் குழுவிடமும் முகாமைத்துவ குழுவினையொத்த உப குழுக்களிடமும் கையளிக்கப்பட்டன.

**முகாமைத்துவக் குழு**

தலைவர், உப தலைவர் முகாமைப் பணிப்பாளர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர் அடங்கலாக பணிப்பாளர் சபையின் 04 அங்கத்தவர்கள் உட்பட முழு நேர 07 பணிப்பாளர்கள், ஹாபர் மாஸ்டர் ஆகியோர் முகாமைத்துவக் குழுவின் அங்கத்தவர்களாக செயற்படுகின்றனர்.

அன்றாட நிர்வாகம், நிறுவனரீதியான மற்றும் கையாளல் நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படுகையில் செயன்முறை ரீதியான வர்த்தக நிறுவனமொன்றாக மனிதவளம் உள்ளிட்ட வளங்களின் உச்ச பயன்பாடு பெறப்படுவதற்கும் துறைமுக நுகர்வோர்களுக்கும் ஏனைய சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கும் வழங்கப்படும் சேவைகளின் தன்மை உயர்த்தப்படுவதற்கும் முகாமைத்துவ குழுவினால் அதன் கூட்டங்களின் போது துல்லியமாக பரீட்சித்துப் பார்க்கப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டன. இச்செயற்பாடுகள் தாமதங்களின்றி வெற்றிகரமாக நிறைவேற்றும் பொருட்டு முகாமைத்துவக் குழுவினால் மாதம் இருமுறை கூடி தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

முகாமைத்துவக் குழுவினால் இவ்வருடத்தினுள் ஏழு (7) கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

**கணக்காய்வுக் குழு**

| ஏற்பாடுகள் மற்றும் ஒன்றுசேர்ந்த செலவினம் | | 158,107,984 | (22,275,332) | 152,980,345 | (22,649,229) |
| **இயக்கம் மூலம் உழைக்கப்பட்ட நிதி** | | **(3,811,696,655)** | **13,412,374,629** | **(3,839,250,253)** | **13,314,336,860** |
| செலுத்தப்பட்ட வட்டி | | (1,734,067,858) | (1,449,436,446) | (1,733,757,848) | (1,448,689,030) |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை நிதி | | (521,280,713) | (757,093,899) | (521,280,713) | (757,093,899) |
| செலுத்தப்பட்ட வரி நிதி | | (134,326,274) | (167,552,155) | (127,196,411) | (156,230,814) |
| **இயக்க நடவடிக்கைகளில்கிடைக்கப்பெற்ற தூய தொகை** | 7 | **(6,201,371,500)** | **11,038,292,128** | **(6,221,485,225)** | **10,952,323,117** |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் கிடைக்கப்பெற்ற காசுப்பாய்ச்சல்** | | | | | |
| சொத்துக்கள், இயந்திர வகை உபகரணங்கள் கைப்பற்றல் | | (184,998,684) | (371,394,591) | (183,749,200) | (358,414,205) |
| நிலையான சொத்துக்கள்விற்பனையில் கிடைக்கப்பெற்ற ஈட்டல்கள் | | 7,655,636 | 9,376,735 | 7,655,636 | 9,376,735 |
| நடைபெற்று வரும் பணிகளுக்கான மூலதனம் | | (10,544,731,369) | (25,413,403,693) | (10,544,731,369) | (25,413,403,693) |
| உணரா சொத்துக்கள் கைப்பற்றல் | | (10,080) | (24,808,292) | (10,080) | (24,808,292) |
| கிடைக்கப்பெற்ற பங்கிலாபம் | | 852,949,637 | 753,686,596 | 859,082,637 | 754,686,596 |
| வட்டி கிடைக்கப்பெறுதல்கள் | | 997,794,791 | 717,579,032 | 977,015,808 | 709,493,841 |
| ஏனைய நிதிசார் சொத்துக்களின் தூய ஈட்டல்கள் | | (905,764,873) | (987,995,171) | (905,764,873) | (987,995,171) |
| விற்பனைக்கான நிதிசார் சொத்துக்களின் முதலீடுகள் | | (2,866,551,000) | (1,500) | (2,866,551,000) | (1,500) |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் ( கிடைக்கப்பெற்ற ) தூய இலாபம்** | | **(12,643,655,942)** | **(25,316,960,884)** | **(12,657,052,440)** | **(25,311,065,690)** |
| **நிதிசார் நடவடிக்கைளின் காசுப்பாய்ச்சல்** | | | | | |
| இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற கடன் | | 26,446,607,821 | 16,426,029,611 | 26,446,607,821 | 16,426,029,611 |
| நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன் | | - | 2,872,563,647 | - | 2,872,563,647 |
| இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட கடன் மீள் ஈடுசெய்தல்கள் | | (6,477,814,731) | (4,668,488,136) | (6,477,814,731) | (4,668,488,136) |
| நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன் மீள் ஈடுசெய்தல்கள் | | (1,627,928,997) | (177,110,976) | (1,624,902,168) | (176,591,942) |
| பெறப்பட்ட அரச கொடுப்பனவுகள் | | 320,000,000 | 97,028,437 | 320,000,000 | 97,028,437 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் ( கிடைக்கப்பெற்ற ) தூய நிதித் தொகை** | | **18,660,864,094** | **14,550,022,583** | **18,663,890,923** | **14,550,541,617** |
| **காசு மற்றும் சம மதிப்புகளின் தூய மாற்றம்** | | **(184,163,348)** | **271,353,827** | **(214,646,743)** | **191,799,044** |
| வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசு சம மதிப்புகள் | | **852,705,518** | **581,351,691** | **689,123,726** | **497,324,681** |
| **வருட இறுதியின் காசு மற்றும் காசு சம மதிப்புகள்** | | **668,542,171** | **852,705,518** | **474,476,983** | **689,123,726** |

115 பக்கங்களிலிருந்து 155 பக்கம் வரையிலான நிதிர் அறிக்கைகளுக்கான குறிப்புக்கள் இந்த நிதிசார் அறிக்கைகளின் முக்கிய பிரிவாகும்.

## 1 நிறுவன அமைப்பு

### 1.1 பொது

1982 இன் 7 மற்றும் 35 ஆம் இலக்க சட்டங்களின் பின் திருத்தியமைக்கப்பட்ட 1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகாரசபைச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய 1979 ஆகஸ்ட் 01 ஆம் திகதி இலங்கை துறைமுக அதிகாரசபை நிறுவப்பட்டது.

### 1.2 முக்கிய விடயங்கள் மற்றும் இயக்க செயற்பாடுகளின் நிலை

கப்பல்சுமை, கப்பலேற்றல் மற்றும் மாற்றியேற்றல் தரை இறக்குதல் மற்றும் பண்டக சாலையிடல், வாப்பு சேவைகள் கலங்களிலிருந்து கலங்களுக்கானதும் வழிகாட்டி கட்டணங்ளுக்காக குதங்கள் மற்றும் களஞ்சியங்களுக்கிடையிலும் நீர் மூழ்கும் பணிகளுக்கு கலங்களைக் கட்டி வைப்பதற்கும் மற்றும் சுழியோடுதல் மற்றும் நீருக்கடியிலான கப்பல்களின் பழுதுபார்க்கும் நடவடிக்கைகள், அதற்கான துணைச் சேவைகளாக கலங்களுக்கு தண்ணீர், எரிபொருள் மற்றும் மின்சாரம் வழங்குதல்

### 1.3 நிதி ஆண்டு

அதிகாரசபையின் நிதியாண்டு டிசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடையும்.

### 1.4 பதிவு அலுவலகம்

இலங்கை துறைமுக அதிகாரசபையின் பதிவு அலுவலகம் இல : 19 சைத்திய வீதி, கொழும்பு - 01 ஆகும். அதன் தபால் பெட்டி இலக்கம் 595 ஆகும்.

### 1.5 ஊழியர் தொகை

2012 திசெம்பர் 31 ஆந் திகதிக்கான ஊழியர் தொகை **10,**200 (**2011-**10,982)

### 1.6 பிரகடனப்படுத்தப்படுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள திகதி

2013.02.27 ஆந் திகதி பணிப்பாளர் சபையில் முன்மொழியப்பட்ட பிரேரணைக்கமைய 2012.12.31 ஆந் திகதிக்கு துறைமுக அதிகாரசபையின் நிதிசார் அறிக்கைகள் வழங்கப்படுவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 2 முக்கிய கணக்கியற் கொள்கைகளின் சாராம்சம்

### 2.1 தயாரிக்கும் அடிப்படை

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் விதிமுறைகளுக்கமைய (SLFRSs) துறைமுக அதிகாரசபையின் ஒன்றிணைந்த நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. விற்பதற்குள்ள நிதிசார்ந்த சொத்துக்களின் நியாயமான பெறுமதிக்கேற்ப மாற்றப்பட்ட பழைய நிதிசார் கூற்றுக்களின் மீது ஒன்றிணைந்த நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இலங்கை கணக்கீட்டு நியமங்களை அனுசரித்து நிதிசார் கூற்றுக்கள் தயார் செய்யப்படுகையில் சில பகுப்பாய்வு கணக்கியல் மதிப்பீடுகள் பயன்படுத்துதல் அவசியமாகும். இந்த செயற்பாட்டின் போது குழு கணக்கியல் கொள்கைகள் பயன்படுத்துதலிலான தமது தீர்வுகளை அடைவதற்கு முகாமைத்துவத்திற்கு அவசியப்படுகின்றது. உச்ச நிலையிலான தீர்வு சிக்கலான தேவைப்படும் துறைகள் போன்று கருதுகோல்கள் மற்றும் மதிப்பீடுகளும் ஒன்றிணைந்த நிதிசார் கூற்றிற்கு முக்கியமென்பதை 2.27 குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

2011.12.31 ஆந் திகதி வரை நடைமுறைப்படுத்தப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய 2011.12.31 திகதியுடன் முடிவடையும் அறிக்கை செய்யப்படும் காலப்பகுதி அடங்கலாக இதற்கு முன்னரான காலப்பகுதி தொடர்பில் இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் குழு தமது நிதிசார் கூற்றுக்களை தயாரித்துள்ளன. இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இல .01 முதல் தடவையாக பின்பற்றப்பட்டு அதிகாரசபையின் ஒன்றிணைந்த நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. முன்னர் அறிக்கை செய்யப்பட்ட நிதிசார் நிலைமைகள், நிதிசார் செயலாற்றுகை, இலங்கை துறைமுக அதிகாரசபையின் மற்றும் குழுவின் காசுப்பாய்ச்சல் 116 போன்றவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு மாற்றப்படுதலின் தாக்கம் நிதிசார் கூற்றின் 37 ஆம் குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

**2.2 கணக்கீட்டு நியமங்களின் மாற்றமடைதல்கள்**

வேறு முறையில் குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்களில் பின்வரும் கணக்கியற் கொள்கைகளின் மாற்றங்கள் சுருக்கமாக நிதிசார் கூற்றுக்களின் காலப்பகுதி தொடர்பில் தொடர்ச்சியாக மாற்றமில்லாது பின்பற்றப்பட்டது. அதேபோன்று இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய அந்த முறைக்கு மாற்றப்படும் திகதியில் இருந்த நிதி நிலைமை அதன் ஆரம்பமாக கருதப்பட்டது.

சென்ற ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டதும் வகுப்பீடு செய்யப்பட்டதுமான ஒன்றிணைந்த நிதிசார் கூற்றுக்கள் மிகவும் சிறப்பாக முன்வைப்பதற்கு இந்த ஆண்டின் கூற்றுக்களுடன் இணங்கும் வகையில் தேவைப்படும் சந்தர்ப்பங்களின் போது திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன.

**2.3 ஒன்றிணைத்தல்**

**2.3.1 துணை நிறுவனம்**

துணை நிறுவனம் என்பது பொதுவாக விருப்பம் கோரலின் அரைவாசிக்கும் மேல் பங்கு உரித்துக்கள் கொண்ட குழுவின் கீழ் நிர்வகிக்கப்படும் நிதிசார்ந்த மற்றும் செயற்பாட்டுக் கொள்கைகள் கொண்ட அலகொன்றாகும். துணை நிறுவனமொன்றின் நிர்வாகம் குழுவிற்கு மாற்றப்படும் திகதியிலிருந்து துணை நிறுவனமொன்று முற்றாக ஒன்றிணைந்ததாகக் கருதப்படும். இதன் நிர்வாகம் முடிவடையும் திகதியிலிருந்து அதுவானது ஒன்றிணைந்த நிலையிலிருந்து நீக்கப்படுகின்றது.

வர்த்தகக் கூட்டாக கருதப்படும் பொருட்டு கைப்பற்றப்படும் செயற்பாட்டை குழு பயன்படுத்தும். மாற்றப்பட்ட சொத்துக்களினது நியாயபூர்வ பெறுமதி மற்றும் துணை நிறுவனங்களினால் வகிக்கப்படும் பொறுப்புக்களைக் கொண்டதாக துணை நிறுவனம் அமைந்திருக்கும். துணை நிறுவனம் முற்றாக அதிகாரசபைக்குச் சொந்தமான துணை நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்படாத நடவடிக்கைகள் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இடை கூறுகளின் கொடுக்கல் வாங்கல்களின் மீதிகள், குழுவின் கூறுகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களில் ஏற்படும் வருமானம் மற்றும் செலவினம் நீக்கப்படும். மேலும் சொத்துக்களில் ஏற்றுக்கொள்ளப்படும் கூறுகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களில் ஏற்படும் இலாபம் மற்றும் நஷ்டமும் நீக்கப்படும். குழுவினால் பயன்படுத்தப்படும் கொள்கைகள் தொடர்ந்தும் மாற்றமில்லாது பயன்படுத்தப்படும் தேவைப்பாட்டின் மீது துணை நிறுவனத்தின் கணக்கியற் கொள்கைகள் மாற்றப்பட்டுள்ளன.

**2.3.2 ஒன்றிணைந்த நிறுவனம்**

குழுவில் தாக்கம் செலுத்தக்கூடிய அலகொன்றின் பொதுவாக பிரகடனப்படுத்தும் உரிமையில் 20% அல்லது அதற்கு மேலான அளவில் நேரடியான அல்லது நேரடியற்ற உரிமை கொண்ட நிர்வாகமின்றிய அலகொன்றாகும். இணைந்த நிறுவனத்தின் முதலீடு திணிவு முறை பயன்பாட்டில் கணக்கு வைக்கப்படுகின்றது நியாயத்தின் முறைமையின் கீழ்

முதலீடு ஆரம்பத்தில் ஆகு செலவாகக் கருதப்படுவதோடு பொறுப்பேற்றுக்கொள்ளல் திகதியின் பின்னர் முதலீடு பொறுப்பேற்பவரின் இலாபம் அல்லது நஷ்டம் முதலீட்டாளரின் பாகத்தின் அதிகரிப்பு அல்லது குறைவடைதலாக ஏற்றுக்கொள்ளப்படும். குழுவின் பிற்கால ஒப்படைப்பு இலாபங்கள் அல்லது நஷ்டப்பாகங்கள் மொத்த வருமானத்தின் பிற்கால ஒப்படைப்பு பாகங்களின் செயற்படுகை, ஏனைய வருமானம் தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதுவானது முதலீட்டின் போது முன்கொண்டு வரப்படும் நிதிக்கேற்ப சீர்செய்தலோடு கனத்தில் கொள்ளப்படுகின்றது.

ஒவ்வொரு நிதியாண்டு இறுதித் தினத்தில் ஒன்றிணைந்த நிறுவனத்தின் சொத்துக்களுக்கு பாதிப்பேற்பட்டுள்ளதா என கவனிக்கப்படுதல் வேண்டும். இதன் போது இணைந்த நிறுவனத்தின் சொத்துக்களினது நியாயமான பெறுமதியானது அவை மீள் அறவிட்டுக்கொள்ளக்கூடிய பெறுமதியை தாண்டும் போது அதுவானது பாதிப்பின் நட்டம் என அடையாளம் காணப்பட்டு இணைந்த நிறுவனத்தின் இலாப நட்டத்துடன் சீர் செய்தல் வேண்டும்.

## 2.4 வெளிநாட்டு நிதி பரிமாற்றம்

### 2.4.1 செயற்படுத்தப்படும் மற்றும் சமர்ப்பிக்கப்படும் நிதி வகை

குழுவின் ஒவ்வொரு அலகுளின் நிதிசார் அறிக்கைகளில் உள்ளடங்கப்படும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதமடைதல்கள் அந்த அலகு செயற்படும் ஆரம்ப பொருளாதார நடவடிக்கைகளில் தொடர்புபடும் நிதி வகை பயன்பாட்டில் கணக்கிடப்படும் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாய்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இதுவானது குழுவினால் சமரப்பிக்கப்படும் நிதி வகையாகும்.

### 2.4.2 கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதமடைதல்கள்

வெளிநாட்டு நிதிகளில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் பயன்பாட்டிலுள்ள நிதி வகையில் மாற்றப்படும் போது அக்கொடுக்கல் வாங்கல்களுக்குரிய திகதிகளில் வெளிநாட்டு நாணய விகிதத்திற்கேற்ப அவ்வாறு செய்யப்படும். அவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் சீர் செய்தலின் பயனாக கிடைக்கப்பெறும் வெளிநாட்டு நாணய இலாப நஷ்டங்கள் மற்றும் வருட இறுதியில் நிதிசார் சொத்துக்கள், பொறுப்புக்கள், மாற்றப்படுதலில் எழும் இலாப நஷ்டங்கள் விபரமான கூற்றினுள் அடையாளங் காணப்படுதல் வேண்டும்.

ஆகுசெலவின் மாற்றங்களுக்குரிய பரிமாற்றவேறுபாடுகள் விபரமான வருமான கூற்றினுள் அடையாளங்க காணப்படுதல் வேண்டும்.

### 2.4.3 சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்கள்

சொத்துக்கள், இயந்திரவகை மற்றும் உபகரணங்கள் அடிப்படையாக ஆகுசெலவுக்கேற்ப ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இருந்த சொத்து அமைந்துள்ள இடத்திற்கு கொண்டு வருவதற்காக நேரடியாக செலவு செய்யப்பட்ட ஆகுசெலவும் குழுவின் முகாமைத்துவத்தினால் கருதப்படும் வகையில் அவை செயற்படுத்தப்படக் கூடிய நிலைக்குக் கொண்டு வருவதற்காக செலவு செய்யப்பட்ட நிதியும் இந்த ஆகுசெலவில் அடங்குதல் வேண்டும்.

அதிகாரசபையின் சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்களின் பெறுமதியானது 2011 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் இருந்த இலங்கை கணக்கீட்டு நியமங்களே நிதிசார் கூற்றிலுள்ள மீள் கணக்கீட்டுப் பெறுமதி அடிப்படையில் முன்வைக்கப்பட்டுள்ளது இருக்கும். இலங்கை துறைமுக அதிகாரசபையினால் சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்களின் கணக்கிடப்பட்ட நிதியின் அளவானது சொத்துக்கள், இயந்திரவகை மற்றும் உபகரணங்களின் பெறுமதியில் சேர்ந்த தேய்மானம். மற்றும் சேர்ந்த பாதிப்புகள் கழிக்கப்பட்ட ஆகுசெலவாகும்.

சொத்துக்கள் பேணிச்செல்லப்படும் பெறுமதியில் அல்லது சொத்தாக அடையாளங் காணப்படும் சந்தர்ப்பங்களில் பேணிச் செல்லப்படும் நிதித் தொகை பிற்கால ஆகுசெலவில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஏதாவது காரணமொன்றிற்குரிய எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் குழுவில் சேரக்கூடிய சந்தரப்பங்களில் மாத்திரம் இவ்வாறு செய்யப்படும். ஏனைய சகல பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் அவை நடைபெறும் நிதி சாரந்த காலப்பகுதிக்குரிய பூரண வருமான கூற்றினுள் உள்ளடக்கப்படுகின்றது.

காணிகளின் பெறுமதி தேய்மானம் செய்யப்படமாட்டாது. எளிய வழி முறையொன்றின் பயன்பாட்டில் ஏனைய பெறுமதிகளின் தேய்மானம் கணிப்பிடப்படுகின்றது. அவற்றின் ஆகுசெலவு அல்லது ஆகுசெலவாக கருதப்படக் கூடிய பெறுமதிகள் பின்வருமாறு அவற்றின் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலங்களுக்கேற்பவாறாக இருக்கும்.

| சொத்து வகை | | அளவு |
|---|---|---|
| கையாளல் கட்டிடங்கள் மற்றும் அமைவுகள் | 5-50 வருடங்கள் | 2% -20% |
| மிதவை உபகரணங்கள் | 2-15 வருடங்கள் | 6.7% - 50% |
| கையாளல் உபகரணங்கள் | 2-20 வருடங்கள் | 5% - 50% |
| இயந்திர உபகரணங்கள் | 2-20 வருடங்கள் | 5% -50% |
| அலுவலகங்கள் மற்றும் நலன்புரி கட்டிடங்கள் | 2-75 வருடங்கள் | 1.3% - 50% |
| கணனி வன் பொருள் | 2–5 வருடங்கள் | 20% - 50% |

சொத்துக்களின் பெறுமதி அவை மீள் அறவிடப்படக் கூடிய பெறுமதியை விட அதிரித்திருப்பின் பெறுமதியானது மீள் அறவிட்டுக் கொள்ளக் கூடிய பெறுமதி வரை நீடிக்கப்படுதல் வேண்டும்.

### 2.4.4 உணரா சொத்துக்கள்

பெறப்படுவதற்கு செலவு செய்யப்படும் ஆகுசெலவு மற்றும் குறிப்பிட்ட மென் பொருள் மற்றும் தொகுதிகளின் அடிப்படையில் பெறப்பட்ட கணனி மென் பொருள் மற்றும் கையாளல் தொகுதிகள் மூலதன சொத்துக்களாகக் கணிக்கப்படுகின்றன. சேர்ந்த கடன் தொகை மற்றும் சேர்ந்த பாதிப்புகள் கழிக்கப்பட்டதன் பின்னர் உணரா சொத்துக்களின் பெறுமதி குறிப்பிடப்பட்டுள்ளது. பின்வருமாறு அவற்றின் மதிப்பிடப்பட்டுள்ள ஆயுட்காலம் குறைக்கப்பட்டு கடன் ஈடுசெய்தலின் பின்னரான ஆகுசெலவு குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| கணனி மென் பொருள் | 2-5 வருடங்கள் | 20% - 50% |

கணனி மென் பொருள் வேலைத்திட்டங்கள் பராமரித்தலின் ஆகுசெலவினுள் நடைபெறுவதுடன் அவை செலவு செய்யப்பட்ட நிதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

### 2.4.5 முதலீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்கள்

வாடகைப் பணம் அறவிடப்படுவதற்காக பேணப்பட்டு வரும் முதலீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்ள் ஆரம்பமாக அதன் ஆகு செலவுக்கேற்ப கணக்கிடப்படுகின்றது.

2011 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப தயார்செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீள் மதிப்பீடு செய்யப்பட்ட விலைகளுக்கேற்ப முதலீட்டுச் சொத்துக்கள் பேணப்பட்டு வந்துள்ளன. முதலீட்டுச் சொத்துக்களின் விற்பனை வரி பெறுமதி நியாயபூர்வ பெறுமதிக்கு சமனாகுவதால் முதலீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்களில் அடங்கிய நிதி அவ்வாறு மீள் பெறுமதி செய்யப்பட்ட திகதியிலிருந்து வந்த கருதிய ஆகுசெலவாக அதிகாரசபையினால் கருதப்பட்டது. அதன்படி முதலீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்கள், சேர்ந்த தேய்மானங்கள் மற்றும் சேர்ந்த பாதிப்புக்கள் கழிக்கப்பட்டதாக கருதப்பட்ட ஆகுசெலவாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்கள் சேர்ந்த தேய்மானங்கள் மற்றும் சேர்ந்த பாதிப்புக்கள் கழிக்கப்பட்ட ஆகுசெலவாக பின்னர் கணக்கிடப்பட்டுள்ளது.

காணிகளின் பெறுமதி தேய்மானம் செய்யப்படமாட்டாது. இலகு முறையொன்றின் பயன்பாட்டில் ஏனைய பெறுமதிகளின் தேய்மானம் கணிக்கப்படுகின்றது. அவற்றின் ஆகுசெலவு அல்லது ஆகுசெலவாக கருதப்படக் கூடிய பெறுமதி பின்வருமாறு அவற்றின் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலத்திற்கமைய இவ்வாறு செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| முதலீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்கள் | 15 -35 வருடங்கள் | 2.9% - 6.7% |

**2.4.6 நிதிசாராத சொத்துக்களின் பாதிப்பு**

அறிக்கை செய்யப்படுவதற்குட்படும் ஒவ்வொரு காலப்பகுதியின் இறுதியிலும் குழுவினால் அதன் சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்கள் முதலீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் உணரா சொத்துக்களின் பெறுமதி மீளாய்வு செய்யப்படுவதோடு அந்த சொத்துக்களுக்கு பாதிப்பேதும் ஏற்பட்டதற்கான ஏதாவது காட்டப்படுதல் உள்ளதாவென தீர்மானிக்கப்படும். அவ்வாறு காட்டப்படின் அவ்வாறான பாதிப்புகளில் ஏற்பட்ட பாதிப்பின் அளவு தீர்மானிக்கப்படுவதற்காக சொத்துக்களிலிருந்து அறவிட்டுக் கொள்ளக்கூடிய தொகை மதிப்பீடு செய்யப்படும். ஏதாவது சொத்தொன்றின் அறவிட்டுக்கொள்ளக்கூடிய நிதி மதிப்பிடப்பட முடியாத சந்தர்ப்பங்களில் குழுவினால் நிதி ஈட்டல் அலகு தீர்மானிக்கப்படுவதுடன் அந்த சொத்துக்குரிய நிதி ஈட்டல் அலகில் அறவிட்டுக்கொள்ளக்கூடிய நிதி மதிப்பீடு செய்யப்படும்.

ஏதாவதொன்று விற்பதற்காக செலவு செய்யப்படும் செலவினம் மற்றும் பாவனையிலுள்ள ஏதாவது விற்பதற்காக செலவு செய்யப்படும் செலவினம் மற்றும் பாவனையின் பெறுமதியானது கழிக்கப்பட்ட நியாயமான பெறுமதியின் உயர் மட்ட அறவிட்டுக்கொள்ளக் கூடிய நிதி எனப்படும். பாவனையின் பெறுமதி மதிப்பிடப்படுகையில் எதிர்கால நிதி கிடைக்கப்பெறுதல்கள் நிகழ்கால பெறுமதியில் கழிக்கப்பட்ட நிதிக்கமைய வருமானம் செலுத்தப்படுவதற்கு முன் கழிவுக் கட்டண முறை பின்பற்றப்பட்டு மதிப்பீடு செய்யப்படும். தற்போதிருக்கும் பணத்தில் காலப் பெறுமதி மற்றும் சொத்துக்குரிய விசேட இடர்நேர் கொண்ட சந்தை நிலை வெளிக்காட்டப்படும் வகையில் கழிக்கப்படுவதற்கு முன்பிருந்த வரி நிலைமை பயன்படுத்தப்பட்டு இவ்வாறு செய்யப்படும். இது தொடர்பில் எதிர்காலத்தில் ஏற்படும் காசுப் பாய்ச்சலோடு சீர்செய்யப்பட மாட்டாது.

ஏதாவது சொத்தொன்றில் அறவிட்டுக் கொள்ளக்கூடிய நிதி (நிதி ஈட்டல்) அலகானது) அதில் நிலவும் பெறுமதிக்குக் குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டிருப்பின் சொத்தொன்றில் பேணப்படும் நிதி (நிதி ஈட்டல் அலகு) அறவிட்டுக் கொள்ளக்கூடிய நிதி வரை கழிக்கப்படும். பாதிப்புகளில் ஏற்படும் நஷ்டம் மொத்த வருமானக் கூற்றில் மிக விரைவில் அடையாளங் காணப்பட முடியும்.

**2.5 நிதிசார் சொத்துக்கள்**

2.5.1 பூர்வாங்க அடையாளங்காணலிலேயே குழுவினால் நிதிசார் சொத்துக்களினது வகையீடு தீர்மானிக்கப்படுவதோடு குழுவினால் அதன் நிதிசார் சொத்துக்கள் பின்வருமாறு வகையீடு செய்யப்பட்டுள்ளது.

(அ) கால முதிர்வடையும் வரை பேணப்படும் முதலீடுகள்
(ஆ) கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவை
(இ) விற்கப்பட வேண்டியுள்ளவை

**அ) கால முதிர்வடையும் வரை பேணப்படும் முதலீடுகள்**

கால முதிர்வடையும் வரை பேணப்படும் முதலீடுகள் என்பது கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவை தவிர்ந்த நிரந்தர மற்றும் தீர்மானிக்கப்பட வேண்டிய செலுத்தும் மூலக் கருவில்லாத நிதிசார சொத்துக்களாகும். கால முதிர்வடையும்

வரை வைத்துக்கொள்ளப்படும் முதலீடுகளாக அந்த முதலீடுகள் முதிர்வடையும் வரை வைத்துக்கொள்ளப்படுவதற்கு குழுவிற்கு கருத்து அல்லது ஆற்றல்பெறக் கூடிய முதலீடுகள் வகையீடு செய்யப்பட்டுள்ளன. முதலீடுகளாக காலமுதிர்வடைதல் இல்லாதிருப்பின் கால முதிர்வடையும் வரை வைத்துக்கொள்ளப்படும் முதலீடுகள் முறையற்ற சொத்துக்களில் சேர்க்கப்பட்டுள்ளன. குழுவினால் இந்த வகையின் கீழ் தற்போது பொறுப்பேற்கப்படும் கடன்காரர்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

**(ஆ) கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவை**

கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவை என்பது நிரந்தர மற்றும் தீர்மானிக்கப்பட வேண்டியவை போன்று செயற்படும் சந்தையில் தெரிவிக்கப்படாதுள்ள மூலக் கருவில்லா நிதிசார் சொத்துக்களாகும் அறிக்கை செய்யப்படுதலுக்குட்படும் காலப்பகுதி முடிவடைந்த 12 மாதங்களுக்கு மேற்படும் கால முதிர்வடையும் சொத்துக்கள் தவிரந்த நடைமுறைச் சொத்துக்களினுள் சேர்க்கப்பட்டுள்ள கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவைகளாகும். இவை நடைமுறைசாராத சொத்துக்களாக வகையீடு செய்யப்பட்டுள்ளன. வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப்பெற வேண்டியவை, மீள் விலைக்கு வாங்கப்பட்ட அரசாங்க பிணைமுறிகள், நிரந்தர வைப்புக்களுக்கான பூர்வாங்க செலுத்துதல்கள், முற்பணம் வைப்புக்கள் ஊழியர்களின் கடன்கள் அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் இறுதியில் இருக்கும் காசு மற்றும் மதிப்புகள் குழுவின் கடன்கள் மற்றும் கிடைக்கப்பெற வேண்டிய பொருட்களாகும்.

**(இ) விற்பதற்குள்ள பொருட்கள்**

விற்பதற்குள்ள நிதிசார் சொத்துக்கள் என்பது இவ்வகையின் கீழ் பெயரிடப்பட்டுள்ள அல்லது பெயரிடப்படாத வேறு வகையின் கீழ் வகையீடு செய்யப்பட்டிராத மூலகூறு அற்ற நிதிசார் சொத்துக்களாகும். முதலீடு கால முதிர்வு அடையாதொன்றெனில் அல்லது அதுவானது அறிக்கை செய்வதற்கு உட்படும் காலப்பகுதியின் இறுதியிலிருந்து 12 மாதங்களினுள் பணிகள் முடிவுறுத்தப்பட முகாமைத்துவத்தினால் கருதப்படாத நடைமுறை சாராத சொத்துக்களினுன் இவை உள்ளடக்கப்பட்டுள்ளன. முன்வைக்கப்பட்டுள்ள வர்த்தகப் பொருட்களின் முதலீடுகள் மற்றும் முன்வைக்கப்படாத வர்த்தகப்பொருட்களின் முதலீடுகளை விற்பதற்குள்ள நிதிசார் சொத்துக்கள் கொண்டிருக்கும்

**2.5.2 ஏற்றுக் கொள்ளல் மற்றும் அடிப்படை அளவீடு**

கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவை நிதிசார் சொத்துக்களாக குழுவினால் இக்கொடுக்கல் வாங்கல் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து வகையீடு செய்யப்பட்டுள்ளது. குழுவானது நிதி உடன்பாட்டின் ஏற்பாடுகளுக்கமைய ஒப்பந்தத்தின் தரப்பினரான வர்த்தக கொடுக்கல் வாங்கல் திகதியிலிருந்து ஏனைய நிதிசார் சொத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

நிதிசார் சொத்துக்கள் முதலில் நியாயபூர்வ பெறுமதிக்கேற்ப கணிப்பீடு செய்யப்படுகின்றன. இதற்குப் புறம்பாக நியாயபூர்வ பெறுமதி குறிப்பிடப்படாதுள்ள சொத்துக்கள் அவற்றின் இலாப நஷ்டங்களின் ஊடாக கொடுக்கல் வாங்கலின் செலவின் நேரடி தொடர்பு மீது கணக்கீடு செய்யப்படுகின்றது.

நிதிசார் சொத்துக்களிலிருந்து காசுப் பாய்ச்சல் கிடைக்கப்பெற உரித்து இல்லாதபோது அல்லது மாற்றப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் நிதிசார் சொத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அதேபோன்று இந்த நிலைமையின் கீழ் குழுவினால் அதன் உரித்தின் அனைத்து இடர்நேர் தன்மை மற்றும் அனுகூலங்கள் பெருமளவில் நிதிசார் சொத்துக்களுக்கு மாற்றப்படுகின்றது.

2.5.3 **பின்னர் மேற்கொள்ளப்படும் கணக்கீடுகள்**

**அ) கால முதிர்வடையும் வரை தடுத்து வைக்கப்படும் முதலீடுகள்**

காலம் தாண்டப்படும் வரை பொறுப்பேற்கப்படும் முதலீடுகளானது பாதிப்புகளில் நஷ்டமேற்பட்டிருப்பின் அவை கழிக்கப்பட்டு பயனான வட்டி முறை அனுசரிக்கப்பட்டு பிற்காலத்தில் நடைபெறும் கடன் ஈடுசெய்தலின் செலவினமாகும். பொறுப்பேற்றலின் கொடுக்கல் வாங்கல்களில் ஏற்படும் தள்ளுபடி கழித்தல் அல்லது தவணைகள் கருத்திலெடுக்கப்பட்டு கடன் ஈடுசெய்தலின் செலவினம் கணக்கிடப்படுகின்றது.

**(ஆ) கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவை**

பூரண ஏற்றுக்கொள்ளலின் பின்னர் கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவை கடன் ஈடுசெய்தலின் செலவினத்திற்கேற்ப கணக்கிடப்படுவதுடன் அவ்வாறு செய்யப்படுகையில் பாதிப்புகளுக்கான ஏற்பாடுகள் கழிக்கப்பட்டு பயனான வட்டி முறை அனுசரிக்கப்படுகின்றது.

**(இ) விற்பதற்குள்ள பொருட்கள்** (AFS)

ஆரம்ப ஏற்றுக்கொள்ளலின் பின்னர் விற்பதற்குள்ள நிதிசார் சொத்துக்களாக வகையீடு செய்யப்பட்டுள்ள வட்டியில்லாத பங்கு முதலீடுகள் நியாயபூர்வ பெறுமதிக்கேற்ப கணிப்பிடப்படுகின்றன. விற்பதற்குள்ள நிதிசார் சொத்துக்களின் நியாயபூர்வ பெறுமதியின் வித்தியாசம் பங்குகளின் மாற்றங்கள் மீதான கூற்றில் விற்பதற்காக ஒதுக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ள ஏனைய முழு வருமானத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். குழுவின் உபாயரீதியான முதலீடுகளான வட்டியில்லா பங்குகளின் முதலீடுகள், பாதிப்புகளில் ஏற்பட்ட நஷ்டம் கழிக்கப்பட்டபின் ஏற்படும் செலவினம் மீது கணிக்கப்படுகின்றன. அவற்றின் நியாயபூர்வ பெறுமதியானது நம்பிக்கையான முறையில் மதிப்பிடப்பட முடியாதுள்ளதனால் இவ்வாறு செய்யப்படும்.

2.5.4 **நிதிசார் சொத்துக்கள் பாதிப்படைதல்**

**அ) கடன் ஈடுசெய்தலின் செலவின முறைக்கமைய முன்கொண்டு செல்லப்படும் சொத்துக்கள்**

ஏதாவது நிதி சார்ந்த சொத்தொன்றுக்கு பாதிப்பேற்பட்டிருப்பின் பாதிப்பு ஏற்பட்டுள்ளதென அடிப்படை விடய மூல சான்றுகள் உள்ளக சந்தர்ப்பமொன்றின் போது அறிக்கை செய்யப்படுவதற்கு உட்படும் காலப்பகுதியின் இறுதியில் குழுவினால் அது தொடர்பில் மதிப்பிடப்படுகின்றது. சொத்தொன்றின் ஆரம்ப ஏற்றுக் கொள்ளப்படுதலின் பின்னர் ஏதாவது விடயம் அல்லது பல சம்பவங்களின் பயனாக பாதிப்பு அல்லது அதனால் நஷ்டமேற்பட்டுள்ளதென விடய மூல சான்றுகள் இருப்பின் மாத்திரம் நிதிசார்ந்த சொத்தொன்றுக்கு பாதிப்பு ஏற்பட்டதாக கருதப்படுகின்றது. இங்கு நஷ்டமேற்பட்ட விடயம் அல்லது பல சம்பவங்கள் நிதிசார்ந்த சொத்தின் எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் தொடர்பில் தாக்கமேற்படும் போது அதுவானது நம்பிக்கையூட்டும் வகையில் மதிப்பிடப்படக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவை போன்று காலம் தாண்டும் வரை பொறுப்பேற்கப்படும் முதலீடுகள் கடன் ஈடுசெய்தலின் செலவினத்திற்கேற்ப பேணப்படுவதுடன் நஷ்டத்தின் அளவானது சொத்தில் பேணப்படும் நிதியின் சமனாக மதிப்பிடப்பட்டுள்ள வித்தியாசத்திற்கேற்ப கணிப்பிடப்படுகின்றது. (இதற்கு எதிர்காலத்தில் நடைபெறும் கடன் பாதிப்புகள் உள்ளடங்கப்படமாட்டாது.)

அதேபோன்று மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிதி சார்ந்த சொத்துக்களினது பயனான வட்டி முறை மீது தள்ளுபடி செய்தல் வேண்டும். நிதிசார் பெறுமதியில் பேணப்பட்டு வரும் நிதி கழிக்கப்படுவதுடன் மொத்த வருமானம் பற்றிய கூற்றில் நஷ்டம் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

பிற்காலத்தில் பாதிப்பினால் ஏற்பட்ட நஷ்டம் குறைவடையின் மற்றும் அந்த நஷ்டமானது விடய மூல நிலைக்கேற்ப நஷ்டம் ஏற்பட்ட பின் நடைபெற்ற சம்பவத்துடன் தொடர்புடையதென ஏற்றுக்கொள்ளப்படின் அவ்வாறான சந்தர்ப்பமொன்றின் போது முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதிப்பிலான நஷ்டம் மொத்த வருமான கூற்றில் ஏற்றுக் கொள்ளப்படும்

**(ஆ) விற்பதற்குள்ள பொருட்கள்**

நிதிசார் சொத்துக்களுக்கு பாதிப்பேற்பட்டுள்ளதாக விடய மூல சான்றுகள் இருக்கின்றதாவென அறிக்கை செய்யப்படுதலுக்குட்படும் ஒவ்வொரு காலப்பகுதி முடிவிலும் குழுவினால் மதிப்பீடு செய்யப்படும். விலை குறிப்பிடப்பட்டுள்ள பங்குகளிலான முதலீடுகள் தொடர்பில் நியாய பெறுமதியில் முக்கியமான அல்லது நீண்டகாலமாக அதன் ஆகு செலவிற்குக் குறைந்த சொத்துக்களினது அளவு இருப்பது சொத்துக்கு பாதிப்பு ஏற்படுதலாக கருதப்படும் சான்றாகும். இங்கு குறிப்பிடப்பட்ட முதலீடுகள் தொடர்பில் அவ்வாறான சான்று இருப்பின் இலாபம் மற்றும் நஷ்டம் கணக்கிடப்படுகையில் முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட நஷ்டம் கழிக்கப்பட்டு பொறுப்பேற்றலின் செலவினம் மற்றும் நிகழ்கால நியாயபூர்வ பெறுமதிக்கிடையிலான வித்தியாசம் கருதப்பட்ட சேர்ந்த மீள் வகையீடு செய்தல் ஏற்றுக்கொள்ளப்படும். விலை குறிப்பிட்ட பங்குகளிலான முதலீட்டு ஒப்பந்தத்தில் இலாபம் அல்லது நஷ்டத்தில் பாதிப்பு உள்ளதென, அந்த சந்தர்ப்பத்தில் விற்பதற்குள்ள பொருட்கள் வகையீடு செய்வதற்காக இலாபம் அல்லது நஷ்டத்தின் ஊடாக மீள் வகைப்படுத்தலின் மூலம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இந்த மீள் காட்டப்படும் பணம் ஏனைய மொத்த வருமானம் தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்படும்

விலைகள் குறிப்பிடப்படாத பங்குகளின் முதலீடுகள் தொடர்பில் நியாயபூர்வ பெறுமதியில் முக்கியமான அல்லது நீண்டகாலமாக அதன் ஆகுசெலவுக்குக் குறைந்த சொத்துக்கள் அளவு இருப்பதும் சொத்துக்கு பாதிப்பு ஏற்பட்ட கருதப்படும் சான்றாகும். அவ்வாறான சான்று விலைகள் குறிப்பிடப்படாத முதலீட்டில் இருப்பின் பாதிப்பினால் ஏற்பட்ட நஷ்டமானது நிதிசார் சொத்தில் இருக்கும் நிதி மற்றும் மதிப்பிடப்பட்டுள்ள எதிர்கால காசுப்பாய்ச்சல்களுக்கிடையிலுள்ள வித்தியாசம் கருதப்படுதலில் கணிப்பிடப்படுகின்றது. எதிர்கால காசுப்பாய்ச்சல்களினுள் நிகழ்கால சநதைக் கட்டணத்திற்குத் தள்ளுபடி செய்யப்பட்ட நிதியானது அதற்குச் சமனான நிதிசார் சொத்துக்களாக கருதப்படும். இவ்வாறு பாதிப்பினால் ஏற்பட்ட பாதிப்பானது மீள் வெளிக்காட்டலாக இடம்பெற மாட்டாது.

**2.6 தொகை இருப்புகள்**

ஆகுசெலவிற்கேற்ப தொகை இருப்புப் பொருட்கள் காட்டப்பட்டுள்ளன. முதலில் வந்த முதலில் வழங்கிய (FIFO) முறை அடிப்படையில் ஆகு செலவு தீர்மானிக்கப்படும். கலங்கள், கப்பற்சரக்கு கையாளல் உபகரணங்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள், நுகர்வுப் பொருட்கள் போன்று எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய் போன்றவை பட்டியலிடப்பட்ட பொருட்களில் உள்ளடக்கும். பட்டியலிடப்பட்டுள்ள பொருட்கள் பாவனைக்கன்றி மீள் விற்பனைக்குரியதாக மாட்டாது.

**2.7 வர்த்தக கடனாளிகள்**

கிடைக்கப்பெற வேண்டிய வர்த்தகப் பொருட்கள் என்பது பொதுவான வர்த்தக நடவடிக்கைளின் போது வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்காக

அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிதிகளாகும். வர்த்தகங்கள் கையாளலின் பொதுவான சுற்றின் படி சேர்த்தல்கள் எதிர்பார்க்கப்படுவதுடன் அவை நடைமுறை சொத்துக்களாக வகையீடு செய்யப்படும். ஆரம்பத்தில் கிடைக்கப்பெற வேண்டிய வர்த்தகப் பொருட்கள் கருதப்படுகையில் அதன் நியாயபூர்வ பெறுமதி ஏற்றுக்கொள்ளப்படும். அதாவது இன்வொயிஸில் குறிப்பிடப்பட்ட நிதி மற்றும் பாதிப்புகளுக்கான ஏற்பாடுகள் கழிக்கப்பட்டு ஆரம்ப இன்வோயிஸ் நிதி கணக்கிடப்படும். அந்த நிதி குறுகிய காலத்தினுள் கிடைக்கப்பெறுமென எதிர்பார்க்கப்படுவதனால் இவ்வாறு செய்யப்படுவதோடு அந்த நிதியின் காலத்தின் பெறுமதி இங்கு முக்கியமாகாது.

மீள் கிடைக்கப்பெற வேண்டிய தாமத கொடுப்பனவுகளின் எண்ணிக்கையின் ஆகக் கூடிய கால எல்லை 28 நாட்கள் ஆகும். பாதிப்பொன்று ஏற்பட்டதென ஏதாவது விடய மூல சான்று இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் கிடைக்கப்பெற வேண்டிய வர்த்தகப் பொருட்களில் பாதிப்பேற்பட்டுள்ளதெனவும் அவ்வாறான பாதிப்புகளினால் நஷ்டம் ஏற்பட்டதாகவும் கருதப்படும். முக்கியமான கிடைக்கபெற வேண்டிய வர்த்தகப் பொருட்கள் தனித்தனியாக பாதிப்புகளுக்கு மதிப்பிடப்படும். முக்கியமற்ற கிடைக்கப்பெற வேண்டிய வர்த்தகப் பொருட்கள் தொடர்பில் ஒன்றிணைந்த அடிப்படையின் மீது பாதிப்புகள் மதிப்பிடப்படும்.

கிடைக்கப்பெற வேண்டிய வர்த்தகப் பொருட்கள் தொடர்பான பாதிப்புகள் மதிப்பிடப்படுகையில் பின்வரும் மாதிரி மற்றும் அடிப்படை பயன்படுத்தப்படுகின்றது.

**(அ) தனித்தனியாக மதிப்பிடப்படும் மாதிரி பாதிப்பினால் ஏற்பட்ட நஷ்டம் கணக்கிடப்படுவதற்காக பின்வரும் கிடைக்கப்பெற வேண்டிய வர்த்தகப் பொருட்கள் வகை தனித்தனியாக மீளாய்வு செய்யப்படுகின்றது.**

| | | | |
|---|---|---|---|
| I. | இலங்கை படைகள் | 12 மாதங்கள் வரை | ஏற்பாடுகள் இல்லை |
| | | 12 மாதங்களின் பின்னர் | 100% |
| II. | அரசாங்க நிறுவனங்கள் | 12 மாதங்கள் வரை | ஏற்பாடுகள் இல்லை |
| | | 12 மாதங்களின் பின்னர் | 100% |
| III. | சட்ட நடவடிக்கைகளுக்குட்பட்டுள்ள கப்பல்கள் | - | 100% |
| IV. | கப்பல் முகவர்கள்- தற்காலிகமாக தடைசெய்யப்பட்டுள்ள மற்றும் செயலிழந்த | - | 100% |
| V. | கப்பல் முகவர்கள் - விசேட வாடிக்கையாளர்கள் - பாதிப்பு தொடர்பில் விடய மூல சான்றிருப்பின் மாத்திரம் 100 % ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன | | |

**(ஆ) ஒன்றிணைந்த மதிப்பீட்டு மாதிரி: பாதிப்பினால் ஏற்பட்ட நஷ்டம் கணிப்பிடப்படும் போது பின்வருமாறு கிடைக்கப்பெற வேண்டிய வர்த்தகப் பொருள் வகை ஒன்றாக மீளாய்வு செய்யப்படுகின்றது**

| | **அடிப்படை** | |
|---|---|---|
| கப்பல் முகவர்கள்- விசேடமில்லாத வாடிக்கையாளர்கள் | 12 மாதங்கள் வரை | ஏற்பாடுகள் இல்லை.<br>பாதிப்பு தொடர்பில் விடய மூல சான்று இருப்பின் மாத்திரம் 100% ஏற்பாடு வழங்கப்பட்டுள்ளது. |

**2.8 காசு மற்றும் காசு சம மதிப்புகள்**

கையிருப்பிலுள்ள காசு, வங்கிகளிலுள்ள வைப்புகள், அடிப்படை காலப்பகுதி மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைந்த காலம் கொண்ட குறுகிய கால உயர் மட்ட ஒப்புரவு முதலீடுகள், காசுப் பாய்ச்சல் சம்பந்தப்பட்ட ஒன்றிணைந்த கூற்றில் காசு மற்றும் காசு சம மதிப்புகளுக்குரியதாகும்.

**2.9 ஈடுபடுத்தப்பட்ட மூலதனம்**

மூலதனம் என்பது கொழும்பு துறைமுக ஆணைக்குழு, துறைமுக கப்பற்சரக்கு கூட்டுச் சபை, துறைமுக ஒத்துப்பார்த்தல் பாதுகாப்பு சேவைக் கூட்டுத்தாபனம் போன்றவற்றிற்கு சொந்தமாகவிருந்து இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு மாற்றப்பட்டு பொறுப்பளிக்கப்பட்ட சகல சொத்துக்களுக்குரிய நிதியங்களிலுள்ள பணம், அனைத்து கடன்கள், பொறுப்புக்கள் மற்றும் பிணைப்புக்கள் அடங்கிய அசையும் மற்றும் அசையாத சொத்துக்களும் ஆகும்.

**2.10 நிதிசார்ந்த பொறுப்புக்கள்**

குழுவினால் நிதிசார்ந்த பொறுப்புக்கள் வேறு நிதிசார் பொறுப்புக்களின் மீது வகையீடு செய்யப்பட்டுள்ளது. கடனுக்குப் பெறப்பட்ட பொருட்கள் மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவை ஏனைய நிதிசார்ந்த பொறுப்புக்களினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஏனைய நிதிசார் பொறுப்புக்கள் ஆரம்ப சந்தர்ப்பத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவது நியாயபூர்வ பெறுமதி மற்றும் ஆகுசெலவு கொடுக்கல் வாங்கல்களுக்கு நேரடியாக தொடர்புபடும் பொருட்களுடனாகும். பூர்வாங்கமாக அடையாளங்காணப்பட்ட விடயங்களுக்குப் பின்னர் நடைமுறையிலுள்ள வட்டி முறை பயன்படுத்தப்பட்டு இந்த கடன் தொகை குறிப்பிட்ட காலப்பகுதியினுள் சீர் செய்யப்படுவதற்காக இந்த நிதிசார் பொறுப்புக்களுக்கு கணிப்பிடப்படுகின்றன. ஒப்பந்தத்தின் மீதான பிணைப்புக்கள் விடுவிக்கப்படுகையில் அல்லது இரத்துச் செய்யப்படுகையில் அல்லது காலாவதியானதும் குழுவினால் நிதிசார் பொறுப்பாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**2.11 வர்த்தக மற்றும் செலுத்தப்பட வேண்டிய ஏனைய பொருட்கள்**

வர்த்தக மற்றும் செலுத்தப்பட வேண்டிய ஏனைய பொருட்கள் என்பது பொதுவான வர்த்தக நடவடிக்கைகளில் வழங்குநர்களிடமிருந்து பெறப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான செலுத்துதல்கள் மீள் செலுத்துதல்களாகும். வர்த்தகமொன்றின் பொதுவான கையாளல் சுற்றுப் போன்று வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டிய பொருட்கள் நடைமுறை பொறுப்புக்களாக வகையீடு செய்யப்பட்டுள்ளது.

வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டிய பொருட்கள் ஆரம்பமாக நியாயமான விலைகளுக்கேற்ப அடையாளங் காணப்படுகின்றது. அதாவது கொடுக்கல் வாங்கல்களிலும்

ஆரம்ப இன்வோயிஸூக்குரிய நிதியும் பிற்காலத்தினுள் கணக்கிடப்படுதலாகும். இந்நிதி குறுகிய காலத்தினுள் செலுத்தப்பட எதிர்பார்க்கப்படுவதோடு பணத்தின் காலப் பெறுமதி இங்கு முக்கியமற்றது.

**2.12 கடன் பெறுதல்கள்**

துறைமுக அரசாங்கம் மற்றும் நிதிசார் நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட துறைமுக அபிவிருத்தி கடன் தொகைகள் கடன் பெறப்பட்ட பொருட்களாக குழுவில் உள்ளடக்கப்படும். கடனுக்குப் பெறப்பட்டுள்ள பொருட்கள் ஆரம்ப சந்தர்ப்பத்தில் நியாயபூர்வ விலைக்கமைய ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் செலவு செய்யப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களின் ஆகுசெலவு அதன் தூய பெறுபேறாகும். கடனுக்குப் பெறப்பட்ட பொருட்கள் தொடர்பில் நடைமுறையிலுள்ள வட்டி முறை பயன்படுத்தப்பட்டு கடன் தொகை முறையாக சீர்செய்யப்படுதலின் மூலம் பிற்காலத்தில் முன் கொண்டு செல்லப்படுகின்றது. மிதக்கும் கட்டணத்திற்கேற்ப பெறப்படும் கடன் தொகை அறிக்கை செய்யப்படுதலுக்குட்படும் காலப் பகுதியின் இறுதியில் நடைமுறையிலிருக்கும் வட்டி வகிதம் அதாவது மிதக்கும் வட்டி கட்டணம் பயன்படுத்தப்பட்டு கடன் தொகை ஏதாவதொரு காலப்பகுதியினுள் செலுத்தி முடிக்கப்பட்டதன் பின்னர் கணக்கிடப்படும்.

கடன் தொகை பெறும் வசதிகள் ஆரம்பிக்கப்படுகையில் இருக்கும் கடன் தொகை தயார் செய்யப்படுதலின் கட்டணம், அமைப்பு ரீதியான கட்டணம், தயார் செய்தலின் கட்டணம் மற்றும் முகாமைத்துவக் கட்டணம் போன்றவை கடன் தொகை பெறப்படும் ஆகுசெலவு கட்டணமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

அறிக்கையிடலுக்கு உட்படும் காலப் பகுதியின் இறுதியில் கடன் தொகை குறிப்பிட்ட காலத்தினுள் செலுத்தப்படுவதற்கு செலவாகும் செலவினம் முன் கொண்டு செல்லப்படுதல் கணிப்பீடு செய்யப்படுவது கொடுக்கல் வாங்கல்களில் எழும் வெளிநாட்டு நாணய இலாபம் மற்றும் நஷ்டம் மீதாகும். இவை மொத்த வருமான கூற்றில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**2.13 கடன் பெற்றுக்கொள்ளலின் ஆகுசெலவு**

கடன் பெற்றுக்கொள்ளலின் ஆகுசெலவானது பொறுப்பேற்றல் மற்றும் பெறுமதியான சொத்துக்களின் நிர்மாணம் தொடர்பில் நேரடியாகத் தொடர்புபடுகின்றது. இந்த சொத்துக்கள் அவை எதிர்பார்க்கப்படும் பணிகளுக்காக குறிப்பிடத்தக்க காலம் செல்லும் மேலும் இவை அந்த சொத்துக்களினது ஆகுசெலவில் சேர்க்கப்படுவதோடு அந்த சொத்துக்கள் அவை பயன்படுத்தப்பட எதிர்பார்க்கும் பணிகளுக்காக முடியுமானளவு பயன்பெற காலம் செல்லும்.

ஏனைய சகல கொள்வனவு செய்தலின் ஆகுசெலவானது நிறைவுபெற்ற வருமான கூற்றில் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு இவை தொடர்பில் செலவு செய்யப்பட்ட காலம் கணக்கிடப்படும்.

**2.14 அரசாங்க உதவிக் கொடுப்பனவுகள்**

நிதி அல்லாத உதவிக் கொடுப்பனவுகள் அடங்கலான அரசாங்க உதவிகள் நியாயமான பெறுமதிக்கமைய ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் அந்த உதவிகள் பெற்றுக்கொள்ளப்படுதலின் பின்னர் குழுவினால் சம்பந்தப்பட்ட நிபந்தனைகள் அனுசரிக்கப்படுகின்றனவெனும் நியாயமான சான்றுபடுத்தல் இருக்கும் சந்தர்ப்பமொன்றின் போது அவ்வாறு செய்யப்படும்.

ஆகுசெலவுக்குரிய அரசாங்க உதவிக்கொடுப்பனவுகள் பின்னுரிமை செய்யப்படுவதோடு பூரண வருமான கூற்றின் மூலம் ஏற்றுக் கொள்ளப்படும். இதுவானது நஷ்டஈடு செலுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கும் ஆகுசெலவுக்கு ஏற்றவாறு உரிய காலத்தில் கவனத்திலெடுக்கப்படும்.

சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்களுக்குரிய அரசாங்க உதவிக்கொடுப்பனவுகள் அரசாங்கத்தினால் ஒத்தி வைக்கப்பட்ட உதவிக்கொடுப்பனவுகளாக

நடைமுறை சாராத வரவுகளில் சேர்க்கப்படும் . இவை பூரண வருமான கூற்றில் அந்த வருமான சொத்துக்களில் எதிர்பார்க்கும் ஆயுட்காலம் அடிப்படையிலான நேர் கோடாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

நிதிசாராத உதவிக் கொடுப்பனவுகள் நிதிசாராத சொத்துக்களினது நியாயபூர்வ விலைகளுக்கமைய கணக்கிடப்படுவதோடு கொடுப்பனவுகள் மற்றும் சொத்துக்களின் நியாயபூர்வ பெறுமதி கணக்கு வைக்கப்படுகின்றது.

**2.15 நடைமுறை மற்றும் பின்னுரிமை வரிப் பொறுப்புக்கள்**

உரிய காலப்பகுதியின் வரிகளுக்காக செலவு செய்யப்படும் நிதியோடு ஒன்றுசேர்க்கப்படுகின்றது. ஏனைய பூரண வருமானங்களில் ஏற்றுக்கொள்ளப்படும் விடயங்களுக்குரிய அளவு தவிர்ந்த பூரண வருமான கூற்றில் வரிகள் ஏற்றுக்கொள்ளப்படும். இந்த சந்தர்ப்பத்தில் வேறு பூரண வருமானம் ஏற்றுக்கொள்ளப்படுகையில் வரியும் ஏற்றுக்கொள்ளப்படும்.

தற்போது அமுலிலிருக்கும் வருமான வரிக் கட்டணங்கள் அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் முடிவில் வரிச் சட்டம் அடிப்படையில் கணக்கிடப்படும். அதன்போது அதிகாரசபையுடன் தொடர்புடைய துணை நிறுவனங்கள் மற்றும் உழைக்கும் வரி செலுத்தக்கூடிய வருமானம் கணக்கிடப்படும். அதிகாரங்களுக்கு வரி செலுத்தப்பட எதிர்பார்க்கும் நிதி தகுந்தவாறு முகாமைத்துவத்தினால் நிர்வகிக்கப்படும்.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களினது வரி அடிப்படை மற்றும் அவை நிதிசார் கூற்றுக்களில் முன்கொண்டு செல்லப்படுகையின் மாற்றத்தின் மூலம் எழும் தற்காலிக ஏற்றத்தாழ்வுகளின் மீது பின்னுரிமை வரிப் பொறுப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். சொத்தொன்றின் அல்லது வரியொன்றின் அடிப்படை அங்கீகரித்தலில் எழும் சந்தர்ப்பங்களில் பின்னுரிமை வரிப் பொறுப்புக்கள் கணிப்பிடப்பட மாட்டாது. மேலும் கொடுக்கல் வாங்கல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் வர்த்தக தொடர்பு தவிர்ந்த ஏனைய கொடுக்கல் வாங்கல் கணிப்பிடல் அல்லது செலுத்த வேண்டிய வரி அல்லது நட்டம் கணிப்பிடப்படுதலுடன் தொடர்புபடும் அறிக்கை செய்யப்படுதலுக்கு உட்படும் காலப்பகுதியின் முடிவில் சட்ட உரிமையாக்கப்பட்ட வரி அளவுகள் பயன்படுத்தப்பட்டு பின்னுரிமை வரிப் பொறுப்புக்கள் கணிப்பிடப்படும். உரிய பின்னுரிமை வரிப் பொறுப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் போது அல்லது பின்னுரிமை வரிப் பொறுப்புக்கள் முடிவுற்றதன் பின்னர் இவ்வாறு பயன்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும். எதிர்கால வரிகளில் கிடைக்கப்பெறும் இலாபம் தற்காலிக மாற்றங்களுக்கு தாக்கம் ஏற்படுத்தும் போது பின்னுரிமை வரிப் பொறுப்பு சொத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

சட்டரீதியாக செயற்படுத்தக்கூடிய உரிமையொன்று இருக்கையில் பின்னுரிமை வரிச் சொத்துப் பொறுப்புக்கள் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்படும். தற்போது இருக்கும் வரிப் பொறுப்புக்கள் மற்றும் வருமானத்திற்கு பின்னுரிமை வரிச் சொத்துக்கள் பொறுப்புக்கள் அந்த வரி அதிகாரங்களினால் அமுல்படுத்தப்பட்டிருக்கையில் இவ்வாறு செய்யப்படும்.

**2.16 ஊழியர்களுக்கான அனுகூலங்கள்**

குழுவினால் அனுகூலங்கள் மற்றும் சம்பந்தப்படும் கொடுப்பனவு முறை தொடர்பில் வரைவிலக்கணம் வழங்கப்பட்டுள்ளது.

**அ) வரைவிலக்கணம் வழங்கப்பட்டுள்ள பங்களிப்புத் திட்டம்**

வரைவிலக்கணம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் திட்டமானது பின்னரான சேவை அனுகூல திட்டமொன்றாக இருப்பதோடு இதன் கீழ் குழுவினால் வேறு நிறுவனமொன்றுக்கு குறிப்பிட்ட கொடுப்பனவு செலுத்தப்படுகின்றது. மேற்கொண்டு செலுத்தப்படுவதற்கான சட்டரீதியான அல்லது ஏனைய குறிப்பிட்ட பொறுப்புக்கள்

நிறைவேற்றுவதற்கு குழு பொறுப்பு வகிக்காது. இந்த நிதி செலுத்தப்பட்ட வேண்டிய காலம் வரும்போது ஊழியர்களின் அனுகூலமாக இக்கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளப்படும். குழுவினால் ஊழியரின் மொத்தச் சம்பளத்தில் 15% ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் 3% ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் செலுத்தப்படும்.

**ஆ) வரைவிலக்கணம் வழங்கப்பட்டுள்ள அனுகூல திட்டம்**

அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் முடிவில் இருக்கும் வரைவிலக்கணமளிக்கப்பட்டுள்ள அனுகூல திட்டத்தின் தற்போதைய பெறுமதியானது குழுவின் பொறுப்பாகவிருக்கும், வரைவிலக்கணமளிக்கப்பட்ட அனுகூல திட்டமானது வீச்சு அலகு முறை பயன்படுத்தப்படும் சுயாதீனமாக தயாரிக்கப்பட்ட பெறுமதி மூலம் வருடாந்தம் கணிப்பிடப்படுகின்றது. ஊழியரினால் நிகழ்கால மற்றும் சென்ற காலப்பகுதிக்கான சேவைகளுக்காக உழைக்கப்பட்ட மதிப்பிடப்பட்டுள்ள எதிர்கால அனுகூலங்கள் கழிக்கப்படுவதன் மூலம் அனுகூல பொறுப்பின் நிகழ்கால பெறுமதி நிர்ணயிக்கப்படுகின்றது.

அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் இறுதியில் 2011 டிசெம்பர் 31 ஆந் திகதி மற்றும் நகர்ந்து செல்லும் காலப்பகுதி முறை பயன்பாட்டில் சேவையில் சேர்க்கப்பட்டுள்ள நிறுவனத்தின் வரைவிலக்கணமளிக்கப்படும் அனுகூல பொறுப்பு கணிப்பிடப்படுகின்றது.

அனுபவரீதியான சீர்செய்தல்கள் மற்றும் ஆயுள் கணிப்புகை வழிகாட்டல்களின் மாற்றங்களினால் எழும் ஆயுள் கணிப்புவகை கிடைக்கப்பெறுதல்கள், நட்டங்கள் அவை தொடர்படும் மொத்த வருமானக் கூற்றில் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஓய்வு பெறுதலின் பொறுப்புகளுக்கு வெளியிலிருந்து கிடைக்கப்பெறும் நிதி பயன்படுத்தப்பட மாட்டாது.

**இ) குறுகிய கால ஊழியர் அனுகூலம்**

ஊழியரினால் சம்பந்தப்பட்ட சேவைகளுக்கு வழங்கும் நிதி கழிக்கப்படுவதன் மூலம் குறுகிய கால ஊழியர் அனுகூல பொறுப்புக்கள் கணிக்கப்படுகின்றன.

**2.17 ஏற்பாடுகள் மற்றும் சடுதியான பிணைப்புகள்**

அளவுரீதியான குறைத்தல்கள், சட்டரீதியான வேண்டுகோள் மற்றும் ஏனைய செலவினங்களுக்கான ஏற்பாடுகள் ஏதாவதொரு சென்றகால நிகழ்வொன்றின் பயனாக சட்டரீதியானதும் பிரயோசனமுள்ளதனாலும் பொறுப்பாக ஏற்றுக்கொள்ளப்படும். அந்த நிதியானது நம்பிக்கையூட்டும் வகையில் மதிப்பிடப்படுவதன் மூலம் குழுவிற்குரிய பொருளாதார வளங்கள் வெளியே செல்லப்பட முடியும்.

அறிக்கை செய்யப்படும் திகதிக்குரிய மிகவும் நம்பிக்கையான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நிகழ்கால பொறுப்புக்கள் செழுமையாக்கப்படுவதற்குத் தேவையான மதிப்பிடப்படும் செலவுக்கான ஏற்பாடுகள் கணிப்பிடப்படும். மேலும் நிகழ்கால பொறுப்புக்கள் தொடர்பான இடர்நேர் மற்றும் நிச்சயமற்ற சந்தர்ப்பங்களும் இதனுள் அடங்கும். வளங்கள் வெளியே செல்லலின் தன்மை இல்லையெனில் அனைத்து சடுதியான பொறுப்புக்கள் நிதிசார் கூற்றுக்களின் குறிப்பில் காட்டப்படும்.

**2.18 வருமானம் இனங்கானுதல்**

கிடைக்கப்பெற்றுள்ள அல்லது கிடைக்கப்பெறக் கூடிய சாத்தியத்திற்குரிய நியாயமான பெறுமதி வருமானம் கணக்கிடப்படுகையில் கவனத்திற்கொள்ளப்படும் இவ்வாறான நிறைவேற்றப்பட்ட சேவைகளுக்காக கிடைக்கப்பெற வேண்டிய நிதியானது. கழிக்கப்பட வேண்டிய தூய நிதிப் பெறுமானத்தில் சேர்க்கப்பட்ட வரி மற்றும் தேச நிர்மாண வரி போன்ற

விடயங்களின் கீழ் இவை குறிப்பிடப்பட்டுள்ளன. வருமானத்திற்குரிய நிதி நம்பிக்கையூட்டும் வகையில் கணிப்பிடப்படுவதன் மூலம் எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் குழுவை நோக்கிச் செல்லும் நிலையில் குழுவினால் வருமானம் ஏற்றுக்கொள்ளப்படும்.

வருமானம் ஏற்றுக்கொள்ளப்படும் பின்வரும் வழிகாட்டல்கள் ஒவ்வொரு அடையாளங் காணப்படும் சேவைகளின் வகைகளுக்கேற்ப பயன்படுத்துதல் குழுவினால் அனுசரிக்கப்படும்.

**அ) தரையிறக்கல் மற்றும் ஒப்படைத்தல் சேவைகள்**

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிப் பொருட்களின் கையாளல் தொடர்பில் இக்குழுவினால் ஏற்றுதல் , இறக்குதல் களஞ்சியப்படுத்தல் போன்ற சேவைகள் நிறைவேற்றப்படுகின்றது. இந்த சேவைகள் விற்பனை சம்பந்தப்பட்ட வருமானம் அவை நிறைவேற்றப்பட்ட காலப்பகுதிக்கேற்ப கணிப்பிடப்படுகின்றது. மேலும் பூர்த்தி செய்யப்பட்ட பணி அல்லது கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற சேவைகள் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன.

**ஆ) கப்பலோட்டம் மற்றும் தொடர்புபடும் சேவைகள்**

இலகுவான சேவைகள், நுழைவுக் கட்டணம் , காலாவதியாகும் கட்டணம், வழிகாட்டிக் கட்டணங்களிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானம் அவை கிடைக்கப்பெறும் இடத்திற்கேற்ப அடையாளம் காணப்படுகின்றது. அதாவது கப்பல் வருகை தரும் இடமாகும். அந்த சேவைகள் நிறைவேற்றப்பட்ட காலப்பகுதிக்கேற்ப கப்பலோட்டம் மற்றும் தொடர்புபடும் சேவைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் ஏற்றுக்கொள்ளப்படும் சம்பந்தப்பட்ட பணி அல்லது கொடுக்கல் வாங்கல் நிறைவடைதலின் மீதும் நிறைவேற்றப்பட்ட குறிப்பிட்ட சேவைகள் மதிப்பிடப்படுதலின் அடிப்படையிலும் இது அமைந்திருக்கும்.

**இ) கப்பல் சுமை**

கொள்கலன் மற்றும் மரபுரீதியான கையளால் சேவைகளுடன் தொடர்புடைய கப்பல் சுமை வருமானம் ஏற்றுக்கொள்ளப்படும் அந்த சேவைகள் நிறைவேற்றப்பட்ட காலப்பகுதிக்கேற்பவாறு சம்பந்தப்பட்ட பணி அல்லது கொடுக்கல் வாங்கல் நிறைவடைதலின் மீதும் நிறைவேற்றப்பட்ட குறிப்பிட்ட சேவைகள் மதிப்பிடப்படுதலின் அடிப்படையிலும் இது அமைந்திருக்கும்.

**ஈ) அரச இறைமைக் கட்டண வருமானம்**

உரிய உடன்பாட்டில் ,அடங்கிய ஏற்பாடுகளுக்கேற்ப அவை ஒன்றுசேரும் அடிப்படையின் மீது அரச இறைமைக் கட்டண வருமானம் ஏற்றுக்கொள்ளப்படும். மொத்த பொருளாதார கொள்கலன் அளவு தொடர்பில் உடன்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்காக உடன்பட்ட இருபது சம அலகுகளின் கட்டணங்களுக்கேற்ப எஸ்.ஏ.ஜீ.ரீ முனைய நிறுவனத்திலுருந்து கிடைக்கப்பெறும் இறைமைக் கட்டணம் நிர்ணயிக்கப்படும்.

**உ) வட்டி வருமானம்**

பயனான வட்டி முறை பயன்பாட்டின் மீதான வட்டி வருமானம் ஏற்றுக்கொள்ளப்படும்.

**ஊ) பங்கிலாப வருமானம்**

கொடுப்பனவு கிடைக்கப்பெறுதல் பற்றியதான உரிமை நிலைநிறுத்தப்பட்டதன் பின்னர் பங்கிலாப வருமானம் ஏற்றுக்கொள்ளப்படும்.

**ஏ) வரி மற்றும் வாடகை வருமானம்**

முதலீட்டுச் சொத்துக்களிலிருந்து கிடைக்கப்பெறும் வரி மற்றும் வாடகை வருமானம், வரி காலப்பகுதியினுள் ஒன்று சேர்ந்த நிதி அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்படும்.

**ஏ) சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்கள் விற்கப்படுகையில் கிடைக்கப்பெறும் இலாப நஷ்டங்கள்**

முன்கொண்டு செல்லப்படும் நிதியோடு திருத்தம் செய்யப்பட்டதன் முழு வருமானம் பற்றிய கூற்றில் ஏற்றுக்கொள்ளலிற்கு அமைய இவ்வாறான விற்கப்படுகையில் கிடைக்கப்பெறும் இலாபம் அல்லது நஷ்டம் நிர்ணயிக்கப்படும்.

**2.19 செலவினம்**

கையாளல் மேற்கொள்ளப்படுகையில் ஏற்படும் அனைத்து செலவினங்கள் அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் இலாபத்தினுள் ஒன்று சேர்க்கப்படும்.

**2.20 நிதிசார் பொறுப்புக்களிலான பிணைப்புக்கள்**

அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் இறுதியில் அனைத்து நிதிசார் பொறுப்புக்கள் பற்றியதிலான பிணைப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்ட குறிப்பிடப்பட்டுள்ளன.

**2.21 கருத்துரைத்தல்**

அனைத்து திணிபுகளினது பொறுப்புக்கள் அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியினுள் இனங்காணப்பட்டுள்ளதோடு அவை நிதிசார் கூற்றுக்களின் குறிப்புகளில் காட்டப்பட்டுள்ளன.

**2.22 முக்கிய கணக்குகளின் மதிப்பிடல்கள் மற்றும் தீர்மானங்கள்**

நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையின் போது முகாமைத்துவத்தினால் சொத்துக்கள்,பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம் கணிக்கப்படுதல், ஏற்றுக்கொள்ளப்படுதலில் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் வழிகாட்டிகள் கவனத்திலெடுக்கப்படுகின்றன.

2.22.1 பின்வருவன நிதிசார் கொள்கைகள் பயன்படுத்தப்படுகையின் சில முக்கியமான தீர்மானங்கள் ஆகும். இவை நிதிசார் கூற்றுக்களில் முக்கிய தாக்கம் ஏற்படுத்தும்.

**(அ) பின்னுரிமை வரிச் சொத்துக்கள் ஏற்றுக்கொள்ளல்**

எதிர்கால வரிகளுக்குட்படக் கூடிய வருமானத்தின் சாத்தியத்தன்மை மதிப்பீடு செய்தல் மற்றும் பின்னுரிமை வரிச் சொத்துக்கள் பயன்டுத்தலின் அடிப்படையாகும்.

2.22.2 சொத்துக்கள்,பொறுப்புக்கள், செலவினம் ஏற்றுக் கொள்ளல் மற்றும் கணித்தலின் மீது ஏற்படும் மதிப்பீடுகள் மற்றும் வழிகாட்டிகள் பற்றியதான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) தேய்மான சொத்துக்கள் பற்றியதான பயனான ஆயுட்காலம்**

முகாமைத்துவத்தினால் அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியினுள் தேய்மானமடையும் சொத்துக்களினது பயனான ஆயுட்காலம் மதிப்பிடப்படுதல் மீளாய்வு செய்யப்பட்டது. சொத்துக்களினது எதிர்பார்க்கும் பொருளாதார பயன்பாடு மீது இது அமைந்திருக்கும். இந்த மதிப்பிடல்களின் நிச்சயமற்ற தன்மை தொழில்நுட்ப காலப்பகுதிகளுடன் தொடர்புபடும். இந்த

தொழில்நுட்ப காலப்பகுதிக்கமைய காலாவதியாகும் மென் பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்களினது பயன்பாடு மாற்றமடையலாம்.

**(ஆ) வரைவிலக்கணமளிக்கப்பட்ட அனுகூல திட்டம்**

வரைவிலக்கணமளிக்கப்பட்ட அனுகூல திட்டத்தின் பொறுப்புக்களினது நிகழ்கால பெறுமதியானது பல காரணிகளின் மீது தங்கியுள்ளது. பல வழிகாட்டல்கள் பயன்படுத்தப்பட்டு ஆயுள் கணிப்பு அடிப்படையில் இது நிர்ணயிக்கப்படுகின்றது. தள்ளுபடி கட்டணங்கள் அடங்கலாக வரைவிலக்கணமளிக்கப்பட்ட அனுகூல திட்டத்தின் தூய ஆகுசெலவு மற்றும் பொறுப்பு நிர்ணயிக்கப்படுகையின் இந்த வழிகாட்டலின் போது பயன்படுத்தப்படும். இந்த வழிகாட்டல்களின் சில மாற்றங்களின் மீது வரைவிலக்கணமளிக்கப்பட்ட அனுகூல பொறுப்பின் முன்கொண்டு வரப்படும் நிதித் தொகை மாற்றமடையலாம்.

## 2.23 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRS/LKAS) அறிமுகம் செய்தல்

2012 டிசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் இறுதியில் சம்பந்தப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப தயாரிக்கப்பட்டுள்ளன. இதுவானது முதல் தடவையாக தயாரிக்கப்பட்ட ஒன்றிணைந்த நிதிசார் கூற்றுக்களாகும். 2011 டிசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் அறிக்கை செய்யப்படும் காலப்பகுதி வரையிலான காலம் அடங்கலாக முற்கால அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் நிதிக் கூற்றுக்கள், 2011.01.31 ஆந் திகதி வரை நடைமுறையிலிருந்த இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப இலங்கை துறைமுக அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்டன.

இந்த நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையின் போது நிதி நிலைமைக்குரிய முதலாவது கூற்றுக்கள் 2011 சனவரி 01 ஆந் திகதிக்கே தயாரிக்கப்பட்டன. இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்குப் பிரவேசிக்கும் திகதியாக கருதப்படுகின்றது. 2011.01.31 இருந்து 2011 டிசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் இ.க.நி,. நிதிசார் கூற்றுக்கள் இ.க.நி விதிமுறைகளின் நிதி கூற்றுக்களுக்கு மீள் தயாரிக்கப்படுகையின் பிரகடனப்படுத்தப்படுகையில் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க சீர்செய்தல்கள் பின்வரும் குறிப்பில் விபரிக்கப்படுகின்றன.

### 2.23.1 ஏனைய இ.க.நி.விதிமுறை பாவனையில் ஏற்படும் மாற்று அறவீடு வரிகளிலிருந்து விலக்களித்தல்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப பூர்வாங்க ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் ஏனைய இலங்கை கணக்கீட்டு நியம விதிமுறை பாவனையின் பின்வரும் மாற்று அறவீடு வரிகளிலிருந்து விலக்களிக்கப்படுவதற்கு குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**அ) கருதப்படும் ஆகுசெலவின் நியாய பெறுமானம் அல்லது மீள் அளவின் பெறுமானமாக**

2011 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் இ.க. நியமங்களுக்கேற்ப இலங்கை துறைமுக அதிகாரசபையின் சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்கள் மீள் அளவின் பெறுமானத்திற்கமைய நிதிக் கூற்றின் நிலை மீள்அளவின் பெறுமானத்திற்கு தயாரிக்கப்பட்டது. மீள் அளவு திகதியின் நியாய பெறுமதி விரிவாக ஒப்பிடக் கூடியதால் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் இந்த மீள் அளவின் பெறுமதிகள் மீள்அளவின் திகதி, கருதப்படும் ஆகு செலவாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**ஆ) முதலீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்களின் கருதப்படும் ஆகுசெலவின் நியாய பெறுமானம் அல்லது மீள் அளவின் பெறுமானமாக**

2011 டிசெம்பர் 31 அந் திகதிக்கு முன்னர் இ.க.நியமங்களுக்கமைவாக நிதி நிலைமை கூற்றின் மீள் அளவின் பெறுமானத்திற்கேற்ப இலங்கை துறைமுக அதிகாரசபையின் முதலீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்கள் கணக்கிடப்பட்டுள்ளன. மீள் அளவின் திகதிக்கு நியாய பெறுமானம் விரிவாக ஒப்பிடக் கூடியதாகவுள்ளதால் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் இந்த மீள் அளவின் பெறுமானங்கள் மீள் அளவின் திகதிக்கு, கருதப்படும் ஆகுசெலவாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**இ) இணைந்த கம்பெனிகளிலும் துணைக் கம்பெனிகளிலும் முதலீடுகள்**

இணைந்த கம்பெனிகளிலும் துணைக் கம்பெனிகளிலும் முதலீடுகள் கணிக்கப்படுதல் மற்றும் கணக்கினூடானது ஏனைய நிதிக் கூற்றுக்களின் இ.க.நியமங்கள் 02 கேற்ப மேற்கொள்ளப்பட்டது.

**ஈ) முன் அடையாளங் காணப்பட்ட நிதி சார்ந்த ஆவணங்கள் நிச்சயப்படுத்திக் கொள்ளல்**

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு மாறிய திகதிக்கு நீண்ட காலம் குறிப்பிட்டதும் குறிப்பிடப்படாததுமான உரிமைத்துவ ஆவணங்கள் குழுவினால் விற்பதற்குள்ள முதலீடுகளாக நிச்சயிக்கப்பட்டுள்ளன.

**2.23.2 பின்வரும் மாற்று அறவீடு வரி விலக்களிக்கப்படுகையில் குழுவிற்கு தாக்கம் ஏற்படாது**

அ) இ.க.நி விதிமுறைகள் 4 (SLFRS- 4 ) - காப்புறுதி ஒப்பந்தங்கள் இதன் பாவனை குழுவிற்கு தாக்கத்தை ஏற்படுத்தாது

ஆ) க.நி விதிமுறைகள் கோவை 4 (IFRIC– 4 ) தயாரித்தலுக்கான ஏற்பாடுகள் (Arrangement) குத்தகை வாடகை இருக்கின்றதாவென தீர்மானித்தல். குழுவிற்கு அவ்வாறானதொரு திட்டமொன்று இல்லாததால்

இ) இ.க.நி 19 - ஊழியர் அனுகூலங்கள் (LKAS – 19) குழுவினால் விபரமான வருமானக் கூற்றில் ஆயுட் கணிப்பீடுகளின் கிடைக்கப்பெறுதல்கள் மற்றும் நஷ்டங்கள் இனங்காணுவனால்

ஈ) இ.க.நி 21 - (LKAS – 21) ஒட்டுமொத்த மொழிபெயர்ப்புகளின் வித்தியாசங்கள் குழுவிற்கு சொந்தமாக வெளிநாட்டு இயக்கம் இல்லாதபடியினால்

உ) உப கம்பெனிகள், துணைக் கம்பெனிகள் மற்றும் கூட்டு வர்த்தகங்களின் சொத்துக்கள், பொறுப்புக்கள், உப கம்பெனிகள் மற்றும் துணைக் கம்பெனிகள் இ.க.நியமங்கள் (SLARS) இ.க.நி. விதி முறைகளுக்கு (SLFRS's) மாற்றியதால்.

ஊ) இ.க.நியமங்கள் 32 - (LKAS – 32) நிதிக் கூற்றுக்களின் திரட்டு குழுவிற்குச் சொந்தமாக நிதிக் கூற்றுக்களின் திரட்டு இல்லாததால்.

எ) சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்களினது ஆகுசெலவில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் நிறுத்தப்படுவதற்கான பொறுப்புகள் அகற்றுதல் மீளமைக்கப்படுகையின் செலவினம் அதற்குரிய பொறுப்புக்கள் காண்பதற்கும் குழுவிற்குச் சொந்தமான முறைமையொன்று இல்லாதிருத்தல்.

ஏ) ச.க.வி.கொ - 12 (IFRIC) சேவை வசதிகள் வழங்கல் குழுவிற்கு அவ்வாறானதொரு திட்டம் இல்லாதிருத்தல்.

**2.23.3. ஏனைய இ.க.நி விதிமுறைகளின் பாவனையில் ஏற்படும் அத்தியாவசிய அறவீடுகளிலிருந்து விலக்களித்தல்**

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப பூர்வாங்க ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் ஏனைய இலங்கை கணக்கீட்டு நியம விதி முறைகள் (SLFRS's) பயன்படுத்துகையில் குழுவினால் பின்வரும் அறவீடு வரிகளிலிருந்து விலக்களிக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**அ) கணக்கீட்டு மதிப்பீடுகள்**

ஆரம்பத்தில் அரசாட்டு முதலீட்டு வங்கியிலிருந்து கிடைக்கப்பெற வேண்டிய பணத்துடன் தொடர்புடைய வீட்டுக் கடனுக்கு வங்கிக்கு வரிமாற்றம் செய்யப்பட்ட பணம் நடைமுறை சொத்தாக வகையீடு செய்யப்பட்டிருந்தது. அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் பின்னர் 12 மாதங்களினுள் கிடைக்கப்பெற வேண்டியவை நிறைவேற்றிக் கொள்ளல் எதிர்பார்க்கப்பட முடியாததனால் கிடைக்கப்பெற வேண்டியவை நடைமுறைசாராத சொத்துக்களாக வகையீடு செய்யப்பட்டுள்ளது. இ.க விதிமுறையுடன் அனுசரிக்கப்படுகையில் பெறுபேறு கொண்ட வட்டி விகித முறை பயன்படுத்தப்பட்டு கிடைக்கப்பெற வெண்டியவை கடன் ஈடுசெய்யப்பட்ட செலவினுள் மதிப்பிடப்பட்டுள்ளது. அதன் பயனாக அவ்வாறு கிடைக்கப்பெற வேண்டியவற்றினுள் கொண்டு வரப்படும் பெறுமதி வெளிக்காட்டப்படுவதற்கு கிடைக்கப்பெற வேண்டியவை

| அதிகாரசபை | இ.கு.நி. மீது கொண்டு வரப்படும் பெறுமதி | இ.கு.நி. விதிமுறைகளின் மீது கொண்டு வரப்படும் பெறுமதி | பயனான வட்டியில் சீர் செய்தல் 2011 | 2010 |
|---|---|---|---|---|
| **கடன் ஈடு செய்யப்படுகையில் மதிப்பிடப்பட்டு கொண்டு வரப்படும் பெறுமதி** | | | | |
| 2011 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு | 292,152,191 | 294,986,521 | | 2,834,330 |
| 2011 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு | 260,298,454 | 262,801,091 | 2,502,637 | |

**VII** **பட்டியலிடப்பட்டுள்ள பொருட்கள் - இடைத்தங்கல் களஞ்சியப் பண்டங்கள்**

ஆரம்பத்தில் மூலதன சொத்துக்கள் மற்றும் பயன்படுத்தலுக்கான கொள்வனவு செய்தல் தொடர்பில் முற்பண செலுத்தல்கள் பட்டியலிடப்பட்டுள்ள பண்டங்களின் மீது வகையீடு செய்யப்பட்டுள்ளது. ஆயினும் மூலதன செலவினம் மற்றும் பாவனை ஒன்றாக சார்வதன் மீது முற்பணம் தொடர்பில்" வைப்புக்கள் மற்றும் முற்பணம் ஆக"

| அதிகாரசபை | | 2011 | 2010 |
|---|---|---|---|
| **பட்டியலிடப்பட்டுள்ள பண்டங்களின்** | **வைப்புக்கள் மற்றும் முற்பணம்** | | |
| மீள் வகையீடு செய்தல் | மீதான மீள் வகையீடு செய்தல் | 233,282,731 | 330,744,796 |

**VIII** **வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப்பெற வேண்டியவை**

**அ) பாதிப்படைந்ததற்கான ஏற்பாடுகள்**

நஷ்டமடைதலின் தன்மை அடிப்படையில் மாறுபடும் பெறுபேறாக இ.க.நி.கீழ் அடையாளங் காணப்பட்ட நஷ்டங்களுக்கான ஏற்பாடுகள் இ.க.நி விதி முறைக்கமைய மீள் கணிப்பு மற்றும் சீர்செய்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

| அதிகாரசபை | 2011 | 2010 |
|---|---|---|
| இ.க.நி நியமங்களின் மீதான ஏற்பாடுகள் | 356,057,179 | 415,193,583 |
| இ.க விதிமுறைகளின் மீதான ஏற்பாடுகள் | 358,861,680 | 403,252,523 |
| நிலுவை/ மேலதிகமான ஏற்பாடுகளின் சீர்செய்தல்கள் | (2,804,501) | 11,941,061 |
| **ஆ) சொத்துக்களுக்கிடையிலான நடைமுறை கணக்குகளின் மீதான** | | |
| சீர் செய்தல் ஜய கொள்கலன் முனையம் | | |
| இ.க.நி நியமங்களுக்கேற்ப | 38,092,547 | 27,132,778 |
| இ.க விதிமுறைகளுக்கேற்ப | 49,673,609 | 32,531,607 |
| சீர் செய்தல்கள் | 11,581,062 | 5,398,829 |
| மொத்த சீர் செய்தல்கள் | **8,776,560** | **17,339,890** |

**ஆ) ஒன்று சேர்ந்த செலவினம் மீது மேற்கொள்ளப்பட்ட சீர்செய்தல்கள்- ஜய கொள்கலன் முனையத்திலிருந்து சொத்துக்களுக்கிடையிலான நடைமுறை கணக்குகள் - ஜய கொள்கலன் முனையம்**

ஆரம்பத்தில் ஜய கொள்கலன் முனையம் சந்தித்த செலவினங்கள் மற்றும் செலுத்த வேண்டியவை ஒன்று சேர்ந்த செலவினத்தின் கீழ் வகையீடு செய்யப்பட்டது. ஆயினும் இ.க.நி விதிமுறைகளுடன் இணங்கும் போது அவ்வாறான செலவினம் ஜய கொள்கலன் முனையத்துடன் நடைமுறை கணக்குகளில் கீர்செய்யப்பட்டுள்ளது.

| அதிகாரசபை | | 2011 | 2010 |
|---|---|---|---|
| **ஒன்று சேர்ந்த செலவினங்களில்** | **நடைமுறை கணக்குகளில்** | | |
| மீள் வகையீடு செய்தல் | மீள் வகையீடு செய்தல் - ஜ.கொ.மு | 580,000 | 340,000 |

**IX ஊழியர்களின் கடன் நியாயமான பெறுமதியின் மீது மதிப்பிடப்பட்டு கொண்டுவரப்படும் பெறுமதி மற்றும் கடன் ஈடுசெய்யப்படுதலின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகள்**

ஆரம்பத்தில் துணைக் கம்பெனிகளின் ஊழியர்களின் கடன் கலுகை வட்டி விகிதத்தில் வழங்கப்பட்டு செலவினம் மீது கணக்கு வைக்கப்பட்டது. அதற்கேற்ப கடன் வழங்கப்பட்ட தினத்திலிருந்து சந்தை வட்டி விகிதங்கள் பயன்பாட்டில் நியாயமான பெறுமதி மீது ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்டது. கடன் நிதியின் நியாயமான பெறுமதி மற்றும் அடிப்படை நிதிக்கிடையிலான வித்தியாசம் முன்னர் செலுத்தப்பட்ட ஆளணி செலவினமாக அடையாளங் காணப்பட்டது. அதன் பின்னர் பெறுபேறு கொண்ட வட்டி விகிதம் பயன்படுத்தப்பட்டு ஊழியர்களின் கடன் ஈடுசெய்யப்பட்ட செலவின்னம் மீது மதிப்பிடப்பட்டுள்ளது.

| பிரிவு | இ.க.நி. மீது கொண்டு வரப்படும் பெறுமதி | இ.க.நி. விதிமுறைகளின் மீது கொண்டு வரப்படும் பெறுமதி | பயனான வட்டியில் சீர் செய்தல் 2011 | 2010 |
|---|---|---|---|---|
| 2011 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கான | - | - | - | - |
| 2011 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கான | 3,757,445,863 | 3,758,818,540 | (1,372,677) | - |
| | | | **(1,372,677)** | **-** |

**X ஏனைய நிதிசார் சொத்துக்கள் கடன் ஈடுசெய்யப்படும் செலவினம் மீது மதிப்பிடப்பட்டு கொண்டு வரப்படும் பெறுமதி**

ஆரம்பத்தில் செலவினம் மற்றும் கிடைக்கப்பெற வேண்டிய வட்டி மீது குறுகிய கால முதலீடுகள் கணக்கு வைக்கப்பட்டதற்கமைய பல்வேறு வகையிலான ஒரே நேர் பொருட்கள் கணக்கு வைக்கப்பட்டது. இ.க விதிமுறைகளுடன் இணைந்து போகுதலில் நியாயமான வட்டி விகித முறை பயன்பாட்டில் குறுகிய கால முதலீட்டுக் கடன் ஈடுசெய்யப்படுதலின் மீது மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.பெறபேறாக அவ்வாறான முதலீடுகள் கொண்டு வரப்படுதல் வெளிக்காட்டப்படும்வாறு குறுகிய கால முதலீடுகளில் கிடைக்கப்பெற வேண்டிய வட்டி சீர் செய்யப்பட்டுள்ளது.

| அதிகாரசபை | இ.க.நி. மீது கொண்டு வரப்படும் பெறுமதி | இ.க.நி. விதிமுறைகளின் மீது கொண்டு வரப்படும் பெறுமதி | பயனான வட்டியில் சீர் செய்தல் 2011 | 2010 |
|---|---|---|---|---|
| **கடன் ஈடு செய்யப்படுகையில் மதிப்பிடப்பட்டு கொண்டு வரப்படும் பெறுமதி** | | | | |
| 2011 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கான | 6,511,920,893 | 6,566,931,408 | | 55,010,515 |
| 2011 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கான | 7,612,891,705 | 7,669,593,112 | 56,701,407 | |

**XI ஒதுக்குதல்**

**அ) மீள் வகையீடு செய்தல்**

இ.க விதி முறையின் வேண்டுகோள் காரணமாக மீத வைப்பின் ஒன்றுசேர் வரிபொறுப்புக்கள் மற்றும் அரச மானியங்கள் நடைமுறை சாராதபொறுப்புக்களாக மீள் வகையீடு செய்யப்பட்டன.

| அதிகாரசபை | | 2011 | 2010 |
|---|---|---|---|
| **மீத வைப்பிலிருந்து** | **மீள் வகையீடு செய்தல்** | | |
| மீள் வகையீடு செய்தல் | நடைமுறை சாராத பொறுப்புக்கள் | 12,114,566,119 | 12,114,566,119 |
| அரச மானியங்கள் | நடைமுறை சாராத பொறுப்புக்கள் | 1,870,650,441 | 1,354,415,580 |
| | | **13,985,216,560** | **13,468,981,699** |

**ஆ) தண்டப்பண நிதிய மிதவைப்பில் மேற்கொள்ளப்பட்ட சீர் செய்தல்கள்**

ஆரம்பத்தில் தவறான செயல்களுக்கு ஊழியர்களிடமிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட தண்டப்பண மீத வைப்பாக கணக்கு வைக்கப்பட்டது. ஆயினும் இ.க. விதிமுறைகளுக்கு இணைந்து அதிகாரசபையானது அவை வருமானம் அடையாளங் காணும் கொள்கைக்கு மீள் மதிப்பீடுசெய்யப்பட்டது. அதன்படி ஒன்று சேர்க்கப்பட்ட தண்டங்கள் ஏனையவையாக இனங்காணப்பட்டது.

| தண்டப்பண மீத வைப்புடன் | கிடைக்கப் பெறுதல்களுக்கு | 2011 | 2010 |
|---|---|---|---|
| சீர் செய்தல்கள் | சீர்செய்தல்கள் | 75,430,974 | 70,047,575 |
| | | 14,060,647,534 | 13,539,029,274 |

## XII கடனுக்குப் பெறுதல்

ஆரம்பத்தில் கடனாளிகளிலிருந்து கிடைக்கப்பெற்ற மூல நிதி மற்றும் செலுத்தப்பட வேண்டிய வட்டி செலவினத்தில் கட்ன பெறுதல் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. அதன்படி வேறான ஒரேநேர் பொருட்களாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. இ.க.நி விதிமுறைகளுடன் அனுசரிக்கப்படுகையில் கடனுக்குப் பெறுதல் ஏனைய நிதிசார் பொறுப்புக்களாக பெயரிடப்பட்டுள்ளதோடு பயனுள்ள வட்டி விகித முறை பயன்படுத்தப்பட்டு கடன் ஈடுசெய்யப்பட்ட செலவினத்திற்கு மதிப்பிடப்பட்டுள்ளது. அதன் பயனாக கடனுக்குப் பெறுதலில் செலுத்தப்பட வேண்டிய வட்டியானது கடனுக்குப் பெறுதலின் கீழ்கொண்டு வரப்படும். பெறுமதி வெளிக்காட்டப்படுவதற்கான சீர் செய்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இலங்கை அரசாங்கம்**

| அதிகாரசபை | இ.க. நி. கீழ் கொண்டு வரப்பட்ட பெறுமதி | இ.க. நி. வி. கீழ் கொண்டு வரப்பட்ட பெறுமதி | பயனான வட்டி மீதான சீர்செய்தல்கள் 2011 | 2010 |
|---|---|---|---|---|
| **கடன் ஈடு செய்யப்படுகையில் மதிப்பிடப்பட்டு கொண்டு வரப்படும் பெறுமதி** | | | | |
| 2011 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு | 101,302,891,512 | 101,665,960,028 | | 363,068,516 |
| 2011 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு | 116,479,442,571 | 116,836,514,945 | 357,072,374 | |
| | | | 357,072,374 | 363,068,516 |

## XIII ஓய்வாற்றப்படும் அனுகூலங்களினது பொறுப்பு

ஆரம்பத்தில் பூரணப்படுத்தும் சேவைக் காலத்தில் அரை மாத சம்பளம் கணக்கிடப்படும் அடிப்படையின் மீது குழுவினால் ஓய்வாற்றப்படும் பொறுப்பானது தீர்மானிக்கப்பட்டது. இ.க.நி விதிமுறைகளுடன் அனுசரிக்கப்படுகையில் தகுந்த இருக்கும் ஆலோனை பயன்படுத்தி ஓய்வாற்றப்படும் அனுகூல பொறுப்பானது மதிப்பிடப்படுவதற்கும் இலகு கடன் கடன் முறை பாதுகாக்கப்படும் பொருட்டும் பயன்படுத்தப்பட்ட அதன் வழிகாட்டல்கள் குழுவினால் மாற்றப்பட்டன.

| | பிரிவு 2011 | பிரிவு 2010 | அதிகாரசபை 2011 | அதிகாரசபை 2010 |
|---|---|---|---|---|
| இ.க.நி கொண்டுவரப்படும் பெறுமதி | 4,454,364,510 | 4,779,398,784 | 4,450,414,828 | 4,776,441,210 |
| இ.க.நி.வி.முன் கொண்டுவரப்படும் பெறுமதி | 2,437,427,131 | 2,820,788,881 | 2,435,399,469 | 2,818,381,427 |
| **சீர்செய்தல்** | **2,016,937,379** | **1,958,609,903** | **2,015,015,359** | **1,958,059,783** |

## XIV ஏற்பாடுகள் மற்றும் ஒன்றுசேர் செலவினம்

ஆரம்பத்தில் சட்டரீதியான உரிமைகோரல்களுக்கு சாதாரண ஒரு நிதி ஏற்பாடுகள் மாத்திரமே செய்யப்பட்டிருந்தது. ஆயினும் இ.க.நி விதிமுறைகள் அனுசரிக்கப்படுகையில் இ.க.நி விதிமுறைகளின் மூலம் வசேடமாக குறிப்பிடப்பட்ட ஏற்பாடு தொடர்பிலான அளவுகோல் அடிப்படையாகக் கொண்ட அவ்வாறான உரிமை கோரலுக்கான ஏற்பாடு இனங்காணப்பட்டுள்ளது. அதன் பயனாக 2010 மற்றும் 21 அறிக்கை செய்யப்படும் காலப்பகுதிக்கு மேற்கொள்ளப்பட்ட மேலதிக ஏற்பாடுகள் பின்னோக்கிப் பார்த்தலின் ஊடாக சீர் செய்யப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் (பயன்படுத்தப்படாத விதிமுறைகளின் எதிர்பார்ப்பு செலவினம் தொடர்பான பொறுப்பானது அதிகாரசபையினால் இனங்காணப்படவில்லை. ஆனால் இ.க.நி விதிமுறைகள் அனுசரிக்கப்படுகையின் போது நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

| அதிகாரசபை | இ.க.நி.கீழ் கொண்டு வரப்படும் பெறுமதி 2011 | 2010 | இ.க.நி.விதி முறையின் கீழ் கொண்டு வரப்படும் பெறுமதி 2011 | 2010 | கூடிய / குறைந்த ஏற்பாடுகள் 2011 | 2010 |
|---|---|---|---|---|---|---|
| சட்ட ரீதியான உரிமைகளுக்கான ஏற்பாடுகள் | 245,275,087 | 288,684,561 | 8,160,174 | 935,560 | (237,114,913) | (287,749,001) |
| குறுகிய காலத்திற்கான ஏற்பாடுகள் | - | - | 306,505,709 | 364,389,788 | 306,505,709 | 364,389,788 |
| **வர்த்தக சொத்துக்களின் மொத்த/சீர்செய்தல்** | | | | | **69,390,796** | **76,640,787** |

**XV முழு வருமானத்தின் வித்தியாசப்படுதலின்சாராம்சம்**

முழு வருமான அறிக்கையில் மேற்கொள்ளப்பட்ட சீர் செய்தல்கள் பின்வருமாறு

| | பிரிவு 2011 | அதிகாரசபை 2011 |
|---|---|---|
| **இ.க.நியமங்களின் மீதான முழு வருமானத்தின் மொத்தம்** | **647,019,353** | **582,596,044** |
| சென்ற ஆண்டின் சீர்செய்தல்லின் தேய்மானம் மற்றும் வித்தியாசப்படும் ஏற்பாடுகளின் மீதான சீர் செய்தல் | (446,862,156) | (446,862,156) |
| சட்டரீதியான உரிமை கொரல்களுக்கான மேலதிக ஏற்பாடுகள் வர்த்தக கிடைக்கப் பெறுதல்லின் | (50,634,088) | (50,634,088) |
| பாதிப்புக்களுக்கானமேலதிக ஏற்பாடுகள் | (14,745,562) | (14,745,562) |
| மேலதிக ஏற்பாடுகளின் வித்தியாசங்களுக்காக | 57,884,079 | 57,884,079 |
| - ஒய்வாற்றப்படும் அனுகூல பொறுப்பு | 57,085,399 | 56,955,579 |
| உணரா சொத்துக்களின் பயனான ஆயுட்காலத்தில் மீள் மதிப்பிடப்படப்படுவதற்கான சீர் செய்தல்கள் | 46,509,666 | 46,509,666 |
| நடைமுறை சொத்துக்கள் சமரசம் மேற்கொள்ளப்படுவதற்கான சீர்செய்தல்கள் ஐகொ.மு | 6,182,232 | 6,182,232 |
| மானியங்கள் அறவிட்டுக் கொள்ளப்படுதலின் கடன் ஈடுசெய்தல்கள் | 106,667 | 106,667 |
| சென்ற வருடங்களின் சீர்செய்தலின் வித்தியாசங்களின் பலனாக வருமானத்தின் சீர்செய்தல்கள் | 5,383,401 | 5,383,401 |
| ஒன்று சேர்க்கப்பட்ட தண்டப்பணம் வேறு வருமானமாக அடையாளங் காணுதல் | (17,145,711) | (17,145,711) |
| சென்ற வருடங்களின் சீர்செய்தலின்வித்தியாசங்களின் பலனாக காணிகளின் மீது வட்டி செலவினத்தின் சீர்செய்தல்கள் | (50,662,672) | (50,662,672) |
| பாதுகாப்பு படையினரிடமிருந்து வர்த்தக கிடைக்கப்பெறுதல்களின் பதிவழித்தல் | (118,432,316) | (118,432,316) |
| ஊழியர்களின் கடன் மீதான பயனான வட்டியின் சீர்செய்தல்கள் | 2,614,753 | - |
| தொடர்புபடும் மற்றும் துணைக் கம்பெனிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற பங்கிலாபங்கள் மீதான சீர்செய்தல்கள் | (1,823,671) | - |
| தொடர்புபடும் கம்பெனிகளின் பங்குகள் பரிமாற்றம் செய்தலின் மீதான செய்தல்கள் | (106,953) | - |
| விற்பதற்கான நிதிசார் சொத்துக்களின் பெறுமதி மாறுபடுதல் | (75,371,549) | (75,371,549) |
| **இ.க.நி.விதிமுறைகளின் மீதான முழு வருமானத்தில் மொத்தம்** | **47,000,871** | **(18,236,387)** |


மொத்த வருமானம்
25,000
20,000
15,000
10,000
5,000
-
2012
2011
கப்பலோட்டம்
கப்பல் சுமை
வாப்பு கையாளல்
துறைமுக வசதிகள்
ஏனையவை


2012 சேவைகளுக்கமைய வருமானம் இலங்கை துறைமுக அதிகாரசபை
17.03
12.76%
9.66%
9.54
51.01%
கப்பலோட்டம்
கப்பல் சுமை
வாப்பு கையாளல்
துறைமுக வசதிகள்
ஏனையவை

டிசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டின்



மூன்று துறைமுகங்களிலும்






**ரீசீ/பி/எஸ்எல்பீஏ/எப்ஏ/2012** **2014 பெப்ரவரி 17**

**தலைவர்**
**இலங்கை துறைமுக அதிகாரசபை**

**இலங்கை துறைமுக அதிகார சபையினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான திரட்டிய நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) சீ பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை துறைமுக அதிகார சபையினதும் அதன் துணைக் கம்பனியினதும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கையினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான திரட்டிய நிதிக்கூற்றுகள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகார சபை சட்டத்தின் 33 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கை அதிகார சபையின் தலைவருக்கு 2013 நவம்பர் 19 ஆம் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுகளுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த திரட்டிய நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பனவற்றிற்கு முகாமை பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்ளப்பட்ட போதும், அதிகாரசபையினால் உள்ளகக்

கட்டுப்பாடுகளின் வினைத்திறன் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில் கொள்ளப்படவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பனவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும், பரப்பினையும், நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவு பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.4 துணைக் கம்பனியும் அண்மித்த கம்பனியும்

இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமான துணைக்கம்பனியாக வரையறுக்கப்பட்ட ஜய கொள்கலன் டேர்மினல் கம்பனியும் அண்மித்த கம்பனியாக வரையறுக்கப்பட்ட துறைமுக முகாமைத்துவ மற்றும் மதியுரை சேவைகள் கம்பனியும் காணப்படுவதுடன் அவற்றின் உரித்து முறையே 100 சதவீதம் மற்றும் 39.97 சதவீதமாக காணப்பட்டன.

இந்த இரண்டு கம்பனிகளினதும் கணக்காய்வு பிரசித்தி பெற்ற கணக்காளர் தொழில்துறையில் ஈடுபட்டுள்ள இரண்டு பட்டயக் கணக்காய்வு நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டன.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

**2.1.1** இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து திரட்டிய நிதிக்கூற்றுக்கள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை துறைமுக அதிகார சபையினதும் அதன் துணைக்கம்பனியினதும் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.1.2** இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை துறைமுக அதிகார சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

கீழே காட்டப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை நிதிக்கூற்றுக்கள் அறிக்கையிடல் நியமம் 07 இன் பிரகாரம் ஆண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிதி உபகரணங்களின் நியாயமான பெறுமதியை ( Fair Value) கணக்கிடும் போது எழுகின்ற இடரின் தன்மை மற்றும் அளவு என்பனவற்றையும் அது தொடர்பாக எடுக்கப்படும் முகாமைத்துவ நடைமுறைகளையும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அத்தகைய இடர் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் உடைத்து அகற்றப்பட்ட கட்டிடங்களின் பெறுமதி மற்றும் அகற்றுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டிடங்களின் பெறுமதி ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கு மீதிகளிலிருந்து கைதவிர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கொழும்பு, காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்களின் வருடாந்த செயற்பாட்டு விளைவுகள் வெவ்வேறாக கணக்கிடப்பட்டு சமர்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஹம்பந்தோட்டை துறைமுகத்திற்காக வேறான செயற்பாட்டு விளைவுகள் கணக்கிடப்பட்டு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் செயற்பாட்டு வருமானமும் செலவினமும் கொழும்புத் துறைமுகத்தின் செயற்பாட்டு வருமானத்துடனும் செலவினத்துடனும் இணைக்கப்பட்டிருந்தமையால் கொழும்பு மற்றும் ஹம்பாந்தோட்டை துறைமுகங்களின் உள்ளவாறான வருடாந்த செயற்பாட்டு விளைவுகள் வெவ்வேறாக இனங்காண முடியாதிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 597,854,000 ஆன காப்புறுதிப் பெறுமதியான செயற்பாட்டுக் கட்டிடங்கள் மற்றும் ரூபா 1,646,000 பெறுதியான மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் என்பன தனியார் சேவைக் கம்பனியொன்றினால் 2008 யூலை மாதத்திலிருந்து அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. இச்சொத்துக்கள் 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படாதிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அச்சொத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டாளர் ஒருவரால் மீள்மதிப்பீடு செய்யப்படாமல் காப்புறுதி பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 5 1/2 ஆண்டுகளுக்கு முன்னர் வரிசை அமைச்சின் பிரதி அமைச்சரின் பதவியணியின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2 மில்லியன் பெறுமதியான வாகனமொன்று விபத்திற்குட்பட்டதால் மீண்டும் பாவனைக்கு உட்படுத்த முடியாத வகையில் சேதமடைந்திருந்தது. அவ்வாகனத்திற்கான நட்டத்தினை காப்புறுதி மூலம் மீள் நிரப்புவதற்கும் புத்தகங்களிலிருந்து அகற்றப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாகனம் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரணை செய்யப்பட்டு வருவதாக தலைவரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) காங்கேசன்துறை துறைமுகத்தின் நீர்த்தடுப்பினை திருத்தும் நடவடிக்கைக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 4,715,000 தொகையில் எவ்வித நிர்மாணப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்தொகை கிடைக்க 161 வேண்டிய முற்பணமாக காண்பிக்கப்படுவதற்குப் பதிலாக செலவினமாக பதிவழிக்கப்பட்டிருந்த்து.

(ஈ) கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,590,057 தொகையான முற்பணத்தொகையில் பொருட்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதனை செலவினமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக 04 ஆண்டு காலமாக முற்பணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் முறையே ரூபா 20,808, 894, 876 மற்றும் ரூபா 4,467, 833, 192 ஆக இருந்த்துடன் அது தொடர்பாக கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபைக்கு கிடைக்கவேண்டியிருந்த ரூபா 243,462,030 தொகைக்காக மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளில் ரூபா 188,267,940 பெறுமதியான மீதிகளுக்கு மாத்திரம் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன. அவை மொத்தமாக செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளின் அண்ணளவாக 4 சதவீதமாக இருந்தன.

(இ) கப்பல் முகவர் நிறுவனங்களிடமிருந்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 776,329,102 கூட்டுத்தொகையான பெறவேண்டிய ரூபா 238,006,720 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய மீதிகள் என்பவற்றை இணக்கம் செய்ததன் பின்னர் தேறிய மீதியாக ரூபா 538,322,382 காண்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்த கப்பல் முகவர் கடன்பட்டோரிடமிருந்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த 1 ஆண்டிற்கு மேற்பட்ட பழைய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 272,815, 237 ஆக இருந்தது.

(ii) அரச நிறுவனங்களிடமிருந்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த மீதிகளில் 1 ஆண்டு முதல் 4 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக இருந்து வரும் பழைமையான கணக்கு மீதிகள் ரூபா 24,153,565 தொகையும் 5 ஆண்டுகளுக்கு மேல் பழைமையான அறவிடப்பட வேண்டிய மீதிகள் ரூபா 21,168,033 தொகையுமாக இருந்தன.

(ஈ) மூலதனச் செலவினங்களுக்காக ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணத் தொகையில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாமல் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகள் ரூபா 5,719,890 தொகையாக இருந்தது.

(உ) வர்த்தக ரீதியற்ற கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்படும் அதிகாரசபைக்குச் சொந்தமான ஆதனங்கள் மற்றும் நலன்புரி சிற்றுண்டிச்சாலைகள் என்பவற்றை நடாத்திச் செல்வதற்காக வழங்கப்பட்ட வளவுகளின் மின்சாரப் பாவனைக்காக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 80,956,850 மீதியில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகளாக ரூபா 1,943,983 தொகை இருந்தன.

(ஊ) வர்த்தக ரீதியற்ற கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்படும் அதிகாரசபைச்குச் சொந்தமான வளவுகளை வாடகைக்கும் குத்தகைக்கும் வழங்கியதற்காக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய குத்தகை மற்றும் வாடகை வருமான மீதிகளில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 31,891,451 ஆக இருந்தது.

(எ) கப்பல் முகவர்களிடமிருந்து குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் பணத்தை அறவிடாமல் சேவைகளை வழங்கிய காரணத்தால் திருகோணமலை துறைமுகத்தின் கப்பல் முகவர் நிறுவனங்களிடமிருந்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 48,480,202 தொகையில் ரூபா 11,976,498 அதாவது 25 சதவீதம் அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக் கடன் ஏற்பாட்டிற்காக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஏ) இலங்கை கடற்படையால் வர்த்தக அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வந்த ஜெட் லைனர் கப்பலின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக அதிகாரசபையால் வழங்கப்பட்ட சேவைகளுக்காக 2009 ஆம் ஆண்டின் பின்னர் அறவிடப்பட வேண்டிய ரூபா 15,828,326 தொகை 2013 ஆகஸ்ட் 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

மேற்குறித்த விடயங்களை கருத்திற்கொள்ளும் போது அதிகாரசபையின் கடன் அறவீடு மற்றும் கடன் தீர்ப்பனவுகள் செயற்பாடு மிகவும் பலவீனமான நிலைமையில் காணப்பட்டன. இந்நிலைமை அதிகாரசபையின் திரவத்தன்மைக்கு பாதகமான நிலைமையை ஏற்படுத்தும் என்பதை தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு விடயங்களுக்கு முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி ரூபா 000' | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| சுங்கத் திணைக்களத்திடமிருந்து சிடைக்க வேண்டிய வானொலி தரவுத்தளம் | 60,739 | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| அமைச்சினால் மீள் நிரப்ப வேண்டிய செலவினம் | 1,798 | -மேற்படி- |
| ஏனைய அரச திணைக்களங்கள் | 1,761 | -மேற்படி- |
| நடைமுறைப்படுத்தப்படும் பொருள் ஏலவிற்பனை | (353,321) | -மேற்படி- |

### 2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் , விதிகள் , பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2000 இன் 38 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித் அதிகாரச் சட்டத்தின் 111 (அ) பிரிவு | இலங்கை துறைமுக அதிகாரசபையின் உத்தியோகத்தர்களால் அவர்களின் சம்பளம் மற்றும் ஏனைய உழைப்புக்களுக்காக உழைக்கும் போது செலுத்தும் வரிக் கொடுப்பனவு தனிப்பட்ட சம்பளத்திலிருந்து |

| | |
|---|---|
| | கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும், 2008 ஆம் ஆண்டு வரையான 5 ஆண்டுகளுக்காக ரூபா 1,998 மில்லியன் கூட்டுத் தொகையான உழைக்கும் போது செலுத்தும் வரித் தொகை அதிகாரசபையின் நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ 2012 ஒக்தோபர் 24 ஆம் திகதிய எப்டி/எப்ஏ/சீ/41/2012 ஆம் இலக்க துறைமுக அதிகாரசபையின் நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் மூன்றாம் தரப்பினரின் மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக 2012 சனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வுப் பிரிவிற்கு, உரிய கடிதங்கள் ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 158,056,334 ஆன மீதிகளை உறுதிப்படுத்தும் 74 கடிதங்கள் 2013 ஏப்ரல் 03 ஆம் திகதியே கணக்காய்வுப் பிரிவிற்குச் சமர்ப்பிட்டிருந்தன. |
| (இ) 2008 யூன் 26 ஆம் திகதிய 14/2008 ஆம் இலக்க பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கை | i. சுற்றறிக்கைக்கு முரணாக உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்தில்லாத 44 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 40,000 மாதாந்த கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் அவ்வாறு செலுத்தப்பட்ட மொத்தக் கொடுப்பனவுகள் ரூபா 20,720,000 ஆக இருந்தது.<br>ii. சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்துள்ள 5 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 30,000 மாதாந்தக் கொடுப்பனவிற்குப் பதிலாக ரூபா 40,000 வீதம் செலுத்தப்பட்டிருந்தது. ரூபா 920,000 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.<br>iii சுற்றறிக்கைக்கு முரணாக உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்தில்லாத 29 உத்தியேகத்தர்களுக்கு மாதாந்தம் 150 லீற்றர்களுக்கும் 180 லீற்றர்களுக்கும் இடைப்பட்ட அளவில் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தன. கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்த எரிபொருளின் பெறுமதி ரூபா 6,468,142 ஆக இருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டிற்கான கூட்டமைப்பின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து வரிக்குப் பின்னர் ரூபா 4,167.74 மில்லியன் தேறிய இலாபமொன்று ஈட்டப்பட்டிருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து வரிக்குப் பின்னர் ரூபா 122.37 மில்லியன் தேறிய இலாபம் ஈட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வான்டின் போது வரிக்குப் பின்னர் தேறிய இலாபம் ரூபா 4,045.37 மில்லியனான சாதகமான அதிகரிப்பொன்றாக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது செயற்பாடுகள் மற்றும் ஏனைய வருமானங்களில் ரூபா 6,765 மில்லியனான அதிகரிப்பு மற்றும் சுயவிருப்பின் பேரில் இளைப்பாறல் செலவினம் ரூபா 1,944 மில்லியனால் குறைவடைந்தமை அந்த அதிகரிப்பு தொடர்பில் பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

### 3.2 பகுப்பாய்வு செய்யப்பட்ட நிதி மீளாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளுக்காக ஒப்பிடப்பட்ட தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | ஆண்டு | | |
|---|---|---|---|
| | 2012 | 2011 | 2010 |
| ஒரு மெற்றிக் தொன்னுக்கான தேறிய இலாபம் ரூபா மில்லியன் | 278 | 180 | 87 |
| மொத்த வருமானம் ரூபா மில்லியன் | 37,341 | 30,577 | 28,512 |
| மொத்த செலவினம் ரூபா மில்லியன் | 32,039 | 30,248 | 29,701 |
| வரிக்கு முன்னரான தேறிய இலாபம்/ (நட்டம்) ரூபா மில்லியன் | 5,302 | 329 | (1,189) |
| வருமான வரி ரூபா மில்லியன் | 1,135 | 207 | 157 |
| வரிக்கு பின்னரான தேறிய இலாபம்/ (நட்டம்) ரூபா மில்லியன் | 4,167 | 122 | (1,032) |

**(ஆ)** மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரு ஆண்டுகளுக்கான தொகுதியின் ஒப்பிடப்பட்ட விகிதமும் சில சதவீதங்களும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | ஆண்டு | | |
|---|---|---|---|
| | 2012 | 2011 | 2010 |
| புரள்விற்கு வரிக்குப் பின்னரான இலாபம்/நட்டம் சதவீதத்தில் | 11.16 | 0.39 | (3.62) |
| நீண்டகால கடன்களுக்கு உரிமை மூலதனம் சதவீதத்தில் | 0.51 | 0.58 | 0.79 |
| சொத்துக்கள் புரள்வு சதவீதம் | 0.15 | 0.14 | 0.14 |

| | | | |
|---|---|---|---|
| தொழில்படு மூலதன விகிதம் | 1:2.2 | 1:1.19 | 1:1.34 |
| விரைவு விகிதம் | 1:1.06 | 1:0.78 | 1:1.13 |
| கடன் உரிமை மூலதனம் | 1:1.89 | 1:1.64 | 1:1.21 |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

அதிகாரசபையால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குரிய புள்ளிவிபரங்கள் மற்றும் அறிக்கைகள் என்பவற்றை பகுப்பாய்வு செய்த போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) கொழும்புத் துறைமுகம்**

**(i) கப்பல்களின் வருகை (கப்பல்களின் எண்ணிக்கை)**

| | ஆண்டு | | | விலகல் சாதகம் /(பாதகம்) | |
|---|---|---|---|---|---|
| **கப்பல்களின் வகை** | **2012** | **2011** | **2010** | **2011/12 %** | **2010/11 %** |
| கொள்கலன்கள் | 3,092 | 3,187 | 3,076 | (2.9) | 3.6 |
| மரபுரீதியானவை | 52 | 68 | 56 | (23.5) | 21.4 |
| ஏனையவை | 726 | 869 | 778 | (16.4) | 11.7 |
| | **3,870** | **4,124** | **3,910** | **(6.2)** | **5.5** |

2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2011 ஆம் ஆண்டில் கொழும்பு துறைமுகத்திற்கு கப்பல்களின் வருகை 214 அளவிலான அதிகரிப்பொன்றும் அல்லது 5.5 சதவீதமான அதிகரிப்பொன்றும் தென்பட்ட போதும் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டில் கப்பல்களின் வருகை 25.4 அல்லது 6.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தன.

(11) கையாளப்பட்ட கொள்கலன்கள் (இருபது (சம அலகுகள் (TEU's)

| | ஆண்டு | | | விலகல் சாதகம் /(பாதகம்) | |
|---|---|---|---|---|---|
| **கொழும்புத் துறைமுகம்** | **2012** | **2011** | **2010** | **2011/12 %** | **2010/11 %** |
| உள்நாட்டு | 1,020,255 | 1,046,886 | 932,244 | (2.54) | 12.30 |
| மீள் கப்பலேற்றுகை மற்றும் மீள் பொதியிடல் | 3,166,865 | 3,216,001 | 3,205,197 | 1.52) | 0.34 |
| மொத்தம் | **4,187,120** | **4,262,887** | **4,137,441** | **(1.78)** | **3.03** |

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.**

- 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2011 ஆம் ஆண்டில் கொழும்புத் துறைமுகத்தில் கையாளப்பட்ட இருபது சம அலகு கொள்கலன்கள் 125,446 ஆல் அதாவது 3.03 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதும் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டில் 75,767 ஆல் அதாவது 1.78 சதவீதமான வீழ்ச்சியொன்று காண்பிக்கப்பட்டிருந்தது.

- அதிகாரசபைக்கு கூடுதலான வருமானமொன்றை மீள் கப்பலேற்றல் மற்றும் மீள்பொதியிடல் அடிப்படையில் அறவிடப்படுகின்ற கட்டணங்களால் இலகுவாக உழைத்துக்கொள்ள முடியுமாக இருந்த போதிலும், மீள் கப்பலேற்றலை அதிக அளவில் பெற்றுக்கொள்வது தொடர்பில் அதிகாரசபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் மீள் கப்பலேற்றல் 1.52 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

- 2003 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான பத்து ஆண்டு காலப்பகுதியில் கொழும்புத் துறைமுகத்தில் அதிகாரசபையின் கொள்கலன் செயற்படுத்தும் இயலளவு முழுக் கொள்கலன்களை கையாளல் சதவீதமாகக் கருதும் போது 68 சதவீதத்திலிருந்து 55 சதவீதம் வரை துரித வீழ்ச்சியொன்று இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) திருகோணமலை துறைமுகம்**

2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2011 ஆம் ஆண்டின் போது திருகோணமலைத் துறைமுகத்திற்கு கப்பல்களின் வருகை 17 ஆல் அல்லது 15.59 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன், 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டில் கப்பல்களின் வருகை 35 கப்பல்களினால் அல்லது 27.77 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

**(இ) காலித் துறைமுகம்**

2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2011 ஆம் ஆண்டில் காலித் துறைமுகத்திற்கு கப்பல்களின் வருகை 4 கப்பல்களால் அல்லது 5.7 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டில் அது 25 கப்பல்களினால் அதாவது 34 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்த்து.

**(ஈ) சகல துறைமுகங்களும் (கொழும்பு, திருகோணமலை, காலி)**

2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2011 ஆம் ஆண்டில் சகல துறைமுகங்களாலும் கையாளப்பட்ட மொத்த கப்பல் பொருட்களின் அதிகரிப்பு 3,667,471 மெற்றிக் தொன்னாக இருந்ததுடன் அது 4.3 சதவீதமான அதிகரிப்பொன்றாகும். 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டில் மொத்த கையாளப்பட்ட கப்பல் பொருட்களின் முன்னேற்றம் 1,631,416 மெற்றிக் தொன்னாக இருந்ததுடன், அது 1.8 சதவீதமான அதிகரிப்பொன்றாகும். ஆதலால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அதிகரிப்பு வேகம் குறைவடைந்திருந்தது.

**(உ) மாகம்புர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம்**

2010 நவம்பர் மாதம் இத்துறைமுகம் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக திறந்து வைக்கப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையான காலப்பகுதியில் அதாவது 26 மாதங்களுக்கும் 43 கப்பல்கள் அதாவது குறைந்த அளவில் மாத்திரம் வருகை தந்திருந்தன. துறைமுகத்திற்கு கப்பல்களை கொண்டுவருவதற்காக பயனுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் அதிகாரசபை கவனத்தை செலுத்துதல் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குத் தேவையான கிரானட் பாரந்தூக்கிகள் துரிதமாக பொருத்தப்பட வேண்டுமென்பது தொடர்பிலும் அதிகாரசபை கவனம் செலுத்தப்பட வேண்டும்.

## 4.2 முகாமைத்துவ செயற்றிறனின்மை

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.**

(அ) அதிகாரசபையால் சமர்ப்பிக்கப்பட்ட அசைவற்ற இருப்பு காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இருப்புக்கள் ரூபா 959,252,462 ஆனமையால் அது மொத்த இருப்பு பெறுமதியில் 57.45 சதவீதமாக இருந்தது. எவ்வாறாயினும் அதிகாரசபையின் களஞ்சிய இடவசதிகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால்

களஞ்சியத்தை பயனுள்ள வகையில் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு இந்த இருப்புக்கள் தடையாகக் காணப்பட்டது.

(ஆ) ரூபா 36,379,222 மதிப்பிடப்பட்ட கிரயத்திற்கு காங்கேசன்து துறைமுக வீதி முறைமை மற்றும் இறங்குதுறையினையும் அபிவிருத்தி செய்வதற்காக அதிகாரசபையும் அரச கம்பனியொன்றும் இணக்கப்பாடொன்றிற்கு வந்திருந்ததுடன் அரசின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4 ஆம் வழிகாட்டிக்கு முரணாக ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய முற்பண பாதுகாப்பொன்றில்லாமல் ஒப்பந்த தொகையில் 20 சதவீதத்தினை மிகைத்து 50 சதவீதம் வரையில் ரூபா 17,257,001 தொகை முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. **அந்த** முற்பணங்களிலிருந்து ரூபா 5,719,890 தொகை 6 ஆண்டு காலமாக தீர்க்கப்படாத முற்பணங்களாக முன் கொண்டு வரப்பட்டிருந்தது.

**(இ)** 35 ஆண்டு காலத்திற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த காணி உட்பட அதில் அமைந்துள்ள கட்டிடங்கள், இயந்திரங்கள் உட்பட கம்பனிக்குரிய சகல சொத்துக்களுக்குரிய 2012 ஆம் ஆண்டிற்கான வீதவரிக் கட்டணமாக ரூபா 3,388,000 தொகை அதிகாரசபையின் பெயரில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டின் இறுதிவரை பன்னிரண்டு ஆண்டு காலப்பகுதியில் கொழும்பு துறைமுகத்தில் அதிகாரசபையின் கொள்கலன் செயற்பாட்டு இயலளவு மொத்த கொள்கலன் கையாளலின் சதவீதமாக கருதும் போது 86 சதவீதத்திலிருந்து 55 சதவீதம் வரை துரித வீழ்ச்சியொன்று இடம்பெற்றிருந்தது. எவ்வாறாயினும் கொழும்பு துறைமுகத்தில் போட்டி ரீதியாக செயற்படும் தனியார் கம்பனியொன்று அக்காலப்பகுதியில் கொள்கலன் கையாளல் இயலளவில் துரித வளர்ச்சியொன்றை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில் கொள்கலன் கையாளல் கீழே காட்டப்பட்டுள்ளவாறு வீழ்ச்சியடைந்திருந்தது.

**செயற்படுத்தப்பட்ட இருபது சம அலகு கொள்கலன்கள்**

| ஆண்டு | அதிகாரசபை | | தனியார் கம்பனி | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | அலகு | % | அலகு | % | அலகு |
| 2001 | 1,396,946 | 86 | 229,670 | 14 | 1,626,616 |
| 2002 | 1,206,694 | 68 | 558,025 | 32 | 1,764,719 |
| 2003 | 1,334,900 | 68 | 624,439 | 32 | 1,959,339 |
| 2004 | 1,320,845 | 59 | 899,720 | 41 | 2,220,565 |
| 2005 | 1,523,794 | 62 | 931,526 | 38 | 2,455,320 |
| 2006 | 1,743,669 | 57 | 1,335,411 | 43 | 3,079,080 |
| 2007 | 1,834,734 | 54 | 1,546,497 | 46 | 3,381,231 |
| 2008 | 1,747,670 | 50 | 1,739,668 | 50 | 3,487,338 |
| 2009 | 1,714,488 | 49 | 1,749,809 | 51 | 3,464,297 |
| 2010 | 2,167,173 | 52 | 1,970,268 | 48 | 4,137,441 |
| 2011 | 2,299,446 | 54 | 1,963,441 | 46 | 4,262,887 |
| 2012 | 2,316,849 | 55 | 1,870,271 | 45 | 4,187,120 |

கொள்கலன் செயற்படுத்தல் துறைமுகமொன்றின் பிரதான செயற்பாடாக இருந்தபோதும் அது அதிகாரசபையிடமிருந்து கைநழுவி தனியார் நிறுவனமொன்றுக்கு செல்லக்கூடிய வாய்ப்புகள் இருப்பதை மேற்குறித்த தரவுகள் உறுதிப்படுத்துகின்றன.

35 ஆண்டு காலத்திற்கு நிர்மாணிக்கப்பட்டிருந்த செயற்பாடு ஒப்படைத்தல் (BOT) முறைமையின் கீழ் அதிகாரசபைக்கு சொந்தமான சிறந்த ஆழமான 03 கப்பல் இறங்குதுறைகள் தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டு அதிகாரசபையின் நடவடிக்கைகளுக்காக 02 கப்பல் இறங்குதுறைகளை மாத்திரம் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தமை இந்த வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகியிருந்தது.

(ஆ) திருகோணமலைத் துறைமுகத்தின் செயற்பாட்டு நிலைமை மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டமையும் குறைந்த எண்ணிக்கையிலான கப்பல்கள் வருகையாலும் தொடர்ச்சியான நட்டம் ஏற்படுவதற்கு காரணமாக இருந்தது. எவ்வாறாயினும் கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்டிருந்த நட்டம் படிப்படியாக குறைவடைந்திருந்தது.

| ஆண்டு | நட்டம் ரூபா மில்லியன்) |
|---|---|
| 2007 | 405 |
| 2008 | 379 |
| 2009 | 319 |
| 2010 | 383 |
| 2011 | 318 |
| 2012 | 240 |

(இ) காலி துறைமுகத்திற்கு வருகை தரும் கப்பல்களின் எண்ணிக்கை குறைவின் அடிப்படையில் செயற்பாட்டு நடைமுறைகள் மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டதுடன் தொடர்ச்சியான நட்டம் ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்டிருந்த நட்டம் படிப்படியாக குறைவடைந்திருந்தது.

| ஆண்டு | நட்டம் ரூபா மில்லியன்) |
|---|---|
| 2007 | 275 |
| 2008 | 279 |
| 2009 | 399 |
| 2010 | 345 |
| 2011 | 147 |
| 2012 | 47 |

(ஈ) அதிகாரசபைக்குச் சொந்தமாகக் காணப்படும் டக் கப்பல்களின் எண்ணிக்கை இலங்கையிலுள்ள அனைத்து துறைமுகங்களிலும் கடற்படை செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு போதியளவில் இல்லாதிருந்ததுடன், அவை 15 ஆண்டுகள் தொடக்கம் 30 ஆண்டுகள் வரையான காலம் பயன்படுத்தப்பட்டிருந்த பழைய கப்பல்களாகும். அவை அடிக்கடி தொழில்நுட்பக் கோளாறுகளுக்கு உட்படல் மற்றும் பராமரித்தல் மேற்கொள்ளப்படவேண்டியிருந்தது. நிலைமை அவ்வாறு இருக்கையில் டக் கப்பல்களை திருத்தியமைப்பதற்காக ஒப்படைக்கப்பட்டு 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அவற்றின் திருத்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்படாத டக் கப்பல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| டக் கப்பல்களின் பெயர்கள் | திருத்தியமைப்பதற்காக ஒப்படைக்கப்பட்ட திகதி |
|---|---|
| ஐராவன | 2011.01.09 |
| சிங்ஹபாகு | 2011.04.07 |

## 4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட கொள்வனவு நடைமுறைகளிலிருந்து விலகி அதிகாரசபைக்கு தேவையான மேலதிக சேவைகளை மதியுரை சேவை கம்பனி ஊடாக நிறைவேற்றிக் கொள்வதற்காக தரகுப்பணமாக ரூபா 52,064,941 தொகை மேலதிகமாக அக் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வங்கி நடவடிக்கைகள் பராமரித்துச் செல்வதற்காக அரச வங்கியொன்றிற்கு அறவீடுகள் ஏதுமில்லாமல் 03 வளவுகளும் தனியார் வங்கியொன்றிற்கும் அரச வங்கியொன்றிற்கும் 03 வளவுகள் மிகவும் குறைந்த பெயரளவு வாடகையில் அதிகார சபைக்குரிய கட்டிடங்கள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

(இ) சர்வதேச ஒத்துழைப்பிற்கான யப்பான வங்கி (JBIC) உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 6,000 மில்லியன் நிர்மாண ஒப்பந்தம் மூலம் காலித் துறைமுகத்தின் நீர்த் தடுப்பினை நிர்மாணிப்பதற்காக ரூபா 455.5 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் 2008 திசெம்பர் 31 ஆம் திகதி முதல் அந்தநிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

(ஈ) ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியின் கீழ் கொழும்பு துறைமுக செயற்றிறன் மற்றும் துறைமுக விரிவாக்கலுக்கான மதியுரை சேவை ஒப்பந்தத்திற்காக ரூபா 1,199 மில்லியன் தொகை ஆசிய அபிவிருத்தி வங்கியினாலும் அதிகாரசபையினாலும் கூட்டாக செலவிடப்பட்டிருந்தது. அதில் ரூபா 399 மில்லியன் அளவில் கொழும்புத் துறைமுகத்தின் செயற்றிறனை மேம்படுத்துவதற்காக செலவிடப்பட்டிருந்தன. பின்னர் அத்தீர்மானத்தைச் செயற்படுத்துவது அதிகாரசபையால் கைவிடப்பட்டிருந்தது.

## 4.5 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ)** சகல வசதிகளுடனான அனைத்து வசதிகளையும் கொண்ட ஒலுவில் கடற்படை பயிற்சி நிறுவகத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 80,427,283 செலவிடப்பட்டிருந்த போதும் ஒரு பாடநெறியேனும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. முன்னைய ஆண்டின் போது பாடநெறிகளைப் பின்பற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 05 ஆக இருந்த போதும் அதற்காக 68 பேர் கொண்ட பதவியணியினர் சேவையிலீடுபடுத்தப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் பயிற்சி நிறுவனத்தை ஆரம்பித்ததன் அடிப்படை நோக்கம் அடையப்படாமல் இருந்ததுடன், அதிகளவிலான ஊழியர்களை அதில் ஈடுபடுத்தியதன் மூலம் அதிகாரசபைக்கு பாரியளவிலான மேலதிக செலவினப் பொறுப்பொன்றை ஏற்பதற்கு நேர்ந்திருந்தது. இதுவரையில் இப்பயிற்சி நிறுவனத்தை தென் கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக தலைவர் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்.

(ஆ) அதிகாரசபையால் 2000 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் இரண்டு கம்பனிகளில் முறையே ரூபா 2,500,000 நிதி முதலீடு செய்யப்பட்டிருந்த போதும் எந்தவொரு நலனும் மீளாய்வாண்டின் இறுதியில் அதிகாரசபைக்கு கிடைத்திருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டின் போது EDI நெட்வேர்க் தனியார் கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 500,000 பெறுமதியான பங்குகள் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தன.

(இ) புதிய டக் கப்பலொன்று ரூபா 600 மில்லியன் முதல் 700 மில்லியனுக்கு இடைப்பட்ட விலையில் கொள்வனவு செய்யக்கூடிய இயலுமை காணப்பட்ட போதும் அதனைக் கருத்திற்கொள்ளாமல் 2010 -2012 ஆம் ஆண்டுகளில் வாடகைக்கு பெற்றுக்கொண்ட 02

டக் கப்பல்களுக்கான வாடகையாக ரூபா 600 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் வெளிப்பட்டன.

i. வாடகை அடிப்படையில் கடந்த ஆண்டுகளில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 03 டக் கப்பல்களுக்காக நாளொன்றிகு 3,750 இற்கும் 5000 அமெரிக்க டொலர்களுக்கு இடைப்பட்ட அளவில் செலுத்தப்பட்டிருந்தன. எனினும் வாடகைக்கு பெற்றுக்கொண்ட டக் கப்பல்களை உச்ச அளவில் பயன்பாட்டினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் பயன்படுத்தியிருக்கவில்லை. கூடுதலான இயந்திர கொள்ளளவு மற்றும் குறைந்த எரிபொருள் பயன்பாடு, அந்த டக் கப்பல்கள் நாளொன்றுக்கு இரண்டு தடவைகள் மாத்திரம் பிரயாணத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை என்பன இது தொடர்பான தரவுகளின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது.

ii. கப்பலொன்று நாளொன்றுக்கு இரண்டு பிரயாணங்களுக்கும் குறைந்த அளவில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதும் அந்தக் கப்பல்களுக்காக ஒரு நாளைக்குரிய வாடகையாக ஆகக்குறைந்தது ரூபா 465,000 செலுத்த வேண்டியிருந்தது.

## 4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீள் ஏற்றுமதிக்காக கப்பல் முகவர்களால் கொண்டுவரப்பட்ட 3515 கனமீற்றர் (CMB) அளவிலான 04 படகுகளை 112 நாட்களாக துறைமுகத்தினுள் வைக்கப்பட்டிருந்தமைக்காக துறைமுக கட்டண இறுப்பனவு (Tariff) இன் பிரகாரம் களஞ்சியங்கள் / நிலக் கட்டணங்களாக ரூபா 67,233,290 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தன. துறைமுக செயற்பாட்டு பிரிவின் உயர்மட்ட நிறைவேற்று உத்தியோகத்தர்களால் தவறான கட்டணங்களை கணக்கீடு செய்த காரணத்தால் ரூபா 55,213,465 தொகை குறைத்து அறவிடப்பட்டமையால் அதிகாரசபைக்கு ரூபா 55,213,465 ஆன நிதிசார் நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபைக்கு அறவிடப்பட வேண்டிய கட்டணங்களை அறவிடுவதில் காணப்பட்ட பலவீனங்கள் காரணமாக 2006 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம ஆண்டு வரை அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 105,491,135 ஆன கட்டணங்கள் கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

(இ) வர்த்தக அடிப்படையில் பராமரித்துச் செல்லப்படுகின்ற கப்பலொன்றிற்காக அதிகாரசபையால் வழங்கப்பட்ட சேவைகளுக்காக 2007 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டிற்காக பெறவேண்டிய ரூபா 5,659,734 ஆன முழுத்தொகையும் மீளாய்வாண்டின் வருமானத்திற்கெதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஈ) அதிகாரசபை தம்வசமுள்ள வளவுகளை வாடகைக்கு வழங்கியமையால் அறவிடப்பட வேண்டிய குத்தகை வாடகை வருமானத்தில் ரூபா 2,656,871 இற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளதாக சட்டமா அதிபரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(உ) 2012 திசெம்பர் 31 இல் வரிசை அமைச்சினால் மீள் நிரப்பப்பட வேண்டிய ரூபா 1,615,659 தொகை அமைச்சுக்களின் பெயர் மாற்றப்பட்ட காரணத்தால் அறவிடப்படாமல் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 4.7 பயன்படுத்தப்படாத குறைவாகப் பயன்பாட்டிற்குற்பட்ட சொத்துக்கள்

அதிகாரசபைக்குச் சொந்தமாக 03 லெவல் லபின் போடல் பாரந் தூக்கிகள் இருந்த போதிலும் அவற்றில் 02 பாரந்தூக்கிகளைப் பாவனைக்கு எடுக்காமல் இருக்கையில் அதனைக் கருத்திற் கொள்ளாமல் மேலும் அவ்வாறான 02 பாரந்தூக்கிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும் இந்த 02 பாரந்தூக்கிகளும் அதிகளவில் சரக்குக் கப்பல்கள் வருகை தராத தற்போது கப்பல்களில் சிறு திருத்தங்களை மேற்கொள்ளும் இறங்குதுறையொன்றிலேயே பொருத்தப்பட்டிருந்தன.

## 4.8 ஏனைய நிறுவனங்களுக்கு சொத்துக்கள் விடுவித்தல்

அதிகாரசபையின் ஊடக பிரிவின் மூலம் வரிசை அமைச்சின் பிரதி அமைச்சரின் ஊடகத்துறையை மேவுகை செய்வதற்காக அதிகாரசபையின் வாகனங்கள், எரிபொருள், ஊழியர்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை 11 சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தன. அதிகாரசபைக்கு உரித்தற்ற ஊடகத்துறையை மேவுகை செய்வதற்காக ஈடுபடுத்தப்பட்ட 03 வாகனங்களுக்காக மாதாந்தம் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் எல்லையை மிகைத்து ரூபா 274,850 பெறுமதியான 2,390 லீற்றர் மேலதிக எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அதிகாரசபையின் தொலை நோக்கின் (Vision) பிரகாரம் 2015 அளவில் ஆசியாவின் பிரதான கப்பல்கள் செயற்படுத்தப்படும் துறைமுகமொன்றாக இலங்கை துறைமுக அதிகாரசபையை மாற்றுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அதிகாரசபையின் நிதி நிலைமை, கொள்கலன் செயற்பாட்டை கையாளல் மற்றும் கப்பல்களின் வருகை தொடர்பான தரவுகளின் பிரகாரம் கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது செயற்திறனை அதிகரிப்பதற்கு போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்ட எமது நோக்கம் (Our Mission) இன் கீழ் சேவை நாடுனர்களை அடிப்படையாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வசதிகள் மற்றும் சிறந்த சேவையொன்றை வழங்கி நலன்களை அதிகரித்துக்கொள்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது. கடந்த பத்தாண்டுகளில் கொழும்பு துறைமுகத்தின் கப்பல் சரக்கு கையாளல் செயற்பாடுகளில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பங்களிப்பிற்கு ஒப்பாக தனியார் கம்பனிகளின் பங்களிப்பு படிப்படியாக அதிகரித்திருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

(இ) அதிகாரசபையின் கீழ் இருக்கும் காலித் துறைமுகத்தை பிராந்திய துறைமுகமொன்றாக அபிவிருத்தி செய்வதற்கும் கொழும்புத் துறைமுகத்தில் செயற்படுகின்ற வர்த்தக ரீதியான கப்பல் சரக்கு கையாள்வதற்காக மாற்றுத் துறைமுகமொன்றாகவும் அபிவிருத்தி செய்வது நோக்கமொன்றாக குறிப்பிடப்பட்டிருந்தும் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரையான தரவுகளை ஒப்பிடும் போது காலித் துறைமுகத்தில் கப்பல்களின் வருகை குறைவடைந்தமை காலி துறைமுகம் தொடர்ந்தும் நட்டமடைதல் காரணமாக இந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்வில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது துறைமுக அதிகாரசபையின் தலைவருக்கு தெரியப்படுத்தப்பட்டது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர்
(இ) முதலீடுகள்
(ஈ) இருப்புக் கட்டுப்பாடு
(உ) சொத்துக் கட்டுப்பாடு



**எச். ஏ. எஸ் சமரவீர**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

ரீசீ/பி/எஸ்எல்பீஏ/எப்ஏ/2012 FD/FA/C/82-XV/2012/14(2)(c) 2014 மார்ச் 27

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்**

**இலங்கை துறைமுக அதிகார சபையினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான திரட்டிய நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) சீ பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 2.1 நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான கருத்துரைத்தல்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

(அ) நியமம் 07 இன் பிரகாரம் நிதிசார் உபகரணங்களின் நியாயமான பெறுமதி தொடர்பில் எழுகின்ற இடரின் தன்மை மற்றும் அளவு சம்பந்தப்பட்ட அறிக்கை தயார் செய்து இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையோடு சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. நியமம் 07 இன் பிரகாரம் இந்த இடர்நேர் தன்மை வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்தும் அது தீர்வாக நிதிக் கூற்றுக்களோடு அல்லது வருடாந்த அறிக்கையோடு முகாமைத்துவ தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுதலுக்கு அனுப்பப்பட வேண்டுமென சம்பந்தப்பட்ட நியமங்களுக்கேற்ப தெரிவிக்கப்படாதிருந்ததனால் சம்பந்தப்பட்ட அறிக்கை வருடாந்த அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஆனால் நிதிக் கூற்றுக்களில் குறிப்பொன்றாக சமரப்பிக்கப்பட வேண்டுமென கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் நிதிக் கூற்றுக்களில் இது தொடர்பில் வெளிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) 2012 ஆண்டில் உடைத்து அகற்றப்பட்ட கட்டிடங்களினது பெறுமதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மீது 2013 ஆண்டின் கணக்கு மீதிகளிலிருந்து கைதவிர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டு கொள்கைகள்

(அ) காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்களுக்கு வெவ்வேறான நடைமுறைக் கணக்குகள் பேணப்படுகின்றன. ஆனால் கொழும்பு துறைமுகத்துடன் ஒன்றிணைத்தே இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படுகின்றன. மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் கணக்குப் பதிவுகள் கொழும்பு துறைமுகத்தோடு செய்யப்படுவதுடன் 2013.11.01 ஆம் திகதியிலிருந்து மாகம்புர துறைமுக முகாமைத்துவ கம்பனியினால் மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்படும் கம்பனியாக நடாத்திச் செல்லப்படுகின்றது. எனவே நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் வருமானமும் செலவினமும் ஒன்றுசேர்த்து ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களாக தயார் செய்யப்படுவதற்கு 2013 ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் இயக்க வருமானம் செலவினம் கொழும்பு துறைமுகத்தின் இயக்க வருமானம் மற்றும்

செலவினத்தோடு ஒன்றாக சீர் செய்யப்பட்டிருந்தாலும் மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்திற்கு பிரத்தியேகமான ஆகுசெலவு கணக்கு இலக்கமொன்று (Cost Centre) வழங்கப்பட்டுள்ளதால் உரிய வருமானம் மற்றும் செலவினம் வெவ்வேறாக அடையாளம் காணப்பட முடியும்.

### 2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) லங்கா மராயின் தனியார் கம்பனி யூலை மாதத்தில் நீதிமன்ற ஆணையின் மீது சொத்துக்களை இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு ஒப்படைத்துள்ளது. சம்பந்தப்பட்ட சொத்துக்கள் JCT கம்பனியினால் நிர்வகிக்கப்படுகின்றன. உரிய சொத்துக்கள் பொறுப்பளிக்கப்படுகையின் போது லங்கா மராயின் தனியார் கம்பனியின் புத்தகப் பெறுமதிகள் மிகவும் நியாயமான பெறுமதியாகக் கருதப்பட்டு சம்பந்தப்பட்ட சொத்துக்கள் அதிகாரசபையில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. 2012 ஆண்டிலிருந்து புதிய கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக (SLFRS) நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டதோடு அதன் போது ஆதனங்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்கள் அடையானம் காணப்படுவதற்கு ஆகுசெலவு மாதிரி அடிப்படை (Cost Model) தெரிவு செய்யப்பட்டது. உபகரணங்களினது பெறுமதி தொடர்பில் மிகவும் நியாயமான பெறுமதியாக ஆகுசெலவு மாதிரி அடிப்படை கருதப்படுகின்றது.

(ஆ) இந்த வாகனம் தொடர்பில் தம்புத்தேகம நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரிக்கப்பட்டு வருவதுடன் அதன் இறுதித் தீர்ப்பின் பின்னர் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) காங்கேசன்துறை துறைமுகத்தின் அலைதாங்கியின் பழுதுபார்த்தல் பணிகள் நடைபெறாததன் காரணமாக செலுத்தப்பட்டிருந்த சகல முற்பணத் தொகையும் தற்போது உரிய நிறுவனத்திடமிருந்து மீள் அறவிடப்பட்டுள்ளது.

(ஈ) எதிர்காலத்தில் எஞ்சிய கணக்கு மீதிகள் சீர்செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 2.2.4 பெறவேண்டியவை மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) அறிக்கையில் குறிப்பிடப்படும் கிடைக்கப்பெற வேண்டிய தொகையானது துறைமுக அதிகார சபையினால் வேறு நிறுவனங்களின் சேவைகள் பெறப்படுகையில் அவர்களுக்கு வழங்கப்பட்ட வைப்புக்கள் மற்றும் முன் கொடுப்பனவு நிதிகளினால் சேர்ந்தவையாகும். அதிகார சபையினால் மீதி நிலுவைகளின் சான்றுறுதிப்படுத்துதல் கடனாளிகளுக்கு மாத்திரம் அனுப்பி வைக்கப்பட்டதோடு 2013 ஆண்டிலிருந்து அந்த கிடைக்கப்பெற வேண்டிய மீதி நிலுவைகளுக்கும் சான்றுறுதிப்படுத்தும் கடிதங்கள் அனுப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) இதன் பின்னர் மூன்றாம் தரப்பினர்களிடமிருந்து பெறவேண்டிய நிலுவைகளுக்கு சான்றுறுதிபடுத்தும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(இ) i. இந்த நிலுவைக்குரிய சட்ட நடவடிக்கைகள் இன்னும் முற்றுப்பெறாதுள்ளதனால் நீதிமன்ற தீர்ப்பு கிடைக்கப்பெற்றதன் பின்னர் சீர் செய்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ii) அரச நிறுவனங்களிலிருந்து பெறவேண்டியுள்ள நிலுவைகளில் ரூபா 4,336,014 தொகை இது வரை அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஈ) இத்தொகையில் தற்போது பெறவேண்டியுள்ள ரூபா 1,732,070 தொகை நிறைவு செய்யப்பட்டுள்ள சேவைகளின் அளவிற்கு ஈடுசெய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவையில் ரூபா 747,993 தொகை இதுவரை அறவிடப்பட்டுள்ளது. மீதித் தொகை அறவிடப்படுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும் அவ்வாறு செய்யப்பட முடியாத நிலுவைகள் புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்படுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஊ) அறவிடப்பட வேண்டியுள்ள குத்தகை வாடகை வருமானத்தில் ஐந்து வருடங்கள் கடந்த நிலுவையில் ரூபா 17,052,468 தொகை அறவிட்டுக் கொள்வதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களோடு பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டு வருகின்றன. ரூபா 12,183,111 தொடர்பில் அதிகார சபை சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது. ரூபா 1,190,621 தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட முடியாதென சட்டமா அதிபரினால் அறிவிக்கப்பட்டுள்ளதால் அத்தொகை பதிவழிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மீதியான ரூபா 1,466,250 தொகை செலுத்துதலை சம்பந்தப்பட்ட நிறுவனம் புறக்கணித்துளதால் மீள் சட்ட ஆலோசனைகள் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(எ) இந்த கடன் நிலுவைகள் யுத்தம் நிலவிய காலப்பகுதிக்குரியதாகும். யுத்த சூழலில் வடக்கிற்கு பொருட்கள் மற்றும் பயணிகள் சேவைகள் தொடர்ச்சியாக வழங்க வேண்டி யிருந்ததால் அத்தியாவசிய சேவைளின் அடிப்படையில் பாகுபாடின்றி கப்பல் முகவர்களுக்கும் அரச நிறுவனங்களுக்கும் சேவைகள் வழங்க வேண்டியேற்பட்டன. இந்த நிதி அறவிடலின் நிச்சயமற்ற தன்மை மீது இவ்வாறு அறவிட முடியாத மற்றும் சந்தேகத்திற்கிடமான கடன்களுக்கு கூடிய அளவிலான ஏற்பாடு வழங்கப்பட்டது. 2013 ஆண்டில் இத் தொகையில் ரூபா 2,357,182 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(ஏ) அறவிடப்பட வேண்டியிருந்த முழுத் தொகையும் தற்போது அறவிடப்பட்டுள்ளது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

**சுங்கத் திணைக்களத்திலிருந்து கிடைக்கப்பெற வேண்டிய வானொலி இயந்திர வலையமைப்பு**

இந்த விசாரணைக்குரிய வானொலி இயந்திர வலையமைப்பிற்கு தேவைப்படும் உபகரணத் தொகை நான்கு தடவைகளில் இறக்குமதி செய்யப்பட்டது. சுங்க விசாரணைகளுக்காக அந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் அப்பொருட்கள் சுங்கத்தினால் தடுத்து வைக்கப்பட்டதோடு இலங்கை துறைமுக அதிகாரசபையினால் முன்வைக்கப்பட்ட நிறுவனரீதியான பிணை மீதும் அப்பொருட்களுக்குரிய சுங்க தீர்வை வரிகளுக்கு சமனான தொகை வைப்புச் செய்யப்பட்டதன் பின்னருமே சுங்கத்தினால் பொருட்கள் விடுவிக்கப்பட்டன. அதில் அடங்கியிருந்த வட் வரி துறைமுக அதிகாரசபையினால் அறவிடப்பட்டுள்ளது. மீதித் தொகை அப்பொருட்களுக்கு இலங்கை சுங்கத்திற்கு செலுத்த வேண்டிய தீர்வை வரிக் கட்டண தொகையானதால் அது வைப்பாக கருதப்பட முடியாது. சுங்க விசாரணை முடிவடைந்த பின்னர் இது செலவினத்தில் ஈடுசெய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**அமைச்சு தொடர்பில் ஈடுசெய்யப்பட வேண்டிய செலவுகள்**

இந்த நிலுவைகள் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**ஏனைய அரச திணைக்கள வைப்புக்கள்**

இத்தொகையில் ரூபா 1,750,585.10 நிலுகை தொடர்பிலான சான்றுறுதிப்படுத்தும் கடிதங்கள் அரச கணக்காய்வுப் பிரிவிடம் வழங்கப்பட்டுள்ளன. மீதித் தொகை தொழிலாளர் நீதிமன்றத்திலிருக்கும் வழக்குகளுக்காக வைப்புச் செய்யப்பட்டுள்ளதால் அதற்கான நிலுவைகளின் சான்றுறுதி பெற முடியாதுள்ள போதிலும் 2013 ஆண்டிலிருந்து நிலுவைகள் சான்றுறுதிப்படுத்தும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**செயற்பாடு பொருட்களின் ஏல விற்பனை**

வெளி நிறுவனங்களிலிருக்கும் துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான வைப்புக்களுக்கு மாத்திரமே இதுவரை மூன்றாம் தரப்பினரின் நிலுவை மீதிகள் சான்றுறுதிப்படுத்தப்பட்டன. விலைகோரல், ஏல விற்பனை தொடர்பில் எம்மிடம் வைப்புச் செய்யப்பட்டுள்ள வெளி நபர்கள் / நிறுவனங்களுக்குரிய கட்டணங்களே செயற்பாடு பொருட்களின் ஏல விற்பனை கணக்கில் உள்ளன. இதுவரை அதற்கான நிலுவை மீதிகள் சான்றுறுதிப்படுத்தும் கடிதங்கள் வரவழைக்கப்படவில்லை. 2013 ஆண்டிலிருந்து நிலுவை மீதிகள் சான்றுறுதிப்படுத்தும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

**(அ)** 2000.06.09 ஆந் திகதி பொதுத் திறைசேரி மற்றும் உள்நாட்டு வருமான திணைக்களம் வழங்கிய உடன்பாட்டிற்கேற்ப உழைக்கும் போது செலுத்தும் வரி அதிகாரசபையினால் செலுத்தப்படுகின்றது.

(ஆ) நிலுவை மீதிகள் சான்றுறுதிப்படுத்தும் ஆவணங்கள் தயாரிக்கப்படுகையில் எதிர்காலத்தில் சுற்றுநிருபத்திற்கேற்பவும் தாமதங்கள் ஏற்படாதவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கும் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

(இ) i. அப்போதைய துறைமுக அதிகாரசபையின் தலைவரினால் 1984.08.15 ஆந் திகதிகொண்ட 264 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றுநிருபத்திற்கமைய 1987.09.29 ஆந் திகதி வழங்கப்பட்ட செ/ 69 ஆம் இல. சுற்றுநிருபத்திற் கேற்பவாறு உத்தியோகபூர்வ வாகனங்கள் பயன்படுத்தப்படுவதற்கு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**ii.** முகாமைத்துவக் குழுவின் தீர்மானத்திற்கமைய அரச வர்த்தக திணைக்களத்தின் இல PE/COM/29/GEN கடிதம் மூலம் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட வாகனங்களுக்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகையில் சந்தையிலுள்ள விலைகளுக்கேற்ப கார்களுக்கு ரூபா 50,000 வும் வேன்களுக்கு ரூபா 60,000 வும் செலுத்தப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்படி வாடகை அடிப்படையில் கார்கள் பெறப்படின் ஒரு காருக்கு ரூபா 50,000 செலுத்த வேண்டியேற்படும். எனவே ரூபா 40,000 கொடுப்பனவு மேற்கொள்ளப்படுதலின் மூலம் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்படும் காலப்பகுதியினுள் ரூபா 920,000 மேலதிகமாக செலுத்தப்படவில்லை. இது ஆகுசெலவு அதிகார சபை பெற்றுள்ள மீதப்படுத்தலாகும்.

**iii.** மேலே 1 இல குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களுக்கு எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கான உரித்தும் உண்டு . வழங்கப்படும் எரிபொருள் வரையறை அதிகரித்தலானது சேவை அவசியப்பாடும் தேவையின் மீதே நடைபெறும். இது துறைமுக சட்டத்தின் 07 (ஊ) பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் மீது பெற்றுக் கொடுக்கப்பட முடியும்.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

எமது கணக்கீடுகளுக்கமைய சென்ற வருடத்தைப் பார்க்கிலும் மீளாய்வுக்குட்படும் ஆண்டின் செய்ற்பாடுகள் மற்றும் ஏனைய வருமானங்களின் வளர்ச்சி ரூபா 7,047 மில்லியன் ஆகும். சுயவிருப்பில் ஓய்வாற்றப்படும் செலவினக் குறைவு ரூபா 1,994 மில்லியனாக இருக்க வேண்டும். ஏனைய எண்ணிக்கை தரவுகளில் உடன்பாடு உண்டு.

**3.2 பகுப்பாய்வு செய்யப்பட்ட நிதி மீளாய்வு**

நிதி வருமானத்துடன் நிதிசார் செலவினம் சீர் செய்யப்படுதலின் பின்னர் தேறிய நிதி ஆகு செலவு தயாரிக்கப்படுவதால் (நிதிக்கூற்றுக் குறிப்புகளின் இல. 34 கேற்ப) எமது கணக்கீடுகளுக்கமைய எண்ணிக்கை தரவுகள் பின்வரும் விகிதங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் ஏனைய எண்ணிக்கைகள் மற்றும் விகிதங்களில் உடன்பாடு உண்டு.

| | வருடம் 2012 | 2011 |
|---|---|---|
| ஒரு மெட்றிக் தொன்னுக்கு தேறிய இலாபம் | 103 | 3.13 |
| மொத்த வருமானம் ரூபா மில்லியன் | 38,334 | 31,287 |
| மொத்த செலவினம் ரூபா மில்லியன் | 38,039 | 30,965 |

**விகிதங்கள்**

| | வருடம் 2012 | 2011 |
|---|---|---|
| **வருமானமீட்டலின் வரிக்குப் பின்னர் இலாப/ நஷ்டம்) நூற்றுக்கு** | 10.87 | |
| **நீண்டகால கடன்களுக்கு திணிவு மூலதனம் நூற்றுக்கு** | 1.78 | 1.55 |
| **சடுதியான விகிதம்** | 1:2.14 | |

**4.1 செயலாற்றுகை**

**(அ) கொழும்பு துறைமுகம்**

**(i) கப்பல்களின் வருகை**

குறிப்பிடப்படும் எண்ணிக்கையானது சரியானவை.

2011 ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் 2012 ஆண்டில் வந்த கப்பல்களின் எண்ணிக்கை 6.2%ஆக குறைவாக பதிவாகியிருத்த போதிலும் அவ்வாறு நடைபெறுவதற்கான காரணம் அளவில் பெரிய கப்பல்கள் வந்தமையே ஆகும்.

2011 ஆண்டில் துறைமுகத்திற்கு வருகை தந்த கப்பலொன்றின் தொன் அளவு 30,923 ஆகவும் 2012 ஆண்டில் கொழும்பு துறைமுகத்திற்கு வந்த கப்பலொன்றின் தொன் அளவு 32,979 வரையும் அதிகரித்திருந்தது. 2012 ஆண்டில் சர்வதேச கப்பற்றுறையில்

சிறிய வளர்ச்சி காணப்படுகின்றது. மேலும் ஜய மற்றும் ஐக்கிய கொள்கலன் முனையங்களில் கப்பல்களின் கையாளல்கள் மற்றும் வினைத்திறன் 2012 ஆண்டின் இறுதியில் அதிகரிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**(ii) கொள்கலன் கையாளல் (இருபது சம அலகுகள் TEUS)**

குறிப்பிடப்படும் தரவு எண்ணிக்கைகள் சரியானதாகும்.

2012 ஆண்டில் கொழும்பு துறைமுகத்தினால் கையாளப்பட்டுள்ள மொத்த கொள்கலன்களின் எண்ணிக்கை 4,187,120 இருபது சம அலகுகளாகும். இது சென்ற (2011) ஆண்டில் கையாளப்பட்ட கொள்கலன் அளவில் 1.8% வீழ்ச்சியாகும்.

இருக்கும் புள்ளி விபரங்களுக்கேற்ப இந்திய துறைமுகங்களினுள் பிரதான துறைமுகமான ஜவஹர்லால் நேரு துறைமுகத்தில் 2011 ஆண்டில் கொள்கலன் கையாளல் எண்ணிக்கை 4.31 மில்லியனிலிருந்து 2012 ஆண்டில் 4.25 மில்லியன் இருபது சம அலகுகள் வரை அதாவது 1.41% வீழ்ச்சி காணப்படுகின்றது. ஹொரங்கொங் துறைமுகத்தில் 2012 வருட கொள்கலன் கையாளல் அளவு 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் 5.4% வீழ்ச்சி தென்படுகின்றது நிலையில் மாற்றமில்லாது பேணிச்செல்லப்பட்டுள்ளது. அநேக ஐரோப்பிய துறைமுகங்களின் பின்னடைவுகளுக்கு யுரோ வலய வீழ்ச்சி காரணமாக அமைந்துள்ளது.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் நுகர்வுப் பொருட்களின் பிரதான கொள்வனவு நாடாக அமெரிக்கா உள்ளது. சில பொருட்களினது சந்தை வீழ்ச்சி, தொடர்ச்சியான உள்நாட்டு அரசியல் பிரச்சினைகள் போன்று வளைகுடா அரேபிய நாடுகளின் ஸ்திரமற்றதன்மையும் இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களின் சந்தை வீழ்ச்சியடைவதற்கு காரணமாக அமைந்துள்ளது.

- முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உலக பொருளாதார வீழ்ச்சி காரணமாக ஆசியாவிலிருந்து ஐரோப்பா மற்றும் ஐக்கிய அமெரிக்க சந்தை நோக்கிச் சென்ற (விசேடமாக இந்திய உபகண்டத்திலிருந்து) கப்பற் சரக்குகளின் அளவு குறைந்ததேயாகும். 2012 ஆண்டிலும் அவ்வாறான பின்னடைவு ஏற்பட்ட போதிலும் 2013 ஆண்டின் அக்டோபர் மாதமளவில் 2012 ஆண்டை விட 4% மீள் ஏற்றுமதி கொள்கலன் அளவில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.
- 2011 ஆண்டில் 54% இருந்த சந்தைப் பங்கானது 2012 ஆண்டில் 55% வரை அதிகரித்ததோடு 2013 ஆண்டின் அக்டோபர் மாதத்தில் 58% வரை அதிகரிக்கப்படக்கூடியதாக இருந்தது. 2012 ஆண்டில் 68% இருக்கையில் சவுத் ஏசியா கேட்வே டர்மினல் நிறுவனம் பூரண பரிமாணத்துடன் செயற்படாதிருந்ததோடு பின்னர் அதன் நவீன கொள்கலன் வசதிகளின் வளர்ச்சி காரணமாக இலங்கை துறைமுக அதிகார சபை ஒருவிதபோட்டிட்டியான நிலையினை எதிர்நோக்கியது.

**(ஆ) திருகோணமலை துறைமுகம்**

2011 ஆண்டிடுடன் ஒப்பிடப்படுகையில் 2012 ஆண்டில் ஜிப்சம் (Gypsum) தரையிறக்கப்படுவதற்கு டோக்கியோ கம்பனிக்கு வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை 20 ஆல் அதிகரித்தது தூர கடலில் விசேட கையாளல்கள் மேற்கொள்ளப்பட்டதனால் 2012 ஆண்டில் கப்பல்களின் வருகையில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

**(இ) காலி துறைமுகம்**

ஹொல்சிம் உற்பத்தி கம்பனியின் தேவைப்பாட்டில் இறக்குமதி செய்யப்படும் சிமேந்து உற்பத்திகளின் மீது காலி துறைமுகத்தில் கையாளப்படும் கப்பல்களின் எண்ணிக்கை தங்கியுள்ளது. ஹொல்சிம் தொழிற்சாலை புதுப்பிக்கப்பட்டதனால் உற்பத்தி குறைந்துள்ளதுடன் இதுவும் கப்பல்களின் எண்ணிக்கை குறைவடைவதற்கான காரணமாக அமைந்துள்ளது. மேலும் ஹொல்சிம் கம்பனியினால் வரவழைக்கப்படும் சில கப்பல்கள் கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டு நெடுஞ்சாலைகள் ஊடாக மூலப் பொருட்கள் மற்றும் சீமேந்து போக்குவரத்து செய்யப்பட்டதனாலும் இவ்வாறு கப்பல்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இதற்கு மேலதிகமாக சோமாலியா கடல் பிராந்தியத்திலுள்ள பாதுகாப்பற்ற தன்மை காரணமாக சுற்றுலா பயணிகள் கப்பல்களினதும், உல்லாசப் படகுகளினதும் வருகை மிகவும் குறைவடைந்துள்ளதோடு எதிர்காலத்திலும் இது தாக்கத்தை ஏற்படுத்தும்.

**(ஈ) சகல துறைமுகங்களும் (கொழும்பு. திருகோணமலை,காலி)**

உள்நாட்டு இறக்குமதி ஏற்றுமதி வர்த்தகத்தில் ஏற்பட்டுள்ள பின்னடைவினால் இறக்குமதி ஏற்றுமதி கொள்கலன்களின் அளவில் 2.5% ம், உலக பொருளாதார வீழ்ச்சியினால் மீள் ஏற்றுமதி கொள்கலன் எண்ணிக்கையில் 1.9% வீழ்ச்சியும் காரணமாக கையாளல் தொன் அளவும் மறை எண் பெறுமானத்தில் அமைந்துள்ளது. மரபு ரீதியான கப்பற் சரக்குகளினதும் உள்நாட்டு இறக்குமதி ஏற்றுமதிகளினதும் தொன் அளவில் ஏற்பட்டுள்ள மறை எண் பெறுமான நிலை இதற்கான காரணமாகும்.

**(உ) மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம்**

மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் கையாளல் நடவடிக்கைகள் 2010 நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டதோடு இது தற்போது வலயத்தின் பிரதான பொருளாதார மைய நிலையமாக செயற்படுகின்றது.

கையாளல் நடவடிக்கைகளின் ஆரம்பத்தில் இருந்து மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் 155 கப்பல்களின் கையாளல்கள் பதிவாகியுள்ளன. கையாளல் நடவடிக்கைகளின் எண்ணிக்கைகள் பின்வருமாறு.

| கப்பல் வகை | கப்பல்களின் எண்ணிக்கை | கையாளல் | மொத்தம் (தொன்) |
|---|---|---|---|
| வாகனங்கள் | 153 | 71,654 அலகுகள் | 117,331.48 |
| கப்பற் சரக்கு | 2 | 2,681 கிலோவொன்றுக்கு | 5,570.00 |
| மொத்தம் | 155 | | 122,901.48 |

**கன்ட்றி பாரமுயர்த்திகளின் நிலை**

கன்ட்றி பாரமுயரத்திகளின் 1 மற்றும் 11 ஆம் கட்டங்களினது திட்டமிடல் நடவடிக்கைகள் தற்போது முடிவடைந்துள்ளன. இலங்கை துறைமுக அதிகாரசபையின் அலுவலர்கள் சீனாவின் **ZPMC** கோபரேசன் கம்பெனிக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். முதலாவது கன்ட்றி பாரமுயர்த்திகளின் தொகை 2014 ஆண்டின் நடுப்பகுதியில் கொண்டுவரப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

**எதிர்கால அபிவிருத்தி தொடர்பான மூலோபாய நடவடிக்கைகளின் ஆரம்பம்**

பின்வரும் அபிவிருத்திப் பணிகள் ஊடாக மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுக வசதிகள் மேம்படுத்தப்பட்டு அதன் மூலம் பாரியளவிலான கப்பல்கள் துறைமுகம் நோக்கி கவரப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. எண்ணெய்த் தாங்கித் தொகுதி (Tank farm) மற்றும் கப்பல்களுக்கு எண்ணெய் வழங்கும் வசதிகளின் (Bunkering) பூர்வாங்க தயார்படுத்துதல் மற்றும் பரீட்சிப்புகள் தற்போது நிறைவு பெற்றுள்ளன எனவே தேவைப்படும் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கு எரிபொருள் கொண்டுசெல்லும் கப்பல்கள் துறைமுகத்திற்கு வருவதை எதிர்காலத்தில் எதிர்பார்க்கலாம். இதற்கிடையில் மாகம் ருஹூணுபுர மஹிந்’த ராஜபக்ஷ துறைமுகத்தினுள் பிரதான வர்த்தகப் பிரிவொன்றாக கப்பல்களுக்கான எரிபொருள் வழங்கும் சேவை ஆரம்பிக்கப்படுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கைத்தொழில் துறைமுகமொன்றாக மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. தமது வர்த்தக நிலையங்களை துறைமுக வளாகத்தினுள் நிறுவ ஆர்வம் காட்டும் முதலீட்டாளர்களிடமிருந்து பிரேரணைகள் கோரப்பட்டுள்ளன இது தொடர்பில் தெரிவு செய்யப்படும் நிறுவனங்கள் எதிர்காலத்தில் அவர்களினது வர்த்தக நடவடிக்கைகளுக்கு துறைமுக வசதிகளை நாடி வருகை தருவர்.

நிர்மாணப் பணியின் 11 ஆம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளது. இதன் மூலம் மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் பரிமாணம் அதிகரிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**4.2 முகாமைத்துவ செயற்றிறனின்மை**

(அ) சம்பந்தப்பட்ட இயந்திர உபகரணங்கள் அந்த அளவிலான காலம் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு பாவனைக்கு எடுக்கப்படுவதனால் இப்பொருட்கள் ஐந்து வருடங்களிலிருந்து பதினைந்து வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு களஞ்சியப் படுத்தி வைக்கப்படுகின்றன. பாரிய நிதிப் பெறுமதி கொண்ட இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படுகையின் போது அநேகமாக அதனுடன் உதிரிப்பாகங்களும் வழங்கப்படுகின்றன. இந்த உதிரிப்பாகங்களின் பெறுமதியும் தொகை கணக்கீட்டில் உள்ளடக்கப்படுகின்றது சில பாகங்கள் 10-15 வருடங்கள் கடந்ததன் பின்னரே பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்றன.

அதேபோன்று இந்த உதிரிப்பாகங்கள் திறந்த சந்தைகளில் உடனடியாக கொள்வனவு செய்ய முடியாது. அநேகமான பாரிய இயந்திர உபகரணங்களினது உதிரிப்பாகங்கள் சில சந்தர்ப்பங்களில் வெளிநாடுகளில் கட்டளைகளை அனுப்பி பெற்றுக் கொள்ளல் வேண்டும் அதேபோன்று ஒவ்வொரு ஆண்டிலும் சம்பந்தப்பட்ட தொகை பற்றியதில் சிறந்த அறிவு கொண்ட பொறியியலாளர், வேலை முகாமையாளர்கள் மற்றும் உள்ளக கணக்காய்வுப் பகுதியின் அலுவலர்களைக் கொண்ட குழுவினால் ஆய்வு செய்யப்பட்டு மேற்கொண்டு தேவைப்படாத தொகை உரிய முறையில் அகற்றப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஆ) காங்கேசன்துறை துறைமுகத்தின் அலைதாங்கியின் பழுதுபார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்படாததன் காரணமாக வழங்கப்பட்ட சகல முற்பணங்களும் தற்போது சம்பந்தப்பட்ட நிறுவனத்திலிருந்து மீள் அறவிடப்பட்டுள்ளது.

(இ) 1999 ஆண்டில் சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் ஏற்படுத்தப்பட்ட குத்தகை ஒப்பந்தத்திற்கேற்ப அந்த நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட வளாக இடத்துக்கான வரிப்பணம் துறைமுக அதிகாரசபையினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

### 4.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

**(அ)** துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான இராணி இறங்குதுறை, நிர்மாணித்து கையாளல் மேற்கொண்டு ஒப்படைக்கும் அடிப்படையின் (BOT) மீது 30 ஆண்டுகளுக்கு 03 நங்கூரத்தளங்களை மீளமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் 1999 ஆண்டில் தனியார் முதலீட்டாளரொருவருக்கு வழங்கப்பட்டது.

இதன்மூலம் கொழும்பு துறைமுகம் ஆசியாவின் பிரதான கொள்கலன் கையாளல் துறைமுகமொன்றாக பிரபல்யமாகியதோடு அரச மற்றும் தனியார் துறைகளுக்கிடையில் போட்டி நிலைமை அதிகரித்தலின் மீது ஒட்டுமொத்தமாக கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன் கையாளல் 1,626,616 அலகுகளிலிருந்து 2012 வருடத்தில் 4,187.120 அலகுகள் வரை அதிகரித்தது. இதனுடாக போட்டித் தன்மையில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களினது வினைத்திறனும் அதிகரித்தது.

தனியார் துறையின் புதிய நங்கூரத்தளங்கள், நவீன இயந்திர உபகரணங்களுடன் கவர்ச்சிகரமான சேவைகள் முதலில் பெற்றுக் கொடுக்கப்பட்டதன் மூலம் அதிகாரசபைக்குச் சொந்தமான சந்தை மேலாதிக்கம் படிப்படியாக இழந்தமை உண்மையாகிய போதிலும் 2010 ஆண்டிலிருந்து அதிகாரசபையின் வினைத்திறன் மேலும் மேம்படுத்தப்பட்டும் பல்வேறு மீளமைப்புப் பணிகளின் மூலமும் நுகர்வோர் கவரப்பட்டு சந்தைப்பங்கு 2010 ஆண்டில் 52% இருந்து 55 % வரை வளர்ச்சி அடைந்துள்ளது. 2013 ஆண்டில் இதைவிட மேலும் உயர்வடையும் என உறுதியாகக் கூறமுடியும்.

வினைத்திறன் அதிகரிக்கப்படுவதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபையின் பழைய இயந்திர உபகரணங்களுக்குப் பதிலாக புதிய இயந்திர உபகரணங்கள் பெறப்பட்டும் ஊழியர்களின் உளப்பாங்கில் மாற்றம் ஏற்படுத்தலின் மூலமும் சேவைகள் வழங்கலின் பங்களிப்பில் உச்ச செயற்றிறன் வளர்ச்சியடைந்து வருகின்றது. இதனால் 2013 ஆண்டில் தேசிய வணிக சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய வர்த்தக தர விருது வழங்கும் விழாவில் துறைமுக அதிகாரசபைக்கு இரண்டாம் இடம் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டது.

**(ஆ) திருகோணமலை துறைமுகம்**

நாட்டில் யுத்த நிலைமை முடிவடைந்ததும் திருகோணமலை துறைமுகம் மார்க்கமாக வடக்கிற்கு கப்பல்கள் மூலமான பொருட்கள் போக்குவரத்து நிறுத்தப்பட்டதோடு திருகோணமலை துறைமுகத்தில் கப்பல் கையாளல் நடவடிக்கைளிலும் வீழ்ச்சி ஏற்பட்டது. தற்போது வரும் கப்பல்களில் 70% பிரிமா, டோக்கியோ சீமெந்து கம்பனிகளினது கையாளல்களுக்காக வரும் கப்பல்களாகும். அக்கப்பல்களிடமிருந்து கப்பல் கட்டணங்கள் மற்றும் கையாளப்பட்ட தொன் அளவிற்கேற்ப கட்டணமும் அறவிடப்படுகின்றன. தற்போது ஹொல்சிம் சிமேந்து கம்பனியினால் கிழின்கர் கப்பல்களின் கையாளல் மேற்கொள்ளப்பட திட்டமிடப்பட்டுள்ளது. புதிய “ Vision 2020” மூலோபாய திட்டத்திற்கு அமைய துறைமுகம் சார்ந்த கைத்தொழிற்சாலைகள் நிறுவப்படுவதற்கு முதலீட்டாளர்களிடமிருந்து பிரேரணைகள் பெறப்பட்டு அவை மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன.

**(இ) காலி துறைமுகம்**

ஹொல்சிம் உற்பத்தி கம்பனியின் தேவைப்பாட்டில் இறக்குமதி செய்யப்படும் சிமேந்து உற்பத்தியின் மீது காலி துறைமுகத்தில் கையாளப்படும் கப்பல்களின் எண்ணிக்கை தங்கியுள்ளது ஹொல்சிம் கம்பனியின் தொழிற்சாலை நவீனமயப்படுத்தப்பட்டதன் காரணமாக உற்பத்தி குறைக்கப்பட்டதனால் அதுவும்

கப்பல்களின் எண்ணிக்கையில் தாக்கமேற்படுத்தியுள்ளது. மேலும் ஹொல்சிம் கம்பனியினால் வரவழைக்கப்படும் சில கப்பல்கள் கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு பிரதான சாலை மார்க்கமாக அந்த மூலப் பொருட்களும் சிமேந்தும் போக்குவரத்து செய்வதனாலும் இவ்வாறு கப்பல்களின் தொகை குறைந்துள்ளது.

இதற்கு மேலதிகமாக சோமாலியா கடல் பிராந்தியத்திலுள்ள பாதுகாப்பற்ற தன்மை காரணமாக பயணிகள் கப்பல்கள் மற்றும் உல்லாசப் படகுகளின் வருகையும் குறைந்துள்ளதோடு எதிர்காலத்திலும் இது தாக்கத்தை ஏற்படுத்தும். 2011 வருடத்துடன் ஒப்பிடப்படுகையில் 2012 ஆண்டில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் கப்பல்களின் வருகையில் குறைவேற்படுவதற்கு காரணமாக அமைந்துள்ளது.

ஆயினும் தற்போது துறைமுகத்திற்கு வெளியே நங்கூரமிடப்படும் கப்பல்களுக்கு (**Out Port Limit)** வழங்கப்படும் சேவைகளினால் குறிப்பிடத்தக்க வருமானம் பெற முடிந்துள்ளது.

**(ஈ)** அதிகார சபைக்கு சொந்தமாக இருக்கும் இழுவைக் கலங்கள் இலங்கையின் சகல துறைமுகங்களினதும் கப்பலோட்ட கையாளல் மேற்கொள்வதற்கு போதுமான அளவில் இல்லை. அத்தோடு 15-30 வருடங்கள் பழைமையான கலங்களாக இருக்கின்ற போதிலும் அதில் 06 கலங்கள் 10-15 வருடங்களுக்குரியதாகும்.

இழுவைக் கலங்களுக்கான பழுதுபார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்படும் போது கட்டுப்பாட்டு நிலைய பணிகளிலீடுபடும் அதிக விசை கொண்ட படகுகளின் (Duty tugs) பழுதுபார்த்தல்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுகின்ன. அதன்படி முன்னுரிமை வழங்கப்படும் இழுவைக் கலங்களினது பழுதுபார்ப்புகள் முடிவடைந்ததன் பின்னர் இருக்கும் ஊழியர்களின் அளவிற்கேற்ப ஏனைய இழுவைக் கலங்களினது பழுதுபார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்படுவதனால் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இழுவைக் கலங்களினது பழுதுபார்த்தல்களில் தாமதமேற்பட்டுள்ளன. நாளாந்தம் நடைபெறும் தேர்ச்சி பெற்ற ஊழியர்களினது ஓய்வு பெறுதலும் தற்போது அனுபவம் பெற்ற ஊழியர்களினது தட்டுப்பாடும் இதற்கான காரணமாகும்.

ஆயினும் தற்போது இவ்விரு கலங்களும் கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுகங்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

(அ) கப்பல் கையாளல் பணிகளில் ஜய கொள்கலன் முனையத்தினால் வழங்கப்பட வேண்டிய துணை சேவைகளான கொள்கலன்களின் பூட்டுக்களை போடுதல் / பூட்டுக்களை விடுவித்தல் மற்றும் குளிர் கொள்கலன்களினது வெப்பம் மேற்பார்வை செய்தல் போன்ற சேவைகளுக்கு துறைமுக அதிகாரசபையின் ஊழியர்கள் ஈடுபடுத்தப்படின் பாரிய செலவினம் பொறுப்பேற்க வேண்டியேற்படும். இந்த நிலைமையின் கீழ் தற்போது ஊழியர் சந்தையில் செலுத்தப்படும் மிகவும் குறைந்த நாளாந்த சம்பளம் அடிப்படையிலான விலையில் சம்பந்தப்பட்ட சேவைகள் இலங்கை துறைமுக முகாமைத்துவ ஆலோசனைச் சேவை கம்பனியூடாக பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) துறைமுக அதிகாரசபையின் தேவைப்பாட்டின் மீது அதிகாரசபையின் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதற்கு இலங்கை வங்கியின் நிதி சேகரிக்கும் நிலையங்கள் நடாத்திச் செல்லப்படுவதற்காக முகாமைத்துவத்தின் அங்கீகாரம் மீது வாடகையின்றி 03 வளவுகள் வழங்கப்பட்டுள்ளன. இவை அனுமதி பத்திர

அலுவலகம்,கனல் முனையம் மற்றும் பேலியகொட களஞ்சியத் தொகுதியில் அமைந்துள்ளன. இந்த நிலையங்களில் பொதுவான வங்கி நடவடிக்கைகள் தவிர்ந்த துறைமுக பாவனையாளர்களுக்கான வங்கி நடவடிக்கைகள் மாத்திரமே நடைபெறுகின்றன.

துறைமுக ஊழியர்களின் சம்பளங்கள் வங்கிகளில் பெறப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால் ஊழியர்களின் நலன் கருதி துறைமுக வளவினுள் வங்கி நடவடிக்கைகள் நடாத்திச் செல்லப்படுகின்றன.

இந்த வங்கிகளை துறைமுக பாவனையாளர்கள் மற்றும் அதிகாரசபையின் ஊழியர்கள் மாத்திரமே பயன்படுத்துகின்றனர். இவை கவனத்திலெடுக்கப்பட்டு ஹட்டன் நஷனல் வங்கியின் ஏ.ரீ. எம் இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ள 02 வளவுகள், மக்கள் வங்கியினால் நடாத்திச் செல்லப்படும் ஒரு வளவு போன்றவை பெயரளவிலான வாடகைக்கே வழங்கப்பட்டுள்ளன.

(இ) காலி துறைமுகம் அபிவிருத்தி செய்யும் திட்டம் தொடர்பில் பசுபிக் கன்ஸல்டன்ஸ் இன்டர்நெஷனல் ஆலோசனைக் கம்பனி (PCT) இலங்கை துறைமுக அதிகாரசபையினால் 2007 ஆண்டில் பெப்ரவரி மாதத்தில் நியமிக்கப்பட்டது. விபரமான திட்டம் வடிவமைத்தல் விரைகோரல்களின் தொழில்நுட்ப மற்றும் நிதி மதிப்பிடல்கள் உள்ளடங்கலாக திட்டத்திற்குரிய பூர்வாங்க நிர்மாணக் கட்டம் வரையிலான சகல சேவைகளும் இந்த ஆலோசனைக் கம்பனியினால் பூர்த்தி செய்யப்பட்டன. இந்த ஆலோசனைக் கம்பனிக்கு ரூபா 455.5 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. ஆனால் திட்டத்தின் நிர்மாணங்களுக்கு பொறியியல் மதிப்பீட்டளவுக்கு மேற்பட்ட மூன்று மடங்கிலான நிதிப் பிரேரணையொன்று கிடைக்கப்பெற்றதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்டவாறு திட்டத்தின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட முடியவில்லை.

இதற்கிடையில் (PCT) கம்பனியின் ஆலோசனை அனுபவங்கள் மற்றும் தேர்ச்சியாளர்கள் அடங்கலான சகல வர்த்தக நடவடிக்கைகளும் ஒரியன்டல் கன்ஸல்டன்ஸ் (OC) எனும் ஜப்பான் கம்பனியினால் பொறுப்பேற்கப்பட்டது.

எனவே இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவத்தின் அங்கீகாரத்துடன் புதிய ஆலோசனைக் கம்பனியின் சேவை பெறப்பட்டும் திட்டத்தின் கருத்திட்ட விடயத்தில் மாற்றமேற்படுத்தப்பட்டும் முழு காலி கடல் குடாப் பகுதியும் உள்ளடக்கப்படும்வாறு அலைதாங்கியொன்று நிர்மாணிக்கப்படுவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் தொடர்பில் சம்பந்தப்பட்ட திட்டத்திற்கான ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் நிதியுதவி பயன்படுத்தப்படவுள்ளது. புதிய கருத்திட்டத்திற்கு தொல்பொருளியல் மற்றும் கரையோர பாதுகாப்புத் திணைக்களங்களினதும் தேசிய மரபுரிமைகள் அமைச்சினதும் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதோடு யுனெஸ்கோ அமைப்பினது அங்கீகாரம் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

(ஈ) கொழும்பு துறைமுகத்தின் செயற்றிறன் மேம்படுத்தப்படும் திட்டத்தின் பரிந்துரைகள் மீது கொழும்பு துறைமுகம் விரிவாக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அலைதாங்கி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டு தெற்கு கொள்கலன் முனையத்தின் முதலாவது 400 மீட்டரில் கொள்கலன் கையாளல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) ஒலுவில் பயிற்சி நிலையம் ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறாது இதை பராமரித்து செல்வதன் மூலம் அதிகாரசபைக்கு பொறுப்பேற்க வேண்டியுள்ள பாரிய மேலதிக செலவினம் தொடர்பில் உயர் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் தெளிவாக்கப்பட்டன. சம்பந்தப்பட்ட திட்டங்கள் தொடர்பில் 2013.05.23 ஆந் திகதி நடைபெற்ற துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் போது அந்த நிறுவனம் தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு வாடகை அடிப்படையில் ஒப்படைப்பதற்கும் அதன் பணியாளர்கள் கொழும்பு துறைமுகத்திற்கு இடமாற்றம் செய்யப்படுவதற்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி தற்போது ஒலுவில் பயிற்சி நிலையம் தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டு ஒலுவில் பயிற்சி நிலையத்தின் பணியாளர்கள் கொழும்பு துறைமுகத்திற்கு இடமாற்றப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**(ஆ) EDI நெட்வேர்க் தனியார் கம்பனி (ரூபா 500,000)**

கம்பனியின் ரூபா 500,000 பங்குகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததோடு துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் மீது 2013.09.10 ஆந் திகதி புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டுள்ளது.

**வ/ப லங்கா கோல் தனியார் கம்பனி (ரூபா 2000,000)**

வ/ப லங்கா கோல் கம்பனியின் பொதுக் கூட்டத்தின் போது 2012 ஆண்டின் வர்த்தக கையாளல்களில் ஈட்டப்பட்டுள்ள இலாபத்தில் ஒரு பகுதி பங்காளர்களுக்கு வழங்கப்படுவதற்கு பணிப்பாளர் சபையினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் வ/ப லங்கா கோல் கம்பனியினதும் இலங்கை மின்சார சபையினதும் 2012 ஆண்டின் கணக்குகள் இதுவரை முடிவுபெறவில்லை. எனவே வ/ப லங்கா கோல் மற்றும் இலங்கை மின்சார சபைக்கிடையில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கேற்ப மேற்குறிப்பிடப்படும் கணக்கு நடவடிக்கைகள் முடிவடையும் வரையும் இலங்கை மின்சார சபையிலிருந்து கிடைக்கப்பெற வேண்டிய நிதி ஈடுசெய்யப்படும் வரையிலும் வ/ப லங்கா கோல் கம்பனிக்கு எதுவித பங்கிலாபமும் வழங்க முடியாதுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

**(இ) 1/11**

நாளாந்த அடிப்படையிலல்லாது மூன்று அல்லது ஆறு மாதங்களுக்கு வாடகை அடிப்படையின் மீது இழுவைக் கலங்கள் பெறப்படுகின்றன. ஆகவே கப்பலோட்டம் நடைபெறும் முறைக்கேற்ப இழுவைக் கலங்கள் கையாளலில் ஈடுபடுத்தப்படும் தடவைகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். தற்போது வாடகை அடிப்படையில் சென்ற ஆண்டுகளில் பெறப்பட்டுள்ள இழுவைக் கலங்களில் ஒரு இழுவைக் கலத்திற்காக நாளொன்றுக்கு செலுத்தப்பட்டுள்ள ஆகக் கூடிய தொகை 4,250 அமெரிக்க டொலர் மட்டுமே ஆகும்.

## 4.6 இனங்காணப்பட்டுள்ள நஷ்டங்கள்

**(அ)** இவ்விடயம் தொடர்பில் தற்போது ஊழல் மற்றும் மோசடி புலனாய்வு பணியகத்தினால் விசாரணை நடாத்தப்பட்டு வருவதுடன் அதன் பெறுபேறுகள் வெளியானதும் சம்பந்தப்பட்ட பொறுப்பு வாய்ந்த அலுவலர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதேபோன்று 1979 இன் 58 ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டுள்ள சட்டத்தின் இல 42 (ஓ) மீது சம்பந்தப்பட்ட கப்பல் கம்பனியிலிருந்து இவ்வாறு குறைவாக

பெறப்பட்டுள்ள கட்டணங்கள் அறவிடப்படுவதற்கான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**(ஆ)** 2006 ஆண்டிலிருந்து 2009 வரை அறவிடப்பட வேண்டியுள்ள சிட்டைகளின் கட்டணங்கள் அறவிடப்படுவதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அரச நிறுவனங்களினது நிதி செலுத்தப்படுதலில்கள் அரச நிதி ஏற்பாடுகளினதும் விதிமுறைகளினதும் மீது நடைபெறுவதனாலும் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்படும் சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக கருதப்படுவதனால் அவை இடைநிறுத்தப்பட்டு கட்டணங்கள் அறவிடும் செயற்பாட்டிற்கு செல்ல முடியாமையினாலும் அரச நிறுவனங்களிலிருந்து பெறவேண்டிய கட்டணங்கள் அறவிடப்பட முடியாதுள்ளமை அல்லது தாமதமாகுதல் நடைபெறுகின்றது.

நாட்டில் யுத்த சூழலின் போது நாட்டிலும் துறைமுகத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் இலங்கை கடற்படையினால் மேற்கொள்ளப்பட்ட சேவைகள் கருத்திற்கொண்டு இந்த காலப்பகுதியினுள் இலங்கை கடற்படையினால் பெறப்பட்ட சேவைகளுக்கு செலுத்தப்பட வேண்டியிருந்த நிலுவைகளை நீக்குமாறு கடற்படையினால் அடிக்கடி தலைவரிடம் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள் கவனத்திலெடுக்கப்பட்டு பொது திறைசேரியின் அங்கீகாரத்தின் மீது 2006 இருந்து 2009 வருடம் வரையில் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 105,491,135 தொகை பதிவழிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(இ) 2009 முன்னரான யுத்த காலப்பகுதியில் படைவீரர்கள் மற்றும் படைக்கும், வடக்கு மக்களுக்கும் தேவையான அத்தியாவசிய பொருட்கள் போக்குவரத்து செய்வதற்காக ஜேட் லைனர் கப்பல் பயன்படுத்தப்பட்டது. ஆகவே அக்காலப்பகுதியினுள் இக்கப்பல் வர்த்தக நோக்கிலான சேவைகளுக்கு பயன்படுத்தப்படவில்லையென்பது எமது அபிப்பிராயமாகும். எனவே 2007 இருந்து 2009 ஆண்டு வரையில் அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவைகளை யுத்த நிலைமை காரணமாக நீக்குமாறு கடற்படையினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள் கவனத்திலெடுக்கப்பட்டு 2011 மீளாய்வு ஆண்டிற்குரிய பதிவழிக்கப்படுகையின் போது ஜெட் லைனர் கப்பலுக்குரிய நிலுவைகளும் பதிவழிக்கப்பட்டன.

(ஈ) ரூபா 1,190,621 தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட முடியாதுள்ளதென சட்ட மா அதிபர் அறிவித்துள்ளதால் அத்தொகை புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மீதியான ரூபா 1.466,250 செலுத்துதலை சம்பந்தப்பட்ட நிறுவனம் புறக்கணித்துள்ளதால் மீள் சட்ட ஆலோசனைகள் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(உ) பல வருடங்களாக அறவிடப்பட முடியாதுள்ளதனால் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 4.7 பயன்படுத்தப்படாத குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

இந்த பாரமுயர்த்திகள் புதிதாக பொருத்தப்பட்டிருந்த போதிலும் அவை நகருவதற்காக இருந்த இரும்பு பீலிகள் அதற்கான தகுந்த நிலையிலிருக்கவில்லை. அதன்படி இதுவானது புதிதாக அமைக்கப்படுவதற்கு சுமார் ஒரு வருட காலம் சென்றது. இதற்கு மேலதிகமாக புதிய பாரமுயர்த்திகள் பயன்படுத்தப்படுவதற்காக பழைய பாரமுயர்த்திகளுக்கு மணித்தியாலமொன்றுக்கு அறவிடப்பட்ட 6 அமெரிக்க டொலர் கட்டணம் போதுமானதாக இருக்கவில்லை. இதனை அதிகரிப்பதற்கு அங்கீகாரம் பெறுவதில் ஏற்பட்ட கால தாமதம் இப்பாரமுயர்த்திகள் சேவையிலீடுபடுத்தப்படுவதற்கு தாமதமாகிய மேலுமொரு காரணமாகும். ஆயினும் தற்போது இந்த இரண்டு பாரமுயர்த்திகளும்

சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ளன. தற்போது மணித்தியாலமொன்றுக்கு 40 அமெரிக்க டொலர் (திறைசேரி அங்கீகாரம் மீது) அறவிடப்பட்டு கப்பல் கம்பனிகளுக்கு சேவைகள் வழங்கப்படுகின்றன.

அநேகமான மரபுரீதியான கப்பல்களில் அவர்களினது பாரமுயர்த்திகள் உள்ளதனால் கப்பல்சரக்குகள் அவற்றினால் தரையிறக்குதல் மற்றும் ஏற்றுதல் மேற்கொள்ளபடுகின்றன. இந்த துறைமுகத்திற்கு வரும் பாரமுயர்த்திகள் இல்லாத கப்பல்களின் கையாளல்களின் போது அந்த பாரமுயர்த்திகளினது சேவைகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**4.8 வேறு நிறுவனங்களுக்கு சொத்துக்களை விடுவித்தல்**

துறைமுக அதிகாரசபையின் வெளி நடவடிக்கைகளுக்கு ஊடக அனுசரணை வழங்கப்படுகையில் கணக்காய்வுக் குழுவினால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கேற்பவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கான ஏற்பாடுகள் தற்போது செய்யப்பட்டுள்ளன. அத்தோடு இதற்கு முன்னர் துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சாக இருக்கும் போது அமைச்சு சார்பாக அமைச்சரினதும் அமைச்சினதும் பணிகளுக்கு ஊடக நடவடிக்கைகள் தொடர்பில் செயற்படுவதற்கு வேறான பணியாளர் குழு இருந்த போதிலும் புதிய அமைச்சு வேறாக்கப்பட்டதன் பின்னர் துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சிலிருந்த ஊடக பணியாளர் குழு விமான சேவைகள் அமைச்சுடன் சேர்க்கப்பட்டது. இதனால் துறைமுக அமைச்சு சார்பில் ஊடக பணியாளர் குழுவொன்று இல்லாதிருந்தது. எனவே துறைமுக அமைச்சு சார்பில் ஊடக பணியாளர் குழுவொன்று ஏற்படுத்தப்படுவதற்கு நிதி அமைச்சிடம் எழுத்து மூலம் வேண்டப்பட்டுள்ளது.

அதேபோன்று இதன் பின்னர் ஊடக அனுசரணையில் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு மாத்திரம் உரிய பணிகள் வழங்கப்படுவதற்கும் துறைமுக அதிகாரசபையுடன் நேரடியாகத் தொடர்புபடாத எதுவித நடவடிக்கைளுக்கும் ஊடக அனுசரணை வழங்கப்படாதிருப்பதற்கும் அமைச்சிற்கு ஊடக பணிப்பாளர் குழு பெறப்படுவதனை துரிதப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**5. கணக்கு நடவடிக்கைகள் மற்றும் நல்லாட்சி**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

(அ) 2015 ஆண்டில் ஆசியாவில் பிரதான கப்பல்கள் கையாளப்படும் துறைமுகமாக்கும் நோக்கில் பல்வேறு உபாயங்கள், இலங்கை துறைமுக அதிகாரசபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ளதோடு இதுவானது மேற்கொண்டு வலுப்படுத்தப்படுவதற்காக "Vision 2020" எனும் பெயரில் 2013 ஆண்டிலிருந்து 2020 வரையிலான மூலோபாய திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. 2011 ஆண்டைப் பார்க்கிலும் 2012 ஆண்டில் ஒட்டுமொத்தமாக சிறிய பின்னடைவு காணப்படுகின்ற போதிலும் 2013 ஆண்டின் அக்டோபர் மாதத்தில் இந்த நிலைமையிலிருந்து விடுபட்டு இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்படும் கொள்கலன் முனையங்களினால் கொள்கலன் கையாளல் அளவில் 8% வளர்ச்சி அடையப்பெற முடிந்துள்ளது.

**(ஆ)** இராணி எலிசபெத் முனையம் நிர்மாணித்து கையாளல் மேற்கொண்டு பின்னர் ஒப்படைக்கும் (BOT) அடிப்படையில் சவுத் ஏசியா கேட்வே டர்மினல்ஸ் கம்பனியிடம் கையாளல் பணிகள் ஒப்படைக்கப்படுதலோடு போட்டித் தன்மை உருவாகியுள்ளமை பொதுவான நிலையாகும். ஆயினும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழ் நிர்வகிக்கப்படும் ஜய மற்றும் ஐக்கிய கொள்கலன் முனையங்களின் கையாளல் முகாமைத் தொகுதியில் மேற்கொள்ளப்பட்ட

நவீனமயப்படுத்தல்கள் மற்றும் ஊழியர்கள் அறிவூட்டல் வேலைத்திட்டங்களின் மூலம் கிரமமாக வினைத்திறன் உயர்வடைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன்மூலம் சந்தைப் பங்கு 58% நிலையில் பேணப்பட முடிந்துள்ளது. மேலும் 2013 ஆண்டின் அக்டோபர் மாதத்தில் 2012 வருடத்தைப் பார்க்கிலும் சவுத் ஏசியா கேட்வே டர்மினல்ஸ் கம்பனியினால் கையாளப்பட்ட கொள்கலன் 106,000 இருபது சம அலகுகளாக குறையும் போது ஜய மற்றும் ஐக்கிய ஆகிய இரண்டு கொள்கலன் முனையங்களில் கையாளப்பட்ட கொள்கலன் 170,000 இருபது சம அலகுகள் வரை அதிகரிக்கப்படமுடிந்துள்ளது. இதன்படி தற்போது செயற்படுத்தப்பட்டுள்ள "vision 2020" மூலோபாய திட்டம் ஊடாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் கையாளல் பணிகளில் வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

**(இ)** தற்போது செயற்படுத்தப்பட்டுள்ள "Vision 2020 ஏழு வருட மூலோபாய திட்டத்தின்மூலம் காலி துறைமுகத்திற்கு உல்லாச படகுகள் (Yacht) மூலம் வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான வசதிகள் மேம்படுத்தப்படுதலின் ஊடாக சுற்றுலா பயணிகள் தென் மாகாணம் நோக்கி கூடுதலாக வரவழைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் துறைமுகத்திற்கு வெளியே நங்கூரமிடப்பட்ட கப்பல்களுக்கு தேவையான சேவைகள் வழங்கியதன் மூலம் குறிப்பிடத்தக்க வருமானம் பெறப்பட்டுள்ளது.

## 6 தொகுதிகளின் கட்டுப்பாடு

கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள துறைகள் தொடர்பில் சிறந்த உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன.

(அ) 2012 ஆண்டில் புதிய கணக்கீட்டு நியமங்கள் பயன்பாட்டில் ORACLE கணனித் தொகுதியூடாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் செயற்பாடு நடைபெற்றது. இதற்கு சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் மற்றும் தொழில்சார் நிபுணத்துவம் கொண்ட நிறுவனங்களினது ஒத்தாசைகளும் பெறப்பட்டன. இதன் போது சம்பந்தப்பட்ட புதிய கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப 2011 மற்றும் 2010 ஆண்டுகளின் கணக்குகளும் திருத்தப்பட்டன.

தற்போது அதிகாரசபையின் கணக்குகள் பிரதானமாக பேரேடு மற்றும் கப்பல் முகவர் வருமானம் (AR) ORACLE கணனித் தொகுதியூடாக நடைபெறுகின்றது. இதன் மூலம் அதிகாரசபையின் கணக்கீட்டு செயற்பாடு மிகவும் திறனாகவும் பிழையின்றியும் செய்யக்கூடியதாகவுள்ளது. விசேடமாக கப்பல் முகவர் வருமானம் ORACLE தொகுதியூடாக நடைபெறுவதனால் கப்பல் முகவர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் வருமானம் திறனான முறையில் ஒன்றுசேர்க்கப்படுவதற்கும் சிட்டைகளின் சீர் செய்தல்கள் முறையாக மேற்கொள்ளப்படுவதற்கும் அதன் மூலம் அதிகாரசபையின் வருமானம் அதிகரிக்கப்பட முடிந்துள்ளது. அது மாத்திரமன்றி இந்த கொடுக்கல்வாங்கல்கள் திறனான முறையில் கணக்கீடு வைப்பதன் மூலம் நிறுவனத்தின் கணக்கீட்டுச் செயற்பாடு சிறந்த கட்டுப்பாட்டுடனும் திறனோடும் நடைபெறுகின்றது.

(ஆ) கப்பல் முகவர் நிறுவனங்களுக்கு சேவைகள் வழங்கப்படும் போது கப்பலொன்று துறைமுகத்திற்கு வருகை தந்ததிலிருந்து புறப்படும் வரையிலும், கப்பல்கள் மூலம் கொண்டு வரப்படும் பொருட்கள் துறைமுகத்திலிருந்து வெளியே செல்லும் வரையிலும் வழங்கப்படும் சேவைகளின் கூடிய சிட்டையிடல்கள் கணனித் தொகுதியின் ஊடாகவே நடைபெறுகின்றன. அவ்வாறு செயன்முறையாக கணனிமயப்படுத்தப்பட முடியாத சிறு அளவிலான சிட்டையிடல்கள் இருந்தாலும் அவைகளுக்கும் கட்டுப்பாட்டு முறைமை பயன்படுத்தப்பட்டுள்ளதனால் சிறந்த கட்டுப்பாட்டு முறை பேணப்படுகின்றது.

கட்டணங்கள் அறவிடப்படும் போது இதுவரை அநேக சேவைகளுக்கு முற்பணம் பெறப்பட்டதன் பின்னர் சேவைகள் வழங்கப்பட்டுள்ளதால் அறவிடப்பட வேண்டியுள்ள கடன் தொகை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அரச நிறுவனங்களினதும் படைகளினதும் கட்டணங்கள் அறவிடப்படும் போது தனியார் கப்பல் முகவர்களுக்கு போன்று நடவடிக்கை எடுக்கப்பட முடியாதுள்ளதனால் சம்பந்தப்பட்ட கட்டணங்கள் அறவிடப்படுதலில் தாமதமேற்பட்டுள்ளது.

சட்ட நடவடிக்கைகளுக்குட்பட்டுள்ள அறவிடப்பட வேண்டியுள்ள நிலுவைகள் தொடர்பில் அவை நீதிமன்ற தீர்ப்புகளின் பின்னர் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளதனால் சம்பந்தப்பட்ட தீர்ப்பு வழங்குதல் தாமதமாகியதன் காரணமாக கடன் அறவிடப்படுதல் கஷ்டமாகிவுள்ளது.

(இ) உயர் வட்டி வருமானம் கிடைக்கப் பெறும் வகையில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முதலீடுகள் செய்யப்படுகின்றன. அதன்போது முதலீடு செய்யப்படும் நிதிகளின் இடர்நேர்களும் கவனத்திற்கொள்ளப்படும். அதிகாரசபையின் அன்றாட வருமானத்தில் செலவினங்களுக்கான நிதி ஒதுக்கப்பட்டதன் பின்னர் மீதியாகும் வருமானம், மீள் முதலீடு செய்தல் (REPO INVESTMENT) , நாளோன்றின் முதலீடு (OVERNIGHT INVESTMENT), போன்ற நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்படுகின்றது. இவ்வாறு முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதற்கு மிகவும் நம்பிக்கையான நிதி நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. உயர் வட்டி வருமானம் பெறப்படுவதற்காக முதலீடு செய்யப்படுவதற்கு முன்னர் இந்த நிதி நிறுவனங்களின் (மக்கள் வங்கி,இலங்கை வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி) வட்டி வீதங்கள் ஆராய்ந்து பார்க்கப்படுவதோடு உயர் வட்டி வீதம் வழங்கும் நிதி நிறுவனங்களில் முதலீடு செய்யப்படுகின்றது. மேலும் இவ்வாறு முதலீடுகள் செய்யப்படும் போது எதிர்காலத்தில் பொறுப்பேற்கப்பட வேண்டிய செலவினங்களும் கருத்திற் கொள்ளப்பட்டு நிதிசார் பிரச்சினைகள் ஏற்படாதவாறு முதலீடு செய்யப்படுகின்றது.

(ஈ) பொருட்கள் வழங்கல் முகாமைத்துவ செயற்பாடு மிகவும் திறனாகவும் சரியாகவும் நிறைவேற்றப்படும் நோக்கில் (ORCLE) கணனித் தொகுதி தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. எதிர்காலத்தில் தொகை கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இதனூடாக விரிவாக செயற்படுத்தக்கூடியதாக இருக்கும்.

(உ) இலங்கை துறைமுக அதிகாரசபையின் சொத்துக்களின் பயன்பாடு மேம்படுத்தப்படுதலில் சொத்துப் பட்டியல் ஆவனமொன்று பராமரித்துச் செல்லப்படுகின்றது. இது தற்போது CARDARS கணனித் தொகுதியூடாக நடைபெறுவதோடு எதிர்காலத்தில் சொத்துக்களின் பயன்பாடு மேலும் அதிகரிக்கப்படுவதற்கு (ORACLE) கணனித் தொகுதி அறிமுகப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.



**கலாநிதி பிரியத் பி விக்ரம**
**தலைவர்**

**பெயர்**

இலங்கை துறைமுக அதிகாரசபை

**நிறுவனத்தின் நிலைமை**

1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டவிதிகளின் பிரகாரம் கொழும்பு துறைமுக ஆணைக்குழு தறைமுக கப்பல் சரக்கு கூட்டுத்தாபனம் தறைமுக ஒத்துப்பார்த்தல் மற்றும் பாதுகாப்பு சேவைகள் கூட்டுத்தாபனம் என்பவற்றினை ஒன்றிணைத்து 1079 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம 01 ஆந் திகதி துறைமுக அதிகாரசபை நிறுவப்பட்டது.

**அமைப்பு விதியிலுள்ள அம்சங்கள்**

தேசிய பொருளாதாரத்திற்கு பாரய பங்களிப்பினை வழங்கும் நிறுவனமாக இலங்கை துறைமுக அதிகாரசபை விளங்குகின்றது. வருமானத்தனை ஈட்டிக்கொள்ளல் மற்றும் சேவைகளை வழங்குதல் போன்ற செயல்பாடுகளில் முதன்மை நலையிலுள்ள நிறுவனம் என்ற வகையில் அதிகாரசபை ஆற்றும் பணியின் மூலமாக உயர்நிலை சேவையில் பூரணமாக தனது பங்களிப்பினை அது செலுத்துகின்றது. பல்வேறு வகைகளில் அதனுடன் பங்களிப்புசெய்யும் நிறுவனங்கள் மற்றும் துறைமுக பாவனையாளர்களுடன் காணப்படுகின்ற முனைப்பானதொடர்பு அதன் இயக்க வளர்ச்சிக்கு முக்கிய காரணியாக அமைகின்றது. இலங்கை தறைமுக அதிகாரசபைக்குரியதொழிற்பாட்டு அம்சங்கள் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- நிலைத்திருக்கும் தன்மை
- காலத்திற்கேற்றதும் பிழைகளற்றதும்
- சாதனைக்குரிய உத்தரவாதம்
- குழு உணர்வு
- அர்ப்பணிப்பு
- உற்பத்தித்திறனை அடையாளங் காணுதல்
- பூரணமாக செயலாற்றுகை

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்கள் அதிகாரசபையின் அனைத்து ஊழியர்கள்தொடர்பிலும் பராமரித்துச்செய்தல் பிரதான நிறைவேற்றுநராக முகமைத்துவப் பணிப்பாளரினதும் சிரேட்ட முகாமைத்துவ ஆளணியினரினதும் பொறுப்பாகும்.

**தலைமை அலுவலகம்**

**கொழும்பு துறைமுகம்**

இல : 19, சைத்திய வீதி
கொழும்பு – 01
தொ.பே.இல : (+94 11) 2421201, 2421231
தொ . நகல் : (+94 11) 2440651

**காலி துறைமுகம்**

கிலொசன்பார்க் இறங்குதுறை
மாகாலி
காலி
தொ.பே.இல (+94 91) 2232213, 2234936

**திருகோணலை துறைமுகம்**

புதிய நிர்வாக கட்டுடம்
சீனக் குடா
திருகோணலை
தொ.பே.இல : (+94 26) 2222460

**வங்கியாளர்கள்**

இலங்கை வங்கி (பிரதான வங்கி)
மக்கள் வங்கி
ஹற்றன் நஷனல் வங்கி

**கணக்காய்வாளர்**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
இல:306/72,பொல்துவ வீதி,
பத்தரமுல்லை.

**இணையத்தளம்**

**www.slpa.lk**